உ

சிவமயம்.

வசவபுராணம்.

இஃது,

பொம்மையபாளையம் பெரியமடம்

யதீஸ்வர

ஸ்ரீ - சிவஞானபாலையசுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

காயாறு - குருலிங்கஐயர்

குமாரர்

ஞானசுந்தரஐயரால்.

பலபிரிதிகளைக்கொண்டுபார்வையிட்டு

மேற்படி

அந்தந்தப்புராணமுடிவில்

நூதனமாகவியற்றிய சரித்திரச்சுருக்கத்துடன்

பு - சு - அருணாசலகுருக்களவர்களது

சென்னை, லக்ஷ்மீவிலாசசாலையில்

பதிப்பித்து

படத்துடன்வெளியிடப்பட்டது

ஸ்ரீமுகஹு

சந்திரமௌலிப்ரஸ்.

சிவமயம்.

சென்னைத்துரைத்தனவித்தியாசாலை

தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய

திருத்தணிகை

இயற்றமிழாசிரியராகிய

விசாகப்பெருமாளைய ரவர்கள்

இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

கழிநெடில்விருத்தம்.

பொற்பிரானையதுலகமாயையிடைப்
புகன்றிடிலெனுமுயர்சைவ
சிற்பரநெறியையுலகுணர்ந்தமலன்
சேவடிஞானமுற்றுயுமா
றற்பவநாசமில்பெருங்கிழமை
யொப்பின்மாக்கருணைவாரிதியா
மற்புதனிரண்டாஞ்சம்புநந்தீச
னவதரித்தனனகங்கனிந்தே. (க)

பல்வளங்கொழிக்குங்கருநடதேசம்
பற்றியவிங்குளாபுரியி
லில்வழக்கிழுக்காமாதிராசர்க்கு
மிசைந்தமாதாம்பையாமனைக்குஞ்
செல்வநன்மகப்பேறெனவுளமுவந்து
செப்பருஞ்சிறப்புடைவசவ
நல்லருணமம்பரித்தவதரித்த
நவமுவந்திசைப்பர்நற்றவரோ. (உ)

வந்தவதரித்தஞானபாற்கரனெம்
மனத்திருஞ்சிரத்திருந்தனவா
வந்தமில்விரசைவளாற்கோலத்
தருமணியாமவன்வாய்மை
வந்தாற்சரிதைவகுத்திடிற்சமய
வாதிகள்வாய்மதமடங்க
முந்துசெந்தேன்கண்டொத்தெனவின்ப
முகிழ்க்குநின்வசவபுராணம். (௫)

இன்னாற்புராணமிசைக்குமாரியத்து
மெழிறருகன்னடமுதலா
வுன்றுபாடைகளினுரைத்தனர்பெரியோ
ரோங்குமவ்வண்மைசேர்கதையை
யிர்விலத்தவர்முன்னியற்றியநோன்பி
னிசைத்தனரொருபெருந்தவர்தீஞ்
சொன்னடையாலின்றமிழினுமின்பத்
துய்த்தெமனோர்துகளறவே. (௬)

வேறு.

உற்றபெருந்தனிமுதல்வனுமையம்மைகாண
வுவந்தநடஞ்செய்தருளுமொருவனடிக்கமலம்
பற்றிவிடாப்பேரன்புபழுக்குநர்தாம்வேண்டும்
பரிசமைந்தாய்த்தளைபற்பலபிரதிகொண்டு
சொற்றுகண்மாய்த்துச்சருக்கந்தோறுமிறுதியிலே [ன்
சொல்லமைதிப்பொருள்விளங்க வாக்கியநன்னடையா
முற்றவித்துச்சிவத்துவசன்முதனூலாகமங்கண்
முழுதுணரும்புதுவையருணசலப்பேர்முன்னோன். (௭)

வைத்தொளிருமிலக்குமிவிலாசமெனவமுத்தும்
வைப்பிடைச்சந்திரமௌலிபிரசில்வளஞ்சேரு
ரித்திலவெண்மைக்கடிநங்கொண்டுபதித்தனனு
னின்மலன்பால்விட்டகலாநெஞ்சமுளனாகிச்
சத்தியநன்னெறிவீரசைவசிகாமணியாய்ச்
சமதமமாதிகள்பூண்டுசற்சார்பிலொழுகும்
நற்றவனுநங்கள்பெருந்துணையெனுங்காயாறு
நண்ணியசீர்த்திருவினன்மெய்ஞ்ஞானசுந்தரனே. (௬)

உ

முருகன் துணை.

புரசை அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

மணிநீர்ப்பசுந்துகில் வளையாவிருநிலத்
தணிகூர்மன்னுயிர்க் கவிச்சையிருளிரீஇ
விச்சைப்படரொளி விரவப்பொய்ந்நூ
னச்சறியாமைபோய் நல்லுணர்வுதிப்பப்
படிற்றொழுக்கப்பெருங் கடுத்திறன்முரிந்து
சீரியநன்னடை யாரமிர்துசுரப்ப
வவகுணக்குறும்புபோய்த் தவகுணத்திறைவரப்
பிறமதக்களையொரீஇ மறைமுதல்சைவப்
பைங்கூழ்விளையு ளொங்கனூர்தழைப்ப
வைதிகத்தவறெனுங் கைதவமிடிதபச்

சிவசாதனக்கோவைட் தகவுறப்பெருக
மருட்பகைமறுகி யருட்சார்புகிளைப்பப்
புறநெறிக்காடொழிந் தறநெறிநாடுறப்
பொய்ம்மைநோய்திகைப்பமெய்ம்மைவான்சுகம்பெறப்
பவக்குழிதூர்ந்து சிவத்துறைநிவப்ப
மகதிப்பேரியாழ் வந்தமாமுநிவன்
செய்தநன்றிக்குமைதவழ்கடற்புவி
கைம்மாறிது காறும்மாற்றினதெவன்
அன்னமாதவத்தோன் றன்னுடைவேண்டுகோள்
காதலிற்பயன்கொளக் கேதமிலாத்திருக்
கைலையெம்பரமனச் சைலாதிகாரத்
திருநந்திதேவனைப் புரிவொன்றிநோக்கின
யருணையருளுப்பாட் டினையுளமுவந்தீண்
டத்தனிக்குரவன் முத்தலனுமுய்வான்
வந்தவதரித்தனன் வசவேசனாகி
யென்பாம்பெருமா னிரங்கியளித்தருள்

கருணைக்களவு வரையிடற்கின்பத்
தன்பத்தழக்கு மன்பதைக்குழாத்து
ளெம்மனோராற்சொலல் விம்மிதமன்றே
ஆண்டானடிமையென் றருமறையாகம
மாண்புறமொழிக்கும் வகைமைகண்ணுறக்
கண்டுபேருயிர்த்திரள் பண்டைமாமலப்படார்
தமித்தத்தமது சுதந்தரமென்னவும்
இன்மையைப்புலங்கொளு நன்னர்ப்பேற்றினைக்
கைத்தலத்துய்த்ததோர் முத்தெனத்தெருட்டிய
வசவபிரானருள் வளனெலாமொருங்குளத்
திசைவுறத்தோற்றுமா றெவர்க்குறுதலிய

புராணமிந்நாள்வரைப் புலப்படாதிருந்ததென்
றுங்காங்கித்தலத் தோங்கிநீடும்பல
வீராகமத்துறை சோராத்திருமடந்
தம்மிற்றரீஇயவை செம்மையிற்றரவரும்
பிரதிகளைக்கொடு திரைதவழ்வாரிதி
பல்வளந்தரவாண் டொல்வகைப்பொலிவுகூர்
புதுவைவாழ்விப்பிரப் புநிதன்வடநூல்
கதுவுசெந்தமிழ்நூல் கற்றவைக்கேற்ப
நித்தலுநிலைபெறீஇ மற்றையோரங்ஙன்
பயின்றுசால்புறுவான் வியன்றருமொழுக்கங்
கடைப்பிடித்திறைவிபால் விடைக்கொடிப்பெருமான்
திருமேனிதீண்டப் பெறும்பெறலருந்தவ
நேசமாந்திருவருணாசல குருக்கள்
தன்னெடும்பல்கா லுன்னியாராய்ந்து
புகழ்வளர்சென்னை நகரிடத்தவன்றன்
சந்திரமௌலி யெனப்பெயர்தழைத்து
முந்துறும்அச்சின் முயன்றெஞ்ஞான்றுந்
தன்போலெவரு மின்போடதன்பொரு
ணிலைமுதன்மாண்பெலா மலைவறவுய்த்துணர்ந்
தென்றுநயந்தனர் அன்புளங்களிப்ப
வசுந்தரா யுயிர்க்கெலாம் இசைந்தருள்பரம
ஞானவிராச தானியாய்வளர்
பொம்மையபாளைய மென்னும்பெரிய
திருமடந்தன்னின் மருவுவீராகம
சிவகஞ்சிமயூரா சலசதாநிவாச
யதீசுரனெனப்புவி யிறைஞ்சினர்புகழ்மை
பகர்சிவஞான பாலையசுவாமிகள்

பணித்ததிருவுளப் பாங்கில்படித்தான்
கணித்தஅவ்வச்சருக் கந்தொறுமிறுதியி
லியற்றியசரித்திரச் சுருக்கந்தம்முட
னெழுதாவெழுத்தி லியற்றுவித்தனனால்
சான்றோருடைத்தென ஔவைமுன்சாற்றின
வான்றபுகழ்க்கோ ரமைதியாய்நிலவுறூஉந்
தொண்டைநன்னாட்டிற் றொன்மைசான்றுள
திண்டிறலயிற்படைச் சேந்தனூரோரிரு
சத்தியுடனுஅண் டேத்துவிற்றிருப்பப்
பிரணவாசலமு மொருபுறஞ்சலவிய
சமராமாபுரியென வமரராதியராற்
போற்றுந்தலத்தின் பாற்புடையடுத்தது
பிஞ்ஞகற்கினிய பிள்ளைப்பிரானது
மஞ்ஞையிவினமென மகிழ்தலைக்கிளர்ந்து
முருகவேள்மருகனென் றொருவிலாவாழியம்
பகவன்குருபிறந் தகையாப்பயோதரக்
காறுடக்குயில் சேறுலாந்தண்டலை
சூழ்வுறவெள்ளளங் கோழிலைத்தழாய்முடி
வானவன்கைத்தலப் பானிறச்சங்கென
முட்டைநைபார்தாட் கட்டவிழ்சரோருகப்
பூந்தவிசவிற்றுறை தேந்தருமலர்த்தடந்
அய்யசொல்விலையுனின் செய்யுளுடையது
வடபான்மேருவினிடையோர்நாவற்
கனியாறுளதென விதகாறம்புவி
கேள்விபுற்றுளதாற் கொந்தவிவ்வாத்தாய்த்
தென்பாற்காயா றென்றிண்டொன்றுண்
டெனக்கேட்குந்தொறு மனக்களிபெருக்கு

நற்பதியுறையும் பொற்புயர்குரிசில்
குருமுதன்மூன்றனு ளிருமைக்குரியனென்
றயர்வறத்தனதியற் பெயரானிறுத்த
குருலிங்கையன் பொருவருந்தவக்குறை
யானமற்றதனையுந் தான்வந்துநிறைத்துத்
தருவானெனவவன் றிருமகவாகி
யத்தகைமூன்றையு நித்தலுமோம்புத
றனுதபெருங்கட னெனுநனிநடத்து
மெய்யன்முத்தமிழ்நூல் கைவருதலைமையோர்
நண்பகலாநற் பண்புமிகுசீரியோன்
கல்வியினருமை கற்றுணர்ந்தோனெனப்
பல்வகைத்தாரும் பயின்றுளதேர்ச்சியன்
வயற்கட்குடவளை கொழித்தவாணித்தில
மாதர்வாணகைநிக ராதல்தெரிக்கும்
பாளையமென்னு நீனிடைப்பயன்றரு
தலனுறைவைசிய குலமணிசைவ
நெறிநின்றறம்பல நிறுவுநல்லூரவோன்
கோதண்டராம னெனுங்குரிசிலீன்ற
மாதங்கமுத்தமிழ் வளனனிதேர்ந்த
நன்னுவலர்பாற் பன்னாளும்பயில்
நேயமகலாத் தூயவுளத்தினன்
கச்சியம்பதிவாழ் பச்சையப்பன்
தருமநடாத்துந் தலைவருண்முதலென
வருசற்சனர்குழா மகிழுத்தமகுண
சோமசுந்தர பூமனுக்கினியன்
தேனிருங் குவளைமார்பன்
ஞானசுந்தரமெனு மானவிற்பனனே.

உ

சிவமயம்.

சென்னை நார்மல்பாடசாலைத் தமிழ்ப்புலவர்

சோடசாவதானம்

தி - சுப்பராயசெட்டியார்.

இயற்றிய

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

பொன்பூத்தநிறத்தோளும் புகல்பூத்தமுகத்தோளும்புலவுநாறுங், கொன்பூத்தமூவிலைவேற்பெருமானுந்தத்தமதகுறியினிற்பத், தென்பூத்தவிடுமிடைக்கூர்ங்குலிசவேற்படைசுமந்ததேவர்கோமான், மின்பூத்தசுரர்முதலோர்கரங்கூப்பிவிளாக்தொழுபாலேவல்கேட்ப.

திருமகளுங்கலைமகளுந் திருநோக்கிற்கெதிர்நோக்கிச் செவ்வனிற்பப், பருமவரவகலல்குற்சசியொருபாலடைப்பைகொடுபணிந்தநிற்ப, அருமறைதேர்முனிவரர்பன்னியரொருபாலறுகொடுவெள்ளரிசிதூவக், கருமவுருத்திரகணிகைமடமாதர்நடவின்றுகளுலவோர்பால்.

முழுதுலகுந்திருவுதரத்திடையீன்றுமெஞ்ஞான்றுமுதிரக்கன்னி, யெழுதருதன்றிருமேனியிடப்பாறன்வலப்பாலிடமாக்கொள்ளத், தொழுதகையபெருந்தகைமால்பதம்பொன்றுமூழிதொறுந்தளர்வாதோங்கும், விழுமியசீர்ப்பெருங்கயிலையோலக்கத்தினிதவிற்றிருக்குஞான்று.

பரசியவர்நயன்முதலோர்பளகரும்பேறடைந்துதத்தம்பதியிற்செல்ல, விரசியகாற்றுளர்மகரயாழ்முனிவன்குறிப்

போர்ந்துவியன்ஞாலத்துட், புரைசெயமண்குண்டரெனுங்க ளைகளைந்துபொருவில்வான்சைவமென்னும், உரைசெயும்பை ங்கூழ்வளரவபரசிவனெனுமுழவனுறுவன்மன்னோ.

என்றுதிருக்கடைக்கணோக்கருளியெம்மானந்திமுகமினி தினோக்கக், குன்றலிலச்சயிலாதிசிவகணத்தோடகன்ஞாலங் குறுகிப்பொய்மை, பொன்றுதலிலமண்முதலாம்புறநெறிகள் பொன்றவகநெறிநின்றோங்கத், துன்றியமெய்த்தொண்டுபூ ண்டியல்பூதிசாதநங்கடுளங்கநின்முன்.

அத்தகையவசவண்ணன் முதல்சரணர்திருக்கூட்டத்த டைவைத்தேன்றுழ், தொத்தலர்பூம்பொழில்புடைசூழ்நாவ லூர்ப்பெருந்தகைபோற்றெருகுத்துவேதக், கொத்தியன்மாபா டியஞ்செய்சோமநாதப்பெரியோன்குலவக்கூறும்,வித்தகநற் றொகைமரபேவசவண்ணர்புராணமெனவிளங்குநூலே.

எளிதுணர்ந்துமன்பதைகளினிதுய்யச்சரித்திரத்தோடி யலுமச்சிற், றெளிவுபெறப்பதிப்பித்துத்தருகவெனத்திருத் தொண்டர்செறிந்துகேட்ப, விளிதருமிவ்வுடல்பெறும்பேறி ன்றேபெற்றேமென்றுவியந்துமேற்கொண், டளிதருநெஞ்சக மொடுபல்பிரதிகள்கொண்டாய்ந்தச்சிற்பதிப்பித்தானல்.

சேயாறுகடந்தறுவீரிக்ஞறுதீ இக்கனியருந்தித்திருந்து வெப்புப்,போயாறுகெனச்சுகங்கள்கூய்ப்பயிலும்பூம்பொழி லும்புகர்வராருய், மீயாறுபயில்வராலொடுபொருதும்பூந்தட மும்விளங்குந்தொன்மைக், காயாறுதவர்புகழுங்காயாறுகடி நகராக்களித்துவாழ்வோன்.

திருக்கமலைநோக்கொடுவெண் கமலைநோக்கொருங்கு டையோன்றிகழும்வாரி, சருக்கமலையலையெறிபாற்கடலினரு

க்கறிவரியான்றுட்குந்திமை, யருக்கமலைசிறடிக்குமன்புடை
யான்விரசைவத்தழகன்சேர்த்திப், பெருக்கமலைபோலுள்ளா
ன்ஞானசுந்தரப்பெயரியோன்றன்மன்னே.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

திருமழிசை - தமிழ்ப்புலவர் - கந்தசாமிஐயர்.

அவர்கள் இயற்றிய

கழிநெடில்விருத்தம்.

தருமநெறிச்சமரபுரிதனையடுத்த காயாறுதன்னின்மன்றன், குருலிங்கவேள்தவத்தில் வருஞானசுந்தரையன்குறிக்கொண்டந்தி, யருளுடன்வந்தவதரித்த வசவபுராணத்தையச்சிட்டளித்தானென்று, நிருமலராம்புலவர்களிதலைசிறப்பத் தனதுபுகழ்நிலவமாதோ.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

சருக்கவகராதி.

திருக்கூட்டச்சருக்கம்.

திருக்கூட்டச்சருக்கம்.

திருவாதுச்சருக்கம்.

இதுவரையில் முற்றுப்பெற்றது.

ஆ திருவிருத்தம் - கஎசச.

அச்சியற்றியபுத்தகங்கள்.

* அருட்பா
வசவபுராணம்
கூவத்துப்புராணம்
ஆராத்திரியர்புராணம்
திருப்போரூர்ச்சந்நிதிமுறை
பழமலையந்தாதியுரை
திருப்புகலூரந்தாதியுரை
தில்லைக்கலம்பகம்

அருட்பாவைந்தின்விபரம்.

* அகத்தியர்தேவாரத்திரட்டு திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணச்செய்யுட்கோவை,

இனிப்பதிப்பிப்பன

பெரியபுராணமூலமுழுமையும்

பிரசித்தபத்திரிகை.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுபேட்டைத் தம்புசெட்டியார்வீதி மேலண்டைவாடையில் ஆங்கிலோ வெர்னகுக்யூலர் ஸ்கூல் ஸ்தாபித்திருக்கும் ௧௩௦ - வது நம்பராயுடைய கா - ஞானசுந்தரஐயரவர்கள்வீட்டில் ஷை யாரிடத்திலும்.

பெத்துநாயக்கன்பேட்டை தங்கசாலைவீதிசுமைதாங்கிக்கடுத்த ௨௨௧ - வது நம்பர்வீட்டிலிருக்கிற வேலூர் குமாரசாமி ஐயரிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்.

வசவபுராணம்.

பாயிரச் சருக்கம்.

விநாயகர்.

மாதங்களாண்டுகெங்கண் மாறநின்றுமாறுத
மாதங்கவளைக்கரத்தான் மனத்தருளுமலையாளா
மாதங்கந்தோன்றநம்பால் வந்தாளுமதியுநல்க
மாதங்கமுகத்தானை மறவாமல்வழுத்துவாம்.

வசவதேவர்.

இசையுங்கல்வியு மெண்வகைச்சித்தியும்
விசையதன்மமு மேதருசெல்வமு
மசைவிலின்பமு மானந்தமுத்தியும்
வசவவென்று வசனிக்கவுன்னவாம்.

இதுவுமது.

மெத்தியமுத்தியெய்தும் விதிதருநந்திபோற்றி
வத்திதுவென்னவந்த வசவதேசிகனேபோற்றி
சுத்தியாந்தவர்துதித்த சுகதண்டநாதபோற்றி
சத்தியெறியிரண்டாஞ் சம்புநின்சரணம்போற்றி.

சிவஞானபாலையசுவாமிகள்.

பார்விளங்கும்படி யுருக்கொண்டவ
னேர்விளங்கரின் றுண்டருணின்மலன்
சீர்விளங்குஞ்சிவ ஞானதேசிக
னேர்விளங்கு மலர்ப்பதமேத்துவாம். (க)

பருப்பதம் அல்லது ஸ்ரீசைலம்.

திருப்பதந்தருஞ் சிந்தித்தசெய்தியாங்
கருப்பதங்கெடுங் காலன்சணைக்கறுந்
தருப்பதங்கொள் புதுமலர்தந்தெழும்
பருப்பதந்தொழு வாய்துணைப்பாணியே. (உ)

மல்லிகார்ச்சுனேசுவரர்.

அளவில்வானவ ராரணநாவினர்
புளகமெய்யிற் பொருந்துந்தபோதனர்
வளர்பருப்பதம் வாழ்மல்லிகார்ச்சுன
றளமுறும்படி யுன்னிநின்றுய்குவாம். (ங)

ப்ரமராம்பிகை

கலைமடந்தையுங் கந்தக்கமலையு
நிலைமைதங்கட்கு நீடப்பணியவாழ்
தலைமையாளுயர் சங்கரியம்பிகை
மலைமடந்தை மலர்ப்பதம்வாழ்த்துவாம். (ச)

வீ ர ப த் தி ர ர்.

சாரபத்திர மிக்கிலாத்தக்கனைப்
பாரபத்திரம் பாணியிற்பற்றியே
கோரபத்திரங் கொண்டுவதைத்திடும்
வீரபத்திரன் மெய்ப்பதமேத்துவாம். (ரு)

க ந் த வே ள்.

வந்தசூரன் மயில்வடிவாகவே
சுந்தரத்தனி வேலாற்றுணித்தெறிந்
தந்தரத்த ரருந்துயராற்றிய
கந்தவேளைக் கருத்திலிருத்துவாம். (சா)

கு ரு ச மூ க ம்.

அருளுமல்லம தேவரிரோவண்ணர்
மருளசித்தர் மலர்த்தாள்வணங்கியே
தெருளிராமைய தேவர்க்கிறைஞ்சியே
பொருவில்பண்டிதா ராத்திரியர்ப்போற்றுவாம். (எ)

நா ல் வ ர்.

போற்றிஞானசம் பந்தர்பொலன்கழல்
போற்றிநாவுக் கரயர்புகழ்ப்பதம்
போற்றிவன்றொண்டர் பொன்னடிநாண்மலர்
போற்றிமாணிக்க வாசகர்பொற்சரண். (அ)

சிவசரணர்.

பண்டுசெய்த பழவினையிவ்வுடல்
கொண்டுசெய்த கொடுமைகுலையவே
தண்டநாதர் முதலாஞ்சரணர்தம்
புண்டரிக மலர்ப்பதம்போற்றுவாம். (௯)

வாழ்த்து

திருப்பருப்பதத் தேசிகர்சங்கமும்
பெருத்தமண்ணிற் பிறங்குந்தவத்தரு
மருத்தவாக்கமு மார்ச்சிக்குமாந்தருந்
தருக்குசெங்கோற் றகையுந்தழைக்கவே. (௰)

தமிழிற்செய்தகாரணம்.

அருளுஞ்சென்ன வசவேசனுதியாம்
பொருவில்காஞ்சி புரஞ்சேர்தபோதனர்
மருவுஞ்செஞ்சொல் வசவசரிதைமுற்
றருமந்தா துராயெனச்சாற்றுவாம். (௰௧)

நூற்பயன்.

நன்றிமுலத்த னன்னந்திகேச்சுரன்
வென்றிநாவின் விதிவழிநின்றுளோ
ரொன்றியச்சி வுதியாரொழிந்திடா
ரென்றுநற்பர மானந்தமெய்துவார். (௰௨)

அவையடக்கம்.

கிதியவைப்பை மருளினிகழ்த்தல்போன்
மதியிலேனென்றன் வாக்கால்வகுத்தநூ
லதிகநிந்திய ரும்புகழாதலாற்
புதியசொல்லிதென் றெள்ளார்புலமையோர். (௰௩)

நூற்பெயர்.

முத்தியேதரு மோகமில்வித்ததாய்ப்
பத்தியென்றெழுபைங் கூழ்பணைக்கவு
மித்தனைக்கண் பொழியுமெழிலியாய்
வைத்ததன்பேர் வசவபுராணமே. (௰௪)

வழிநூல்.

குலவுபாலக் குறுக்கிச்சோமீசர
னுலகின்முன்ன முரைத்ததெலுங்கினை
யிலகுவீமகவிகன்னடந்தரு
நலபுராணந்தமிழானவிற்றுவாம். (௰௫)

நாதனேலக்கமுன் னந்திவந்ததுஞ்
சாதமாய்த்தண்ட நாதராந்தன்மையுங்
கோதிலாத்திருக் கூட்டரால்வாதனா
மோதிவென்றது முத்தியுஞ்செப்புவாம். (௰௬)

பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயச் சருக்கம்.

நிதிபடைத்தமனையாளு நிலமன்னுமனையாளுங் [றோ
சுதிவிலக்காமறவென்றோர் கருத்தினெல்லாமறவென்
றதிசமுத்திவைப்புடையா ரன்பர்குழுவைப்புடையார்,
மதியிருக்குமச்சடையார் வந்தொழியுமச்சடையார்.௰எ

குழுமண்டர்தொழும்பதத்தான் றுளக்கமில்லர்ப்பெ
ரும்பதத்தா,னாழியனற்கிளையாதா னுறும்பிறப்பிற்கிளை
யாதா, னெழுலகுமறியாதானென் றென்றுமறியாதான்
வாழியெனவந்திப்பார் வருந்தார்கள்வந்திப்பார் (௰அ)

வேறு.

தருமசிந்தையர்பெருமைதங்கிய தவமுறுந்தொழில்ச
த[illegible]ன்றினர்,திருமைகண்டவரிறைவவென்றடியிணை
பணிந்திடவினிதிருந்தரு, ளருமருந்தனவுருவனன்பு-
டைமரர்வந் துநினைமிறைஞ்சிப, கருணைபொங்கிப்பொழி
யினன்புகழ்கயிலையங்கிரிகயிலையங்கிரி. (௰௯)

வேறு.

ஆலமுண்டெனை யாராவரற்குமா
னேலவோர்கிரி யாவனென்றெண்ணியே
சிலைநல்ல வமுதந்திரண்டுவின்
கோலமெய்திக் குலவியெழுந்ததோ. (உ௰)

வேதசத்தியும் விண்ணவர்சத்தியும்
போதநாரணன் பொற்புறுசத்தியு
மாதவத்தர் வலியுந்திரண்டர
ஞானக்கிரி யாவமென்றுனதோ. (உ௧)

சந்திரன்முதற் ருரகரிறிவ
ரந்தநம்மொளி கூடியமூந்தியே
யெந்தநாளுமிற வாவகைக்கரன்
சந்தவாதன மாகச்சமைந்ததோ. (உஉ)

பரந்தபாற்கடற் சோதிபரிவினல்
வரம்பெறச் சிவன் வைகுங்கியதா
யுரந்தரித்து ண் டங்கிவிண்ணூடெழுந்
தரந்தைநீங்கி யசஞ்சலமானதோ. (உ௩)

சூரியாதிய வென்னுந்தொகையுட
னரியதாமரிச் சந்தனமாதியைக்
துரவிதாகவு திக்கவொடுங்கிட
விரிவதாமுபா தானவிலங்கலோ. (உ௪)

செய்யசிந்தரியக்கர்திரட்சியோ
துய்யமந்திரத் தந்திரச்சோதியோ
வையகத்தவர் வானவர்மங்கலத்
துய்யவந்த வுருவோவென்றுன்னலாய். (உ௫)

ஓங்குமாகயி லாயத்தினு ச்சிமேற்
றேங்குசோதிச்செழு மணியொன்பதாற்
பாங்குறச்செய்த பண்பியன்மண்டபந்
தாங்குசந்திர காந்தத்தளவிசை. (உசா)

மீதிளங்கதிர் கோடிவிளங்கல்போற்
சோதிவீசித் துளும்பிவளங்கொள்சிங்
காதனத்தி லரியயர்தம்பிரான்
வேதவோசை மிகவந்திருந்தனன். (உஎ)

வே று.

அந்தவேலையிலம்புயங்கண்ணனு மாதிவேதனு மாயிரங்கண்ணனு, மிந்திராதியமரருமாருடைஞ் சென்றுருத்திரரும்பன்னிரண்டுவிண், வந்தவாதித்தருமெண் வசுக்களு மாறிலாவொன்பதுவகைச்சித்தரு, நந்திலாத வெழுவகையோருடனற்சனந்தனாதிமுனிவரும்.(உஅ)

கருடருங்கின்னரருமியக்கருங் கானவீணையருங்கிம்புருடரு, முரகரும்வித்தியாதரருமா னுற்றவோலக்கத் தொல்வோர்புடையராய்த், தாநினைந்துநின்றஞ்சலியத் தராய்ச் சயசயென்னச்சதுமறையார்க்கவே,பரசிவாசங் கராபரிபூரணனந்தவென்றங்கனைவரும்போற்றவே.உகூ

சங்கரன்றிரு நாயகன்மீதிலே சார்ந்துகொண்டயன் மேற்சர்ப்பகங்கணைப், பங்கயக்கரம்வைத்துப்புரந்தரன்

பாதமெல்லவருடமதிபகன்,றுங்கசாமரம்வீசக்குபேரன்
முற்று யடைப்பைபயிடத்தர்திரமறை, யங்கமர்திரமாதி
புராணதர்க்கங்கள்வல்லவரங்கங்கமர்ந்துற. (கூ0)

விரும்புகின்னரம்வீணைமிகவல்லோர் .மிக்கசச்சரிமத்
தளந்தாளநீள்,பெருந்தகைத்தவர்நின்றுமிழற்றவாழ்பே
ரவைக்கட்பிறங்குபிருங்கிவந், திருங்களிப்புமவிநயவின்
பமு மெய்தநின்றுாடிக்குமியல்பினை, யருந்தவர்க்கயன்
மாற்கரிதாம்பரனன்பினேக்கியலமென்றருளியே. (கூக)

மாலைநோக்கிமகிழ்ந்துநா செய்தயன் வதனநோக்கிவ
சனித்தமரர்கோன், பாலவானனநோக்கிப்பகர்ந்தபின் ப
ரவுந்தேவனைப்பார்த்தருள்செய்தவ, ரோலவேண்டியநல்
கிவிடைகொடுத்தெம்பிரானங்கிருந்தருளெல்லையிற், சீ
லமானகணத்தர்தமதுமுன் சென்றுகாதலிற்சேவிக்குங்
காலையின். (கூ௨)

தீரநாரதனத்தன்சபையிடஞ் செல்லுநேரந்தெரிந்து
வந்துட்புகுந், தாருமன்பிலணைந்துபணிந்தெழுந் தஞ்ச
லிக்கரத்தானின்றவனிமேற், சேரநீதியைவிண்ணப்பஞ்
செய்யவே சிந்தியாமுன்றிருவுளத்துன்னியே, வாரநோ
க்கினனுகியுமையினை வரவழைத்திடம் வைத்துமகிழ்ந்
துபின். (கூகூ)

முனிவநீவந்தசெய்திமொழியென முக்கணனருள்செய்யமுகுளிதப்,புனிதக்கையினனுகியெனத்தனே புவனிமேனின் பெரும்புகழ்பொன்றியுன், னினியபத்தியுமஞ்செழுத்தோசையுமெய்யினீறுமிலங்கியகண்டியு,மனிதர்பாவின்றியற்பச்சமணெறி மல்கிச்சைவ மகிமைமறைந்ததால். [௩௪]

விடத்தையொத்தவசுரர்விபுதனா வெருட்டல்போலச்சமணர்மிகையினுற், குடத்திலிட்டவிளக்கெனநின்புகழ் கூறுமன்பர்குவலயத்துண்மறைந், தடக்கமாகியிருக்கச்சமணரோயரி யகுன்றின்விளக்கதுபோலவே,திடத்தராகியத்தென்றிசைச்செம்மினர்செப்பும்வேதச்சிவாகமச்செய்திபோய். (௩௫)

அந்தகாரமடைந்துன்னடியவ ரஞ்செழுத்தையறையவுமஞ்சியே, யெந்தநாளிற்றுயரமொழிவமென் றிரங்குகின்றனரேழுலகாளிநீ, யந்தமண்ணிலணைந்தச்சமணரையாழ்த்திமூவிதமானநின்பத்தியே, வந்திடும்படிசெய்துன்மகிமையே மல்கியன்பர்வளரவருளென. (௩௬)

மெய்புரைத்தமுனிவவிந்நந்திநம்மேன்மையொத்தவனிந்தவுரையினுங், கையமில்சிரண்டாஞ்சம்புவாகியே யங்கணைந்தச்சமணையகற்றுவன், செய்யசைவம்விளங்கும்படிபுப நேசநல்குவனென்னவுமையரன், றுய்யவான

னநோக்கிநற்பத்தியின் றூய்மை யோவன்றிச்சுத்தமெய்
யோவென. (௩௭)

வே று.

பத்தியினலுமொப்பன் பகரினந்தியென்னு
மத்திறமுணாத்துங்கேட்பா யாதியிற்சிலாதனென்ருேர்
மெய்த்தவன்கோரமான மிகுதவம்பருப்பதத்தி
னேத்தநன்னிருதிமூலே யுற்றுநீர்காலேயுண்டு, (௩௮)

அலேவறமூன்றுகோடி யாண்டுகண்மாய்ந்ததற்பின்
சிலேகடுகளவருந்தித் தேவராச்சரியமெய்த
நிலேதவருதிருந்த நெடுந்தவன்முன்னநின்றே
புலேவிலாவுனக்குவேண்டிற்றுணா தருவோநாமென்ன.()

தணாமிசையங்கமெட்டுந் தாங்கவேபணிந்தெழுந்து
கரமலர்சென்னிகூப்பிக் காதலாற்றுதித்துநின்று
புரவலவெனக்குநின்னேப் போலொருபுதல்வன்வேண்டு
ந், தருதியென்றுணாத்தானமூந் தருதுமென்றிசைத்த
போதின். (௪௰)

அத்தநின்பதத்தினன்பின் பகுதியினற்பங்குன்றுஞ்
சித்தனேயாவனயினவன் சிரஞ்சிவைப்பேனெண்ணே
னேத்துநீயவண்விலக்கா தொழிவையேற்றுவிலக்கின்
வித்தகவெனக்குப்பிள்ளே விருப்பில்லேவேண்டாவென்
றுன். [௪௧]

என்றவன்பத்திநன்மை யிருமையையரன்மகிழ்ந்து
நின்றநீகேட்டவாறே நல்குதுமிந்தநந்தி
பொன்றுசின்மலனாதி யுதித்தவன்றருமரூபி
யன்றிபானந்தமோங்கி யஞ்செழுத்துருவாம்யோகி. ௪௨

உத்தமதருமநான்கு மூன்றிரண்டொன்றாய்மண்ணி
னெத்தெழும்புகங்களுக்கி னுறுமிவன்பதமிம்மாற்ற
ஞ், சத்தியமிரண்டாஞ்சம்பு சகமெலாநிறையுநம்மை
நித்தமாய்த்தாங்கலாலே நிகர்நமக்கிவன்வியாபி [௪௩]

ஆதலாலிவனுன்மைந்த னாகின்றானென்றுநந்தி, நீத
னாமேலிவன்பா னேசத்திற்செனிப்பதல்லாற், போத
நாஞ்செனித்தல்வேண்டுங் காணெனவணங்கிச்சென்று
திருமுதராஞ்சேரா தயோனிசனாய்ச்செனித்தான். ௪௪

இவனவன்பிறந்தபோதே யெம்பதச்சிந்தையன்பு
நவமிலானந்தபத்தி நலமெலாமுடன்பிறந்து
சிவபரதத்துவச்சிரமுதுசெய்முலைப்பாலாகித்
தவகுருபதத்தியானந் தானுணுமெண்ணெயாகி. (௪௫)

பரமறைமிருதிவாய்மை பகர்தருங்குதலையாகி
வரசிவாசாரமேதன் மனத்திலாசாரலையாகிக்
கரவிலாதுதவுநல்ல கருணையேகாயமாகித்
தெருடருநம்பதத்தின் சிரத்தைநற்பத்தியன்பால். (௪௬)

கடுவிசைபெருகுமாற்றிற் கலங்குதலின்றியோர்தா
ணடுவுறவூன்றியோர்தாண் மேலுறநன்றாய்நீட்டி
யடுபுனற்களமமிழ்ந்த வம்புயமுகமலர்ந்து
கொடுமழையினுநடுங்காக் குளிர்பெருங்காலமின்றே. ()

நுரைகடன்மலைநடுங்கத் தாரகைம்தியாதித்தர்
நிராதநஞ்சோதிகுன்றநேமியனயன்விண்ணாள்வோன்
கரையறுதுயரங்கொள்ளக் கணபணச்சேடன்சென்னி
புரைபடத்திக்குப்பாலரொண்மருப்புந்திரைய. (௪௮)

திக்கயமெட்டுமெட்ட னாகமுந்திசைகள்பேர
மிக்கதிண்பதினோர்பேரா முருத்திரர்மிகத்துளங்கத்
தொக்குறுந்தேவராதி தொகையெலாஞ்சோகித்தேங்க
மிக்கவொந்தயர்மண்ணோரீ தென்னவாச்சரியமென்ன.

அருந்திறனந்திகேச ரருந்தவச்செயலைக்கண்டு
பெரும்பதினெண்கணங்கள் பிரியத்தினேத்திவாழ்த்த
திருந்தரியயன்சுரேசன் றேவர்களெல்லாங்கூடிக்
குருந்திவன்றவந்தானென்ன குறித்தெனத்தம்மிற்கூற.

தந்தமக்குறுபதங்க டனைவிழைந்தனனோவென்று
வந்தினிதெம்மையன்பாற் றெரிசித்துவணங்கிவாழ்த்தி
நந்தியம்மண்மேற்செய்யு நண்ணருமத்தவந்தான்
புந்தியிலெதுவிரும்பியென்றுமுன்போற்றிநின்றார்.(௫௧)

தம்மைநாநோக்கிநுந்தந் தாழ்பதந்தனைவிரும்பா
னும்மையுமென்றனைந்தமுயர்பதந்தனையும்வேண்டா
னெம்மையேநற்றிநந்தி நற்றவஞ்செய்கின்றானீர் [ம்·
செம்மைசேர்முகங்கள்வாடித் தேவரோகலங்கவேண்டா

என்றவர்தம்மைநம்பி னெழுமெனவழைத்துக்கொ
ண்டு, சென்றவணிவன்செய்கின்ற திறத்தவந்தன்னை
நோக்கி, யுன்றனக்கென்னைவேண்டிற் றுணைதருவோ
நாமென்னத், துன்றுநற்பத்தியாலே தொழுதுவீழ்ந்தெ
ழுந்துநின்று. (௫௩)

நிதியினையிகழ்ந்துமண்ணை நேசிப்பாருளரோநல்ல
மதியினைமறந்துபொல்லாமருள்பெறமதிப்பாருண்டோ
திதியினைச்செய்யுமாலோன் செங்கமலத்தோன்றேவர்
கதியினைநினைப்பரோநின் கழலிணைக்கன்பரானோர். ௫௪

என்னையாண்டருளவந்த விறைவனேபோற்றிபோற்றி
யுன்னையானறியக்காட்டு மொளியனேபோற்றிபோற்றி
பின்னையொன்றறியாநாயேன் பிழைபொறுத்தருள்வாய்
போற்றி, யன்னையோர்பாகாபோற்றி யத்தனேபோற்றி
போற்றி. (௫௫)

சத்தமாய்ப்பொருளுமான சங்கராபோற்றிபோற்றி
நித்தமாம்பதத்தாய்போற்றி நின்மலாபோற்றிபோற்றி

யத்தமாதியதாமூன்றி ஞசைதீர்த்தாண்டாய்போற்றி
யுத்தமவுன்னையல்லா தொன்றிலேன்போற்றிபோற்றி.()

பதவியென்கின்றபாவப் பரிவிலேனடியேனின்ற
னிதவியபதத்தின்பத்தி யினிமையேநியதியாக
வுதவியாளென்னையென்ன வுகந்தியாமகிழ்ந்துவாழ்த்தி
மதவினையிலானைநந்தமலர்க்கையாலணைத்துக்கொண்டு

வேறு.

நின்னுடற்பரிசன நேசநாங்கொடு
முன்னுனைவாகன முகத்திற்கொண்டமை
பன்னுநான்மறையெனப்பகர்ந்துபல்கணத்
துன்னுநாயகமு முற்றுணர்வுநல்கினம். (௫அ)

ஆங்கரியோர்புடை யயனோர்பாலிபத்
தோங்கரியோருழை யும்பரோரிட
நீங்கருமன்பராய் நின்றுநந்தியைப்
பாங்குறுதுதியுடன் பாணிகூப்பினர். (௫௯)

வேறு.

தொழுமிமையோர்தமைத் தூயபார்வையால்
வழுவறமுகமிக மலர்ந்தவின்சொலா
லெழுபயமறப்பணித் தேகுமென்றுநாஞ்
செழுவியகயிலையைச் சேர்ந்தபின்னிவன். (௬௰)

உற்றிருந்தவஞ்செயு முயர்பருப்பத
வெற்றிசேர்நிருதி கோணத்துமெய்யறந்
துற்றெழுஞ்சுத்தமாய்ச் சுகங்கொளெல்லையாய்
நற்றுமத்தலப் பெயர்நந்திமண்டலம். (௬௧)

வேறு.

அந்தமண்டலத்தினுள்ளோர்க் கதிகநன்கதியளித்தோ
மிந்தநந்தியைத்துதித்தோர்க் கிணையிலா முத்தியின்பந்
சந்ததிப்பேறிரண்டுஞ் சதுவிதபத்தியுத்தி
சிந்தையினினைத்தகன்ம சிததிமற்றெல்லாந்தந்தோம்.

துடியிடையுமையேயிந்தத் தொன்மையாநந்திநந்தம்
படிவமெனெம்முடனேயொத்தபான்மையனென்னநித்தன்
அடியிணையிறைவிவந்தித் தகமகிழ்ந்தந்தநந்தி
வடிவினையன்பினோக்கி மதித்திருந்தங்கண்சொல்வாள்

இச்சதாசாரநீதி யிந்தநன்முத்திஞான
மிச்சலமில்லாச்சித்த மிந்நிராங்காரபுத்தி
யிச்சதுரானபத்தி யிக்குணமிந்தவார
மிச்சிவநேயம்பெற்றா ரெவரிவர்போலவென்று. (௬௪)

யாவரேழுலோக மெங்குமாய்நிறைந்துநிற்குந்
தேவரீர்தம்மைத்தாங்குந் திடமுளார்தேவரீர்க்கொப்
பாவரிதின்றலோவிங்கடியனேனறிந்தேனென்னச்
சேவரங்கொணெஞ்சின் செய்யநாரதனோநோக்கி. (௬௫)

நந்திசீரிதுகாணென்ன நந்திகணயனநீர்கொண்
டந்திவானனையமேனி யத்தனைப்பணிந்துநின்றே
யிந்தியங்கரணமங்க மெங்குநற்புளகமெய்திப்
புந்திநைந்திறைஞ்சவத்தன் புரிவினலெடுத்துகந்து.௬௬

இதுமறைசைவமூல மிதுசமயத்தின்பேத
மிதுபத்திமகிமைநேய மிதுபாதத்துவார்த்த
மிதுசிவமந்திரங்க ளிதுதன்மவிரதநீதி
யிதுமுதலந்தமீதென் றிறைவிமுனனக்கிசைத்தோம்.

உன்றனலிந்தப்போத முலகெலாம்விளங்கும்வண்ண
மின்றுனக்குரைத்தோநந்த மிறைவிக்குங்கணநாதர்க்கு
முன்றருமுணர்வினுக் குமுதிர்ந்தபேரறிவளித்தோ
மன்றுநீநம்மைநீங்காய்மறந்துநாமுன்னைநீங்கோம்.௬அ

தரைமிசைநீயிரண்டாஞ் சம்புவாய்ச்செல்வாய்நந்தி
விரையவேயுலகமோங்கி விளங்கிடும்பொருட்டாயென்
வரைவிலானுரைக்கநந்தி வணங்கியெங்கெங்குநீயே [று
யரையனென்றுவிநீயென் னன்புநீயாகவென்ன. (௬௯

மண்ணிடைக்குருவாய்வந்து மனத்தருடருவோங்கையி
னண்ணுவோமிலிங்கமாக நற்சரலிங்கமாகப்
புண்ணியநின்பாலும் பொருந்துவோம்பொருண்மெ
ய்யாவி, யெண்ணிநீதரயாங்கொள்வோ மெனைத்துமிற்
பிரியோமென்று. (எ௰)

காரணனுரைக்கநந்தி காயநற்புளகமெய்தி
யேரணியங்கமெட்டு மினிதுறப்பணிந்தெழுந்து
பாரணிதருக்கவாதப் பரசமயத்தர்நீங்க
வீரசைவத்தருய்ய விடைகொண்டுபணிமேற்செல்வார்.

பொன்றிகழ்விண்ணோர்மண்ணோர் போற்றவேண்டின
கொடுக்கும், வென்றிசேர்பருப்பதத்தின் மேற்கதாய்வி
புலமுய்யச், சென்றிறையருளானந்தி திருவவதாரஞ்செ
ய்ய, நன்றிசேர்கருநாடச்சீர் நாட்டணிதொகுத்துச்சொ
ல்வாம். (எ௨)

திருக்கைலாயச் சருக்கம்

முற்றிற்று.

வெற்றிவேலுற்றதுணை.

திருக்கைலாயச் சருக்க

வசனம்.

ஸ்ரீமஹாகைலாஸத்தினுச்சியில் கோடிசூர்யப்ரகாசமா யொளிவீசும் நவரத்னமயமானமண்டபத்தில் பக்தானுக்ரஹ காரணமாக. ஹரிப்ரஹ்மாதிதேவர்களும் பதினொருகோடிஉருத்திரர்களும் சனகாதிரிஷிகளும் நவசித்தர்களும் கருடகின்னரர்முதலானவரும் ஒவ்வொருபக்கங்களினின்று ஹரஹர சிவ சிவகங்காதர சங்கரமஹாதேவனென்று ஸ்துதித்து நமஸ்கரிக்கவும். வேதங்கள்கோஷிக்கவும், ஸ்ரீஉமாதேவியாரோடு ரத்ன சிஹ்மாசனத்தில்வீற்றிருந்து - பக்தியேவடிவமாகவுள்ள ப்ருங்கிமஹாரிஷிநடிக்கும் நடனத்திற் சிறிதுநாழிகை திருக்கண் சாத்திப்பின் அவரவர்க்குத்தக்கபடி சிரக்கம்பன மந்தஹாஸாதிகளான குறிப்புடன் அவரவர் விரும்பினவற்றைத்தந்து அருள்செய்து தத்தமிடங்களிற்செல்ல வாஞ்ஞாபித்தனர் தேவரிஷிகளிலொருவராகிய நாரதமஹாரிஷியானவர் சிவகணங்களுக் கருளுஞ்சமயத்திற் சன்னிதியிற்சென்று ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய் தெழுந்திருந்து அஞ்சலிஹஸ்தராய்நின்று பின் அனேகஸ்தோத்ரங்களை வீணையில் வைத்து கானம்பண்ணிக் கண்களி லானந்த பாஷ்பம் பெருக மனமுருகித் தரேகத் யானியாய் நிற்குந்தருணத்தில் பரமசிவம் கடாக்ஷித்தருளி நா

ரதமுனிவனே நீநினைத்து வந்த காரியங்களை யிவ்விடத்துத் தடையறவிண்ணப்பஞ் செய்து கொள்ளலாமென்று சொல்லவே நாரதர் ஸ்வாமி தமது திருவருளால் சகலபுருஷார்த்தங்களையும் பெற்றிருக்கின்றேன் - ஆயினும் தமதுசந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்து கொள்வதாவது. மோக்ஷஹேதுவாய்விளங்குகின்ற பூலோகத்தில் - தமது திருவாக்காலருள்செய்த வேதாகமங்களெல்லாம்மாறி-தமதுபாதபக்தியுந் தமது சின்னங்களாகிய விபூதிருத்ராக்ஷங்களும்மாறி யெங்குமொளிமழுங்கிச் சமணசமயமானது இருள்போலெங்கும் வியாபித்துநிலைத்திருக்கின்றது. எய்போலிகளான தமதடிமைச் சைவர்களெல்லாம் தமது பஞ்சாக்ஷரமந்திரத்தை யுச்சரிக்கவுமஞ்சிமறைந்து இத்துயரந்நீங்குவ தெக்காலமோவென்று ஏக்கமடைந்திருக்கின்றனர்.

எவ்விதத்தாலாவது அக்கொடியதுண்டரை நாசஞ்செய்தற்குத் தேவரீர் திருவுளத்தெண்ணினு லதுவேபோதுமானது அப்போது முன்மாறிய வேதாகமமுதலியனவெல்லாம் பழையபடியேவிளங்கும் அவ்வா றருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துநிற்கவே.

ஓமுனிவனே யதார்த்தத்தைச்சொல்லினை பூலோகத்தில் அவ்விடையூறு களையத்தக்கவன் இந்த நந்தியே இந்நந்திக்கும் எமக்கும் யாதொருபேதமுமில்லை. அந்நந்தியே பூலோகத்தில் வந்தச்சமணரையழிப்பன், அதற்காக நீ சஞ்சலப்படவேண்டுவதில்லை நமது சைவமும்யதாப்ரகாரம் விளங்குமென் றருள்செய்ய.

அப்போது உமாதேவியார் பரமசிவத்தைநோக்கி இந்நந்திதேவனை யிவ்வாறுமகிமைபெறக் கூறுதற்குக் காரணம்யாது

தேவரீரிடத்துப் பக்திகாரணமாகவந்த மகிலமயோ உமது திரு மேனிபோல அந்நந்திக்குஞ் சுத்தமேனியுண்டோவென்று கூற'

கேட்பாய்பார்வதி நீசொன்னபடி பக்தியினுலெனக்குச் சமமானுனென்றுஞ் சொல்லலாம். அன்றியும் முற்காலத்தில் பருப்பதமென்னும் ஸ்ரீசைலபர்வதத்தில்சிருதிதிக்கில்சிலாத னென்னும் பெயருள்ள ஒருமுனிவன் சிநேந்திரியனுய் மூன்றுகோடிவருஷம் நீரையுங்காற்றையு முண்டுசேவித்துத் தவம்பண்ணினுன் அப்போது அவனுக்குநாம் ப்ரத்யக்ஷமாய்நின்று நீவிரும்பினவற்றைக் கேளென்றுசொல்ல அவனும் நமஸ்காராதிகளால் வணங்கி யஞ்சலிஹஸ்தனுய்நின்று ஸ்வாமி எனக்குவேண்டுவது மற்றொன்றுமில்லை உம்மைப்போ லொருபுத்திரன் மாத்திரம் வேண்டுமென்றிரங்கிநிற்க யாமு மவனிடத்தருளால் அவ்வாறே தருவோமென்றுசொல்ல அச்சிலாதரிஷியும் ஸ்வாமி அந்தவிஷயத்தில் மிகச்சந்தோஷமடைந்தேன் ஆயினும் மற்றொருவிண்ணப்பமுஞ்செய்துகொள்வேன் எவ்வாறென்னில்இந்தவுலகத்தில் தேவரீரது பாதபக்தியில்லாதவ னெவனுயினும் அவனது சிரத்தை யுடனேதுணிக்கச்செய்வேன். அவ்விடத்து நீவிலக்கக்கூடாது. அவ்வாறு விலக்குவதுண்டாயின் எனக்குப் பிள்ளையேவேண்டுவதில்லையென்றுன்

அவனது பத்தியைநோக்கி நீகேட்டபடி தருவோம்நாமேறிச்செல்லு மிந்தநந்திகேச்சுரன் நம்மைப்போலவே நிர்மலனுகவும் அநாதியாகவுமுள்ளவன் தர்மரூபி பஞ்சாக்ஷரரூபியுமாகும். இரண்டாஞ்சம்புவென்றுஞ்சொல்லப்படுமெ நம்மைத்தாங்கிச் செல்லுதலால் நமக்கிணையாயினுன். இந்நந்தியேயுனக்குப் புத்ரனுகவருவனென் றருள்செய்து.

நந்திதேவனையுநோக்கி நீ யிந்தச் சிலாதரிஷிகேட்டபடி

பிள்ளையாகவேண்டும். அல்லாவிட்டால் நாமேபோய்ப் பிள்ளை யாகவேண்டுமென்று சொல்லினோம்.

அப்போது நந்தியும் நமது குறிப்பின்படி அச்சிலாதரிஷி யினிடத்தில் அயோனிஜனாக வவதாரஞ்செய்தனன்.

இந்நந்தி யந்தரிஷியினிடத்திற் பிறந்தபோதே நமதுபாத த்திலன்பும் உடன்பிறந்து சிவபரத்துவமே முலைப்பாலாகவும் குருஞானமே யுண்ணத்தக்கஎண்ணெயாகவும் வேதங்களே குதலைச்சொற்களாகவும் சிவாசாரமேதனது இளமைக்கோட் பாடாகவும் திருவைபயேதேகமாகவும் நமது பாதங்களிற்பக்தியு டன் குரூரமான தவங்களைச்செய்யவே.

அப்போது ஹரிபிரமாதிதேவர்களெல்லாம்நடுக்கமடைந்து இதென்னவாச்சரியம் இக்குழந்தைப்பருவத்திக் கொடியதவஞ் செய்தற்குக்காரணம்யாது நமது பதவிகளைவிரும்பினனோவென் று நினைத்து.

எம்மிடத்தில்வந்து அன்போடுநமஸ்கரித்துக் கைகூப்பி ஸ்வாமி நந்திதேவர் பூமியில்தவஞ்செய்யுங் காரணந்தமது திரு வுளத்துக்குத் தெரியவருமே, அதனை எமக்கருள்செய்யவேண் டுமென்று வருந்திநின்றார்கள்.

நாம் அவர்களைநோக்கித் தேவர்களே உங்களுடைய இழி வானபதவிகளை யெவ்வளவுமிச்சிக்கமாட்டான். உம்மையுநோ க்கமாட்டான். எம்மைக்குறித்தே யந்நந்தி தவஞ்செய்கின்றான் நீங்கள் முகம்வாடிக் கலங்கவேண்டுவதில்லையென்று சொல்லி யத்தேவரை நமதுபின்னே வரவழைத்துக்கொண்டு நந்தி தவ ஞ்செய்யுமிடத்துப்போய் உனக்குவேண்டியவற்றைத் தருவோந் தவமொழிந்து கேட்பாயென்ன அப்போது தவத்தைவிட்டெ ழுந்து நமஸ்கரித்துநின்று ஸ்வாமி தேவரீரது பாதங்களிற் பக்தி

யுள்ளவடியார்கள் நவநிதிகளைக்கைவிட்டு மண்ணைவிரும்புவ துபோல திருமால்பிரமன் முதலானவரது பதவிகளைவிரும்புவார் களோ தமது பாதபக்தி நியமந்தவருதுசிற்கு நிலையொன்றே யடியேன்விரும்பினது அதைத் தந்தருள்வாயென் றிரந்துநிற்க அப்போது அவனிடத்துமகிழ்ந்து நமது கைகளாற்றழுவி நந் தியேயுன் னிடத்தன்பால்பரிசிக்க வேண்டிமுன்னமே வாஹன மாகக்கொண்டோம். இதை வேதங்களுங்கூறும். என்றுசொல் லிப் பூதகணங்களுக்குத் தலைமையும் சர்வஞ்ஞத்வமுங் கொடு த்தோம். அப்போது ஹரிப்ரஹ்மாதி தேவர்களெல்லாம் ஏவ் வொருபக்கங்களில் நிரந்தரமானஅன்புடனே நின்றுகைகூப்பி ஸ்தோத்ரம்பண்ணினார்கள்.

அவ்வாறுதொழுததேவர்களை யச்சமொழித்து அவரிடம் போக்ச்செலுத்தி நாங்கைலைக்குச்சென்றபின் இந்நந்தி தவஞ் செய்யப்பெற்ற பருப்பதத்தில் நிருதிமூலை தருமங்களுக்கு நி க்ஷேபமாய் ஸமஸ்தஇன்பங்களுக்கு மிடமாய்விளங்கும். அத ற்கு நந்திமண்டலமென்றுபெயர். அந்த மண்டலத்திலுள்ளவ ர்க்கு மோக்ஷகதியைத்தந்தோம். இந்த நந்தியைத்துதிக்சவர்க ளுககும் முத்தியின்பமுஞ் சந்ததிப்பேறும் கர்மசித்தியும் உண் டாகும்படி யருள்செய்தோம் ஆதலாலிந்த நந்தி நமது ஸ் வரூபமுள்ளவன் எமக்குச்சமானமானவன் என்று திருவாய்ம லர்ந்தருள.

அப்போது உமாதேவியாரெழுந்து பரமசிவத்தைநமஸ்கரி த்து அகமகிழ்ந்து லோகநாதனே இவ்வரறு சதாசாரமும் மு த்திஞானமும் சஞ்சலமில்லாத சித்தமும் நிரஹங்காரபுத்தியும் இவ்விதபக்தியும் தமது நேசமும் இவர்போ லெவர்பெற்றவர் ஸர்வவியாபியாய்நின்ற தம்மைத்தாங்குந் திடமுள்ளவர்யாவர்

இந்த மகிமையிப்போது தான்றெரியலாயிற்று. என்றுசொல்லி நிற்க. அப்போது சிவபெருமான் நாரதனைப்பார்த்து நந்தியினுடைய மகிமையிப்படிக்கொத்தது - நீயுந் தெரிவாயென்றுசொல்ல நந்தியுஞ்சிவனது பாதாரவிந்தங்களிற்பணிந்து இந்திரியங்களொருமித்துப் புளகாங்கராய் மனமுருகிவணங்கவே பரமசிவமும்மகிழ்ந்து மறை சைவமூலம் சமயபேதம்பத்திமகிமை வேயம் பாத்வார்த்தம் சி மந்திரம் தன்மவிரதம் நீதி ஆதி அந்தம் இவற்றினுண்மையெல்லாம் முன்னமேதானே இவ்விதமென்றுனக் குபதேசித்திருக்கிறோம் இவையெல்லாம் உன்னாலேதான் உலகத்தில்விளங்கவேண்டும், பூமியிலவதரித்தாலு மெம்மிடத்தில் ஞாபகம்மமறக்கமாட்டாய்-நாமும் உன்னைப்பிரியாதிருப்போம் பூலோகத்தி லுனக்குக்குருவாகவும் இஷ்டலிங்கமாகவும் வந்துபொருந்துவோம் என்றுசொல்லவே நந்திதேவரும் மனமகிழ்ந்து அஷ்டாங்கநமஸ்காரம்பண்ணிச் சிவாஞ்ஞையைச்சிரசில்வகித்து விடைபெற்றுக்கொண்டு பூமியில் பருப்பதமலைகு மேற்றிசையில் கருநாடதேசத்தில் வந்தனர்.

திருக்கைலாயச்சருக்க வசனம்.

முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

திருவவதாரச் சருக்கம்.

எங்களாதாராதோரா விருந்தயாகாராபோற்றி
வெங்குணதூராதீரா வினைச்செறுங்கோராபோற்றி
பொங்காரலூராகத்தன் புரிநந்திசீராபோற்றிச்
சங்கராமாராரியென் சதுரராருயிரோபோற்றி. (க)

அண்ணறன்விடையனேக வடிவமாயங்கங்கே
விண்ணிடைவெளிப்பாய்ந்து விரிந்தவன்கண்டகாள
நண்ணல்போற்கருகிவேணி நலமெனமின்னிக்கையி
ஞெண்ணிருந்துடிவிற்போலத் தொனிதனுவொடுவெற்
பேறி. (உ)

உலவியேயுலகளித்த முறும்படியமுதமும்பர்
பலவிதஞ்சொரிதல்போலப் பரந்தெங்குஞ்சொரிதலா
யிலகியகிரிமுழங்க விழிந்துமண்ணீந்தமாகி [லே
யலகிலாநதிகடோறு மணைந்தருந்தீர்த்தமென்ன. (ந)

நதிகளினிரண்டுபாலு நற்கரமனேகமென்னும்
விதிகளின்கால்கடோறும் வெவ்வேறுவிளைந்துபாறி

யதிகமாங்கருநாடந்தா னளவிலாச்செல்வமல்கிக்
குதிகொளச்செய்கண்முற்றுங் குலவிநீர்பாய்ந்ததம்மா.

பாய்ந்தபின்மள்ளர்கூடிப் பகடுழுமார்ப்புங்காலிற்
றேய்ந்தெழும்வரால்கள்வாளை துள்ளுசேலுகளுமார்
ப்பு, மேய்ந்தயலுயர்ந்தசோலை யிணைமலர்வண்டினார்ப்
பும், வாய்ந்தவிக்காலைபாய்வோர் வாயார்ப்பும்வாரியார்
ப்பாம். (ரு)

அறம்புரிந்திடுவோர்தம்பா லாம்பொருளறவோர்க்கீயுந்
திறம்பெறச்சமைந்தநாறு சேறமைசெய்யுணட்டி
யுறைந்தவத்தருமர்க்கின்ப மூலவல்போலுலவமள்ளர்
நிறைந்தநீரகலாதார்த்துநேயத்துநின்றுகாப்பார். சு

மள்ளர்கடம்மேற்பாயும் வராலினங்கயல்கடம்மைத்
தள்ளலாற்கனைநீர்கட்டத் தானிலைப்போதிங்கென்ப
ரொள்ளியசங்கமுத்த மொழிவறவாரிவாரித் [பார்.
தெள்ளியவுடுக்குவால்போற் செய்வரம்பெங்குஞ்சேர்ப்

கன்னலைமுறித்துப்பாயுங் கயலிணையொலிக்கமுத்தந்
தன்னலமேனியெங்குந் தடித்திடத்தெறித்ததென்பா
ரன்னிறக்கரும்பிதோர்கை யம்புயங்கமுகிரோர்கை
மன்னியவுழவரெங்கு மதனனைப்போலநிற்பார். அ

கரும்பினிற்றெறித்தமுத்தங் கதலியிற்புதைந்ததென்

பா, ரரம்பையின்கனியின்றேனு .மலர்களுங்கன்னன்மீ
தே, சொரிந்தனவென்பார்விண்ணிற் றேய்ந்ததெங்கி
ன்பழங்க,ணெருங்கியகமுகெருத்த ஞெமிர்ந்திடவீழ்ந்த
தென்பார். (கூ)

வருக்கையின்கனிகள்விண்டு வந்துவீழ்தேனுஞ்சூத
த், தருக்களின்பழத்தின்கள்ளுந் தண்மழைபோன்றதெ
ன்பார், பெருத்தவப்பொழிலுட்செல்வோர் பேணிக்கை
க்குடையாப்போந்து. வருத்துதங்காலிற்சேறம் மதுவி
ளுற்கழீஇநடப்பார். (ய)

ஆகவுங்கமுகம்பாளை யரிசிவீழ்முழக்குமன்ன, யோக
மார்வண்டினங்களொலித்தெழுமுழக்கும்பூக,மோகமா
ர்கனியுதிர்க்கு முழக்கமுமிலைகள்காற்றுர், வேகமார்
முழக்கும்விண்ணோர் விழாவெழுமுழக்கம்போன்ற ()

சாலியந்நாட்டினல்லோர் தாமெனச்செந்நிறத்தின்,
வாலியவிழைவற்பல்லோர் வணங்கல்போல்வணங்கித்
தாழ்வோ, ரொலுமாதுதிகள்போல விளைந்தெங்குமேத்
திறனர்க்காஞ்,சிலமாரின்பம்போல விளைந்தனதேசமெ
ங்கும். (யஉ)

உழவருமள்ளர்தாமு மும்பர்கோன்றனைவழுத்தி
விழைவினலரிந்துசூட்டு மேதகவணியாச்சேர்த்திப்

பழகியசும்மைசெய்து பரித்துச்சென்றுயர்ந்தபோர்க
ளழகியநிதிவெற்பொன்றே யனந்தமாய்நிற்றல்போன்ற.

இத்திறமுயர்த்தபோர்க ளினிதுறச்சாய்த்துமீது
பத்தியாய்ப்படுக்குஞ்செய்ய மள்ளர்கள்பகடுபோக்கு
மத்திரம்பசித்தமத்தி னணிகளையகற்றனேக
புத்தியாற்றருமபானு பொற்கிரிசூழ்தல்போன்ற. (௰௬)

வையினைத்திகிரிவாளால் வனாபலவென்னவாங்கிச் [ன
செய்யநற்கிரியோவென்ன திரட்டிச்சேர்த்துயர்த்தபின்
னையதாம்பதடிநீக்கி யரசர்பாலளித்துமிக்க [ண்டு.
வுய்யவாழ்குரவர்தேவர் விருந்தொக்கலுடன்றுங்கொ

நிலவுவேதாகமஞ்சேர் நெறிகளினிங்கலாநாற்
குலமுளோர்களுமற்றுள்ள குலத்துளோரெவருமோங்
கி,மலைகளோமாடமோங்குமனைகளோவானூர்மையோ
வுலவுமாகொடியோவென்ன வோங்கினபதிகளெங்கும்.

ஆலயந்தொறும்விழாவி னணிகளோமறுகுதோறும்
மாலைதோரணவிமானவளப்பதேதெற்றிதோறுந்
சிலவேதாகமத்தாஞ் செய்தியேயகங்கடோறுஞ்
சாலவம்மனைகளாடித் தருக்கலேதலங்கடோறும்.(௰௭)

சந்தனஞ்சண்பகங்க டாதகிவகுளஞ்சூத
நந்திவத்தனங்கனக நார்த்தைகள்கரவீரங்கள்

கொந்தலர்குரவுகோங்கு கூவிளைதாழைஞாழ
லுந்துமந்தனவனத்தின் மணங்களையூர்கடோறும். ௰௮

மெய்யிலன்புள்ளாரெங்கும் வெய்யசோம்புள்ளாரெ
ங்கு, முய்யருட்குலையாரெங்கு முறுபசிக்குலையாரெங்கு
ந், துய்யசொற்றேராரெங்குஞ் சோர்ந்துசற்றேராரெங்
குஞ், செய்யவேளொப்பாரெங்குந் தீயகோளொப்பா
ரெங்கும். (௰௯)

தருநிகர்கையாரெங்குந் தவத்தனைக்கையாரெங்கும்,
வருபழிப்படையாரெங்கு மறப்பொருட்படையாரெங்கு
ம், பெருகணிக்குழையாரெங்கும் பிணியினுக்குழையா
ரெங்குங், கருதினமுடிப்பாரெங்குங் கண்மலர்முடிப்பா
ரெங்கும். (௰௨)

இக்கனசிறப்பினோங்கு மெழிற்கருநாடந்தன்னின், மி
க்கநாயகமதாகி விளம்பரும்வளத்ததாகித், தக்கமாம
றையோர்வாழுந் தலமதாய்ச்சதுர்வேதத்தா, யிக்கனை
வென்றார்க்காகு மிங்குளாபுரியென்றொன்று. (௨௧)

சொன்னவிங்குளபுரத்தைச் சூழ்வயற்கதலிசெந்நெ,
லின்னதென்றறியவொண்ணா வுயர்வினாலிலையாலன்றி,
கன்னலின்குழாங்களீது கமுகினக்குழாங்களீதென், று
ன்னிநின்றுணரவொண்ணா வுன்னதத்தடையாலன்றி. ()

கரும்பினிற்றெறிந்தமுத்தங் கதலியிற்புதைந்துதோன்ற, விரும்புநற்றீபமாலை விசேடமோவல்லதேவர், பொருந்துமிந்திரனோவென்னப் பொற்பணியரம்பைதானுந், திருந்துமுத்தீனுமோவென் னெனவுளசெய்களெங்கும். (உ௩)

கனகபாடகங்களெங்குங்கவினார்பாடகங்களெங்கும்,வளசமாதிடங்களெங்கு மனிதர்மாதிடங்களெங்குந், தனயருட்களிப்பாரெங்குந் தனியருட்களிப்பாரெங்கும், புனிதகற்பகங்களெங்கும் புகழ்கைகற்பகங்களெங்கும். ()

பச்சைநீழ்பந்தரெங்கும் பணியின்சொற்பந்தரெங்குங்
கைச்சதிற்பணியாரெங்குங் கனககற்பணியாரெங்கு
நச்சவைப்புடையாரெங்கு நயந்தபொற்புடையாரெங்கு
மச்சுயிர்க்கொல்லாரெங்குமல்லவைக்கொல்லாரெங்கும்

கேதனச்சிறப்பினார்ப்புங் கிளர்மறையாகமார்ப்பு, மாதனந்தரவிளிப்போர் வாயார்ப்புமகஞ்செயார்ப்பு மோதனம்பகிர்வோரார்ப்புமுணவின்பமுறைப்போரார்ப்பும், போதணிகுழல்வண்டார்ப்பும் புணரியார்ப்பொக்கும் பொற்பூர். (உ௬)

சங்கரன்மகிழ்ந்திரண்டாஞ் சம்புநீயென்னப்பெற்றார், வெங்குணச்சமணிருட்கு மிகுசைவமுளரிகட்குந், து

ங்கமார்த்தாண்டனன்னன்றோன்றியபதியின்மேன்மை,
மங்கலமதனையென்னன் மட்டிடும்பான்மைத்தன்றால்.

அன்னநன்னகரில்வாழுமந்தணர்க்கதிகரானோர்
துன்னருந்தருமசீலர் சோமசேகரன்பாலன்ப
ரன்னவர்க்கன்னையொப்பா ரறுதொழிலகலாநீரார்
மன்னரும்புனிதநெஞ்சார் மாதிராசையனென்பார் ௨அ

இத்தகைமாதிராசர்க் கினியராந்தேவியார்பேர்
சுத்தமாதாம்பையார்பொய்த்துகளிலார்குலத்தின்றூயா
ரத்தனார்பத்திமிக்கா ராருயிர்க்கிரக்கமுள்ளார்
நித்தமாங்கற்பினிற்பார் நிகரில்லார்நீதிநீங்கார் ௨௯

மகவிலாநெறியினாலே மனமிகத்தளர்ந்திரங்கிச், சுக
மிலாநோன்பனந்தந் தொடங்கிச்செய்தொழிலாலெய்த்
தே, யுகுமனமதனன்மக்க ளுறும்படியெதுவென்றெ
ண்ணித், தகவுறுபதியுந்தாமுஞ் சான்றவர்தம்மைக்கே
ட்ப. (௩௰)

பண்ணியநோன்பினெல்லாம் பலிப்பதுநந்திநோன்
பென், றெண்ணிநற்றவர்கள்சொல்ல வேற்றுக்கொண்
டிறைவன்கோயி, னண்ணிமாதாம்பைசெய்ய நந்தியை
ப்பணிந்துபோற்றிப், புண்ணியமூர்த்தியென்றன் புந்தி
யினேயம்வல்லாய். (௩௧)

எனமதிவாரமாதி யெண்ணுமொன்பதுநாளேற்று
மனமகிழ்நந்தியார்க்கு மறுவின்மஞ்சனநீராட்டிப்
புனிதநற்கந்தஞ்சாத்திப் பூந்தொடையாடையார
நினைவுடனின்றுசாத்தி நிதிபட்டநெற்றிசூட்டி. (௩௨)

தணிவுறக்கந்தரத்திற் சதங்கைகிண்கிணிதரித்தே
யிணையடிச்சிலைப்புபூட்டி யெழினறுந்தூபதீப
மணியுறக்கொடுத்துத்தூய வைவகையமுதருத்திக்
கணிதமிலரன்றனன்பர் களிக்கவாராதித்தேத்தி. (௩௩)

பன்னகவணியானேறே பசுபதியென்னப்போற்றி
யென்னகமகிழமைந்தனீவையேயிடுவனின்பேர்
மன்னவவென்றுநின்ற மாதினைமதித்துநந்தி
தன்னரும்வலத்துமாலை தந்திடத்தருக்கிவாங்கி. (௩௪)

சென்னியிற்சூட்டியெண்ணஞ் சித்தித்ததென்னம்பி
நன்னியாயத்திறைஞ்சி நந்தியைவலம்வந்தேத்தி
மின்னிகரிடையார்சூழ மிக்கநன்னிமித்தத்தோடே
தன்னிகரில்லாவில்லிற் றருக்கிச்சென்றிருக்குநாளின். ()

எம்பிரானேவல்சென்னியேந்திமேற்கொண்டுசென்ற
நம்பிரானந்திதேவர் நன்மைமாதாம்பையார்த
மம்பொருந்துதரத்துள்ளேயவதரிந்துதித்தெம்மத்தன்
செம்பணிவிடைமுடிப்பேமெனவறிவுடனேசேர்ந்தார்.

அம்மைமாதாம்மைசெய்த வரியபுண்ணியமென்சொ ல்வா, மெம்மையாளிரண்டாஞ்சம்பு வென்னுநந்தீசனா ர்தன், செம்மையாமுதரந்தன்னிற் செறிந்துநற்புதல்வ ராக, விம்மையிற்பெற்றபேறு யாவர்க்குமெய்தொணு தால். (௩௭)

உண்மையாமமுதங்கொப்பத் துறுதலாற்பசியொழிந் தா,ளொண்மைநல்லின்பங்காண்பா ளொழிந்தசிற்றுண வொழிந்தாள், வெண்மையாமமலனுள்ளே மேவலான் விளர்த்தாண்மேனி, திண்மையாம்பரமயோகி செறித லாற்றுயிலேசேர்ந்தாள். (௩௮)

புனிதனுள்ளுறைதலாலே புசிக்குமூண்பொருதெடு ப்பா, டனிமுதுநந்திசேரத்தன்முலைக்கண்கறுத்தாள், க னிமொழியிடையுங்கண்டார் கனத்தனுள்ளுறைதலா லே, யினிதுளேபரமவன்னமிருத்தலாலெழாதிருந்தாள்

இவ்வழிபத்துமாதமெய்தியுள் ளவயவங்கள்
செவ்வழிந்தியார்தாஞ் சேர்ந்துதாயுதரமாகு
மவ்வழியமர்ந்துநோக்கி யமலனையகலாதுன்னற்
கெவ்வமில்சமாதியோகத் தெல்லையீதென்னவெண்ணி.

சித்திபங்கயாதனத்துச் சேர்ந்தசபையினாற்பூத
சுத்திதான்செயத்தொடங்கிச் சுத்தன்முன்னருளியோக

சத்தியானடிசுத்தி தகச்செய்துமூலத்திமே
லொத்திதசுழினோடி யுட்கிரந்திகளுகுத்தார். (௬௧)

நாபிதழ்க்கமலநின்று நாடுமுக்கோணநண்ணி
யேனுமாசுழுத்திசற்ப மெழுப்பியாறிதழினேகி
மேவினினார்திராறின் மேவியீரொட்டிதழ்க்கண்
சாலவுற்றாரின்பத் தன்மையாநன்மைகண்டு. (௬௨)

ஓரிரண்டிதழாயுள்ள வொளிதரும்பதுமமுற்று
நேரின்மெய்ஞ்ஞானசோதிநிலகண்டுநெஞ்சங்கொண்டு
சீரியகமலமாறுந் திரும்பிமேனோக்கச்செய்து
நாரிகொள்விற்போன்மேலே நாளத்துநாதநண்ணி. (௬௩)

நச்சியேசொக்கியின்ப நலந்திகழ்களிப்பினாலே
யுச்சியினிதழினாஞ்ஞூ றுள்ளபங்கயங்கணோக்கி
மெய்ச்சுவையமுததாரை விழுமேன்மேல்விடாதருந்தி
யச்செலாமமுதத்திங்க ளனபெருஞ்சோதியாகி, (௬௪)

இதவிமகிரணகாந்தத்தியற்றிய வெழிலார்பாவை
யுதாநன்னொளிநீள்திப மொத்துத்தாயுதரத்துள்ளே
சிதைவிலாநிமலானந்த சிற்பரசமாதியொன்று
மதியராயமர்ந்துமூன்று வருடங்கண்மகிழ்ந்திருந்தார்.()

இருந்தனர்நந்தியார்தா மினியமாதாம்பைவாடிப்,
பொருந்தியகுவின்பாரம் பொருமையாற்புலம்பவுற்று

ள், தெரிந்திதென்னென்னவெல்லாஞ் சிவன்செயலென்
னச்செப்பி, யருந்துயருடனேயத்த ஞலயத்தணைந்தி
றைஞ்சி. (சுசு)

அனந்தநோன்பனுட்டித்தத்தா லாவதொன்றின்றிநி
ன்று, ணினைந்துவந்தேத்திப்பெற்ற நேயநற்கருப்பமேந்
தத், தினங்கழன்றிடும்பொருக்குந் திறமிலேன்மூவாண்
டாகக், கனந்தனைப்பரிக்கமாட்டேன் கருணையாற்காப்
பாயென்று. (சுஎ)

அஞ்சலிசெய்துபோற்றி யமர்ந்தங்ஙனிருந்தெழுந்து,
விஞ்சவேயஞ்சித்தொஞ்சு மெல்லெனவகத்துமேவிப்,
பஞ்சணைமிசையிராவிற் பரமனைப்பரவிநொந்து
துஞ்சுவாள்சொற்பனத்தோர் தூயசங்கமர்போலத்தன்.

வந்துநின்றுனதுமேனி வருத்தமுந்துயருநீங்கிப்
புந்திநீமகிழநாளைப் புதல்வனும்பிறப்பனுமஞ்
சுந்தரவசவனென்றுசொல்லுவாயிவன்றனுலே
யிந்தலோகத்தஞ்ஞானவிருளெலாமகலுமென்ருர். சுஅ

சித்திரைதெளிந்தெழுந்து நேரிழைகேளீர்க்கெல்லா
மித்திரமுறைத்துநெஞ்சி னின்பமுற்றிருந்தபின்னர்
மெய்த்திருநந்தியார்தம்விமலநெஞ்சகத்திற்சோதி [னி
யத்தம்வைத்தெழுப்பினுற்போலநிந்தான்பணியையுன்

சங்கரன்பதந்தனைநோக்கித் தலைமிசைக்கரங்கள்கூப்பி
யங்கணேயுதாநின்று மதோமுகத்தோன்றும்போது
செங்கதிரனையநந்தி சித்தத்துநித்தன்றனே
துங்கநற்குருவாய்நின்று சுற்றந்தாயறியாவண்ணம். ௫௧

நந்திகளங்கலிங்க நலம்பெறத்தரித்தபின்ன
ரந்தமெய்யிலிங்கங்கண்ட வன்னையுமருகுளோரு
மிந்தநம்பாலன்றன்மே லிலிங்கமெவ்வாற்றினலே
வந்ததோவச்சேய்நம்பால் வந்ததென்றுள்ளமகிழ்ந்தார். ()

வே று.

பொருந்துவேணியுமுடிமிசைநாப்பண் பொற்பிலிங்க
மும்புண்டரநுதலுந், திருந்துகண்டிகைமாலைசேர்மார்
புஞ் செய்யதாம்பிரக்குண்டலக்காதும், பரந்ததோண்
மிசையோகபட்டிகையும் பாணிபற்றியதண்டமுங்கு
டையு, நெருங்குமாணிக்கக்கமபளவுடையு நிலவுமூரலு
நீண்டதாடியுமாய். (௫௩)

காணநின்றனர்காதன்மாதாம்பை கையிரண்டிறைக்க
சிந்துகும்பிடவே, கேணிலாநுதலாய்நமதிடமுங்கிளரு
ங்கூடலசங்கமமதனுண், மாணதாகயாமனந்தனாளுருப்
போ மன்னுகூடலசங்கமனம்பேர், பேணிச்செய்ததவ
த்தினுலகம்பிறங்க யாமிடும்பணிவிடையதனல். ௫௪

நின்னிடத்தினிற்பிறந்தனனிவன்மே னேசநாங்கொடு

நிமலலிங்காங்க, மன்னயாமின்றுசெய்தனமிவற்கு மரு
வுமிகநன்னிவேதனமல்லா, தென்னநீகொடுத்தாலுநம்
மாணையென் றியம்பிமின்னெனமறைந்ததற்பின், பன்
னகாரனென் றனைவருந்தெளிந்துபரவியத்திசைபார்த்த
னர்பணிந்தார். (ருரு)

குலவுமாயிரங்கோடிமார்த்தாண்டக் குழுவதன்னந
ற்குழந்தைதன்னுருவா, லலகிலாதவஞ்ஞானமாந்திமிர
மற்றதவ்வயிற்றுதையாரணைந்து, விலகிலாநல்லின்ப
மேலிடலால் விரும்பிநோக்கியெம்விமலனாரடியார், பல
ருநீடவைத்தணிதிருநீறும், பளிதமாரடைக்காயிவை
யிருத்தி. (ருசா)

அவர்பதாம்புயநீரினன்மைந்த னரியமேனியையாட்
டிநீறணிந்தாங், கெவருமேத்தநல்வாச்சியந்தழங்க வித
ந்தகோசிகத்தினிதுறச்சேர்த்திச், சிவபிரான்முனமிய
ம்பியபேராற் செப்பிநல்வசவேசுரனென்று, நவமதாம
ணித்தொட்டின்மேற் சயனநண்ணுவித்துறநலங்கொ
ளுநாளின். (ருஎ)

பின்னர்சின்றிடுமிருளினைக்கெடாத பெருகுசோதி
யென்னென்றுதம்மனத்தான், முன்னெரிந்திடும்விளக்
கினைப்பார்த்து முன்னிமுன்னியேசிரித்துமெம்மத்த,ன

ன்னிவேதனமன்றியானருந் தேனகிலெனத்தவிர்ந்திருந்
துகைகாட்ட, வன்னமென்முலையருந்தியுமப்பா லணைந்
தகையெனவக்கரஞ்சுவைத்தும். (௫அ)

வேறு.

நெஞ்சினுட்டம்பிரானேநினைந்தெலாமறந்தாராகி
யஞ்சவாம்பொறியசங்கா தாலியாதமர்ந்திருந்து
மிஞ்சியபிறப்பிற்றள்ளும் வினைகளைத்துரப்பாராகித்
தஞ்சிறுகரமிரண்டுஞ் சடக்கெனவுதறியார்த்தும். ௫௯

ஒத்தபாசத்தைத்தாளா லுதைத்தெனவுதறியார்த்து
மெய்த்தமுன்சையஞ்சென்னி யெடுப்பபோற்சிரமெடு
த்து, மத்தனார்பணியையாமிங் கமர்ந்தறத்தாழ்த்தேமெ
ன்று, சுத்தமாநினைவுகொண்டு துணுக்கெனத்துடித்து
க்கொண்டு. (௬0)

துங்கமாகயிலைகாணத்துயரொன க்கலுழ்வாராயு
மங்கமேற்சிவலிங்கங் கண்டன்பினுலிப்பாராயு
மெங்கடம்பிரானாரன்பர்க்கிறைஞ்சுவாராய்க்கவிழ்ந்தும்
பங்கயாதனத்திருங்கும்படியராய்ப்படிந்திருந்தும். (௬க)

உத்தமந்திநானென்றுணர்த்துவாராய்த்தவழ்ந்து
சித்தமாஞ்சைவநீதி சிறுத்துவாராகநின்று
மத்தனன்மார்க்கமீதென் றறிவிப்பாரொனநடந்து
மொத்ததாய்தந்தையின்ப முறும்படிமழலையாயும். (௬௨)

நிதிக்கிரிவில்லான்போல நித்தனிலென்னவோங்கிக்
குதிப்பவராய்க்குதித்துங் கூறுசொல்லானதெல்லாம்
விதிக்கரியார்க்கேயாக்கி விமலனல்லன்பர்க்கண்டாற்
றுதிப்புடனேடியோடித் தொழுவதேதொழிலதாயும்.

இப்படிவாலராகி யின்புறநடந்தபின்ன
ரொப்பருமறைகள்சைவ முரைக்குநற்புராணமங்கஞ்
செப்பருமிவைமுன்னுன திவ்வியகலைகளெல்லாந்
தப்பறத்தம்பிரான்போற் றமிலுணர்கருத்தராகி. (௬௪)

நாலிருவயதராகு நாளிலேதாதையார்தா
மேவிடும்பூணு நூற்கு விதிக்குநாளமைக்கும்போழ்தின்
வாவியவறிவரான வசவேசர்மறுப்பாராகிச்
சூலியென்குருவளித்தான்சுத்தமுன் னூலதென்றே.௬௫

இதமலவெனக்குமுன்னூ லெனுமுனாயிதனைப்போ
டு, கதமனத்துருதேசர்ப்ப கங்கணன்றனையர்ச்சித்து, ம
தமுறுமருளேனங்தோ வந்ததிங்குன்பாலாசான்,பதமல
ர்க்கிறைஞ்சிப்பொல்லாப் பவநரர்க்கிறைஞ்சிற்பாவம். ()

பாசவெங்குற்றமற்றோர் பாசத்திற்புகுந்தாற்குற்றம்
பேசிலாசான்கரத்திற் பிறந்தவரந்தனுள
ராசுறுகன்மதொந்தத் தடைதல்காணகலாக்குற்றந்
தேசிகன்பதம்பூசிப்போர் தீயர்கால்கழுவிற்குற்றம்.௬௭

மலமிலன்மந்திரத்தை வடுவறக்கற்றுமற்றும்
பலசுரர்மந்திரங்கள் படிப்பதும்பழிப்பாங்குற்றங்
குலவுநற்சிவநேசர்க்குக் குவித்திடுங்கரங்களாலே
யலகிலாக்கன்மப்பார்ப் பார்க்கஞ்சலிசெய்தல்குற்றம். ()

கன்மபாசங்களூறு கண்டமாய்த்துணித்தோர்சாதி
வன்மபாசத்தழுந்தி மயங்குதன்மாறுக்குற்றம்
நின்மலன்மெய்யினீறு கண்டிகைநிறைத்துநித்தன்
றன்மைநேரறிந்தோர்சன்ம முத்திரைதரித்தல்குற்றம்.()

நீரிடைவாதைபூணு நீண்டபாசத்துவாதை
சாருதலில்லாவீர சைவமெய்யுபதேசத்தாற்
பாரபுண்ணியபாவத்தாம் பரப்பகன்றேனைக்கன்மக்
கோரவாரியினுட்டள்ளக் குறிப்பதுகுணமோவையா. ()

வேதன்மாசென்னிகொய்த விமலனற்குலமானோரை
நீதமோவேதியர்க்கு ளொருவராய்நினைத்துக்கூறல்
சாதிகோத்திரமில்லாத சற்குருபுதல்வர்தம்மை
யோதுங்சாதிதன்ம முலகியலுறுத்துமாறு. (எக)

குலமிலன்பவமதற்றேன் குரைகழற்கன்புசெய்வோர்க்
குலகினிற்குலமிலென்பதுணர்ந்துநின்னுயர்சாதிக்காம்
பலவிதகன்மமுன்னூல் பஞ்சிநீபகரவேண்டாம்
மலமறுச்சென்மவேது வென்றலுமாதிராசர். (எஉ.)

வாதுனாவேண்டாங்கேளாய் மைந்தனேபூசுரர்க்காம்
வேதமோதிடுங்கருப்ப விசுத்திதான்முதலதாகக்
கோதறுபதினாறாகக்கூறுநங்கருமத்தொன்று
நீதவறினையேனந்தநெடுங்குலங்கெடுங்காணென்றும். []

இப்பதினாறிலொன்றும் விருத்தமன்றிதற்கான்கா
ணைப்பருங்கண்ணதாகுமுபநயனச்சனைக்குச்
செப்பிடும்விசேடநந்தி பிரணவஞ்செய்யவீசன்
றப்பில்கெற்பாக்கனென்று சாற்றுமந்திரமலாதும்.(எச)

பிடித்தபாத்திரமயன்றன் பெருந்தலைதரித்ததாரம்
விடத்தராக்கரப்பலாச தண்டரிவெங்கிற்றண்டா
முடித்திடுமஞ்சதான சிகைசடைமொழியினீற
துடற்செறிகோபிசாந்த மொண்கரியுரிதோற்சன்மம். ()

புரவரன்பிச்சைபண்ணப் புறப்பட்டபோதுகொண்ட
வரமுறுவேடமெல்லாந் தரித்தலான்மறையோனாகா
னரனெறியன்பர்க்கீது விருத்தமன்றழகாம்பிள்ளாய்
பர்வுநங்குடிக்குநன்மைப் பண்புநீமுந்நூல்பற்றின். ()

வசனவல்லமைகள்வேண்டாம் வசவநீநந்தஞ்சொல்லிற்
கிசைவதேகருமந்தள்ள வியல்பன்றுநீதிசிட்டை
திசைகொணஞ்சாதிகன்மச் செயலெலாஞ்செய்துவாழ்
ந்திங், கசைவறமறையோர்க்கெல்லா மதிகவுத்தமனாகா
மல்.　　(எஎ)

நீமனந்தன்னிற்கொண்ட நிட்டையிற்சிலந்தன்னை, நா
மறியோமிதெந்த நாடினுங்காணேங்கேளோம், யாமு
மெங்குலமுய்ய வெம்மிடத்துதித்தாயைய, காமகிழ்
ந்தியாங்கள்சொர்க்கக் கரையுறுங்கருமஞ்செய்தே. ௭௮

மண்ணினற்புத்திரன்றன் வரிற்குலமோங்குமன்றித்
திண்ணியகுலநாசத்தன் செனிக்கிலக்குலமுந்தேயு
நண்ணிசங்குலத்தின்வேரா நசிக்குங்குந்தலிநீயானாய்
புண்ணியமறையோர்சாதிப் புறம்புனைப்புகலாகிற்பர். ()

என்றுநீமெண்ணிலொன்றுமெய்திடாயெம்பால்வந்தா
ய், நன்றினைக்கொடாமற்றீமை நாமுறச்செய்தாலந்தோ
வின்றுநங்குலங்கெடாதோ விளிதுநின்பொருட்டாலின்
பந், துன்றுநற்கதியுண்டென்று துணிந்துயாமகிழ்ந்திரு
ந்தோம், (௮௰)

தக்கதஞ்சாதிக்கேற்ற சரித்திரஞ்சரித்திரத்திற்
கொக்கவேபுராரிபத்தி யுறினிகபரத்தின்ப
மிக்குறவேதுவாகுமனத்துயர்விடுமிரண்டுங் [ம்
தொக்குநின்றென்புலர்க்குஞ் சுரர்க்குஞ்சந்துட்டமாகு

நன்னெறியுபாயஞ்சொன்னே நாமிவையுனக்கொப்ப
ன்றே,நின்னெறிவிரதந்தானு நீயுநின்னிச்சையையா,வு
ன்னெறி மொழிக்காருண்டோ வுனக்கிலமினியாமெ

ன்னு, மிக்கெறிவெய்யசொற்கங் கெதிர்வசவேசர்சொ
ல்வார், (அஉ)

வேறு.

வேறுவைதிகநெறி விமலசைவமும்
வேறிவையிரண்டையும் விரவிக்கூறிடேல்
வேறுதெய்வங்களும் வேறுமந்திரம்
வேறுவேடங்குரு வேறுணர்ச்சியும். (அங)

வேறு.

வன்னியேமுகமாயுச்சி மலரவனுபியீசன், சென்னியி
ற்சிகையதாகிச் செங்கண்மாலிதயமாகி, மன்னியவ்வுயிர்ப்
புக்காலாய் வன்னயோனிகளும்வேறு, யுன்னிநீர்செபிக்
குங்காயத் திரியையுமுணாக்கக்கேண்மோ. (அச)

இருபதோடீரிரண்டா மெழுத்தவாய்முடியைந்தாகி
வருபதமூன்றுயாறு வயிறவாய்வகுக்கநீங்கண்
மருவுநூல்கடவுளொன்றுய் வசனியாவன்றிமற்றுங்
கருமமாநுங்கள்சாங்கி யாயனங்கமுறக்கேண்மோ. அரு

பலவடிவிதனுக்காசான் பலகருமச்சடான்மாச்
சொலலுறுமந்திரந்தான் சொன்னமந்திரமதன்றே
நிலைபெறுகன்மபந்த நெறியிலாவெம்பிரானை
விலகிலாவீரசைவ விதியினைவிளம்பக்கேண்மோ, அசு

வேறு.

தெரித்திங்ன்மொழிந்திடுஞ் தெரிசனர்க்கெலாந்
தரித்திடவரியதாய்த் தாவிலாரணம்
விரித்திதுவிதுவென விளம்பொணாதெதாய்ப்
பிரித்தருஞானராற் பேசொணாததாய். (அஎ)

இந்தவோர்பொருளைமதெழிற்கரத்தினு
மந்தரங்கத்தினு மமர்ந்துகாணமுன்
வந்திதுவிதுவென வகுத்துக்காட்டியே
தந்தருளர்கியெஞ் சமயதேசிகன், (அஅ)

வேறு.

அத்தவெண்சோமசென்னி யருந்தவர்முத்தியுண்மை, பெத்தவெம்பிறவிநாசன் பிணங்கியாட்கொள்ளும்பெம்மா, னெத்தபெண்பாகனேக னெண்கண்மூன்றுடையோன்வேளை, மத்தகவிழியாற்காய்ந்தோ னெனமறைவழூத்தலாலே, (அகூ)

இருவினையென்னுந்தாரு விறக்கினின்றெறியுமெஃகாய் மருவுமெய்க்கிரியையெட்டாய் வளருமொண்பத்தியாலே, பொருவருகுற்றமெல்லாம் போக்கியின்முத்தியின்க, ணுருகியொன்றிடுமிப்பேற்றி னுயர்ந்ததாம்பேறொன்றுண்டோ (கூ0)

இட்டலிங்கத்தொண்சேவை யெனுமுயரனுபவந்தா,
னுட்டருமிட்டமெல்லா முதவிடுமுனாக்கிலுன்னிற், றி
ட்டிசெய்திடிற்கொடுக்குஞ் சீவனன்முத்தியின்சந், து
ட்டமென்றுரணங்கள்சொல்லுமிச்சுகம்போலுண்டோ

கலந்திடேலந்தணாளர் கன்மத்தைச்சன்மார்க்கத்தோ
டிலங்கரன்பத்திமார்க்க வியலிதுவேறுதேறி
நிலந்திகழ்சமயர்தந்த நிலைநலமெனத்தாபிப்பர்
சலங்கொடம்முணர்வாலந்தச் சமயனாச்சாரலாமோ. ()

அரன்பெரும்பத்தராளே ரன்னியதெய்வமுன்னிற்
பரந்தயர்நரகமீரொன் பானுகமென்னும்வேதந்
திரந்தரணியன்றீதிங்க ளரியயனிந்திராதி
வரந்தருதேவரொன்று வணங்கிநீர்வாழ்த்துங்காலே.(கூங)

வந்தியாதொருநாட்டப்பின் மறையவர்நீதிகேடா
முந்தியேயிறைஞ்சிலீசன் மோகநற்பத்திகுன்றும்
புந்தியாலிவையிரண்டும்பொருந்திலந்தணச்சீர்பொன்று
மந்திவானிறத்தோனன்ப னந்தணனவதெங்ஙன். (கூச)

மேதினிகல்லிமாவின் விதையிடின்வேம்பதாகா
நீதிசேர்சிவன்றனன்பர் நெறியுமப்படியேகுன்று
வேதியர்பலதெய்வங்கள் விரும்பலால்வேசியன்னார்
நீதிலாச்சிவன்றனன்பர் செய்யகற்புடையாரொப்பார் ()

கேளையாநந்திமுன்னங் கீர்த்தியாலருச்சித்தெம்மை
யாளையனனேகனேக னுமெனுமந்திரந்தா
னூனியறிந்துமீச னன்மனத்தேவாயத்த
னிளவேடந்தரித்து நேசமென்பலதெய்வத்தின். (கூசா)

ஒருமொழிகேட்பாயீச னு நவராங்கவுதமேசன்
பிருகிடுசாபத்தாலே பிராந்தராய்ப்பெருமைசேர்க்குந்
திருவெணீறின்றிமண்ணிற் றேவர்தாமென்றுபேசும்
பெருமறந்தோர்க்கெம்மத்தற் பேணுநற்பத்தியாமோ. []

இச்செயருணிந்துசெய்பு மிச்சையான்மேன்மையான
வச்செயலொழிந்துநீயிங் கறைதல்வேதாகமத்து
நிச்சயமூலமல்ல நெடுமொழிப்பதகர்வாத
மெச்செயலத்தன்பத்தி விமலமென்பனவர்க்காகும். கூஅ

மற்றுமின்பனவக்கன்ம வழியினைவலுவிற்செய்யென்
றுற்றுரிபுரைக்கிற்செய்யே னுங்கள்கன்மங்களென்றுங்
குற்றவெங்கொடிவளர்த்த குயிற்குஞ்சுகூவுங்காலைக்
கற்றதங்குரலேயல்லாற் காகம்போற்காகாவென்னு. கூகூ

பரகுருபதமேபார்ப்பான் பரமசைவங்கள்பார்ப்பான்
சரணசொற்செவ்விபார்ப்பான் றற்பிரசாதம்பார்ப்பான்
விரவுசல்விரபத்திவிதியையேவிளைந்துபார்ப்பா
னிரவுறுமுங்கள்கன்மத் தியல்புசெய்பார்ப்பானல்லேன்

தந்தையே கேளாயீரேழ் தன்மையா முலகிற்கெல் லாந், தந்தையே தந்தைதெய்வந் தானெனு தனங்கனெ ன்போன், றந்தையே முதலாந்தேவர் தமைத்தொழுநீ யெனக்குத், தந்தையேயன்று துய்ய தந்தைதாயரனைச் சார்வார். (௯௧)

சாரமாபத்திதன்னிற் சாருமெம்மனந்தருக்கும்
வீரமாயேசரோநம் விருப்புடைக்கதியதாவார்
தீரமாநமதாசாரத் திறந்திறம்பாமனிற்பே
நீருநும்மாசாரத்து நின்றிடுநீரார்நாமார் (௯௨)

மின்னயராமற்பாகம் விளைந்தருள்விமலனுளா
மென்னையனியன்றைய வெனக்கையரின்னார்கேட்பாய்
சென்னையனக்கயன்சிக் கயன்றெலுங்கச்சோமைய
னன்னையர் கொடகூச்சவ்வை யம்மவை யாவரொன்றார்.

வசவராசையர்நிட்டை மாதிராசையர்கண்டங்
கசைவிலாமவுனராஞு ரவர்கண்மேனந்தியாரு
நசையிலாராகித்தம்பி ஞகாம்பையாருந்தாமு
மிசைவினுற்சிவன்றனன்பரிடத்திற்சென்றிருக்குங்காலே

முன்னூலின்செய்திநன்றாய் முடிந்ததேயென்றுபார் ப்பார், நன்னூலை மறுத்தானந்தி நம்பனே தெய்வமாக த், தன்னூலைத்தாபித்தானிச் சகத்தினிற்புதுமையென்

னப், பின்னூறு மனத்தராகிப் பேச்சொழிந் தெழுந்து சென்றார் (ாரு)

திருவவதாரச்சருக்கம்.

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். ாளஎ.

மழையினான்மலையாலாற்றால்வந்துபாய்காலாற்செய் யாற், பழையசிருழவரோவ மள்ளர்செய்பயிரின்கோப் பால், விழைவுறுவிளைவால்வேந்தன் விருப்பினாற்குரவ ராதி, பிழையிலாவைந்துபேணாப் பேணலாற்பெருக்குந் தேசம் (க)

கரும்பினாற்கமுகாற்றெங்காற் காவினான்மலர்வனத்தா லரம்பையானிலவோடை யம்புயவாவிநீரா,னெருங்கிய மஞ்சளிஞ்சிநிறைந்தெழுந்துடவைதன்னால், விரும்பிய மற்றுமுள்ள, விளைவினான்மிக்கநாடு (உ)

கோலமாடங்களோங்குங் குடிகளாற்குலவும்வாழ்வா லாலயச்சிறப்பால்வீதி யணிகளால்விழைவினார்ப்பான் மாலயற்கரியார்பூசை மாந்தரான்மடவார்கற்பான் மூலவேதாகமத்தின் முறைமையாற்றிருந்துநாடு (ங)

சிலபிரதிகளில் இம்மூன்றுபாடல்களே நாடுநகரங்களைக்குறித்து இச்சருக்கத்தில் முதலி லெழுதப்பட்டிருக்கிறது.

உ

திருச்சிற்றம்பலம்.

——*——

திருவவதாரச்சருக்க

வசனம்.

மழைமுதலிய வற்ருற் குறைவின்றிப் பலவளங்களு ம் நிறைந் தோங்கிய முன்சொன்ன கருனட தேசத்தில் பல நகரங்களிலுஞ் சிறந்த இங்குளாபுரி யென்னும் ஒரு புண்ணி யஸ்தலமாகிய நகரமுண்டு அதன்பெருமை வாக்கு மனங்கட் குட்பட்ட தன்று.

அந்த நகரத்தில் அந்தணரிற் சிறந்தவர் சிவனிடத்து ம டியாரிடத்து மன்பு மிகுந்தவர் மாதிராச ரென்னுந் திருநாம முள்ளவர் இவர் பத்தினியார் கற்பினுற் சிறந்த மாதாம்பை யென்பவர் இவர் அநேகஞ் சிவதருமங்களும் சிவசரண ராரா தனையுஞ் செய்து அதனுல் சகலபாக்கி யங்களையும் பெற்றி ருந்தாலும் மகப்பேறு குறைவு பட்டதனுல் மனந் தளர்ந் து அனந்த நோன்புகள் செய்தும் பயனில்லா திளைத்து நம க்கு மகப்பேறு எதனு லுண்டா மென்று கருதி தமது நாயகர் மாதி ராசருடனே மாதாம்பையார் அநேகம் பெரியவ ரிடத் துச்சென்று இக்குறையை விஞ்ஞாபித்து வருந்தி நிற்க.

நீவிர்புரிந்த நோன்பெல்லாம் பயனளிப்பதாயினும் மகப் பேறளிப்பது முதன்மையாக நந்திநோன் பென்றே யப்பெரிய வர் சொல்ல அவ்வாறே மாதாம்பை யாரும் உத்தேசித்த சுப

தினத்தில் சிவபெருமானது திருக்கோயிலிற் சென்று திருநந்
தி தேவரை நமஸ்கரித்து சோமவாரம் முதலாக வொன்பது
நாள் அந்நந்தி நோன்பைச் செய்து அந்நந்திதேவர்க்குத் திரு
மஞ்சளாட்டி வஸ்த்ரகெந்த புஷ்பங்களாலும் நெற்றிப்பட்
டஞ் சதங்கை சிலம்பு முதலிய வாபரணங்களாலு மல
ங்கரித்து தீபதூப வாராத்திகளையுங்கொடுத்து பஞ்சாமிர்தத்
தைநிவேதித்துப் பின்னரு மருச்சித்து அடைக்காய் முதலிய
வாசனைத் திரவியங்களையு மருத்தித்துதித்துத் தியானித்து
நின்று ஸ்வாமி நந்திதேவரே எமக்குச் சகலசம்பத்துந் தேவ
ரீரது கிருபையால் நிறைந்தும்மகப்பேறுகாரணமாகச்சன்னிதா
னத்தில்வந்தேன் என்மனங்களிக்க ஒருமகவையருளிச்செய்தா
ல் தேவரீரது திருநாமத்தையே யம்மகவுக்கிடுவேனென்றிரங்
கிநிற்கவே.

அத்தருணத்துத் திருநந்திதேவரும் மாதாம்பையாரது
வழிபாடு காரணமாக திருவருள் மேலிட்டுத்தனது வலப்பக்
கத்துப் பூமாலையைக் கீழ்வீழ்க்க அதனால் அவரருளைத் தெரிந்
து அதனைவாங்கிச் சிரத்தில்வகித்து நமதெண்ணஞ் சித்தித்
ததென்று மகிழ்ந்து வலம்வந்து வணங்கி அனந்தம்மாதருட
னே நல்லசகுனங்க ளெதிர்தோன்றத் தமது மாளிகையிற்
சென்றிருக்குநாள்களில் திருநந்திதேவர் ஸ்ரீமகாகைலாஸத்தில்
பரமசிவன் திருவாய்மலர்ந்தருளிய கட்டளைப்படி தாயவதரி
த்துச் சீர்திருத்த வேண்டினவ ராதலின் மாதாம்பை யாரது
வயிற்றில் தமது பேரறிவு குறைவின்றி கருப்பமாகச் சேர்ந்
தனர் அம்மாதாம்பையாரது புண்யத்தை யெவ்வாறு புகழ்
வது இவ்வித மகப்பே றுலகத்தி லெவர் பெற்றார் ஆதலால்
புகழ்தற்கருகரல்லோம்.

இக்கருப்ப மடையப்பெற்ற மாதாம்பையாரும் நாளுக்கு நாள் ஜாடராக்னிமந்தித்து சிற்றுணவி லிச்சையுற்றதுவுமொழிந்து திருமேனியும் விளர்த்தது சோம்பலுந் தூக்கமும் மேலிட்டு வாந்தி யடைந்து முலைக்கண் கறுத்து பசுநரம்பு பரவி தோன்றுத விடையுஞ் சிறிது தோன்றப்பெற்று இவ்வாறு கருப்பச் சின்னங்கள் பலவுந்தோன்றிப் பத்துமாதஞ் செல்லவே அவயவங்கள் நிறைந்து - ஸ்ரீநந்திதேவரும் சிவத்யானத்துக்கு இதுவும் சமாதிஸ்தானமென்று நினைத்து பத்மாஸனத்தை யடைந்து அஜபாமந்திரத்தாற் பூதசுத்தி பண்ணி நாடித்ரய சுத்திகளைச் செய்து சுழுமுனையுட் பாசக்ரந்திச்சேதமும்பண்ணி மூலாதாரம் முதலாகத் தெரிசித்து ஆஞ்ஞையில் சதாசிவத்தைத் தெரிசித்து அவ்விடத்துப் புருவ மத்தியிற்றிருவரு ளுருவா யுண்டாகிய வமுதத்தைப் பானம்பண்ணி இவ்வாதார மாறுடனே நிராதாரமாறுந் தெரிசித்து மேற் சிவதெரிசனமும் பண்ணி இவ்வாறு மூன்று வருட மக்கருப்பத்திருந்தனர்.

அப்போது மாதாம்பையார் அக்கருப்பபாரம் பொறாது வாடித்தளர்ந்து மூவாண்டாயு மிக்கருப்பம் வெளிப்படா திருத்தலெல்லாஞ் சிவன்செயலே யென்றெண்ணி ஸ்ரீநந்தி தேவரதுசன்னிதியிற் சென்று வணங்கித் துதித்து ஸ்வாமி நந்திதேவரே அநேக விரதங்களைச் செய்தும் பயனின்றி உம்முடைய பாதங்களிற் பணிந்து செய்த விரதத்தால் கருப்பவதியாயினேன் கருப்பமடைந்தும் உலகமுறையாய் பத்தாவது மாசத்தில் பிரசவமாகாமல் மூன்றுவருஷ காலமாயும் கர்ப்ப பாரம் பொறுமல் துன்பப்படுகிறேன் இனிச் சகிக்கமுடியாது

காத்தி ரட்சிக்க வேண்டுமென்று அஞ்சலி செய்து அவ்விட
ம்விட்டு மந்தமனத்துடன் தமது மாளிகையிற் சென்று
மிகுந்த துன்பத்துடன் சயனித்திருக்குந் தருணத்தில் ஷடத்
வாதிதருபியாகிய பரமசிவம் மாதாம்பையாரது ஸ்வப்னத்
தில் ஒரு ஜங்கமர்போல வந்துநின்று மாதாம்பையை நோக்கி
உன் கர்ப்பபாரத்தா லுண்டாகிய துன்பமும் மனோசாஞ்சலிய
மும் நீங்கி மனம் மகிழும்படி நாளையதினம் புத்திரன் பிறப்ப
ன். அந்தப்புத்ரனுக்கு வசவனென்று நாமகரணஞ் செய்வீர்
இந்தவுன் புத்ரனாலே உலகத்தில் அஞ்ஞான விருளெல்லாம்
நீங்கப்போகிறதென்று சொல்ல.

மாதாம்பையாரும் நித்திரைதெளிந் தெழுந்து தான்கண்ட
கனவினதிசயத்தையு மருகிருந்த மகளிர்க்கெல்லாமுரைத்து ம
னமகிழ்ந் திருந்தனர்.

நந்திதேவரும் யோகத்தைவிட்டுச் சிவனது பணிவிடையி
ல் உத்யுக்தராய் இரண்டு ஸ்ரீஹஸ்தங்களையுந் தலைமேற்குவித்
துத் தலைகீழாக ப்ரஸவமாகும்போது சிவபெருமான் நந்திதேவ
ரது சித்தத்தில் குருவாகத்தோன்றி யங்கிருந்த சுற்றத்தாரும்
மாதாம்பையாரு மறியாதவண்ணம் அவரது சரீரத்தில் சிவலிங்
கம் ப்ரகாசிக்கும்படி தாரணஞ்செய்தனர். பின்பு இவ்வாச்சரிய
மான க்ருத்யத்தைக்கண்ட தாய்முதலானவரும் இந்த நமது
பாலகன் சரீரத்தில்ஜனிக்கும்போதே யெக்காரணத்தா லிந்த லி
ங்கதாரணஞ் செய்யப்பட்டதோ, இந்தப் பாலகனும் நம்மிடத்
திற் பிள்ளையாகவந்து பிறந்தனன் என்று சந்தேகத்தோடு மகி
ழ்ச்சியையு மடைந்திருந்தனர்.

அப்போது நிறைந்த சடைமுடியும், அம்முடியினடுவி லமழ கிய சிவலிங்கமும், திரிபுண்டரந்தரித்த நெற்றியும், உருத்திரா க்ஷந்தரித்த திருமார்பும், தாம்பிரக்குண்டலந்தரித்த செவிகளு ம், தோளில் யோகபட்டிகையும், தண்டமும், குடையும், மாணி க்கக்கந்தையும், ப்ரகாசிக்கின்ற புன்முறுவலும், நீண்ட தாடியு மாகத் திருக்கோலங்கொண்டு முன்மறைந்து தாரணஞ்செய்த சிவபெருமான் யாவருங்காணத்தக்கதாய் ப்ரத்யக்ஷமாய்நின்றார்.

மாதாம்பையாரும் நமஸ்கரித்து அஞ்சலித்துநின்று ஸ்வா மி, தேவரீர் எழுந்தருளியிருக்குந் திருஸ்தலமிதுவென்றும், எளி யேன்றெரிசிக்க விங்குநேரிட்ட தின்னகாரணமென்றுந் தெரிய விரும்புகிறேனென்று விஞ்ஞாபிக்க, கேட்பாய் மாதாம்பை நெ டுநாளாக நாமிருப்பது கூடலசங்கமம், நமதுபெயருங் கூடலச ங்கமனென்றே சொல்லுவார்கள். நீ நெடுநாள் வருந்திச்செய்த தவத்தாலும், உலகத்திற் சமணழிந்து நமது சிவசமயமோங்கு ம்படி நாமிடும் பணிவிடையினாலு முன்னிடத்தில் இப்புத்திரன் ஜனித்தான். ஆதலால் இவனிடத்துவைத்த பக்ஷத்தால் நாமே அங்கலிங்கதாரணமுஞ் செய்தோம். பால்முதலிய வுணவுகளு ஞ் சிவநிவேதனமல்லாதனைக் கொடுப்பீராயின் அதற்குத்தடை நம்மாணையென் றிவ்வாறு ஆஞ்ஞாபித்து மின்னல் மறைந்தது போல மறைந்தனர்.

அங்கிருந்தவர் யாவரும் ப்ரமித்துச் சிறிதுநாழிகைசென் று தெளிந்து பின்பு இவ்வண்ண நமக்கருளியசங்கமர் சிவபெரு மானென்றே நிச்சயித்துத் திசைநோக்கித் துதித்துப் பணிந்த னர். இந்தக் குழந்தையின் றிருமேனியினொளியே யங்கிருந்தவ ரதஞ்ஞானங்களையெல்லாம் போக்கிற்று.

தந்தையாரும் மனமகிழ்ச்சியோடு அத்தருணத் தவ்விடத் திற்கு சிவனடியா ரநேகரையவரவழைத்துப் பூசித்து, அவரது பாதோதகத்தாற் றமதுபுத்திரற்குத் திருமஞ்சனமாட்டுவித்து அவராற் கொடுக்கப்பெற்ற திருநீற்றையுந் தரிப்பித்து, சிறந்த பட்டாடையிற் சயனிப்பித்து, முன் சிவபெருமான் றிருவாய்ம லர்ந்தருளியபடி வசவேசுவரனென்று நாமகரணமுஞ் செய்து, நவரத்னகசிதமான தொட்டிலிலேற்றினர்.

வசவேசுவரரும் சாமானியமான குழந்தைபோல விளக் கைப்பார்த்துச் சிரித்தும், சிவநிவேதனமான முலைப்பாலுண்டு ம், தமதுகையைச் சுவைத்தும், கைகால்களை யுதறிக்கொண்டு சிலகாழிகையழுது மழாமலும், தமதுதிருமேனியிற் சிவலிங்கத் தைக்கண்டு மகிழ்ந்தும், கவிழ்ந்தும், உட்கார்ந்தும், நின்றும், நடந்தும், ஓடியும், சைவபரிபாஷைகளையே மழலைச்சொற்களா கச்சொல்லியும், புழுதியாடியுங் குதித்தும், சிவனடியார்களைக் கண் டோடியோடி வணங்குவதே தமக்கு விளையாட்டாகவாடி யும், இப்படியே பாலப்பருவங்கடந்தபின் வேதங்கள் ஆகமங்க ள் புராணங்கள் இவைமுதலிய கலைகளெல்லாந் தாமேயுணருங் கருத்துடையவராய் எட்டுவயதுடையரரயினர்.

தந்தையாராகிய மாதிராசர் தமதுபுத்திரர்க்கு பிராமணகு லத்துக்கேற்ப வுபநயனச்சடங்கைச் செய்யக்கருதி யெத்னஞ் செய்தனர். அப்போது வசவதேவரு மதைமறுப்பராகி இந்த வு பநயனச்சடங்கு எனக்கிஷ்டமில்லாதது. சிவபெருமானை யர்ச் சிக்குந் றொழிலைப்பூண்டும் உமக்கே விம்மருட்சி, குருபாதங்க ளைப்பணிபவர் பவிகளுக்குப்பணிந்தால் அதுபாவம். சைவவே ஷந்தரித்தவர் பவிகளதுவேஷந்தரித்தல் குற்றமே, அவர்களது.

காயத்திரியைஜெபித்தலுங் குற்றமேயென்று சொல்லவே, மாதிராசருங்கேட்பாய் வசவேசனே குலத்துக்குரிய ஸம்ஸ்காரமில்லாதபோது குலங்கெடும். இவ்வந்தணக்கோலமும் விருத்தமானதன்று. உபாயனத்தில் பிக்ஷாபாத்திரமே சிவன்கையிற் கபாலம். உபவீதமே - சர்ப்பாபரணம். பலாசதண்டமே - விஷ்ணுவின் முதுகெலும்புத்தண்டு. முடிக்குஞ்சிகையே - சடாபாரம். கோபிசந்தனமே-திருநீறு. கிஷ்ணாஜனமே-யானைத்தோல். சிவபெருமான் பிக்ஷைக்குப் புறப்பட்டபோது தாங்கொண்டகோலமே இதுவாதலால் விருத்தமன்று ஆதலால் நமதுமொழியைத் தடாது இச்சடங்கை யேற்கவேண்டுவதென்று சொல்ல.

பிதாவே யுலகத்திலொருகருமமும் வலிதிற்செய்வ தழகன்று நீரெனக்குத் தகப்பனுமன்று, உமதுபத்னியா ரெமக்குத் தாயுமன்று. வீரமாஹேசுவரரான வடியார்களே எமக்குத் தகப்பனுவர், அதிற் பெண்ணுவாரோ எமக்குத் தாய்மார் என்றுசொல்ல, மாதிராசரு மொன்றும்பேசாமல் மௌனமாகப்போயினர். வசவதேவரும் தாய்தந்தைகளிடத்துப்பாசத்தைவிட்டுத் தமது தங்கையாராகிய நாகாம்பையாருடனே சிவசரணரிடத்துச் சென்றிருந்தனர். உபாயனத்துக்கு வந்திருந்த பந்துவர்க்கங்களும் உபாயனச்சடங்கு நன்ருகமுடிந்ததென்று வெறுத்து வருத்தமடைந்து தத்தமிடங்களிற் சென்ருர்.

திருவவதாரச்சருக்க வசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உபதேசச்சருக்கம்.

பத்தியாகத்தாபோற்றி பரமமோகத்தாபோற்றி
முத்தியோகத்தாபோற்றி முனிவர்தாகத்தாபோற்றி
மெத்தியாகத்தாபோற்றி விமலயூகத்தாபோற்றி
புத்தியாகத்தாபோற்றி புனிதர்பாகத்தாபோற்றி. (க)

அருணெறிவசவதேவ ரன்னைமாதாம்பைமுன்னோர்
பெருநெறிவிச்சலேசன் பிரியமந்திரியாயுள்ளார்
திருமலிசெல்வமிக்கார் சீபலதேவரென்பா
ரொருமைசேர்சனேசத் துருகுநன்னெஞ்சமுள்ளார் உ

நந்திகண்முந்நூல்சாத்து நலத்தினைக்காண்பான்வந்தார்
தந்திருமகளார்தம்மைச் சங்கரனடியார்க்கல்லாற்
புந்தியினல்கேனென்னும் போதமேபோதவுள்ளா
ரந்நல்வசவதேவ ரானிடத்தன்புகண்டே. (ங)

தக்கசீர்வசவதேவர் தாமுறுமடத்திற்சென்று
பக்கமொன்றிடப்பணிந்து பண்பினலணைத்துகந்து
மிக்கமண்விளங்கவந்தீர் விரும்புமென்மகளுமக்கே
புக்குய்யவேண்டும்யான்வாழ் புரமதற்கணைவிரென்றார்

பொருந்தினர்நந்தியார்தம் பொற்பதிக்கன்பிஞலே
யரும்பொனின்சிவிகையேற்றி யவர்பின்புதாமுஞ்சென்
றங், கிருந்துநன்முகுர்த்தமிட்டன்றிந்தவிச்சலபுரத்தை
த், திருந்தவுற்றலங்கரித்தல் செய்யுமினென்ருர்நின்ருர்.

அப்பெருவீதியெல்லா மரம்பைபூகங்களாலு
மொப்பரும்பந்தராலு மொளிருமேற்கட்டியாலுஞ்
சப்பரநிரைகளாலுந் தயங்குதோரணங்களாலுந்
துப்புமாமணியின்றூய தொங்கலிஞலுந்துற்றே. சா

தண்பனிநீரிற்றுய்ய சந்தனங்கரைத்திறைத்துக்
கண்கொளாவாறுவீதி கவின்பெறவலங்கரித்தே
விண்பயிறமதுவீட்டின் மெய்ம்மணப்பந்தர்முற்றுந்
தெண்பனிநீர்கத்தூரி சேர்த்துநன்மெழுக்குச்சாத்தி. எ

வரமுறுவாயிலட்ட மங்கலம்வைத்துவாழ்த்தித்
தாளமேசொரிந்துகும்பம் பாலிகைதாபித்தேத்தி
நிரைமணிவிளக்கினங்க ணிறைத்துத்தோற்கருவியாதி
யிரையுமாகடலதென்ன வெங்கணும்பொலியவார்க்க.அ

எம்பிரானன்பர்தம்மை யிங்கழைத்திடுமின்பாத
வம்புயங்களைவிளக்கும் வணங்குமிஞதனச்சீர்க்
கம்பளநிரைகள்போடுங் காதலிலிருத்தும்பூதி
விம்பமாரிலையடைக்காய் கர்ப்பூரமிகவும்வைம்மின் ·(கூ)

வேறு.

என்றுசிபல தேவரியம்பவே
நின்றபேர்மடத் தோர்க்குநிகழ்த்தினு
ரோன்றும்பண்டா ரியரங்கங்கோடியே
துன்றுபத்தர்க்கு மாயேசுரர்க்கெலாம் (௰)

சொல்லலும்பத்தர் மாயேசுரர்திரண்
டெல்லையில்லவ ராகியெழுந்தருள்
பல்விதத்தைப் பலதேவர்பார்த்தெழுந்
தல்லறீர வடிகள்விளக்கியே (௰க)

அளவிலாதநல் லாதனஞ்சேர்த்தபின்
வளமுறும்படி வைத்தவிபூதியும்
பளிதமுமடைக் காயும்பரிவினு
வெளியராய்வைத் திறைஞ்சியெழுந்தரோ (௰உ)

சகலபத்தர் மயேசர்சரணர்தா
நிகரிலார்கண நேசத்தராகியம்
முகமலர்ந்துநம் முக்கணன்கீர்த்தியே
சுகமதாகத் துதித்துறுங்காலையின் (௰௩)

பரசிவானு பவவசவேசுரர்
சரணர்பாதாம் புயநற்சலந்தனின்
முரணமான பவமறமூழ்கியொண்
டரணிபோன்ருளிர் தண்டுகில்சாத்தியே (௰௪)

பூதிவெண்டிரி புண்டரமேற்றரித்
தாதியாரச் சனேமலர்சென்னியின்
மீதிருத்தி விமலநற்கண்டிகை
சோதிமேனிச் சுகாபரணத்தராய் (ருரு)

வசவதேவர் மகத்தனைக்கண்டுநன்
னசைகொணெஞ்சத்த ராகிநயனநீர்
விசையில்வீழ்வுற விம்மிப்பணிந்துநின்
றிசையுமேற்றவ மெய்திற்றெனறேத்தியே (ருசு)

ஆடைசற்று மசையாதொதுக்கியே
நீடுமங்க நெருங்கவொடுக்கியே
கூடுமஞ்சலி கொண்டகரத்தராய்த்
தேடருஞ்சிவ பத்தித்திரட்சிபோல் (ருஎ)

அஞ்சியன்பி னமர்ந்தங்கிருந்தருள்
வெஞ்சமில்வச வேசனைநோக்கியின்
செஞ்சொனுவினர் சீபலதேவர்தா
நெஞ்சுவந்துநன் னேயத்திருந்துபின் (ருஅ)

வேறு.

சீராட்டிக்கங்காம்பைத் திருநுதலேமங்கலநன், னீரா ட்டியிடையழகு நிதியாடைக்குறவுடுத்திப், பாராட்டுங் கவினவட்குப் பணிவேண்டாங்கலியாணப், பேராட்டி யெனுஞ்சிறப்பாற்பெயர்வேண்டுமெனத்தரித்தார்.(ருகூ)

மலர்கமமைனையமுக வல்லிக்குமலர்மாலே
நலமுறவேகுழற்கணிந்து நன்னுதன்மேற்குங்குமத்தின்
றிலகமதிட்டிளங்கயல்போற் றிருவிழிக்கஞ்சனமெழுதி
யுலகமுய்யவந்தார்நெஞ் சொப்பவேயொப்பித்தார்(உ௰)

கலினதனுற்றிருமகளுங் கற்பினலருந்ததியு, மவனியி டத்தொவ்வார்க ளணிநடையாலன்னமொவ்வாச், சவி மொழியாற்கிளியொவ்வா தண்ணகையாற் றாளமொவ் வா, துவரிதழாற்பவளமொவ்வாத் தோகையொவ்வாச் சாயலினல். (உக)

கங்காம்பையெனுமமுதைக் கவுரிகழற்கினியாளை
மங்காததவஞ்செய்து வசவேசற்கானாளைச்
சிங்காரமடந்தையர்கள் செங்கரத்தாலேந்திவந்து
பொங்கார்வந்தந்தையார் பொருந்தநின்றுகாட்டினர். ()

கன்னியர்கற்பெல்லாமோர் காயமாத்திரண்டாளை
நன்னயமாக்குருலிங்க நற்பத்திக்கேற்றாளை
யென்னைவாழ்விக்கவந்தி ரென்னக்கைகொண்டுசென்று
மன்னுமருந்தவத்தோர்முன்பலதேவர்வணங்குவித்தார்

வணங்கியபின்சிவனுருவாம் வசவேசர்தமைஞானக்
குணந்திரண்டகோலத்தைக் குலவுமரியாதனமீ
திணங்கருநற்பத்தியினு லெழுந்தருளியிருக்கச்செய்
தணங்கொருபாகனைத்துதித்தங் காராமெய்யன்பினல்()

கங்காம்பைமுதலாகக் கனகவகையாபரணந்
தங்காதலாகமற்றுந் தம்மனையிலுள்ளவெலாம்
பொங்கார்வமுட னேந்திப்புண்ணியனாவலமாய்வந்
தங்காதவனையணைந்த வமுதமதியெனவைத்தார் (உரு)

எனைக்காப்பீரொனமகளை யிப்பொருளைக்கொள்விரொ
ன, மனைக்காதலிலரோனு மதிச்சடையாரருளென்னு, னி
னைத்தாகுதெனக்கொண்டார் நேயத்தாற்பலதேவர், மு
னைக்காலத்தவமெனக்குமுற்றிற்றின்றெனப்பணிந்தார்·

நல்லவிலக்கணமுகுர்த்த மெனநின்றோர்நவின்றளவி
லல்லணியுங்கண்டனரு ளவனடியாரருளிரண்டுஞ்
சொல்லரியவிலக்கணமுந் துணையுமுத்திச்சுகமுமாம்
வல்லவர்கட்கெனவங்கண் வசவேசர்வகுத்துனைத்தார்()

இத்தகையவதுவைநல மெங்குமிலையெனவுலகோர்
மெத்தநின்றுபாராட்ட மெய்த்தவர்க்கும்பத்தர்கட்குஞ்
சுத்தமிகுமிட்டான்னஞ் சுகநிறையவளித்திறைஞ்சி
யத்தமுகிழ்த்தத்தவர்க ளனைவருமங்கறியவே (உஅ)

ஆயிழையார்கங்காம்பை நாகாம்பையாருடனே
யேயமணப்பந்தரிலே பலதேவரிசைவிறைற்
றூயபுகழ்க்கூடலசங் கமர்பாதந்தொழச்சென்று
நேயமுடனுபதேசம் பெற்றசெய்திநிகழ்த்துவாம் (உகூ)

வே று.

விச்சலபுரத்தினை விளைந்தகலலுற்றே
யச்சமறுபத்தர்க ளனேகர்புடைசூழ
வுச்சிதநல்லற்புதமோ டுன்னரியகாத
மிச்சைதருயோசனையி லேகியெல்லைகண்டார் (௩0)

பத்தியதிகத்தொடு பணிந்துபலகாலுஞ்
சித்திவசவேசுரர் சிரங்கரமுகிழ்த்தே
யத்திசையைநாடியரு மந்ததுதிசெய்யா
வெத்திசையுமெண்ணில வொழுந்தருளுகின்றார் (௩க)

அன்னதிருமுன்னக ரரும்பெருமைதன்னைப்
பன்னகபதிக்குமிது வென்றுபகரொண்ணா
நன்னதியனைத்துமிகு புண்ணியநலத்தா
மின்னதலரும்பரிச வேதிகிரியெல்லாம் (௩உ)

ஆலயமனைத்துமர னாலயமதாகும்
சோலைநலகண்டிகை துதைந்துகனிகொள்ளு
மேலவெழுநந்தவன மேவனமியாவு
மேலணியுநீறதனை மேவுமுயிர்முற்றும் (௩௩)

ஆவினமெலாமமர ராவினமதாகுஞ்
சேவினமெலாமிடப செய்யவடிவாகும்
வாவிகுளமோடைகளும் வானநதிநீரோ
மேவுதொழிலீசனை விரும்புவழிபாடே. (௩௪)

நற்புருடரெல்லவரு நல்லமரராகுங்
கற்புடையமங்கையர்கள் காரிகையரெல்லாஞ்
சொற்செயலனைத்துமரன் றேத்திரமதாகும்
பொற்பொலியெலாமமரர் பொன்னுலகியங்கள். ௩௫

கோதின்மறுகெங்குமிகு கோலமிடுவாரோ
வேதிகையனைத்துமறை யாகமவிளம்பே
நீதிதருமுத்தநிதி நீணிலமியாவு
மாதிநகரப்பெருமை யாரளவுரைப்பார். ௩௬

பொய்யர்கலர்வீணர்மத போதரபகாரர்
வெய்யவெடிசொல்லர் சிறுபுல்லரறிவில்லோர்
துய்யநெறியில்லரொடு தூடணர்களானோ
ராயமறவப்பதியி லாருமிலையாகும். ௩௭

அங்கண்வசவேசரணை கின்றமையறிந்தே
சங்கரனதப்பதி தருக்குதவரெல்லா
நங்கடுயரிங்கற நடந்ததரிதென்றார்
துங்கநகர்வாழைகொடி தோரணநிரைத்தார். ௩௮

வந்துநகரெய்துவச வேசரெதிர்சென்றே
யெந்தமிடர்தீரவருவீர் சரணமென்றார்
சிந்தைமகிழும்படி திருந்துதுதிசெய்தார்
நந்திகளவர்க்குற நயந்துசரணென்று. ௩௯

அன்னநகரந்தனை யடிக்கடிபணிந்தே
மன்னுதிருவீதியை வலங்கொடுவணங்காச்
சொன்னகிரியன்னசிக ரந்தொழுதிறைஞ்சிக்
கொன்னணையுமெந்தையுறை கோயிலுறுபோதின். சய

மைந்தர்வருகின்றமை மகிழ்ந்துமகதேவர்
முந்தைவருதேசிக முகுர்த்தமதுகொண்டே
யந்தவசவேசர்விழி யாரவெதிர்நின்றார்
வந்துகுருதெக்கணை தமைக்கசிவில்வைத்தார். சக

மற்றுமடியற்றமர மென்னமனைநைந்தே
பற்றுமிகுநண்பொடு பணிந்துதனாநின்று
தெற்றெனவெழாவாயரு டேசிகர்கரத்தா
லுற்றபெருநண்பினுத லொற்றியெழுகென்றார். சஉ

எழுந்துவிழிநீர்விழ விரண்டுகரமுந்தஞ்
செழுஞ்சிரமிசைக்குவிய வேதெளியுமன்பி
னெழுந்தினர்மகிழ்ச்சியெ னு மாவிதருநீராற்
றொழுங்குருமலர்க்கழல் விளக்கினர்துதித்தார். சங

நேசமுடனேயரு கிருத்திநிகரில்லாத்
தேசவுபதேசவகை செவ்வியினளிப்பா
ராசிலெதிர்காலமு மருந்தவனாநம்போற்
பூசனைசெய்வாய்நினது புந்திமகிழன்பால். சச

அத்தவர்கடம்மைநர ராகுமெனவுன்று
துத்தமரிருத்தனென வுன்னியவர்செய்யு
மெய்த்தவமனைத்தினையு மிக்கநலமென்பாய்
குத்திவையினஞ்சலிசெய் கூறினியசொல்லே. ௪௫

மேதகுதவத்தர்குல மேன்மைசிறிதென்றங்
தோதுதன்மனத்தினிடை யுன்னுதலொழிப்பாய்
போதவுடலுக்கிறுதி புக்குகினுநெஞ்சி
னீதிதருநின்விரத நெக்குறவிடாதே. ௪௬

வண்டவரைநிந்தனைசெய் வாயினர்சிரத்தைத்
துண்டியரனூல்விதி துலங்குலகில்வைப்பாய்
மண்டுசிவபத்தியினில் வஞ்சனையொழிப்பா
யுண்டிதுவதில்லையென வுன்னிநசைகொள்ளேல். ௪௭

அன்னியர்மடந்தையரை யன்பினினையாதே
யன்னியர்தனத்துமன மற்பமுமுறாதே
யன்னியர்சுகத்துமன மாதிகள்விடாதே
யன்னியரைநிந்தனை யயர்ந்துமுரையாதே. ௪௮

பத்தசனமெய்திடி லெழுந்துபரிவாலே
யத்தமிகவஞ்சலிசெய் தன்பொடுதுதிப்பா
யித்தரையினின்பரிவெ னுந்தமனியத்திற்
கொத்தவுரைகல்லெமது ருச்செறிதவத்தோர். ௪௯

அப்பொழுதுநின்னினைவி னன்புநிலைகுன்று
தொப்பநடவுன்மன முறும்பிரியமெல்லாந்
தப்பறவளித்துமிது சத்தியநமைத்தா
னெப்பொழுதுநீபிறி விலாயஃதியாமும். ருய

என்றினிமை சேர்மதுர வாய்மைகளியம்பா
நன்றிருகரத்துடல நண்ணிடவணைத்தே
நின்றுபணிநந்தியென நீடுபணிவார்முன்
மூன்றனதுமேனிகொடு மூத்தனுமிருந்தான். ருக

ஐயர்சிவலிங்கமய மானவையறிந்தே
வெய்யவரலாதவச வேசுரர்விருப்பா
லுய்யவுபதேசவகை யுண்மையையுணர்ந்தார்
செய்யதிருமேனியொடு சிக்குமுளரானார். ருஉ

உற்றசிவபத்தர்முனி வோருளமகிழ்ந்தா
ரிற்றைநலமேதவ மெமக்குவசவேசர்
நெற்றிவிழியானென நிகழ்த்தியெதிர்நின்றார்
கோற்றவிடையானைவிழி கொண்டுதெரிசித்தார். ருங

இந்தவசவேசரிறை வற்கிணையராமா
மந்தவவுருக்கொடரு குற்றருளுணாத்தே
புந்திமகிழும்படி புறந்தடவிமற்றுந்
தந்தருமமெய்யொடு தழீஇயினர்தருக்கால். ருச

அண்ணலருளிப்படி யணைந்தவரிலென்பார்
மண்ணிலிவர்வந்தது மகாபுதுமையென்பார்
நண்ணியெழுநந்துயர் நசிக்கவலரென்பா
ரொண்ணிவசவேசவென வெய்துநலமென்பார். ருரு

மக்களொடுதந்தையர்கண் மாதனாவதைத்து
மக்கினியிலுற்றுட லனற்கொளுவநின்று
நக்கனருள்பெற்றனர்க ணந்திகளிதென்னே
யிக்கணமதேசிவனை யெய்துதவமென்பார். ருசா

ஆகமகிழும்பொழு திலங்கண்வசவேசர்
மோகமோடெழுந்துகுரு முன்பணிதல்செய்தே
வாகணையுமண்டபம தொன்றினிடைவந்தார்
நாகபணியற்கினிய நல்லரோடிருந்தார். ருஎ

அன்றுமகபூசைக ளமைத்தளவிலன்பாற்
சென்றுதிரிபோதுமுயர் தேசிகர்பதத்தே
துன்றியவிருப்பொடு பணிந்துதுதிசெய்தா
ரொன்றுமிவணின்றகலொணுதெனவிருந்தார். ருஅ

உபதேசச்சருக்கம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - உ௲ரு.

திருச்சிற்றம்பலம்.

—*—

உபதேசச் சருக்க வசனம்.

முன்சொன்ன வுபநயனச்சடங்குக்கு வந்தவர்களி லொருவராயும் மாதாம்பையாரது முன்னோராயும் செங்கோல்முறை வழுவாத விச்சலராஜன் ப்ரதான மந்திரியாயுமுள்ளவர், சிவபக்தியினுருகுஞ் சிந்தையுள்ளவர் ஸ்ரீபலதேவரென்னுந் திருநாமமுள்ளவர், தமது அருமையானபெண்ணைச்சிவனடியாரிற் சிறந்தவர்க்கன்றி மற்றையர்க்கு மனத்தினாலுங்கொடுக்கச் சமாதானிக்கேனென்னுஞ் சங்கற்பமுடையவர், அவ்விடத்து வசவேசுவரது சிவபத்தியின்மேலீட்டைககண்டு அதிசயித்து அவரிருக்கு மடத்தைச்சார்ந்து மனப்பூர்வமாக நமஸ்கரித்து, ஸ்வாமிநீர் இந்தவுலகத்தனைவரும் நற்கதியடையவே யவதரித்தீர், எளியேனது சங்கற்பமும் பாழ்போகாது என்னூாகரத்திற்சென்று எனதருமைத் திருமகளைத் திருமணஞ்செய்து, எம்மையும் நற்கதியிற் சேர்த்தருளவேண்டுமென்று வருந்திநிற்க.

வசவதேவரும் தமக்குத் திருமணத்தில் விருப்பற்றவராயினும் சிவகாருண்யத்தா லிரங்கிச் சமாதானித்தனர். ஸ்ரீபலதேவருஞ் சதுரங்கசேனைகள் சூழ்ந்துவரப் பொற்சிவிகையிலேற்றி விச்சலபுரத்திற்சென்று அவரவர்க்குத்தக்க ஸ்தலங்களிலிருக்கச்செய்து தமது பரிஜனங்களைப் பந்தல்முதலியவற்றால் நகரத்தையுந் தமது மாளிகையையும் அலங்கரிக்கச்செய்து அநேகமடியார்களையும் வரவழைத்துப் பூசித்தனர்.

வசவதேவருந் திருமணக்காட்சிக்கு வந்திருந்த சிவசரணர்களது பாதோதகத்தினுல் திருமஞ்சனமாடி கோடிசூர்யப்ரகாசமுள்ள வஸ்திரத்தைத் தரித்து, நெற்றியில் திருநீறுசாத்தி, உருத்திராக்ஷ மாலைகளையு மணிந்து, நித்தியகர்மானுஷ்டானத்துடனே சிவபூஜையும்புரிந்து, சிவார்ச்சனையிலர்ச்சித்த மலரையுஞ் சிரசிலணிந்து, அங்கு சிவசரணரையும் முறையாகப்பூசித்து நமஸ்கரித்திருந்தனர்.

அப்போது ஸ்ரீபலதேவரது திருமகளாகிய நாகாம்பையாரையுந் திருமஞ்சனமாட்டுவித்து வஸ்த்ராபரணங்களா லலங்கரித்துந் திலதமிட்டு மணக்கோலஞ்செய்து அநேகந்தோழிகளுஞ்சூழ விருந்தனர்.

ஸ்ரீபலதேவருந் தமது திருமகளையழைத்துச் சிவசரணரது பாதங்களில் வணங்கச்செய்து, வசவதேவரையும் மணக்கோலஞ்செய்த சிங்காசனத்திலேற்றி, அவரது திருமுன்னே தமது திருமகளையழைத்து ஸ்வாமி வசவதேவரே எம்மிடத்துக்கருணையால் இந்தப்பொருளைத் திருக்கைதொட்டருள வேணுமென்றுவேண்ட.

வசவதேவரும் - இது சிவானுக்ரஹமென்றுகொண்டனர். அங்கிருந்தபெரியோர் - உத்தேசித்த முகூர்த்தகாலமுஞ் சமீபித்ததென்றுசொல்ல வசவதேவர் சிவனருளும் சிவனடியார்களருளும் இரண்டுமே நல்லமுகூர்த்தமென்றுசொல்லிஅடியார்களுக்குப் போஜனமுதலிய வாராதனைகளுஞ்செய்வித்து ஸ்ரீபலதேவரது சமாதானத்தினுல் நாகாம்பையார் கங்காம்பையா ரிருவரையுமழைத்துக்கொண்டு யாவரும்வணங்கும்படி அந்த விச்சலபுரத்தைவிட்டு கூடல சங்கமஸ்தலத்தை யுத்தேசித்துச்

சென்று அக்கிரகாரத்திலுள்ள சிவசரணர்யாவரும் அநேகவாடம்பரத்தோ டெதிர்கொள்ளச் சிவாலயத்திற்செல்ல.

அப்போது சிவபெருமானும் ஆசாரியத் திருக்கோலங் கொண் டெழுந்தருளிவந்து எதிரில்நின்றனர்.

வசவதேவரும் ஸாஷ்டாங்கமாகப் பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழாதிருப்பவே - சிவபெருமான்றமது திருக்கரத்தாற் றெட் டெழச்செய்யவே எழுந்திருந்து கண்களில் நீர்பெருகத் தலையிற் கரங்களைக்குவித்து அன்பில் மூழ்கி ஸ்துதித்தனர்.

அப்போது பரமசிவமும் அப்பா வசவனே உனக்குச்சிலவுபதேசங்கள் சொல்வேன் அதாவது முதலாவது நம்மடியார்களை நாமாகவேபாவிக்க வேண்டுவது அவர்களை நரராகப்பாவிக்கலாகாது அவருன்னைத் தண்டித்தாலும் வைதாலும் நீயவர்க்கஞ்சலித்து ஸ்தோத்ரம்பண்ணுவதே கடமையென்றிது. முதலிய வநேகம் பிரமாணங்களைச்சொல்லி யிதுவேயுபதேசமென்றருள்செய்து என்னைநீமீட்டும்வணங்கென்றுஞ்ஞாபித்து அவர்வணங்குந்தருணத்துச் சிவலிங்கத்தந்தர்த்தானமாயினர்.

வசவதேவ ரிவ்வாறு தமக்கருளிய வாசாரியருஞ் சிவபெருமானென்றேயறிந்து அவ்விடத்தொரு மண்டபத்திருந்து இத்தலத்துத்தேசிகர்வந் துபதேசித்தமையா லித்தலத்தை நீங்கலாகாதென்றுஞ் சங்கற்பத்தோடிருந்தனர்.

உபதேசச்சருக்கவசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தண்டநாயகச்சருக்கம்.

பெரியவருளோதசரணார்த்தி பிரகிருதிபேதசரணார்த்தி
புரிதருமகீதிசரணார்த்தி புகலருமசாதசரணார்த்தி
யரபரமபோதசரணார்த்தி யதிகவிதகீதசரணார்த்தி
வரிசைதருபாதசரணார்த்தி வசவகுருநாதசரணார்த்தி க

வேறு.

மற்றினிக்கல்லியாண வளநகரதனுளத்த
னற்றியபத்திவித்தா நற்பலதேவர்பெற்ற
சிற்றிடையாளைநந்தி தேவனார்க்கீயநச்சி
நெற்றியங்கணனழைத்தநீர்மைபோற்கயிலைசென்றார். உ

விச்சலன்பலதேவர்க்கா மித்திரர்தம்மைநோக்கி
யிச்சதுரங்கதேச மெமையினிப்பரிக்கும்பேரா
யச்சமின்மக்களாய்நன் றுடன்பிறந்தவராயன்றி
யுச்சிதவுறவராகி யுரியராயுளரோவென்றான். ௩

என்னமற்றவர்கள்வேந்த னெழின்முகநோக்கிநின்றும்
மன்னகேளவர்பய்ந்த மகடனக்கினியகேள்வ
ருன்னரும்பாரந்தாங்கற் குரியவருமையோர்பாகன்
றன்னருளதிகம்பெற்றார் தம்பெயர்வசவதேவர் ௪

கூடலசங்கமத்தே குருவருட்பதங்கள்போற்று
நாடரும்பத்தியாலே நண்ணியங்கிருக்கின்றார்மன்
னிடனின்கருத்திற்கேற்ற நீர்மையானொன்னவேந்தன்
றேடருங்களிப்புமன்புஞ் செறிந்தநற்சித்தனுகி ரு

அமைச்சனைவாய்மையாலே யதிகனையழைத்துவேந்த
னுமைக்கினியவர்மேலன்பா லுயர்ந்தநன்னந்திநம்பாற்
கமைத்தனுயக்கனுகுங் கருத்தினையிசையப்பேசி
யெமைப்பரிக்கின்றவிந்த யானைமேற்றருவியொன்ன சு

விரைவுடனவர்கள்சங்க மேசுரந்தள்னிற்சென்று, வரை
மகள்பாகர்க்கான'வசவதேவேசர்தாளின், றனைமிசைப்
பணிந்திரண்டாஞ் சம்புவேசைவர்வாழ்வே, பிரமன்மா
ல்வாழ்வுமெண்ணுப் பெருமைசேரொருமையுள்ளீர். எ

தேவரீர்சிவானுபோகத் திவ்வியவின்பம்போலப்
பூவுலகாளுமிச்சை பொருந்துமோபொருந்தாதேனும்
யாவருமுய்யநீரிங் கினிதெழுந்தருளப்பெற்றூற்
காவலன்விச்சலேசன் காசினிமுழுதுங்காப்பான். அ

மண்டரிப்பதற்கும்பட்டமல்கற்கும்பொற்பண்டார, மு
ண்டெனநிறுத்துதற்கும் பரிசனமோங்குதற்கும், விண்
டிடாநம்பிக்கைக்கு மிக்கவண்செல்வத்திற்கு, மெண்ட
ரினும்மைப்போல்வா ரில்லையெம்மிறைக்கங்கென்றூர். கூ

ஒருப்படியரிசிக்கோ னுரியன்றுமெல்லாந்தாங்கும் [ன
பெருமையமொன்றுன்வேந்தன் பிரியத்திற்செல்வீரோன்
வருணெறித்தேசிகன்று ளகல்வதென்னெனவயர்ந்தார்
மருவிமுன்ஞசான்போந்தார்வணங்கினர்வசவதேவர்.ம

அதுவுநம்பணிகாண்செல்வா யஞ்சலென்றையர்செப்ப
ப், பதுமமென்பதமிறைஞ்சிவிடைகொண்டுபத்தர்போ
ற்றக், கதுமெனச்சேனைசூழக் கரமலைமிசையினேறிப்,
புதுமல ரிமையோர்சிந்தப் புரியினும் புறம்புசென்றார்.

கண்டவர்கண்ணுநெஞ்சுங் களிப்புறக்கரங்கள்சென்னி
மண்டிமுன்கூப்பிநிற்க வானதுந்துமிமுழங்கத்
தண்டருமலரின்மூழ்குந் தகையராய்ச்சங்கமேசன்
புண்டரீகத்தாணேசம் பொங்கியநெஞ்சராகி. மஉ

மஞ்சனவேழத்தேறி வரும்வளம்விச்சலேச
மஞ்சலானறிந்துவீதி யானவைமெங்குமாடி
விஞ்சுதோரணமுஞ்சல்லி மிக்கதோரணமும்வெய்யோ
னஞ்சுமாணிக்கமாலை யலங்குதோரணமுமார்த்தே.மங

தெய்வமாவிமானத்தோடே தெரிவையர்தனையில்வந்து
கைவருஞ்சதியாலாடுங் காட்சிபோற்சப்பரத்திற்
பைவருமரவல்குற் பாவையரிருமருங்கும்
பொய்வருமிடையாராடப் புரியலங்கரித்தபின்னர் மச

நண்ணினர்புரியைச்சேர நந்திகளென்னவேந்தன்
கண்ணினிற்கண்டுவிரும்பிக்காணுங் காதலாலெதிரேசென்று
னண்ணலார்சேனைசூழ வரசன்வந்தணைதல்கண்டு
திண்ணியகளிற்றினின்று மிழிந்துநேர்சேரப்போந்தார்.

வேதசைவங்களோங்க விமலனோர்வடிவனானை
மாதவர்வைப்பைமண்ணோர் வாழ்வினைவாதவேழத்
தீதருங்குழுவைவாட்டுஞ் சிங்கத்தைவீரசைவ
ருதியந்தன்னைஞான வொளியைநல்லொழுக்கக்குன்றை

மதியினாலொப்பிலானை வாக்கினாலிணையிலானை
நதிமுடியத்தன்பத்தி நன்மையானிகரிலானை
யெதிரிலாக்கல்வியானை யினிமையாலமுதனானை [டான்
விதியெலாம்வென்றார்தம்மை விச்சலன்விருப்பாற்கண்

வேறு.

களிப்பினாலெதிர்காண் டலுங்காசினிவேந்த
னுளத்திலாதரவெய்தியங் குவப்புறாயனேகங்
கிளத்தியேயிருவோர்களுங் கிட்டிநண்புடனே
வளப்பகீடுநன்னகரினுள் வந்துறுமளவில். ௰அ

மகரதோரணமாட மாளிகைகளின்மீதுஞ்
சிகரமீதினுந்தேரினின் மீதினுஞ்செறிந்தே
நிகரில்பூரணசந் திரனிரைகளோநிலவு
முகுரசாலமோமுளரியோ மடந்தையர்முகமோ. ௰௯

கரியமேகமாலிகைகளோ காரிருளனேக
முருவமாகியேதிரண்டதோ வொண்ணுதலார்தஞ்
சொருகுகொண்டையோவள்ளையோ தோகையர்காதோ
வரியநீலமோவேல்களோ வரிவையர்விழியோ. உ0

திவளுநன்னிறக்குமிழ்களோ வெள்ளிதட்டிரளோ
துவளுநுண்ணிடைமடந்தையர் துண்டமோசுடரும்
பவளமோகொவ்வையோ துய்ய பாவையரிதழோ
தவளமுல்லையோதாளமோ தையலார்நகையோ. உக

பணிலமோபசும்பூகமோ பாவையர்களமோ [யோ
மணிகொள்வேய்களோ மடந்தையர்தோள்களோமலை
வணிகொள்செவ்விள நீர்களோவரிவையர் தனமோ
விணையிலாவனக் குழுக்களோதெரிவையரினமோ. உஉ

ஆனயாழினின்முழக்கமோ வரிவையர்மொழியோ
வானமாதர்கள் வசவராஜையர்தம்வடிவைப்
பானலங்கணுற் பார்க்கவந்திழிந்தவப்பரிசோ
தேனுலாமலர்த் திருபலவடிவமாந்திரளோ. உங

என்னவெண்ணிலா மடந்தையரிருமருங்கெங்குந்
துன்னியேவச வேசர்மெய்ச்சோதியைக்கண்டார்
பொன்னிறைந்ததம் புணர்முலைபூரிக்கக்காணு
வன்னமன்னவ ரதிட்டமற்றனமெனவயர்வார். உச

கண்டநீர்வச வேசுரர்காட்சியையுரைப்பீ
ரொண்டருங்குழ லீரெனவொப்புநாங்கண்டே
விண்டுபேசிட வேண்டுமேவேளெனிலனங்க
னண்டர்நாட்டினி லுண்டெனிலவனையாமறியேம். உரு

ஐயநுண்ணிடை யரிவைகங்காம்பையார்முன்னஞ்
செய்யருந்தவந்தவமலா னாமெலாஞ்செனித்தென்
றையலாயென வல்லகாண்கண்டதேசாலும்
பையநீயுறப்பார்த்தியான் பார்த்திலேனென்பார். உசு

பார்த்துநெஞ்சகம் பரதவிப்பதனிலும்பாரா
தார்த்துநாமனம் பிடிப்பதேபெண்மைகளாங்கா
ணோர்த்துயாமுள நிறுத்திடின்கண்களேயோடி
நேர்த்துநோக்கிடி னென்செய்வேமெனவகநெகிழ்வார்.

கரத்தினாலுறத் தொழுதுயாங்கண்களாற்கண்டுந்
தரிக்குமோமனம் புயங்களையோடியேதழுவ
வுருக்குநெய்யெனக் கரைந்ததுவுளமவருன்னிப்
பருத்தகண்களாற் பார்க்கிலென்படுவமோவென்பார்.

புண்ணியத்தொழிற் பதிவிரதையர்கராம்புயத்தா
லெண்ணிலாலத்தி யெடுப்பவரிருகரமலராற்
றிண்ணிதானபுட் பாஞ்சலிசெய்பவர்தெளிவா
லொண்ணிலாவுபூ வருத்திரரிவரெனவுரைப்பார். உகூ

விடுகிலார்களா யாடைகண்மிகவரிந்திடுவார்
வடவையோமுத்த மாலையோவெனமனந்தளர்வா
ருடைகுலைந்திரு கரங்களாலெடுத்துடுத்திடுவார்
படைமதன்பக்க பாதியோபாவியேமென்பார். ௩௰

விரதபாரணவேதியர் வித்தையான்மிக்கார்
பரததாண்டவனன்பர்பல் லாண்டுபல்லாண்டென்
றுரைசெய்வாய்மையி னெறியுடன்விச்சலனுடனே
யரசனீடியவம்மனை யதனுளேயணைவார். ௩௧

மதிதவழ்ந்தொளிர் மண்டபமதனுளேவைகி
யதிகதன்பெருவரிசை யாயினவெலாமளித்தே
யெதிரிலாவெழிலமைச்சர் பன்னிருவர்க்குங்கடாங்கள்
குதிகொள்பன்னிரண் டாயிரமிபக்குழுவதற்கும். ௩௨

வாசிவாசிநூற் றறுபதினுயிரம்வகைக்கு
மாசில்பன்னிரண்டிலக்கமாம் பதாதிகள்வகைக்குந்
தேசிலங்குதன் குடைநிழலுலகிற்குஞ்சோ
நீசிறந்தநற் றண்டநாயகனெனநிகழ்த்தி. ௩௩

தொக்கமைச்சர்க ளிருந்திடும்பீடத்தின்றூய
மிக்கபீடமே லிருத்திநற்கோசிகவிதங்க
டக்கமாமணியாரநற் றண்டநாயகர்க்கங்
கக்கணத்தினில் விச்சலனளித்திருந்தளவில். ௩௪

வந்தவன்சபை முன்னரம்மன்னவன்காண
வந்தரத்தினின் றாவிபிவிகித்ததோரோலே
சுந்தரத்துடன் வீழ்ந்திடத்துணைக்கையாலரச
னிந்தவோலேயீதென்னெனவெடுத்துக்கொண்டின்பால்

அரியமாவட லிபிமுதலாயினவெல்லாந்
தெரியவோதிட வல்லபேர்தமையெலாந்தெரிந்தே
வரவழைத்திது வாசியுமெனவவர்வாங்கிப்
பரிவினெவ்வொரு பேர்களாய்ப்பார்த்தறிந்திலராய்.

இவ்வெழுத்தினை யிதுவெனவறிந்துரைத்திடுவார்
கோவ்வைவாயுமை பாகத்தன்கணபதிகுமர
னவ்வவர்க்கலா லமரர்க்குமறியொணுவரசே
திவ்வியத்ததிவ் வோலேயென்றனைவருந்திகைத்தார். ௩எ

மன்னனீதினை வாசிக்கவல்லராமொன்றே
யுன்னிாந்திக ளொண்கரங்கொடுத்தலும்வாங்கி
யன்னவோலேயை யரசன்முன்னேதினராச
னின்னவாசகத் தத்தமேதென்னவங்கிசைப்பார். ௩அ

நீசெனிக்குமு னின்பிதாதாபித்ததாக
வாசிலெண்பத்தெண் கோடியாமருந்தனமரச
தேசனிக்குநின்செய்ய சிங்காதனத்தடியே
வாசமாயிருக்கின்ற தென்கின்றதிவ்வசனம். ௩௯

ஐயமில்லைநின்னங்கங்க ளருங்களிப்பெய்தத்
துய்யநன்னிதிகாட்டுவன் றேட்டுவியென்ன
மெய்யதென்னவேயகழ்ந்திட விளங்கொளிக்கதிரோ
தையல்பாகத்தன்பாங்கன்முன்வைத்தவத்தனமோ. சய

கனகவெற்பின்மேற் கவிசனைவாங்கியகணக்கோ
வெனமிகுத்தவண் சோதியாயெழுவதுகண்டு
தனகிவிச்சலன்றண்ட நாயகர்தமைத்தொழுதே
யனகநீயிரண்டாஞ்சம்பு வென்பதின்றறிந்தேன். சக

என்னவத்தனமெடுத்து நற்றிட்டமதிடவு
மன்னலக்கமாயிருத்தல் கண்டதிகவாச்சரிய
மன்னுநெஞ்சுடன்விச்சல னமாத்தியர்மற்றோர்
பின்னையுந்தண்டநாதனைத் துதித்தனர்பெரிதாய். சஉ

விச்சலன்வசவேசனை விரும்பியேநோக்கி
யிச்சைபேசியென்னங்கங்க ளனைத்தையுமெனையு
நிச்சயந்தரும்பரிவினு னிறுத்துதியென்ன
வச்சமில்லராந்தண்டநா யகருமங்கறைவார். சந

நிருத்தனீடுலகனைத்தையு நிறுத்தரனின்னை
யொருத்தனைப்பரிந் தாள்வதோபாரமோருளாகேள்
கருத்துணிசிவன்கருத்தனென் றிருப்பையேற்கனமோ
திருத்திமண்புரப்பது வெனநந்திகள்செப்ப். சச

தருக்கிவிச்சலனுனாசெய்வான் மரங்களிற்றருவுங்
கிரிக்குண்மேருவுங் கிளரொளிமணியினமவையு
ளருத்தியானசிந்தாமணி யதுவுநற்பசுவுட்
டெரித்ததெய்வநற் றேனுவுமிருவருட்சிவனும். ௪௫

போலமைச்சர்களனைவருட் பூச்சியராகிக்
கோலமேவுதிறொன்றரு வளமெலாங்கொடுத்தே
சீலநற்பலதேவனு ரகத்தினிற்சென்றே
மேலராயிருமென் றெதிர்விச்சலன்விளம்ப. ௪௬

எழுந்துநற்றண்டநாயகர் சிவபத்தர்புடையே
யொழுங்கிவந்திடச்சேனையோ டின்னியமுவரி
முழங்கல்போன்மிகமுழங்கி முன்னூர்த்தெழச்சென்று
விழைந்ததங்கணன் மாமனூரகத்துளேமேவி. ௪௭

சிவனருச்சனைசிவத்துதி நேயராயிருந்தா
ரிவனாவிச்சலனெய்தலா விருநிலமுழுதுங்
கவலைநீங்கின கடவுளர்பூசனைகனத்த
தவிகொளாகுதிநிறைந்தன வளமெலாமணைந்த. ௪௮

இனையநாளிலேயெம்பிரான் வசவேசரினிதாய்த்
தினமுநற்சிவ ராத்திரிவிரதமேசெய்வார்
புனிதரன்பரோ புனிதனொன்றெண்ணுமெய்ப்பரிவு
நினைவிலுமவர்குற்றங்க ணினைந்திடாநெறியும். ௪௯

வஞ்சியாதுளதன்பர்க்குக் கொடுத்திடும்வனப்பு
நஞ்சருந்தினனிடத்தினுங் கேட்கலாநலமு
மஞ்சிமுன்னொன்றுபின்னொன்று மொழிதராவறிவு
நெஞ்சினுநடுவிலைமையே நீங்கிடாநிலையும். ருய

குற்றமன்பர்பாற் கூடினுந்தமதெனுங்குணமும்
வெற்றியாற்பர சமயனைவென்றிடும்விறலு
முற்றறிந்தர நிந்தையர்க்குட்கொடாவுரமு
நற்றவத்தனை யிகழுனைகேட்கலாநலமும். ருக

திரமிலன்னியர்க் கஞ்சலிசெய்கலாத்திறமும்
பரவுசென்மத்துக் கேதுவாந்தொழிலுறுப்பயமு
நிரயவேதுவா மிந்தியவழிசெலாநினைவும்
வரைவில்காமமே யாதியாமாறிலாமறப்பும். ருஉ

நவின்றசொற்படி யெப்படியப்படிநடையு
முவந்துசங்கமத் துயர்ச்சியேநிறுத்துநல்லூரமுஞ்
சிவன்றனன்பர்பா லடிமையேசெய்யுநற்றிறமு
மவன்றன்மேனியே கனவினும்பேணுமெய்யறிவும். ருங

அத்தனன்பர்சொன் னூலையேகேட்குநல்லவாவுஞ்
சுத்தமாதவர் சேடமேயருந்துமாதுணிவு [ளரு
மெய்த்தவத்தர்சொற் கெதிர்மொழிகொடுக்கிலா வெரு
நித்தசங்கமர் தமதுயிரிலிங்கமென்னினைவும். ருச

பத்திநற்பயிர் வேலியாமவர்கண்மேற்பரிவு
முத்தியில்லெனும் புல்லரைக்கண்டிடின்முனிவு
மொத்தியேதுவத் தடுக்கினுந்தவர்த்தொழுமுரமும்
புத்தியாற்பவி காண்கிலாப்பூசனேயொளிப்பும். ருரு

துண்டமாச்சிரம் வீழினுமரவெனுஞ்சொல்லு
முண்டநீற்றர னன்பரைத்தொழுங்கரமுகிழ்ப்பு
மண்டுநல்விர தத்தராயிவையொன்றுமாருத்
தண்டநாயகர் தருக்கியேசரிக்குமந்நாளின். ருசு

வரங்கொணந்திகள் பெரும்புகழ்மலர்மணமண்மேற்
பரந்தசெய்தியாற் பரமனன்னேயர்கள்பரிவாற்
சிரங்கரங்குவித் திறைஞ்சுவமென்பவர்சிலரு
மிரந்துவாழுது மெனவரும்பெயர்களெண்ணிலரும்.

வே று.

நந்திகைப்பூசைகொள்வோ ராமெனநண்ணுவாரும்
புந்தியாற்கண்டாற்பாவம் போமெனப்போதுவாரு
முந்தியேவசவநீர்த்த முழுகுவோமெனச்செல்வாரு
நிந்தியாப்பத்திநேச நேடுவோமெனச்செல்வாரும். ருஅ

வே று.

ஆகவேவையம் பரிவண்டிலானேயின்மீதும்
வாகுநந்தியின் சிவிகையின்மீதினும்வருவோர்
மோககண்டியின் முடியினர்தூசுசேர்வேணிச்
சேகரத்தினர் முண்டிதர்சிறுசடைத்திரளோர். ருகூ

சென்னிகந்தரமுரங்கட்கஞ் செழுங்கரமிலிங்க
மன்னுவோர்கண்டி யாதியாங்குண்டலவளைகசேர்
கன்னரம்மணி மாலையார்மார்பினோர்காத்து
மின்னுசக்கரந்தண்டு முத்தலைகொளும்விதத்தோர். சுய

காவிவத்திரங் கம்பளங்கஷாயநல்லாடை
தாவில்வெள்ளையே யாதியாங்கந்தைகடரிப்போ
ரோவில்கீளுடை யாடையர்கோவணவுடையோர்
மேவுவத்திரமுடித்தொன்று புயத்தின்மேல்விரிப்போர்.

பாலமாதிமெய்ப் பாலனபுண்டரந்தரிப்போர்
கோலமாமுடன் முழுதுமுத்தூளமேகொள்வோர்
மாலிலாதநற் றுறவுளோர்பவிபாகமறுத்தோர்
சீலசேடமேயருந்துவோர் சிவாநந்தத்தியானர். சுஉ

அவசமுற்றநற்பிராண லிங்கபிக்கத்தராவோர்
பவிகளோடுளைபரிசம தறுத்தவர்ப்பாரார்
சிவமதொன்றலான்மற்றென்றுநோக்கிலாத்திடத்தோர்
மவுனஞானநூல்வாசகர் தீர்த்தவாசியர்கள். சுங

மறைசிவாகமமங்கங்கள் புராணங்கள்வல்லோ
ரறிவினுன்மிகுமாரிய ரரன்றுதிபடிப்போ
ரிறையையல்லது பாடலார்மந்திரத்தினியோர்
கிறையுநல்லிசைவீணை யாழாதியாநிபுணர். சுச

வடுகுகன்னட மாரியந்தமிழுடன்மலாட
மடியதாயுள தேசத்திலருந்தவரெல்லா
முடிவிலாதவர்வருதலை நந்திகண்முன்னிக்
கடிகொளம்மனைவீதிகண் மிகவலங்கரித்தார். சுரு

வேறு.

நந்திகள்வாழ்கல்யாண நகரமேகடலதாகச்
சந்ததஞ்சிவமாயேசர் சங்கங்கணதிகள்போல
வந்துறவெதிரேசென்று வசவதேசிகர்பணிந்து
தந்தலைக்கவர்தாட்போது சாத்தியுட்கொண்டுசென்று.

பொற்கலசத்துநீராற் புனிதபாதம்விளக்கி
நற்கதியளிப்பனொன்று நல்லவாதனத்திருத்திப்
பிற்கனபத்தியாலே பெரியதாணீரதாட்டி
யெற்கடிமலர்கள்சூட்டி யெழிற்றூபதீபங்காட்டி. சுஎ

எழுந்தவர்செய்யும்பூசைக்கிதத்தவையெல்லாஞ்செய்வி
தழுந்துநற்பத்தியாலே யறுசுவையைந்துபேதச் [த்
செழுந்திருவமுதமூட்டித்தெண்டனிட்டெழுந்துநின்று
தொழுங்கரத்தினராயன்பின் றேத்திரமிகவுஞ்செய்து

தாபதரிருக்கச்சொல்லத் தாமிருந்தவர்கள்பாதப்
பாபநாசனமாந்தீர்த்தம் பரிகலச்சேடமெல்லாஞ்
சோபனமுத்தியென்னுஞ் சுகப்பயிர்வித்திதென்று
கோபமில்வசவதேவ ரன்பினூற்குலாவிக்கொண்டு. சுசு

அவர்கண்முன்மதுரகீத மன்பினுற்பாடியாடி, யுவகை
சேர்முகத்தராகி யுத்தமதவத்தோர்க்கெய்து, நவ்முறு
ங்குழுவைக்கண்டு நன்மன முடலங்கம்பித், திவர்கள்
வேண்டியதேதென்னவெண்ணிமுன்னண்ணிக்கேட்டு.

தனமணியாரமாடை தையலர்தேனுபூமி
கனதிவாகனம்புரங்கள் கந்தசந்தனகர்ப்பூர
மெனவுளவிவையுமற்று மினியவுமீசனேசர்க்
கனவரதங்கொடுத்திங் கன்பினுற்றெழுதிறைஞ்சி. எக

விரதசீலத்தர்க்கேற்ற விதமெலாம்வெவ்வேருக
வரமுறவமைத்தமைத்துவைத்துத்தம்மடத்தில்வாராப்
பெரியவர்தமக்குமன்னம் பிறங்குகாவடியின்மூடித்
திரமுறுபத்தியாலே திரிவிதப்பொழுதுநல்கி. எஉ

வேசியர்மனேவிடாத விடர்களாஞ்சிவவேடத்தா
ராசிலாவெண்சேரீரா ருயிரரானேர்க்கெல்லாம்
வாசியாலவர்கள்வைகு மனேதொறும்வளங்கணல்கி
நேசராய்வசவதேவர் நிகரிலாதிருக்குநாளில். எ௩

தண்டநாயகச்சருக்கம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௩0அ.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

தண்டநாயகச்சருக்க

வசனம்.

ஸ்ரீவசவேச ரிவ்வாறிருப்ப, விச்சலநகரமென்னுங் கலியாணநகரத்திலிருந்த தமதுமாமனர் ஸ்ரீபலதேவர் சிவபதத்தை யடைந்தனர்.

விச்சலராஜன் ஸ்ரீபலதேவர்க் கன்பானவனையழைத்து அவர்க்குப் பிள்ளைகளாவது சகோதரராவது மற்றுமுறவினராவது இந்தப் பூபாரத்தைக்காப்பாற்றத்தக்கவ ருண்டோவென்று வினவினன்.

அவர் ஸ்ரீபலதேவர்க்கு மருமகனர் வசவதேவர் கூடலசங்கமத்தில் குருபாதத்தியானஞ் செய்துக்கொண்டு வீற்றிருக்கின்றனர். அவரே யமைச்சுக்குத்தக்கவரென்று சொல்லினர்.

அரசன் மந்திரிகளிற் றக்கவனையழைத்து வசவதேவனை யெமது பட்டத்துயானையின்மே லழைத்துவாருமென்ன, அவருஞ் சங்கமேசரத்துச்சென்று வருந்தியழைக்க, வசவேசரும் நமது குருபாதங்களைப்பிரிந் தெவ்வாறு செல்வதென்று வருந்த சிவபெருமான் முன்போலவே தேசிகரூபியா யெதிர்வந்துநிற்ப, இவரும் வணங்கிநிற்பவே, அவ்வரசன்பணிகளையும் நமதுபணிவிடைகளாகவே நினைத்துச் செய்வாயென் றுஞ்ஞாபிக்கத் திருவரு ளிதுவோவென்று அவர்கொணர்ந்த யானையின்மீதேறிச் சென்று சகலபரிஜனங்களோடு விச்சலபுரத்தரச னரண்மனைக் குச்சமீபத் தரசன்வந்தெதிர்கொள்ளத் தாமும் யானையினின்று

யிறங்கி இராஜசபையிற்சென்று அரசனால் மந்திரிப்பட்டமுந் தண்டநாயகனென்னும் பட்டப்பெயரும்பெற்று வீற்றிருக்குந் தருணத்தில்,

ஆகாயத்திலிருந்து எழுதிய வோலைச்சுருள் ஒன்று வந்து வீழ, அரசனதை வரவழைத்துப்பார்த் தின்னபாஷையென்று தெரியாமையால் யாவர்க்குந்தெரிவிக்க வெல்லோருமயங்கி யிந்தப்பாஷை தேவருந்தெரிவ தரிதென்றுநிற்க, அப்போது அரசனதுகுறிப்பால் தண்டநாயக ரவ்வோலையைப்படித் திதன்பொருள்யாதென்னில், அரசனே யுமதுஜனனத்துக்கு முன்பாகவே உமதுபிதாவினால் ஸ்தாபிக்கப்பட்ட பொருள் எண்பத்தெட்டு கோடியாகும், அதுவும் இந்தச்சிங்காசனத்தின்கீழாகவே யிருக்கின்றதென்று இதிலெழுதப்பட்டிருக்கின்றது இப்போதே பரிக்ஷித்துப்பார்க்கலாமென்று சொல்ல, அரசனுமவ்வாறே யெடுப்பிக்க, அநேக சூர்யோதயம்போலக் கணக்கிற்குறைவின்றி ப்ரகாசிக்க, அந்த மகிமையைக்கண்ட வரசன்முதலிய யாவரும் வசவதேவரை வணங்கித்துதித்தனர்.

பின்னும் அரசன் வசவரைப்பார்த்து என்னையும் ராஜ்யத்தையு மிங்கிருந்து ரக்ஷிக்கவேண்டுமென்றுசொல்ல, உலகத்தையெல்லாம் ரக்ஷிக்கும் பரமசிவன் உம்மைமாத்திரம் ரக்ஷிக்கக்கடனில்லையோ, சிவனே கர்த்தாவென்று நினைத்திருந்தால் இந்த பூபாரம்பெரிதன்றுஎன்றுவசவேசர்சொல்லி யவ்வரசன் குறிப்பின்படி ஸ்ரீபலதேவரது வீட்டிற்சென்றிருந்து அநேகம் அடியார்களைப் பூசித்துக்கொண்டிருந்தனர்.

தண்டநாயகச்சருக்க வசனம்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சென்னவசவேசுரர் புராணம்.

சங்கமர்நேயமெல்லாந் தமக்குடலாகியுள்ளார்
மங்கைநாகாம்பையார்தம் வயிற்றில்வந்துதயமானுர்
பங்கபுண்ணியபாவத்தின் பரப்பெலாம்பறித்தசீரா
ரெங்கணுந்திகளையொப்பா மியல்புளார்மயலிலாதார். க

மலமிலாதிருப்போர்சென்ன வசவையனொன்னும்பேரா,
ருலகியல்பேசாராசா னுவப்புறுநேயமுள்ளா, ரலைகொ
ள்காமாதியில்லா ரனைத்துமெய்யிலிங்கங்கண்டா, ருல
வுதத்துவஞானத்தா ருயர்ந்துளாருளாயான்மிக்கார். உ

ஆசையில்வாழ்க்கையில்லா ரானந்தவனுபவத்தார்
பாசமில்சங்கமேசர் பரிகலத்திச்சைநீங்கார்
தேசுறுநித்தமான சிவபுண்ணியத்தார்நல்லார்
நேசமோடாறுமாறு மூன்றிரண்டொன்றிநின்றார். ௩

ஒப்பரும்பரமயோக ருளாக்கருஞ்சிவானுபோகர்
செப்பருஞ்சரணர்மோகர் திரிகாலபரித்தியாகர்
துப்பிலிங்காபிமான தாகர்தூய்தாகுமாகர்
தப்பருஞ்சோகரோகர் சங்கரப்த்தியூகர். ௪

கூடலசங்கமேசன் குரைகழற்கன்புசெய்து
நீடவங்கிருந்துவாழ்ந்து நித்தராநந்தியார்தந்
தாடொழும்பிரியமிக்குச் சங்கமேசுரத்தினின்றுந்
தேடருங்கல்யாணச் செழுநகர்வந்துசேர்ந்தார். ரு

தேசிகவசவதேவர் செய்யசன்னிதியிற்சென்றே
யாசைமேல்கொண்டுரோம மானவைசிலிர்த்துமேனி
பேசரும்புளகமண்டிப் பெருவிழியருவியாறுய்
வாசகங்குன்றிச்சென்ன வசவராசையர்பணிந்து. சூ

எழுகெனவெழுந்திருந்தங் கிணைமலர்ப் பதம்பன்னீரா,
லழகினுலாட்டிக்கந்த மணிமலர்சாத்தித்தூபஞ், செழு
மணித்தீபமெல்லாஞ் செலுத்திப்பின் சிரத்தையாலே,
தொழுகரஞ்சென்னிகூப்பித்தோத்திரஞ்செய்யாநிற்பார்

வேறு.

அருளாரமுதே சரணஞ்சரண மன்பர்க்கணியே சர ணஞ்சரணங், கருநாசனனேசரணஞ்சரணங் கண்ணே மணியேசரணஞ்சரணந், தெருளேபொருளே சரணஞ் சரணந் திருவேதருவேசரணஞ்சரணந், தருமாகரனேச ரணஞ்சரணந் தவநற்குருவேசரணஞ்சரணம். அ

வேறு.

எங்குமீசனே டேகுவாய்சரண மென்கருத்திருட்கிர வியேசரணம், பங்கவாதனைப்பாற்றுவாய்சரணம் பரம பத்திவிற்பத்தியாய்சரணஞ், சங்கரன்றிரு வுருவமேசர

ணந் தருமஞானமாஞ் சக்குவேசரணந், திங்கள்வேணி
யார்செல்வமேசரணந்தெளிவிலேனருந்தேசிகாசரணம்

முந்தைநன்னெறிமூலமேசரண முத்தியீதெனுமொ
ழியனேசரண, சிந்தையொன்றிலா நின்மலாசரண நிகரி
ல்சைவநன் னிதியமேசரணம், வந்தவெந்துயர் மாற்று
வாய்சரண மதத்தவெஞ்சமண் மறலியேசரணஞ், சிந்
தையின்வழிச்சேரலாய்சரணந் தெளிவிலேனருந் தேசி
காசரணம். ௰

வேறு.

என்றுசென்னவசவதேவ ரிங்ஙனந்துதிக்கவே
நின்றபேர்கடம்முளே நினைந்துநின்றுசெப்புவார்
நன்றுநந்திதேவருண்மை நன்மைவல்லரிவரலா
லன்றனந்தனுவினு லளந்துணாக்கவரியதால். ௰க

எனவுரைத்தபின்னர்சென்ன வசவதேவரியல்பெலா
முனநினைந்துநந்திதேவர் மொழியவல்லரிருவர்தங்
கனமதானமகிமைநீதி கண்டிசைப்பனந்தனென்
றனைவரும்புகழ்ந்துநிற்கு மந்நல்லவெல்லையின். ௰௨

சென்னவசவேசுரர் புராணம்.

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௩௨0.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

சென்னவசவேசுரர் புராண வசனம்.

சென்னவசவேசுவரர்—ஜங்கமபத்தியே வடிவமாயுள்ளவர் நாகாம்பையாரது திருவயிற் றவதரித்தவர், வசவதேவர்க்குச் சமானமானவர், இருவினைப்பற்றற்றவர், இல்வாழ்க்கையில்லாதவர், ஜங்கமரது பரிகலத்திச்சை நீங்காதவர், லிங்காபிமானியாயுள்ளவர்.

இவர் கூடலஜங்கமேசுவரத்திற் சிவபெருமானது பாதாரவிந்தங்களி லன்புவைத் தங்கு நெடுநாளிருந்து கல்யாணபுரத்தெழுந்தருளியிருக்கும் வசவதேவரது பாதங்களைப்பணியும் விருப்பமிகுந்து அங்கிருந்து வசவதேவரது சந்நிதியில்வந்து ஆசைமிகுந்து ரோமங்கள் சிலிர்த்து விழிகளினீ ராருகப்பெருகவாக்கானது குழறப்பணிந்து தண்டம்போற்கிடந்து வசவதேவரெழுந்திரென் றுஞ்ஞாபிக்க வெழுந்து அவரது பாதங்களைப்பனிநீராலாட்டி கந்தமும் மலருஞ்சாத்தித் தூபதீபமும் பணிமாறப்பண்ணிக் கைகளைச் சிரத்திற்குவித்து அநேகஸ்தோத்திரங்களையுஞ்சொல்லி நிற்க.

அங்குச் சந்நிதியிற் கைகட்டி வாய்பொத்திநின்ற அநேகமாயிரமடியார்கள் இந்த வசவேசரதுபெருமை முழுதுமறிந்தவரிச்சென்னவசவதேவரே நம்போல்வாருனாக் குட்பட்டதன்று இச்சென்னவசவேசரது பெருமையையும் வசவதேவரேயறிவரன்றி மற்றையாரறியார், இவ்விருவர் பெருமையையுஞ் சிவபெருமானே யறியவேண்டுமென்று புகழ்ந்து மகிழ்ந்துநின்றனர்.

சென்னவசவேசுரர் புராண வசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அல்லமாப்பிரபு புராணம்.

செய்யசங்கரனல்லமாப்பிரபு தேவரொன்றொருதேகர்
போல், வையமுய்யமகிதலத்திடை வந்திறங்கியமகிமை
யார், பொய்யெனும்பிரவஞ்சநீதி பொருந்திலாததபோ
தன, ஞாயமொன்றற மண்ணுமேளோர்க ளகத்திலுற்றத
றிந்துளார். க

கன்மமில்லவர் மாயையாரிடு காரியங்கள் கடந்துளா
ர், சென்மாசனர்தாரதிட்டி தெரிந்தசெய்திய ரொப்பி
லார் நன்மைதிமை பகுத்தலற்றவர் நாடுபொன்மணி
யோடெஙுங், தன்மையாகவிகழ்ந்துகாமம தாதியாறுத
விர்ந்துளார். உ

உடல்விகற்பமெலாமொழிந்தவ ருழிநீரனல்காலுரு
தடல்படைத்தொருகாலமுமன மாதிநாலணையாதுளார்
விடவிலாதசிவானுபூதி விழிக்குளேவிழிவிரவுவார்
நடையிலத்திலுருர்கிழற்றொழி ஞெடொணுதலத்தினர்.

காத்தலத்திலிலிங்கமும்மலே கரியகுஞ்சிபுநெற்றிமேற்
றரித்தபுண்டரமுந்துலங்கிய தன்மையுள்ளவராயரோ

விரித்தவேதசிவாகமாதிக வித்தையுள்ளவராகிநன்
னிருத்தனந்தரியாகயோக நிலைக்கருத்தினராகியே. ௪

பத்தர்நன்னிதிதூவிரத்தர் பரந்தபேருள திலலரோ,
சத்தமுள்ளதுமில்லரோவென தானெனத்தவர்சொல்ல
வே, யொத்தபாவனை யுள்ளதுமில ரோவெனும்படியு
டையராய், நித்தசிந்தனை யீறரோமறை யீறரோவெனு
நிலையராய். ௫

சரிக்குமெல்லையினுள்ளதாரு வினங்கள்காடுகள் சை
யமா, நிரைத்தெழுங்கட லேரிதம்மி லிறைஞ்சியேறவி
லங்குமே, லருத்திமேனிகொடண்டமூடுவரணுவதாகு
வர்மேகமே, லிருப்பர்நீரினடப்பர்வானவ ரோகொணுவி
டமெய்துவார். ௬

இன்னதன்மைய ரல்லமாப்பிரபு வென்னுநற்கலியா
ணனு, ரன்னமேனிகொடமலாந்திக ளதிகபத்தியினன்
புநீ, ணன்னியாயநினைந்துவிச்சல நகருணண்ணிநயப்பு
டன், மன்னரும்புகழ்வசவதேவர் மலர்க்கண்முன்னெ
திர்வருதலும். ௭

நந்திகேசுரர்நவமணித்திர ணன்மைவல்லவர்போலெ
மூந், தெந்தையெய்தினனெனவறிந்தெதி ரெய்தியன்பி
னிறைஞ்சியே, செந்திரட்சுதிரொன்னலாமரி யாதனத்தி

டைசேரவைத், தந்தமெய்த்தவர்சோதிமேனியி னதிசயந்தனேநாடியே. அ

விளங்குபாதம்விளக்கிநீரை விரைந்தயின்று சிரத்திலு, முளங்குளிர்ந்திடவேதெளித்துட லுருகுநேயவுயர்ச்சியால், வளங்கொள்பூதி யிருத்திநின்று வணங்கியென்றுயிர்வாழ்வுநீ, யளந்தமுறற்படியன்னமுள்ள தருந்துமென்பழுதாறுகேன். கூ

என்னநல்லதிடம்பணென்ன விலங்குபொற்பரியாணமே, லன்னமாதியதானதிவ்விய வமுதுடன்கறியமுதெலா, மன்னலம்பெறவேபடைத்து மலர்க்கைகொண்டுதிரட்டியே, பன்னரும்புகழல்லமாப்பிரபு தேவர்பாணியின்மீதரோ. ய

வேறு.

ஐயர்சுரிகைச்சவுண்டைய ரானோர்கரத்திற்பிடிபிடியாய்ச், செய்யநண்பினளித்ததுபோற் றிரட்டித்திரட்டிவசவேசர், துய்யால்லமாப்பிரபுவின் றுணைக்கைகொடுக்கவேற்றேற்று, வெய்யபசிகொண் டவர்போல மேன்மேன்மாறுதருந்துதலும். யக

என்றுமிலக்கத்தெண்பதினு யிரஞ்சங்கமத்திற்கினிதாகப், பண்ணுமமுதுகறியெல்லாம் படைத்துத்துலங்கும்பசிநீரா,தண்ணலமுதுதருகென்னுமளவில்வசவே

சுரர்தம்மைத், திண்ணமாகவிவேதித்தார் சிந்தைமகிழ்ந்
துபிரபுதேவர். ௬௨

நல்லேநல்லேகணேர்திரனே நாதன்பத்திவித்தனேயாய்
நல்லநல்லவசவண்ண நாடுமிரண்டாஞ்சம்புவே
நல்லநல்லதிருநந்தி நரலோகத்தினுருத்திரனே [தில்.
நல்லநல்லயுனேப்போல்வார் நாங்கண்டறியோநானிலத்

மருவின்மணம்போன்மாணிக்கவயின்சேரொளிபோ
ற்கரும்பிடத்திற், பெருகுமிரதம்போலமுதம் பிரியாம
துரம்போலநீ, யுருவமெடுத்தவஞ்ஞான்றே யுன்றனுட
னேயுதித்ததோ, பொருவில்பத்திபொறைஞானம்பொ
ன்ருநீதிபுத்திரனே. ௬௪

வேறு.

தேயுவினுடலமெங்குஞ் சேரவாயானுற்போல
வாயுவின்மேனியெல்லா மன்னியதலேயானுற்போற்
பாயுநீராகமுற்றும் படர்தருகாலானுற்போ
னீயுறுமுருவனைத்தும் பத்திகாணெனவிகழ்த்தி. ௬௫

மற்றுநன்மொழிகளாலே வாழ்த்தியபிரபுவின்முன்ன
முற்றமெய்ப்பத்தியாலே நந்திகளுறவணங்கிப்
பெற்றனன்பேறின்றென்னப் பேசிக்கைகூப்பிநின்று
பற்றறுநேயாகிப் பரிவிப்பின்பகாரிற்பார். ௬௬

சித்தனேபரமானந்தா நிர்க்குணநிகரொன்றில்லா
முத்தனேமுத்தர்வாழ்வே முற்றுணர்வுடையமூர்த்தி
சத்தமேபொருளேதுய்ய தருமியேபெருமைநீங்கா
வுத்தமாவுனக்குநானே வுரியநல்லமுதளிப்பேன். ௰௭

அன்றுமாகயிலையுச்சி யதனிடைக்கிரிபயந்த
மின்றருமிடையாளத்தன் மெய்க்கணநாதர்க்கன்ன
மின்றளித்திடுகேனென்ன வெண்ணியங் கவனைநோக்க
வொன்றியநிலகண்ட னுருவராயிருத்தல்கண்டே. ௰௮

சங்கரனந்தநாதன் றானெவன்கணங்களாரொன்
றங்குமையையமெய்த வரனறிந்தவனைநோக்கச்
சிங்கமாமுகத்தராயுஞ் சிம்புளின்முகத்தராயும்
வெங்கயமயிடங்கோமான் மேடவானனத்தராயும். ௰௯

புலிபரிவராகம்பூனை பொருந்தியமுகத்தராயு
மொலிகடன்மகரமாதி யுயர்ந்தமீன்முகத்தராயும்
வலிகொள்பேரண்டன்சேவன்மஞ்ஞையின்முகத்தராயு
மெலிநடையனம்பருந்து விடவராமுகத்தராயும். ௨௰

அழகியமுகமொன்றாதி யாயிரமீறதான, செழுவியமு
கத்தராயுஞ் செப்பியமுகங்கட்கொவ்வா, தெழுமவயவ
த்தராயு மெழினிறம் வெவ்வேறாயும், பழுதறு கணத்
தோர்நிற்கும் பான்மையை யுமையாள்பார்த்து. ௨௧

நம்மனத்தைநயங்கண்டு நற்கணநாதர்தாங்க, ளிம்மகாவ
டிவங்கொண்டா ரென்னவே பனமகிழ்ந்து, செம்மை
யாரிவர்கட்கெல்லாந் திருவமுதளிப்பனென்று, கொம்
மைவெம் முலையாளத்தற் குறுகிவிண்ணப்பஞ்செய்ய.

நல்லதுபடைப்பாயென்ன நகமயின்மகிழ்ந்துபோற்றி
யொல்லையிற்கடனீராற்று வுயர்பலபாண்டந்தோறு
முல்லையம்முகைபோலன்ன மொழிவருங்கறியின்வர்க்க
மெல்லையிலப்பவர்க்க மிருங்கனிநெய்பாலெல்லாம். உங

மலைகளோவன்னக்குப்பை வண்கனியப்பவர்க்க, முலை
வருங்கிரிகடாமோ வொண்கறிவர்க்கபாண்ட, மலைகட
லவையோநெய்பா லரியபானுதியென்னத், தொலைவற
வமைத்துவைத்துத் தோகையாள்கணிக்குங்காலை. உச

குறைவறு கணத்தோர்மற்றோர் குறுங்கணநாதன்ற
ன்னை, யுறவழைத்தமுதமாய்த்தோ கேளெனவோடிய
ன்ன, மிறைவியேயாய்த்தோவென்ன வாய்த்தெனவிய
ம்பவன்னே, சிறுபசியாளனெந்தே னெனக்களிசிறிதா
ணென்றான். உரு

சிவைமகிழ்ந்தவனையங்கண்சிவார்ச்சனைசெய்வித்தன்ன
நவமுறுங்கறிபானுதி நலம்பெறப்படைத்தபோழ்தி
லவனொருகரத்தால்வெள்ளி யங்கிரிபோலப்போலக்
கவளமாயனைத்துங்கொள்ளக்கண்டுமையதிசயித்தாள்.

கணங்களிற்சிறியோனேகன் கடும்பசியிவ்வாறுள, விண
ங்கிலாப்பெரியோர்செய்தியென்னையோவென்னவெண்
ணி, மணந்ததம்பிரானூர்பாற்போய்வந்தவிச்செய்திசெ
ப்ப, வணங்குநீகேட்பாய்நந்தமருங்கணநாதர்மேன்மை.

எம்முடலவர்க்குமேனி யவருடலெமக்குமேனி
நம்முயிரவர்க்காதார மவருயிர்நமக்காதாரந்
தம்மைநேரில்லாருன்னிற் சலசருராகும்போகு
மிம்முறையிவரிமைத்தாற் பிரளயமெங்குமெய்தும்.

ஆதலாலுமையேநம்பா லடியவர்பெருமைதன்னை
யோதொணாதொருவராலு மென்றலுமுமையிறைஞ்சி
யிதெலாமுனதுலீலை யெனவிருந்தனளியானே
நாதனேயுனக்கிங்கன்ன நலம்பெறப்படைக்கவல்லேன்.

அனைத்துநின்செயல்களென்றேயம்புவியுறப்பணிந்திங்,
கெனைப்பரிந்தாள்வாயென்ன விருகையாலெடுத்தணைத்
திங், குனக்கிணையானநேய ரின்றெனவுவந்துரைத்தார்,
கனைத்ததங்கருணைநோக்காற்கண்டிருந்தருளிச்செய்வார்

காமதேனுவுநினைத்த கடிதருண்மணியுஞ்சங்கும், தாம
ரைநிதியுங்கற்ப தாருவுநின்றன்முன்றிற், சேமமாயிருக்
கத்தந்தேஞ் சிந்தையினினைத்தவெல்லாந், தோமறப்ப
லிக்கத்தந்தேஞ் சொல்லெலாம்பலிக்கத்தந்தேம். நுக

இன்றுபோலென்றுநிற்க வேதுநீதீண்டிற்றெல்லாம்
பொன்றிரளாகவிண்ணும் பொருந்தியகண்டிப்பாக
நன்றுடனமையும்வெல்ல நற்றவர்வெகுண்டுசொல்லுங்
குன்றுளாபொறுக்கவெல்லாக்குலவுசித்திகளுந்தந்தேம்

இன்னமும்வேண்டிற்றீவோமெழில்வரமனைத்துமென்
று, மின்னெறிபோலவேநிட் களத்தராம்வியப்புநாடி, ம
ன்னரும்பயத்தராகி வணங்கியஞ்சலிக்கரத்தா, னன்ன
யமதனுற்கண்டு நயந்துவந்திருக்குநாளில். ருரு

அல்லமாப்பிரபு புராணம்

முற்றியது.

ஆகதிருவிருத்தம் - ருடுரு.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

அல்லமாப்பிரபுபுராண

வசனம்.

அல்லமாப்பிரபுவென்பவர் சிவாமிசமாயுள்ளவர் மாயைக்
ககப்படாதவர் யாவர்மனத்தையு மறிந்தவர். கையிலிலிங்கமு
ள்ளவர்.

இவர் பூமியிற்சஞ்சரிக்குங்கால் எதிர்தோன்றுந் தருக்க
ள் காடுகள் மலைகள் ஆறுகள் ஏரிகள் சமுத்திரம், முதலா
னவைவணங்கி யொதுங்கிச்செல்லத் தாஞ்சென்று மேகமண்

டலத்திலும் நீரிலிடத்துஞ்செல்வர். தேவர்கள்செல்லுதற் கரியவிடங்களிலுஞ் செல்வர்

அத்தன்மையான திருமேனியோடு வசவதேவரது சிறந்தபத்தியைத் திருவுளத்திலினைந்து விச்சலநகரத்திற்சென்று அவர்கண்களிற்றோன்றச் செல்லவே யவரு மெதிர்சென்று வணங்கி யொரு சிங்காதனத்திலேற்றி அல்லமாப்ரபுவின்றிருமேனியி னதிசயத்தைக்கண்டு அவர்பாதங்களை விளக்கி யந்நீரைச் சிறிதுட்கொண்டு சிரத்திற் சிறிது புரோக்ஷித்துக்கொண்டு விபூதியுமெதிர்வைத்து வணங்கி யெனதுயிர் நீவிரோ யெளியேனிடத்து முற்சிகையமுது செய்தருள்க வென்று பிரார்த்தித்து நிற்க அவ்வாறே யிடம்பண்ணலா மென்ன அவ்வாறே யிடம்பண்ணி யமுதெடுத்துக் கையிற் கொடுக்கக் கொடுக்கக் கொடியபசிகொண்டவர்போ லேற்றேற்றுண்ணவே லக்ஷத் தெண்பதினாயிரஞ் சங்கமங்களுக்குச் சமைத்த வமுது கறிகளெல்லாம் படைத்தும் பசிதீரா தின்னும் படைப்பா யென்ன வசவதேவரு மிவரின்னாரென்றறிந்து தம்மையே நிவேதித்தனர். பிரபுதேவரு மதைக்கண்டுமகிழ்ந்து.

ஏரலோக ருத்திரரோ சுணேந்திரரோ இரண்டாஞ்சம்புவேயும்மைப்போல்வாரைக்கண்டறியேன் கருமபில்ரஸம்போலவும் மாணிக்கத்தி லொளிபோலவும் பிறப்பிலேதானே சிவபக்திமுதலாயின வும்மிடத்துத்தோன்றின. இவ்வாறுபுகழவே வசவதேவரும் பக்திபூர்வமாவணங்கி யஞ்சலித்து ஸ்வாமி ஸாக்ஷாத்சிவாகாரமான வுமக்கு எளியேனோ வமுதுபடைக்கச் சத்தியுள்ளவன்.

முன்னொரு காலத்தில் உமாதேவியார் சிவகணங்களுக்க முது படைக்கவேண்டு மென்று நினைத்து நீலகண்டராகிய சிவபெருமானின் வேற்றுமை யுணராது மயங்கி நிற்க சிவபெருமானக் குறிப்புணர்ந்து கணங்களை நோக்கவே சிங்கங் கரடி புலி முதலிய முகமுடையவராயினர். அப்போது வேற்றுமை யறிந் துமாதேவியா ரன்னம்படைக்கவெண்ணக் கணங்களிலு ள்ளார் ஒருசிறுகணத்தை யுமையாரிடத்து உணவு கேட்கும் படியேவ அச்சிறிய கணநாதனு மவ்வாறு கேழ்க்க உமையாரு மவ்வாறு படைக்க அச்சிறியவ னம்மைசேகரித்த வுணவுகளும்பற்குது பாகபாண்டங்களையு மெடுத்துண்டு ஏற்றசாமக்கிரிகளையும் மடுத்தனன். இதுகண்டு உமாதேவியார் மனங்கூசி இதுநோக்கிச் சிவானுக்ரஹம் பெற்றவர்க்கு நாமோ வமுதளிப்பமென்று நின்றனரொன்னில் எளியேன் தேவரீருக்கமுதுபடைக்க வல்லனோ என்று வணங்கித் துதித்துநிற்க.

அல்லமாப்ரபு தேவரும் வசவதேவரே நீர் இவ்வாறுசிவ தருமங்களைச் செய்தலால் காமதேனு கற்பகம் சங்கநிதி பதுமநிதி யுமதுமுற்றத்தி லெப்போது நின்று பணிகேட்கத் தக்கது நீர் நினைத்ததெல்லாம் பலிக்கக்கடவது தவத்தர்சொல்லுங்கோப மொழிகளைப் பொறுக்கத் தக்க சித்தியையுந் தந்தோம் என்றருளிச்செய்தனர்.

அல்லமாப்பிரபு புராண வசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கள்ளர்க்கருளிய திருவிளையாடல்.

அன்பிலென்னுதாபோற்றியவங்கள்பன்னுதாய்போற்றி
துன்பமுன்னுதாய்போற்றி துரிசுமுன்னுதாய்போற்றி
நின்புகழ்நாதாபோற்றி நினைவினென்னுதாபோற்றி
வன்புமுன்னுதாபோற்றி வரதண்டநாதாபோற்றி. க

ஒருதினம்வசவாச ரோங்கியமடத்திற்றுய்ய
பொருளினைக்கவர்வான்கள்வர் புகவரிதாகியீசன்
றருமாற்றவர்போற்சென்றுற் றவறிலையெனவறிந்து
கருவழுதுணங்காயாடை சேர்த்துத்தங்கழுத்திற்கட்டி.

கொண்டுகெண்டிகைவிபூதி கூடுதலின்றிச்சென்றே
யொண்டவரமுதுசெய்யுங் காலையினுட்போய்ச்சேர
வண்டவரல்லானந்த மடந்தனில்வாராரென்னத்
தண்டநாயகர்மகிழ்ந்து சரணார்த்தியெனக்கைகூப்பி. ௩

பந்தியிலிருத்திப்பூசை பண்ணுமென் றுரைக்கவங்கண்,
வெந்துயர்கொண்டுமேனி வியர்த்துள்ளநடுங்கிவாடி, வந்
துநாமகப்பட்டோமே மரணம்வந்ததுவேயென்ன, நொ
ந்தொருவரையொருத்தர் நோக்கியுண் ணடுங்குங்காலை.

ஆயிடையவர்கள்கள்ள மறிந்திவர்பவிகளென்று
தீயவெங்கோபராகித் தேசிகரொழுந்தபோது
நேயராநந்திதேவர் சித்தர்வேடத்தாசித்த
ரேயெனவழுத்துணங்கா யிலிங்கமாயிருந்ததன்றே. ரு

சோரரோயீசனேயந் துன்னியகருத்தராகி, நேரின்மந்தி
ரோபதேச நெறியெலாநிறையப்பெற்று, வீரசைவாசார
த்து விதியுளமிகவிளங்கிப், பாரமாம்பெரியோரொப்பு
ம் பான்மையாமேன்மைசார்ந்தார். சு

பழுதிலாநந்திதேவர் பாவனைநோக்கினலே
வழுதுணையிலிங்கமான வளந்தனைமகத்தோரோத்தத்
தொழுதவண்வசவதேவர்தொல்லையோர்செய்தவத்தின்
விழுமியசெய்திதன்னை விரித்துமுன்விளம்பாநிற்பாம்.

கள்ளர்க்கருளிய திருவிளையாடல்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௩௬0.

உ

திருச்சிற்றம்பலம்.

கள்ளர்க்கருளிய திருவிளையாடல்

வ ச ன ம்.

ஸ்ரீவசவேசரது திருமடத்தில் திருவமுதுசெய்யு மடியார்களோடு காரணமில்லாத கள்ளர் சிலர் கத்திரிப்பிஞ்சைச் சீலையில்முடிந்து கழுத்திற்றரித்துப் புகுந்தனர். ஆராதனைக்காலத்தி லவர்க்கவ் வாசாரந்தெரியாதமையா லிவரையறிந் தங்கிருந்தவடியார்கள் கோபங்கொண்டு தண்டிக்கப்புகவே வசவதேவ ரடியாரைமறுத்து அவர் கள்வரல்லர். அடியார்களேயென்றுசொல்லிச் சாந்தப்படுத்திச் சிவபெருமானைதியானிக்க - கள்ளரெல்லாஞ் சிவஞானிகளானார். வழுதுணங்காய்கள் சிவலிங்கங்களாயின.

கள்ளர்க்கருளிய திருவிளையாடல் வசனம்

மு ற் றி ற் று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

வ ணி க ம ல் லை ய ர் பு ரா ண ம்.

வசியரிற்றலைவரானோர் மல்லையென்றோன்பர்
சசிமுடியத்தனைச் சந்தியாதுணவுகொள்ளா
ருசிதவத்தகத்தின்மேலே யோரயற்பதியிற்சென்று
சிசியுமாய்ப்பசியுமாகி சித்தாலயங்காணாமல். க

வருந்திடவுடனிருந்த மைத்துனரிவரருந்தா, தருந்த ஞமொனுதென் றெண்ணி யந்தவூரயலோர் தூற்றின், பெரும்படி யொன்றைவைத்து வாயில்போற் பிரித்துக் கட்டித், திரும்பிவந்திலிங்கங்கண்டேம்வருதிரொன்றவர்க்குச்செப்ப. ௨

வருதிரொன்றுரைத்துநின்ற மைத்துனருடன்ருஞ்சென்றங், கருளுநேயத்தராகி யவர்விளக்கேற்றிக்காட்டத், தெரியுமெய்ப் புளகமெய்தித் தெண்டனிட் டெழுந்து போற்றி, யிருமைசேரத்தன்கோயில் வலம்வந்துவிடைகொண்டேகி. ௩

கருத்தினன்னியமமுற்றுங்களிப்பிஞலுணவருந்தித், திருத்தராயிருக்குங்காலை மைத்துனர்சிரித்தெழுந்து, பருத்ததோர்செடியுள்வைத்தபடியினைப்பணிந்தார்வந்தார், பெருத்ததம்பசிதணிந்தார் பெரியவர்வணிகரொன்று. ௪

அளந்திடப்படியின்ருேடி யச்செடியூடிருக்கும்
வளங்கொளுழியையெடுத்து வாருமினெனமல்லையர்
கிளர்ந்தெழுகோபராகிக் கிரிமகள்கணவரொன்று
தெளிந்திலீர் தீயசொன்னீர்சிவாவெனச்செவிகண்மூடி

பண்டரோமிண்டரோயிப் படிபரியாசகந்தான், மண்டிநீருரைக்குமாறென் வாருமின்மதனகால, ளண்டர்நாயக

னைக்காட்டவென்றவர்தமையழைத்துக், கொண்டுபோ
ய்க்குறித்துப்பார்க்கச் செடிபெருங்கோயிலாகி. கூ

சிகரநற்கோபுரங்க டிருமதிலாகியுள்ளே
பகருமங்காழிதானே பரமன்மெய்யிலிங்கமாகி
நிகரிலாநந்திமுன்னே நிகழ்தரவொளியார்தீபம்
புகரிலாதொளிரக்கண்ட புவியுளோர்வணங்கிப்போற்ற.

மைத்துனர்வைத்துவந்த வள்ளத்தின்பேரினாலே
நித்தர்வள்ளேசரென்று நிகழ்த்துவர்மண்ணோரின்றும்
பத்தியேமுத்திமூலம் பகர்தரின்மற்றோன்ப
ரித்தனைநெறியார்காட்டக்கோட்டையரொன்னும்பேரார்

வணிகமல்லையர் புராணம்

முற்றியது.

ஆகதிருவிருத்தம் - கூகூஅ.

உ

திருச்சிற்றம்பலம்.

—※—

வணிகமல்லையர்புராண

வசனம்.

மல்லையரென்பவர் வைசியகுலத்திற்பிறந்தவர், சிவபத்தியி ற்சிறந்தவர், சிவதரிசனத்துக்குத் தடைவருமாயின் உபவாசம் பண்ணும் விரதமுள்ளவர், வியாபாரத்தை முன்னிட்டு அயலூ ர்க்குச்செல்ல அவ்விடத்துச் சிவாலயமின்மையாலும் அர்த்த ராத்திரியானதாலும் வருந்திப் பசியினாலுந் துன்புற்றிருந்தனர்.

உடன்சென்ற விவர் மைத்துனவணிகர் தாமும்புசித்தற்கு விரோதமிருத்தலால் ஒருபுதரில் தாமளக்கும் வள்ளத்தைக்கவிழ்த்துச் சிவலிங்கம்போ லலங்கரித்துவைத்துத் திரும்பிவந்து நானோர் சிவலிங்கங்கண்டேன் நீர்தெரிசித் துணவுகொள்ளலாமென்றழைக்க, மல்லையரும் மைத்துனர் தீபமெடுத்துவரத் தாஞ்சென்று புளகாங்கிதராய்த் தெரிசித்துத் தெண்டனிட்டு வலம் வந்து மீண்டுந் தமதுநியமம் நிறைவேறினமையின் றடையின்றிப்புசித்து மனமகிழ்ந்திருந்தனர்.

அருகிருந்த மைத்துனர் நகைத்து உமக்கு நாமளக்கும் வள்ளமே சிவலிங்கமாய்த் தெரிசிக்க வீற்றிருந்தது அளத்தற்கு வேறுவள்ளமின்று விரைவிலோடி யவ்வள்ளத்தைக் கொண்டு வாருமென்று பரிஹாஸஞ்செய்யவே,

மல்லையர் மிகக்கோபித்து சிவபெருமானை வள்ளமென்று சொல்லவு மொருமூடத்வ மும்மிடத்திருந்ததன்றோவென் றவரை யழைத்துப்போய்க்காட்ட, முன்செடிகள் திருக்கோயிலாகவுந் திருமதிலாகவுங் கோபுரமாகவு முள்ளேநின்ற வள்ளமே சிவபெருமானாகவுந்தோன்றி நந்திதேவரு முன்னேதோன்றினர். தீபமும் அகண்டமாக ப்ரகாசித்தது, பூமியில் யாவருந் தெரிசித்தனர்.

வள்ளமே சிவலிங்கமான காரணத்தால் இவ்வுலகத்துள்ளோ ரின்றும் வள்ளேசரென்றுசொல்வர்.

வணிகமல்லையர் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

காட்டக்கோட்டையர்புராணம்.

ஆட்டினோர்நலவெருவினை யழகுளதேந்திக்
காட்டினோர்புடைவேதிகை செய்ததின்கண்ணே
வீட்டின்மேவுநம்பரனென விருப்பினுமிருத்திக்
கூட்டியாவினைமந்தையாய்க் குடங்கரங்கொள்ளா. க

கறந்துபாலினைத்துய்ய நற்கடத்தினிற்றணிந்தே
சிறந்தபாலையன்பா லரன்பாலுறச்சேர்த்தி
யுறைந்தகாட்டினுண்மனைத் தருமொள்ளியபூவாய்
நிறைந்தநேயராய்ப்பலா சிலைக்கல்லையினிறையா. உ

கொண்டுவந்தகமலரவம் மலனாமுன்கூட்டி
யெண்டுநம்பரற்கிருத்திய பின்புதாமிருந்து
மண்டுகாதலிற்சாதலைப் பிறத்தலைமறுப்பா
ரண்டநாயகர்சிரத்தி லப்பாலினையாட்டி. ௩

கண்ணிறைந்தநீர்கொண்டு வண்கண்ணிறைமலனைத்
தண்ணிறைந்தநீர்முடி மிசையழகுறச்சாத்திப்
பண்ணிறைந்ததம்பல துளக்குழலினையழகா
லுண்ணிறைந்தபேரன்பினு லாகிநின்றுருகி. ௪

பாடியாடிமுன்பணிந்தபின் வலமுறப்படர்ந்து
நாடிநின்றுளமுருகியே யருவிநீர்நயன
நீடிமெய்மயிர்சிலிர்த்தெழ நெடிதுயிர்த்தடியேன்
றேடரும்பொருளே யருளேயெனச்செப்பி. ௫

இந்தவாறுசில்பகலருச் சித்தபினிவர்தந்
தந்தைபால்சிறிதானவை தனைத்தெளிந்திடுவா
னந்தமாடுறைகாட்டினு ளயலொளித்திருந்தான்
முந்தவாவுடனன்பர்தம் பூசனைமுயல்வார். ௬

வேறு.

இத்திறம்பாலெலா மிவன்கெடுப்பனென்
றெத்திவந்தரன்றனை யுதாசனித்தலும்
பத்திசெய்யன்பர்தம் பரசுபற்றினர்
செத்திடுகெனப்பிதாச் சிரத்தைவெட்டினர். ௭

வெட்டினற்றந்தைமண் வீழ்ந்திறந்தனன்
சட்டெனவானர்பூத் தாணிவீசினர்
மட்டறுதுந்துமி வானிலார்த்தன
சிட்டர்கடோத்திரஞ் செய்துவாழ்த்தினர். ௮

வெண்ணிலாமுடியினர் விடையிற்றோன்றினர்
மண்ணில்வீழ்ந்திறந்தவன் மரிப்புநீக்கியே
யண்ணலாங்காட்டக்கோட் டையனாவாவென
வொண்ணிறக்கயிலையி னுவந்துவைத்தனர். ௯

வேறு.

முக்கணன்பரசோவேழமுகன்கரப்பரசுதானே
மிக்கவண்பதங்கள்வீர மிகவருள்பரசுதானே
செக்கரஞ்சடையார்வைகுந் திருக்கயிலாயவாயி
லக்கதவுறுந்தாணிக்கு மரியபொற்றிறவுகோலோ. ௰

பங்கரஞ்சிவத்துரோகர் படவுறும்பரசோதண்டி
வெங்கரப்பரசோகாலன் விடுங்கயிறறுக்கவல்லோர்
செங்கரப்பரசோசென்ம சேதனப்பரசுதானே
கங்காளன்பர்காட்டக் கோட்டையர்கைக்கோடாலி. ௰௧

எனச்சிவகணங்கள்போற்ற விழிந்தமேடத்தெருத்தான்
கனச்சிவலிங்கமாகக் காட்டக்கோட்டையர்செய்தி
மனச்சிவநெறியீதல்லான் மற்றும்பாவூரிற்பொம்மர்
முனைச்செயவாதிற்சோளமுத்திலிங்கமதாய்ச்சேர்ந்தார்.

ஆதலாலன்பர்மேன்மைக் களவிலையடியனேனைப்
போதவோர்பொருளதாகப் புகழன்மினெனவணங்கி
நாதனேர்பெருமைநாட்டி நாளிலெச்செயலைக்கேளாப்
போதவேவிச்சலேசன் புந்தியிற்பொருந்தானுகி. ௰௩

காட்டக்கோட்டையர் புராணம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௩௮௧.

உ

திருச்சிற்றம்பலம்.

காட்டக்கோட்டையர் புராண

வசனம்.

காட்டக்கோட்டையரென்பவர் - ஆயர்குலத்திற் செனித்தவர், சிவநேயத்திற் சிறந்தவர், ஆட்டின்சாணங்களைக் குவித்து வேதிகையாக்கி யதிற் சிவலிங்கத் திருவுருவத்தைத் தாபித்துப் பசுவினங்களை மந்தையாகமடக்கி யவற்றின் பால்களையெல்லாங் குடங்களிற்சேர்த்து அக்காட்டகத்துள்ள மலர்களையெல்லாங் கொய்து பலாசிலைக்கல்லைகளி னிறைத்துவைத்துத் தமது நித்தியக்கடனையும் முடித்துக்கொண்டு பின்னர் சிவபெருமானுக்கு இக்குடப்பால்களையு மபிஷேகஞ்செய்து மலர்களையுஞ்சாத்தி மகிழ்ந்து தமது புள்ளாங்குழலைக் கையிலெடுத்துப் பேரன்போடு பலகா லூதித் துதித்துச் சிவானந்தமேலீட்டாற் கூத்தாடி மனமுருகிக் கண்களில் நீர்பெருக மெய்ம்மயிர்சிலிர்த்து எனதருமைப் பெரும்பொருளேயென்று இவ்வாறு பலநாளருச்சிக்கவே,

இவர் தந்தையார் பசுவின்பால்க ளளவிற்குறைந்ததுகண்டு ஒருதினம் மறைவிலிருந்து இச்செய்கையையுங்கண்டு எதிரில் வந்து கோபங்கொண்டு சிவலிங்கத்தை யிடறினர். இதுகண்ட அன்பர் மனம்பொறுதவராய்த் தமதுகையிலிருந்த கோடரியை விரைவினெடுத்துத் தந்தையின்சிரத்தைக் கொய்துவீழ்த்தினர்.

உடனே சிவபெருமான் இவரது பத்திமேலீட்டைக்கண்டு இறந்துவீழ்ந்த பிதாவின் மரணத்தைநீக்கிப் புத்திரனாகிய காட்டக்கோட்டையனை வாவென்றழைத்துத் தம்முடன் கைலையிற் சேர்த்தனர்.

காட்டக்கோட்டையர் புராணவசன முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

—*—

வஞ்சனைவடிவமாதவர் புராணம்.

பெருத்தவிச்செயலைநன்றாய்ப்பேதித்தின்றறிவோமெ
ன்றே, மாத்திறன்மன்னனெண்ணின் மாதவர்வடிவ
மாதத், திருத்தமாய்ச்செய்வித்தஞ்சச் செறியிருள்சேர்
த்திருத்தி, யருட்செறிவசவதேவர்க்கறிவித்தானறிவில்
வேந்தன். க

அவ்வுரைகேட்டவாறே யறநெறித்தண்டநாதர்
செவ்வியமனத்தாற்சென்று சிவதவரிவரொன்றெண்ணி
யெவ்வமிலன்பினாலே சரணார்த்தியெனவிறைஞ்சித்
தெய்விகப்பெரியீர்சென்மின் றிருவமுதருந்தவென்றார்.

செடவடிவானதெல்லாஞ் செறிந்துயிரறிந்துநோக்கி
யடல்பெறுந்தவத்தோராகி யரகராவெனவெழுந்து
திடமிகுந்தண்டநாதர் பின்செலமுன்னேசெல்ல
மடமைசேர்விச்சலேசன் மதிமிகமருண்டருந்தான். ங

அரமனைபுகுந்திருந்தா னப்பதியுள்ளோரெல்லாம், பரி
வினனந்தியாரைப் பன்முறைபணிந்துநின்றே, புரியுமி
ச்செயலைச்செய்வாராரெனப்புகழ்ந்தார்விண்ணோர், மரு
மலர்பொழிந்தாரார்த்தார் மற்றைநாள்வசவதேவர். ச

திருச்சிற்றம்பலம்.

வஞ்சனைவடிவமாதவர் புராண

வசனம்.

விச்சலராஜன் தனதுமந்திரியாராகிய வசவதேவரது மகிமைகளைக்கண்டு மனம்பொருதவனாய் மரங்களினாலும் மண்ணினாலும் சிவனடியாரது திருவுருவம்போ லலங்கரித்துவைத்து ஒருநாளிரவில் வசவதேவர்க்கறிவித்தனன். அவரும் மெய்யாகவேநினைத்து அரன்மனையுட்சென்று அவன் செய்வித்தவுருவத்தைச் சரணார்த்தியென்று சொல்லி வணங்கி யன்பினாலே திருவமுதுசெய்தற் கெழுந்தருளுவீரென்னவே.

மரத்தால் மண்ணாற்செய்த வவ்வுருவங்களெல்லாம் உயிர்பெற்றுத் தவவுருவடைந்து ஹரஹரவென்னுஞ் சத்தத்துடனே முன்னேசெல்ல வசவதேவரும் பின்னேசென்றார். இதுகண்டரசன் பயந் துணவுமருந்தா துள்ளேசென்றனன்-யாவரு நந்திதேவனைப்புகழ்ந்து போற்றினார்கள். தேவர்களும் மலர் மாரிபொழிந்தார்கள்.

வஞ்சனைவடிவமாதவர் புராணவசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வங்கையர்புராணம்.

எண்ணெய்கண்ணுதற்குச்சாத்தி யினிதுபின்றமது
சென்னி, தண்ணெனவார்க்குங்காலைச் சங்கமரொருவர்
வந்தே, திண்ணியவருச்சனைக்குத் தினந்தொறுங் குறு
ணிமுத்தத், தொண்ணிறப் பொடியாற்கோல முவந்து
யாம்வனைந்துகொள்வோம். க

வருடமொன்றதற்களிப்பாய்வசவவென்றுரைத்தவாறே
பெருநெறிநந்திகேசர் பிரியத்தாற்றொழுதுபோற்றி
யருகுறுஞ்சோளக்குப்பையவையினையருளாற்பார்க்கத்
திருமலிதரளராசித் திரளதாய்த்திகழ்ந்துதோன்ற. உ

நினைத்தலக்கங்கள்வேண்டா நித்திலக்குவைகளாகு
மனைத்தையுந்தேவரீர்கொண் டருளுமென்றன்பினாலே
வினைத்திறமில்லாரான நந்திகள்விளம்பிமுத்தந்
தனைப்பலவெருதியானை யொட்டகந்தன்னிலேற்றே. ௩

கொடுத்திறைஞ்சினர்மகேசர் கொண்டுசென்றன ரிருந்
தோ, ரடுத்தநேயத்தாற்சொல்வா ரன்றுவங்கையரொன்
பார், மடத்திலோர்சங்கமேசர் வந்துள்ளிருளார்காலே,
பிடித்தாண்ணியமமன்பர் பேசக்கேள் பிறரைக்கேளேம்.

புதியநற்கோவின்பாலும் புனிதநம்முன்பறித்த
வதிககூவிளமுநம்மை யாண்டருளமலர்க்காட்டி
மதியினுற்சாத்தியல்லான் மகிழ்ந்தமுதருந்தோமென்ன
க், கதிபெறற்குரியரான வங்கையர்கசிந்திறைஞ்சி. ௫

மடந்தனிற்கட்டிநின்ற மலட்டினேக்கறக்கத்துய்ய, குட
ந்தணிபாலதாயக் கோவினேப்பிணித்துநின்ற, நெடுந்த
றிவில்வபத்திர நிறையவேதளிர்க்கக்கொய்து, விடஞ்
செறிகண்டனன்பர் விரும்பமுன்கொடுத்தானென்பர். ௬

இன்றுநந்தண்டநாத ரிணைவிழிக்கருணைநோக்காற்
றுன்றுசோளக்குவாலேத் தூயநித்திலங்களாக்கிச்
சென்றசங்கமர்க்களித்த தெய்விகம்பாரீரொன்று
நின்றநற்பெரியோரோத்த நந்திகணிகழுநாளில். ௭

வங்கையர் புராணம்
முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௯௬௨.

உ
திருச்சிற்றம்பலம்.

—*—

வங்கையர்புராண வசனம்.

வசவதேவர் சிவபெருமானுக்கு எண்ணெய்க்காப்பு நிவே
தித்துப் பின்றமெண்ணெய்க்காப்பிட்டுகொள்ளுஞ் சமயத்தில்
ஒருஜங்கமர்வந்து எமது சிவார்ச்சனைத்தலத்தில் ப்ரதிதினங் கு
றுணிமுத்துகளாற் கோலமிட்டுப் பின் சிவார்ச்சனைசெய்வது
நியமம், ஆதலா லொருவருஷத்துக்குப் போதுமான முத்தங்க

னைத் தம்மிடத்துப் பெறவந்தேனென்னவே, வசவதேவர் அவ ரையிணங்கி யிருக்கச்செய்து அவ்விடத்தருகிற் குவித்துக்கிட ந்த சோளக்குவியலைத் தமது திருவருளால் நோக்கவே யச்சோ ளங்கள்முழுதும் முத்துகளாகப் பிரகாசித்தன.

ஐயா கணக்கிடவேண்டாம் இம்முத்தங்கள்முழுதுந் தம து சிவபூஜார்த்தமாகவே யுண்டானதாதலா லங்கீகாரஞ்செய்த ருளவேண்டுமென்று பிரார்த்தித்து யானை யொட்டகம் மாடுகெ ளிலேற்றிக்கொடுத்து வணங்கினர். அந்த வீரமாஹேசரு மது கொண்டு மகிழ்ந்துசென்றனர்.

உடனிருந் திவ்வதிசயத்தைக்கண்ட பெரியோர்சொல்வதா வது, அக்காலத்து அடியார்களிற்சிறந்த வங்கையரது திருமட த்தில் பத்தியிற்சிறந்த ஒருஜங்கமர் பாதிராத்திரியில்வந்து ஐயா பசுவின்பாலும் வில்வபத்திரமுமில்லாம லிதுகாறுஞ் சிவார்ச்ச னைசெய்தறியேன்இன்றையதின மஃதிரண்டுமில்லாதகுறையாற் சிவார்ச்சனை நடுராத்திரியாயுந் தடையுற்றிருக்கின்றது, உம்மை யன்றிப் பிறரையுங்கேளோம் என்றுசொல்லி வருந்திநிற்கவே, அ காலத்தில் வந்தமையால் வங்கையர் தாமு மிருமடங்காகவருந்தி மடத்திற்கட்டியிருந்த மலட்டுப்பசுவை யருளால்நோக்கிக் கறக் கச்சொல்லவே யதுவும் பாலைப்பொழிந்தது. அப்பசுவைக்கட்டி யிருந்த கட்டுத்தறியை யருளாற்பார்க்கவே அந்தவில்வக்கட்டுத் தறியுந் தளிர்த்துநின்றது. அந்த வில்வப்பத்திரத்தையு மெடுத் துப் பாலுடன்கொடுத்தனர் என்று சொல்வர்கள்.

இன்று நம்போல்வாரெல்லாங் காணும்வண்ணஞ் சோள க்கும்பலை முத்துக்கும்பலாக்கி வந்தவொரு ஜங்கமருக்களித்த தெய்வத்தன்மையைப் பாருங்களென்று புகழ்ந்தனர்.

வங்கையர் புராணவசன முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சித்தராமையர்புராணம்.

தண்டநாயகமணியனார்சசி தங்குவேணிதருக்கினர்
மிண்டுறும்பரவாதகாலர் விகாரநெஞ்சனாமேவலார்
மண்டலாதிபனனவிச்சல மன்னனீள்சபைமன்னியே
கொண்டபூமிபுரக்குநீதி குலாவியாய்வுறுகாலையின். க

சென்னிமீதொரு செங்கைகொண்டு திடத்தமர்த்தி
யோர்செங்கையா, னன்னிலத்தினுமருளலென்றுநவின்
றெடுத்துரி·றீஇயலு, மன்னசெய்தியமைச்சர்கண்டிதெ
னற்புதமெனவிச்சல, னன்னியாயம தென்னதானுனா
நந்தியென்னவிசைத்தலும். உ

ஓதினலிதுயர்ச்சியாமென வுனாசெயாமலுணர்ந்துபி
னீதிதென்னவிசைத்திடாவிடி லிந்தமன்னனிணங்குரு
ஞதலாலிதுசொல்லுவாமென வரசன்முன்னுறவறைகு
வார், நீதியாலுயர்சொன்னலாபுரசித்தனர்சபிலேசனர்

நடஞ்செய்வானாயோர் நல்லதாபதர் நண்புடன்பதி
னுயிரங், குடங்கள்பான்மிகவேகொணர்ந்து குலாவியா
ட்டவதாொலா, மடைந்துவீதிகள்சேறநாயின வத்தெ

ருக்களிலாயமா, மடந்தைகாடகனின்றுமோர்கொடுவெந் துமாறியவேலையின். ச

வழுவுசேறுவழுக்கிவீழ்பவள் வசவனேயெனும்வச னநாம், விழுமிதாகவறிந்துமண்ணவள்வீழ்தராமலெடு த்தனங், கழுமுசெய்தியிதென்றலும்புவி காவலன்கன புதுமையென், றெழுகிநீரவளைக்கொணர்ந்திடு மென் னநின்றவரோடினர். ரு

அன்றுசொன்னலவப்புரத்தி லணைந்தவட்டாவங்கை யி, னென்றுசேறுடன்மோர்சுமந்துகொ டுலவுமானன விழியுடன், றுன்றுகொங்கையணின்றுவிச்சலன் வின வுள்ளதுசொல்லவே, நன்றுநந்திகண்மேன்மைநீமுன நாடலென்னெனநவிலுவாள். சு

சொன்னலாபுரமென்னுநற்பதி தாயநன்கதியெய்து வான், மன்னநீடுயரும்பருப்பத மல்லிகார்ச்சுனவள்ள ல்போ, லுன்னருஞ்சிவலிங்கமங்க ளுவப்பினேடுபெதி ட்டியா, மின்னுவானணிகோயில்கண்டு மிகுத்தபூசை யமைத்தரோ. எ

மற்றுமெண்பதினாயிரஞ்சிவ மந்திரங்கள்வகுத்துமு ன், சொற்றநஞ்சிவனார்தமக்குயர் சித்தராமையர்தாவி ழா, வுற்றநண்பினடத்துகின்றமை யுலகுளோர்களறிந்

துபோ, மற்றைநாளெமதூருளோரொடும் யானுமன்பி
ன்மகிழ்ந்துபோய். அ

செய்யவப்பதி யுட்புகுந்து சிவாலயத்திடை சேரலு,
மையர்மெய்த்தவர் சித்தராமைய ரம்பகஞ்செறி பால
ராய், மெய்யினீழலு மின்றியேபத மேதினிக்கணுருமை
லத், துய்யர்நிற்பது கண்டுமாதவர் தொழுதுமுன்ன ரி
றைஞ்சியே. கூ

இத்தயபரர்சித்தராமைய ரீசனூர்கயிலாயமே
நித்தமேகுவர்மீள்வர்நந்திகணெறிவினவுதுமென்னவே
யத்தபோதனர்சொல்லுவார்வச வேசரம்புவியன்பினு
லொத்துமாகயிலாயமீதினு முறுவரொன்பர்களுத்தமர்.

போகபூமிபொருந்திமற்றுயர் புனிதனூர்கயிலாயமேன்
மாகராலுமணைந்திடற்கரி தென்னநூல்கள்வகுக்குமா
னுகபூடணர்வெள்ளிவெற்பரு ணந்திகேசரிருந்தநீ
ராகமாதிகரோயெமக்கிதை யருளுமென்றபினத்தவர்.௰௧

இன்றுசென்றினிதெம்பிரானை யிறைஞ்சிநாளையிறங்
கிவந், தொன்றுநந்திகள்செய்திதன்னையுணர்த்துவாமெ
னவோதியே, கன்றுகண்டர்கனத்தகோயிலகன்றுமாத
வர்கைதொழா, நின்றுகாணவியோமமேறி நிலாவவோ
டிமறைந்தரோ. ௰௨

அந்தநாளிறவத்தர்சன்னிதி யங்கணேந்தநி காலேயே, வந்துமாதவரொதிர்செறிந்து வணங்கிநின்று வழுத்தலு ஞ், சிந்தையன்பொடுசித்தராமைய தேவர்தாமுறைசெ ய்குவ, ரெந்தையங்கயி லாயரென்ன விராவில்யானினி தெய்தியே. ௰௩

இனிதுடன்பதிணெண்கணத்தரு மிறைவவென்றுவ ணங்கவாழ், புனிதனன்றிருமுன்புகுந்து பணிந்துநின் றுடல்புளகமாய்க், கனியுமென்மனநினேவறிந் துயிராளி யாகியகாவலன், முனிவவெண்ணியதேதுசொல்லென முன்னிறைஞ்சியெழுந்தியான். ௰௪

அண்ணலேயென தாவியேயடி யார்பெருந்திரு வாம ரா, மண்ணின்மாதவர்வாழ்வதாகிய வசவராசையர்வந் துநின், கண்ணிருப்பொனத்தபோதனர்கட்டுளைப்பர்க ளுண்மையோ, தெண்ணிலாமுடி யாயெனக்கிது திரு வுளஞ்செய்தியென்றலும். ௰௫

அத்தனென்முகமன்பிலுடிய துள்ளதெங்கணுமாகியும்
பத்தர்சங்கமர்சங்கமேவிய பாரிடந்தொறுமாகியு
மொத்தங்கணநாயகர்க்கதி கத்தனுகியுமுள்ளவன்
மெய்த்தவென்னிதயத்துநாடொறுமேவுவனவனுவிநாம்

ஐயநீதெளிகாணிதோவெனு மத்தன்மெய்யொளியத னுளே, செய்யசோதியதாகியேயொருசெங்கரத்திலிலிங்

கமுந், துப்யமாதவர்தம்மையோர்கை தொழுந்திறத்த
ருமாகியே, பொய்யகன்றருணந்திதேவர் பொருந்தல்க
ண்டுபணிந்தனன். ௰எ

கண்டவாசவ ஞதிதேவர் கணேசர்மாதவர் நந்தியா,
ரொண்டருந்திரு மேனிநன்மை யுவந்துகைதொழு துரு
கியே, யண்டர்கோ ஞயர்பத்திமூல வசஞ்சலாதிகசத்தி
யா, மண்டுகோயிலுனக்கரன்றிரு மெய்கொலென்னவ
மூத்தினுர். ௰அ

அரியசங்கரனமலமேனியு ளணையுநந்திகளமைவினை
யுரியசங்கரியருகிருந்தவ ளுளமகிழ்ந்தெதிர்நாடியே
புரிதரும்பலபுகழ்புகன்றனள்புனிதனன்பொடுபுகலுவா
னிருவருந்தவமுறுசிலாத னிடத்தினன்றருணந்தியாய்.

மேவிநின்றுயர்வடிவமும்வசவேசனென்றொருமேனியா
யாவிசங்கமமாகிமண்ணி லமர்ந்ததுநமதுருவமுஞ்
சீவனுமலதில்லைகாணல சித்தராமதெளிந்தியோ
யாவருந்தொழுநாமிவனிவ ஞமிரண்டிலையென்றரன்உ௰

முத்திநாயகமாகுநாமுயர் முத்திமூலமதாகுமா, பத்தி
நாயகநந்தியெம்மன பான்மையன்பரிபூரண, ஞெத்தமூ
வுலகத்தருன்னலுனாத்தல்செய்தலுணர்ந்துதன், சித்தி
நாமமுனாத்தபேர்துயர்தெறுவனென்றுனாசெய்தனன்

என்றுதேசிக சித்தராம ரிசைத்தவெல்லையி லேயவ, ணென்றுமாதவர் வசவதேவனை யுன்னியொண்டுதிசெய்தபி, னென்றுநந்திகள் செய்திதன்னை யறிந்தனனெனவங்கவ, னின்றுசொல்லினள் விச்சலன்னிது நிச்சயம்மெனநம்பியே. ௨௨

அற்புதம்பெரி துற்றிருந்தன னவ்வமைச்சரு மஞ்சினர், நற்பொனுரமோடாண்டைமன்னவ னல்கலுங்கொடுகாடகன், சற்பகங்கணனன்பர்நந்திகள் சன்னிதிக்கணிறைஞ்சியே, வெற்பெனுங்குயை தங்கள்சாதியர் வீதியின்பொடுமேவினன். ௨௩

தூரவேவசவேசவென்றவர் துயரமுள்ளவைதூளதாய்த், தூரவோடலினந்தியார்மிகு தூரதிட்டிகள்காணலுங், தூரசொல்லுனைதுணிதலும்வெகு தூரசிந்தனைசொல்லலுர், தூரமன்றுயர் தண்டநாயகர் பெருமையாவர் துதிப்பவர். ௨௪

சித்தராமையர் புராணம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௪௧௪.

திருச்சிற்றம்பலம்.

சித்தராமையர் புராண

வசனம்.

ஸ்ரீவசவதேவர் ஒருதினம் தமது நித்தியகர்மங்களையெல்லாம் முடித்துக்கொண்டு விச்சலராஜன் சபையிற்சென்று தமக்குரிய மந்திரித்தொழிலை நடத்திக்கொண் டிருக்கும்போது,

ஒருகையைத் தலைமேற்றூக்கி மற்றொருகையாற் கீழ்வீழ்ந்தவனை யெடுப்பதுபோலவெடுத்து அஞ்சாதேயென்றுசொல்லி நிறுத்துதலும் இதைக்கண்ட மந்திரிகள் ஆச்சரியமடைந்தனர். அரசனும் இதற் கியாதுகாரணமென்றுகேட்க இதனைச் சொல்லலாகாதென்று சிறிது நாழிகை மௌனமாயிருந்து அரசன் கேட்டமையாற் சொல்லவேண்டுவதென்றே துணிந்து சொல்வதாயினர்.

கேளுமரசனே, சொன்னலாபுரமென்னும் திருஸ்தலத்தில் நடேசரிடத்தன்புள்ளா ரொருஜங்கமர் பதினாயிரங்குடம் பசுவின்பால் சேகரித்து அபிஷேகஞ்செய்வித்தனர். அவ்வபிஷேகத்துப் பால்முதலியனவெல்லாம் பரந்து அவ்வூரெங்கும் பெருவெள்ளமாய்ச் சேறாயின, அவ்வீதிகளி லாயர்குலத்துச் சிறுமியொருத்தி மோர்விலைகூறிவந்தவள் வழுக்கிவீழ்ந்தனள். அவள் வீழும்போது மற்றவரைநினையாது வசவதேவரோயென்று வருந்தினமையால் யாமிவ்வாறு தாங்கினின்றனமென்ன, அரசனு மிது மிகு புதுமையாயிருக்கின்றதென்று சொன்னலாபுரத் ,தவளிவ்வாறிருப்பது மெய்யானால் அழைத்துவாருங்களென் றுரைஞ

யிட, அருகிருந்த கிங்கரரவ்வாதேயனழைத்துவர வவளும் மோ
ர்க்கூடையுடனே கைகால்களெல்லாஞ் சோறாக வந்துநின்றனள்.
விச்சலராஜனு மிங்குநடந்தவண்ணங் கேட்க வவளு மவ்வாறு
சொல்ல, வசவேசரது மகத்துவத்தை நீகண்டதெப்படியென்
று மீட்டு மரசனவளைக்கேழ்க்க.

அரசனே, மல்லிகார்ச்சுனலிங்கம்போல சொன்னலாபுரத்
திற் பிரதிஷ்டைபண்ணி மற்று மெண்பதினாயிரஞ் சிவஸ்தலங்
கள்கட்டுவித்துச் சிவலிங்கப்ரதிஷ்டைபண்ணித் திருவிழாவை
யுஞ்செய்விக்கின்றார் சித்தராமதேவரென்று கேழ்வியுற் றுலகத்
தார்செல்ல வப்போது எம்மூராருடன் யாமுஞ்சென்று சிவா
லயத்திற் றரிசித்துநிற்குந் தருணத்தில், சிலமுனிவர் சித்தராம
தேவர் நெற்றிக்கண்ணுடையராய்க் கால்கள் பூமியிற்றோயாது
நிற்கு மகிமையைக்கண் டதிசயித்துப் பணிந்து இவர் ப்ரதிதி
னங் கைலைக்குச்சென்று தெரிசித்துவருகின்றமையால் நந்திதே
வரது மார்க்கங்களையெல்லாங்கேட் டறிவோமென்று நினைத்து
ச்சொல்லுவார். ஸ்வாமி சித்தராமதேவரே, நந்திதேவர் பூமியி
லுங் கைலையிலு மிரண்டிடத்து மொத்துப் பிரகாசிக்கின்றாரெ
ன்று பெரியர்சிலர் மொழிகின்றார். அவ்வாறிருக்குமியல்பை யெ
மக்கெடுத்துரைக்க வேண்டுமென்னச் சித்தராமதேவரும் யாமி
ன்றைக்குச்சென்று தெரிசிக்கும்போது நீவிர்சொன்னவை நிகழ்
வதுகண்டு நாளையுங்கட்குச் சொல்வனென்று அவரும்பார்த்து
நிற்க, ஆகாயமார்க்கமாகச்சென்று மறைந்து கைலையிற்சென்று
தெரிசித்து மறுதினங்காலையில் அம்முனிவரைப்பார்த்துச் சொ
ல்வார். கேளும் முனிவரே, நேற்றையதினம் கைலையிற் றிரு
வோலகத்துத் தெரிசித்து நீவிர்மொழிந்த சங்கைகளையும் நினை
த்துநிற்க, சிவபெருமானெனதுகருத்தறிந்து முனிவனே யுன

துகோட்பாட்டை யுணாப்பாயென்றுசொல்ல, நந்திகளது சரித்திரங்களைச் சவிஸ்தாரமாகச் சொல்லினேன், தமது திவ்யதிருமேனியிற் சாயுச்சியமாயிற்கும் நந்திகளது திருமேனியை ஒருகையி லிலிங்கமும் ஒருகை யடியனைத்தொழுவதாகவுஞ் சிவகிருபையாற் கண்டுதொழுதேன்.

அப்போது சிவபெருமான் சிலாதரிஷியினிடத்து முன்னமவதரித்த விந்நந்தியின்மேனியும் இப்போது வசவதேவனுதவுதித்த மேனியும் எமக்குச் சரீரமுமுயிருமாகுஞ் சித்தராமனேயென்றருள்செய்தனர். என்று சித்தராமர்சொல்ல அம்முனிவரெல்லாங்கேட்டு மகிழ்ந்து வணங்கினர். யானு மவ்விடத்திருந்தறிந்தேனென் றவ்வாய்ச்சிபுகல, விச்சலராஜனு மிதுநிச்சயமென்றறிந்து ஆச்சரியமடைந்திருந்தனன். மற்றையமந்திரிகளுமச்சமடைந்திருந்தனர். அவ்வாய்ச்சியு மரசனிடத்துச் சம்மானம்பெற்றுத் தனதிடஞ்சேர்ந்தனள்.

சித்தராமையர் புராணவசனம்
முற்றிற்று.

உ
திருச்சிற்றம்பலம்.

சாளிகைப்பெட்டியழைப்பித்த திருவிளையாடல்.

இன்னவற்புதநாளிலே விச்சலனென்பான்
கொன்னணிந்தனபடைக்கெலாஞ் சீவிதங்கொடுப்பான்
மன்னுசீர்வசவேசர் கைமாதனமளித்தா
னன்னநீணிதியமைச்சரோ டிடைச்செலுமளவில். க

௱௨௬ சாளிகைப்பெட்டியழைப்பித்த திருவிளையாடல்.

உற்றுமற்றொருகுமார சங்கமர்தூர்த்தவுருவாய்க்
கொற்றமாதனமனைத்தையுங் கொடுநமக்கென்றார்
சற்றுமவ்வயிற்றாழ்த்திடா தவர்கையிற்றந்தே
முற்றுமன்பினால்வணங்கின ரமைச்சர்கண்முனிந்து. ௨

வந்துவிச்சலன்முன்னுற வணங்கினர்மனநீ
தந்தவப்பொருளனைத்தையுந் தண்டநாயகன்றான்
சுந்தரத்தனோர்தூர்த்த சங்கமன்கையிற்கொடுத்தா
லிந்தமந்திரியா லுனக்காவதென்னென்றார். ௩

கோவநெஞ்சுடன்விச்சல மன்னவன்கொதியா
யாவரிப்படிசெய்பவர் களையெனவெதிராய்
மாவரத்தராந்தண்டநா யழைக்கவந்திருந்து
காவலாவெனையழையென்ற கருமமேதென்றார். ௪

விச்சலன்வசவேசுரர் முகமிகநோக்கிக்
கைச்சவெஞ்சொலாங் கடுமொழிகூறிநங்கனக
மச்சமின்றியேளித்தனை யரசர்தம்பொருளை
யிச்சகத்திலா ரமைச்சர்கள் கொடுத்தனவொன்று. ௫

தேடிவைத்தநின்னிதியென நம்பொருட்டிரளை
யோடிவந்தெனக்களியென்ற வொருவிடன்கையி
னாடலின்றியேகொடுத்தனை நம்மையார்தண்டித்
தாடவல்லவரென்றுநீ யுன்னினதுணர்ந்தேம். ௬

நம்பினோர் தனந்தன்னையு ரசித்திடவினைப்பார்
வம்பரல்லது நல்லவர் மதிக்கிலார்மனத்தா
லெம்பெருந்திருத்தாங்கியே யெமக்கினம்பொருளை
யம்பொருந்திடவளர்க்கிலா தழித்தனையந்தோ. ௭

உன்றன் மந்திரித்தனநமக் கமையுநீயுரித்தா
மொன்றுநம்பிக்கையென்பது போதுமெம்முடைமை
யின்றிவண்டருவாய் கண்டியாமுனமென்று
நன்றுநன்றுனேநம்பின நலமெனநவின்றான். ௮

வேறு.

அரசனேந்துரைத்தகாலை யருள்வசவேசர்சொல்வார்
பரசிவபத்தியென்னும் பதுமநன்னிதியுஞ்சங்கும்
சுரபியுங்கற்பதாருச் சோலையுஞ்சொன்னவெற்பும்
பெரிதுளோர்பரதனத்திற் பிரியத்தராகார்மன்னா. ௯

பங்கயமுரலும்வண்டு மத்தம்பூப்பரிந்துதேடா
திங்களின்கிரணமுண்ணுஞ்சகோரமின்கதிர்தேடாதால்
வெங்கயமறிகள்பன்றி முலையினைவிரும்பித்தீண்டாச்
சங்கரனன்பர்மன்னா பரதனஞ்சற்றுநற்றார். ௰

பாற்கடலன்னமுப்பின் பானியமருந்தார்தேமாஞ்
சீர்க்கனியிருக்கவெட்டிக் கனியினைத்தேடாக்கிள்ளை
மூர்க்கமாசியம்புல்லை மோகித்துத்தின்னுதென்று
மாற்கரியோன்றனன்பர் பரதனமருவார்மன்னா. ௰௧

வேறு.

தென்கடல்வற்றினுஞ் சேடன்சாயினு
மண்கடிதலையினும் வடவையாறினு
மொண்குலகிரிநெரிந் துகினுமன்னிய
ரெண்கனகங்கொளா ரீசனன்புளோர். ௰௨

சுடர்வடிவாயினோர் சுடனாயிச்சியா
ரிடைவிடாஞானர்சிற் றின்பமிச்சியார்
திடமுறெண்சித்திதான் சிந்தியாத்தவ
ருடையநல்லன்புளே னுன்பொருட்கொளேன். ௰௩

விடுவிடிவ்வையமுன் மிக்கபொன்கொளே
னுடையவர்பொருளையென் னுடையர்க்கீந்தனன்
கடுகுநின்னிதியனைக் காணிகுன்றினும்
படவராப்பணியினன் பத்தனலேன். ௰௪

பெட்டியிற்சேர்த்தநின் பிணையிற்சாளிகை
யொட்டியமுத்தினை யுள்ளவாறுநீ
திட்டமிட்டறியெனச் செப்பப்பேழையைக்
கட்டுடன்முன்னுறக் கண்டுமன்னவன். ௰௫

திறந்தரும்பெட்டியைத் திட்டமிட்டலு
நிறைந்தமுன்முத்தினை நீங்கலின்றியே
யுறைந்ததுகண்டிறை யுவந்துநந்தியார்
சிறந்தநற்பெருமையைச் செப்பியேத்தினன். ௰௬

வானவர்மலர்மழை வழங்கிவாழ்த்தின
ரானசீர்வசவ ராசையர்வேந்தன்மு
னூனமில்வாதவூ ரொண்டவர்க்கரன்
குனரிபரியெனத் தருதல்செப்பியே. ௰௭

ஆதலாலரனருட் களவிலென்றனர்
மாதனைமன்னவன் வசவதேவனைப்
போதவேமகிழ்ந்துநீ புனிதனென்றுமண்
ணேதுமானுடனல னுண்மையென்றரோ. ௰௮

கடற்குமுத்தளிப்பவர் கரங்கள்போலவே
சுடர்த்தருமணியணி தூசுநல்கியே
சடக்கெனநந்திமேற் றப்புனாத்தபே
ரடக்கமினுவினை யரிவன்செல்கென. ௰௯

மன்னவனுனாத்தனன் வசவதேவர்தா
மன்னவிச்சலன்மகிழ்ந் தனுப்பத்தம்மனைப்
பன்னகவணியனைப் பரவியேகினர்
தன்னிகரின்றியே சரிக்குநாளரோ. ௨௰

சாளிகைப்பெட்டியழைப்பித்த திருவிளையாடல்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௩௬.

திருச்சிற்றம்பலம்.

சாளிகைப்பெட்டியழைப்பித்த திருவிளையாடல்

வ ச ன ம்.

இப்படிப்பட்ட வற்புதங்கள் நடக்குநாளில், விச்சலராஜன் தனது சைனியங்களுக்குச் சம்பளங்கொடுக்கும்படி வசவதே வரிடத்தில் அநேகதிரவியங்களைப் பெட்டியிலிட்டுத் தந்தனன். அதைப் பெற்றுக்கொண்டு போகுந்தருணத்தில் தூர்த்தவடிவ முள்ள வொருஜங்கமர் குறுக்கிட்டு நீர்கொண்டுபோ மித் தன முழுதும் எமக்களிக்கவென்று கேழ்க்கவே, வசவதேவருமஞ்சா ம லத்தனமுழுது மவர்க்குத்தந்து வணங்கினர்.

உடனிருந்த மற்றையவமைச்சர்கள் கோபக்குறிப்பினரா யரசனிடத்துப்போய் மஹாராஜனே, வசவதேவரிடத்துக்கொ டுத்த திரவியங்களையெல்லாம் நடுவழியில்வந்து யாசித்த ஒருவி டஜங்கமர்க்குத் தந்துவிட்டனரென்று வந்துசொல்லினர்.

அதைக்கேட்ட வவ்வரசன் மிகக்கோபமுடையனாய்த் தண் டாதனையழைப்பித்துப் பல கடுமொழிகளைச்சொல்லி யும்மைப் போல இவ்வாறு செய்வாருண்டோ, இதுவனாயி லும்மை நம்பி யிருந்த வெனக்கு நல்லபயனளித்தீர். உமது மந்திரித்தன மிது வனாயிற்போதும், எமதுபொருளைமாத்திரம் உத்தரவாதம்பண் ணுமென்று சொல்லினன்.

இவ்வாறு கோபித்துரைக்க, வசவதேவரும் சிவபத்தியென் னுஞ் செல்வமுள்ளோர் அநித்தியமாகிய விச்செல்வத்தை விரு ம்புவரோ, உமக்குண்டான வையத்தையொழித்துவிடும், நான்

வ ச ன ம்.

கொடுத்தபொரு ளச் சங்கமர்க்கே சொந்தமானதன்றி யுமது பொருளன்று. உமதுபொருளிற் சிறிதுங் குறைவின்றி முத்திரையுடனேயிருக்கும்படி சாளிகைப்பெட்டியை யொப்புக்கொள்ளுமென்றுசொல்ல, அவ்வாறே அரசனுமொப்பநோக்கிப் பிழையொன்றுங்காணாமையால் வசவதேவரிடத்து மிகமகிழ்ந்து நீர் மானுடனல்லன் றேவனேயாகும். என்று பலவாறுபுகழ்ந்து அநேக வஸ்திராபரணபூர்வமான மரியாதைகளையுஞ் செய்தனுப்பினன். வசவதேவரும் பன்னகாபரணனாகிய சிவபெருமானைத்துதித்துத் தம்மகத்திற்சென்றிருந்தனர்.

சாளிகைப்பெட்டியழைப்பித்த திருவிளையாடல்

வசன முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

நெற்றிக்கண்கேட்ட திருவிளையாடல்.

இத்திறம்வசவதேவ ரினியசங்கமமோந்த
முத்தியுஞ்சித்திதானு மூலமாமுதலுமென்னும்
பத்தியின்பெருமைதன்னைப் பாருளோரறியப்பண்ணும்
புத்தியாற்கல்லியாண புரத்தரன்புகுந்தபின்னர். க

வே று.

தங்குவெண்பிறையைந்தலைப்பணி தாவுநீர்நகுதலையுட, னங்கியோர்விழிகாளநீல மராப்பணித்தொகை யக்

குமான், பங்குகிடலைமாலையாகிய பலவிதங்கள்மறைத் தருந், துங்கமாதவவடிவமாய்வசவேசர்தம்மெதிர்தோ ன்றியே. ௨

நம்பியுன்னிடைவந்தனம்மொரு நல்லுறுப்பினைநாடி யே, யெம்பிரானயனங்களென்ன வெமக்குமுக்கணிவி ச்சையா, மம்பிகாபதி யன்பநெற்றியி னம்பகந்தரு வா யென, வம்பிலாமனவசவதேவர் வணங்கிநின்றுவழுத் துவார். ௩

வீறுமானைமுகத்தன்மூவிழி மிக்கவுக்கிரனன்னகண், டேறுமாறுளிர்மாமுகன்னியல் செய்யபன்னிருதுய்ய க, ணிறில்சங்கரதாசர்முக்க ணிருக்கனெண்கணவ் விந் திர, னூறொடொன்பது நூறுகண்கொடு நோக்கநல்கி னோகியலோ. ௪

இல்லதொன்றையெமக்களித்திடு கென்றுகொள்ளு மியல்புளோர், வல்லபேர்முனமில்லையென்கை வழக்க தன்றுமனத்துளாய், நல்லதம்விழிதங்களுக்குநயந்துகா ணவொணுதெனுஞ், சொல்லுமக்கிலையென்றுராடித்து தித்துநின்றெதிர்காட்டினர். ௫

காட்டுமாடியுன்முக்கணும்மெதிர் கண்டுகொண்டுக ருத்திரு, வீட்டுநாணமுளோர்கள்போன்முக மினிமை

குன்றியிறங்கியே, மீட்டுநின்றெருமாற்றமொன்று விள
ம்பிடாதுவிரைந்துட, னூட்டுசங்கமதேவர்போலுருநண்
ணுமீசர்நடத்தலும். ௬

நடக்குமத்தனைநந்திகேசர் நயந்துகண்டுலகெவையுநீ,
கொடுக்கவல்லையுனக்கொருத்தர் கொடுக்கவுள்ளவரொவ
ர்கணின், னிடத்திலில்லவையுள்ளதேலடி யெனளிப்ப
னதின்றிவண், டிடத்தினீவெருள்வோரெனும்படிசெல்
வதென்னெனவுரைசெய்வார். ௭

சுந்தரன்னெனவேமடந்தையர் தூதுசெல்லெனவோ
திலே, னந்தருந்திருநீலகண்ட னணைந்தவாபிபமளியெ
னே, ன்ந்தருநிதிசேடதாசையர் நண்ணல்போலுனைநல்
கெனே, னெந்தவெம்மிடிமாறனாள கைப்பதந்தா நுவ
ல்கிலேன். ௮

சொன்னமாரியெனக்குநல்செனுஞ் சோழர்போலது
சொல்கிலே, னின்னசொர்க்கமதாதியான விருஞ்சுகந்த
ருவாயெனேன், மன்னநின்கயிலாயநீயெனை வைத்ததெ
வ்விடமவ்விட, முன்னலன்பருந்துசேடம துண்டை
யாகுறையொன்றிலேன். ௯

வேறு.

உன்னையருச்சிப்பவர்கண்ணப்பன்றண்டியுடையளிப்
பார்சேடதாசையர்நற்பூக், தன்னைவிடாதேதருவர் புட்

பதந்தர் சங்கிலிமாலைகடொடுப்பள்வாயிலாரோ, நின்னி டமாங்கோயில்செய்வர் கலியனார்தா நேசத்தால்விளக்கி டுவார்முத்தாலத்தி, துன்னவெடுத்துடன்பாடுஞ்சேர்வ னன்றுன் றுய்யதமிழ்ச்சம்பந்தன் றுதிக்கவல்லோன். ௰

கந்தமனைப்பவர்மூர்த்திகந்ததூபங் கலையரொருவலை யரிவர்கசிந்தளிப்பர், வந்தமுதுபடியளப்பர் தாயனார்தா மாசிலாக்கர்ப்பூரவடைக்காய்நல்குஞ், சிந்தைமகிழ்ந்தி ரோசையர்திம்பால்வங்கர் தினந்தருவர்திரண்டபால்கொ டகூச்சவ்வை, தந்திடுவளேகாந்தத்தலத்துச்சாத்தர் ச ங்கரதாசையரிலங்கர்மாஞ்சிதேவர். ௰௧

செலவழியானைதுநெல்லுக்களஞ்சியங்க டினங்காப் பர்கோட்புலியார்சுங்கம்பார்க்க, வலரியல்சேர்பங்கையர ங்கம்வெட்ட வல்லர்முனையடுவார்நின்கோயிற்காவ, னி லைதிரியார்சிவநிசிசெய்சங்கிதேவர் நினக்கமுதுபடைப் பள்சிறுத்தொண்டன்றேவி, பலதளிகையமுதேற்றுஞ் சோழர்நெஞ்சிற் பக்கமெல்லாஞ்சென்னையர் பரிந்தளி ப்பார். ௰௨

மிகவிதத்தகச்சாயம்படைக்கவல்லாள் வீரசோளவ் வைநன்னீர்த்தடஞ்சமைக்கத், தகுவர்திருவாரூரிற்றண் டியார்தாஞ் சாதமிடச்சாம்பவர்முன்றருக்கிநிற்ப, ரகமு ருகிப்பாடிநிற்க வப்பர்வல்ல ரருங்குளிர்நீர் தந்திடுவார்

பொன்னிதேவர், நெகுமனத்தாளின்கோயின்மெழுகவ
ல்ல ணிம்மவ்வைமாரையர்நீள்விற்களிப்பார். ௰௩

பிரதானர்கணநாதர்சூதுநின்பாற் பிழையாமலாடவ
ல்லர்மூர்க்கனர்தாம், திரமானகணக்குவல்லர்வாச்சிதே
வர் செய்யவிசுவாசருயர்கெம்பர்விக்குள், வரமேவுபோ
கையர்மாவின்றுய்யமதுரகனிகாரைக்காலம்மைநல்கும்,
வரமேவுமெய்ப்பொருளாருன்றனீற்றை வணங்குவர்கா
வியம்படிப்போர்சாமவேதர். ௰௪

ஆண்டருணின்றிருமேனிகாவலன்பர் பசுபதியாரம்ம
வ்வையன்பாய்போற்றி, வேண்டுறுநற்ருயர்நமித் தண்
டியார்தாம் விமலவயித்தியர்கானவீணைக்காரர், பூண்டு
லகையாண்டகன்றமாதிராசர் புகழுமுருத்திரபசுபதியா
ரென்பார், காண்டகுமந்திரவாதரப்பப்பாச்சர் கசிந்துன
துபிரசாதங் கருதிக்கொள்வார். ௰௫

உன்னலமுத்திரையிடுவார்கின்னரைய ருன்வாயிற்ற
ளவாய ரோங்குஞ்சேரர், நின்னருணற்றவசமெலா மெ
ருத்திலேற்பார் நீள்வணிகமல்லையர் நீநன்கார, நன்னெ
றியார்காட்டக்கோட் டையர்காப்பார் நண்ணுபயிர்ச்செ
யல்செய்வோ ரிளைசைமாறர், துன்னருள்சேர்மாமனூர்
மலயராசர் சுரிகைசவுண்டையர்நின்கைச் சுரிகையேற்
பார். ௰௬

எறிபத்தர்நின்பூக்கூ டினிதுகாப்பா ரியலுமடியார்து
திப்பாரொழிலாரூரர், நெறிபெற்றுமேகாந்தராமர்நின்னை
நேசிபாச்சமயிகளை நெருக்குவர்தீர, ரறுவைத்தீ தகற்று
வோர் குறிப்புத்தொண்ட ரதிகதிறன்மாச்சையரமலப்
பொம்மர், வெறியுற்றநந்தவனம்விரும்பிக்காப்பார் வீசி
நிற்பார்மதவரசராலவட்டம். ௰எ

திருநீலகண்டர்தாநவபாண்டங்க டினந்தருவர்விறன்
மிண்டர்சிவநேசர்க்கு, வெருவாளைவெட்டவல்லார் வி
பூதிதன்னை விரும்பார்க்குக்குலச்சிறையார்கழுச்சமைப்
பர், மருவாருமருவுதற்குவாதவூரர் மாணிக்கவாசகந்தா
ன்வகுக்கவல்லார், பெருவாயிற்பாலகரோலெச்சகெத்தர்
பெரியவிடதாரியர்பாம் பினக்கல்லையர். ௰அ

ஏகமுகாதியாயீரைஞ்ஞூறு மெழின்முகத்தரந்தர
மாமிருங்கணத்தோர், மாகவுமைபாகவரசங்கராயமகதே
வமறைமுதல்வமாறுவின்ப, யோகபரசிவமுத்தியுதார
தீரா வொருகாலுமிறவாதாய் பிறவாதாயென், றுகவி
லைமுதலாக வனந்நாம மன்புடனே துதித்துநிற்க வ
மர்ந்துவாழ்வாய். ௰கூ

வே று.

இப்படிப்படியிலாத விரும்பெருஞ்செல்வமுள்ளா
யொப்படிமுடியொன்றில்லா வொருமுதலாகிநிற்பா
யெப்படியென்னைமுக்க ணீயெனக்கேட்டாயிந்தச்
செப்படியென்மேல்வைத்த திருவுளக்கருணையன்றோ.

மின்களங்கறுக்குமுன்ன நெடும்புரமெரியாமுன்ன
மன்கனமலையன்பெற்ற மாதைநீவணையாமுன்ன
முன்ககனுதியட்ட மூர்த்தநீசெய்யாமுன்ன
மென்கமலத்தோன்மாலுன்விகாரத்திற்சனியாமுன்னம்

அதற்குமுன்னதற்குமுன்னீ யாண்டவனடிமைநானின்
பதக்கமலங்களல்லாற் பற்றிலேனெனப்பணிந்து
மதத்துறைசிறிதுமில்லா வசவேசர்முகம்பார்த்தெம்மா
னிதத்தநின்பத்திகாட்ட வெய்தினேமெனமறைந்தான்.

நெற்றிக்கண்கேட்ட திருவிளையாடல்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௪௫௮.

௨

திருச்சிற்றம்பலம்.

நெற்றிக்கண்கேட்ட திருவிளையாடல்

வசனம்.

உலகத்திற் பெருஞ்செல்வமும் பேரின்பமுத்தியுமெல்லாம் ஜங்கமாராதனையேயென்னும் உறுதியுள்ள வசவதேவரது பக்தியை விஸ்தரிப்பிக்குங் கருத்தால் சர்வவியாபகரான பரமசிவந் தமது சர்ப்பாபரணம் முதலிய திருச்சின்னங்களைமறைத்து ஒரு ஜங்கமக்கோலமாக எழுந்தருளிவந்து வசவதேவரோ யெமக்கோரவயவம் புதிதாகவேண்டுவது. அஃதேதென்னில் பரமசிவத்துக்கிருப்பதுபோல எமக்கும் நெற்றிக்கண் வேண்டுமென்றனர்.

வசவதேவரும் வந்தஜங்கமனாத் தமது சிவஞானத்தால் பரமசிவமென்றேயறிந்து ஸ்வாமி ஜங்கமரோ, விநாயகர் வீரபத்திரர்முதலானவர்களுக்கு முக்கண்ணும், பிரமனுக்கு எட்டுக்கண்ணும், இந்திரனுக் காயிரங்கண்ணுங் கொடுத்தவர் நீரன்றோ, அன்றியும் தம்மிடத்துள்ளபொருளை யொருவனைபோய்க் கேழ்ப்பது முறையோ என்றுசொல்லி ஒரு கண்ணாடியையெடுத்து முகத்தெதிர்காட்டினர்: அக்கண்ணாடியில் தமது நெற்றிக்கண்ணையுங்கண்டு நாணப்பட்டவர்போலப் பின்பொருவசனமுங்கூறாது விரைந்துசென்றார்.

வசவதேவரும் பின்சென்று உலகத்தி லெவ்வையுந்தரத்தக்க வுமக்கு ஒருபொருளைக்கொடுக்கும் வல்லவரொவர், ஏதோ பயமடைந்தவர்போ லிவ்வாறுசெல்வது யாதுகாரணம். சுந்தரமூர்த்திநாயனார் முதலானவனைப்போல வலிதானவரங்களைக்கேட்டேனோ, கைலையிலிருந்து நீரெவ்விடத்திருக்கக் கட்டளையிட்டீரோ அவ்விடத்திற்றானேயிருந்து அன்பரது ப்ரசாதசேஷங்களைப் புசித்துச் சீவிக்கின்றே னென்னிடத்துக் குற்றமியாது, அநந்தவாத்மாக்கள் வேண்டியவரங்களை நின்னிடத்துப்பெற்று முத்திபெறவு மெளியேனோ வுமக்கொன்றைத்தருவேன், எளியேனைக் கேட்பதும் முறையோ, இவ்வா றென்னைச்சோதித்ததுந் திருவருளேயென்று நினைக்கின்றேன். நீர் சகளீகரித்து பிர்ம விஷ்ணுக்களைப்படைக்கு முன்னமேதானே நீராண்டானும் நானடிமையுமன்றோவென்று பணிந்துநிற்கும் வசவதேவரது முகத்தைப் பார்த்து ஜங்கமருபியான சிவபெருமான் பத்தியை வெளிப்படுத்தவந்தோமென்று உடனே யந்தர்த்தானமாயினர்.

நெற்றிக்கண்கேட்ட திருவிளையாடல் வசனம்

மு ற் றி ற் று.

திருச்சிற்றம்பலம்.

ஆடைவளர்ந்த திருவிளையாடல்.

இந்தலீலையில்வசவேசரின்புறநாளின்
வந்தரும்பொருளனுதின மிவர்கையில்வாங்குங்
கந்தவண்புயக்குமார சங்கமர்பொருண்மடவாள்
அந்தமாளிகையிருந்தொரு தாதியையழையா. க

இன்றுநஞ்செலவதற் கருள்வசவேசனீயும்
வென்றிசேர்பொருள்கேட்டு நாம்விடுத்தனமென்று
சென்றுநீயுரைதருகுவன் கைக்கொடுசெல்வாய்
மன்றலங்குழலாயென வுரைத்தனள்வருவாள். உ

தண்டநாயகரரமனை சார்ந்தகம்புகுந்தங்
கொண்டரும்பதிவிரதை கங்காம்பிகையுடுக்கு
மண்டரும்பெருவிலைபெறும் வளங்கொள்பட்டாடை
கண்டகந்தனில்விரும்பி நில்லாமலேகடுகி ௩

திரும்பிவந்துதன்னாண்டவ ளுறைவிடஞ்சேர்ந்து
விரும்பியம்மகேணனுக்கே நெருவிசேடங்
கருந்தடங்கணணங்கிகள் பன்னிகங்காம்பை
வருந்துநுண்ணிடையுடுத்திருக் கின்றவண்பட்டின். ச

ஒளிபுநல்லலங்காரமு மொண்மைபுமொப்பும்
தெளிபுமிவ்வுலகத்தினு ளில்லையச்சேலை
பளிதகுங்குமமுலைபுமை கயிலையம்பரமன்
களிகொளும்படிபுடுப்பளோ வறிகிலேன்கருதின். ௫

அவ்விசேடநற்றிவ்வியாம் பரிணையணையுஞ்
செவ்விசேர்முகச்சங்கமர் வசவனார்ச்சேர்ந்து
வவ்வியாசையாற் கேட்டலுமகிழ்ந்தளிக்கின்ற
னவ்விபோல்விழியவ்வைவரி யுடுக்கலாநயப்பால். ௬

வேறு.

நந்தெருவிடந்தொறு நண்ணுசங்கமர்
தந்தெரிவையர்க்கு நற்றண்டநாயகன்
சிந்தனைமகிழ்ந்தளித் திடத்தினங்கொடு
வந்தவர்தரத்தர மகிழ்ந்துடுத்திடும். ௭

வேறு.

புதியபல்வளஞ்செயரஞ்சி காம்போசஞ்சினஞ்
சிதைவில்பாவசத்திலக நற்புயலிறந்தேசரி
யுதயராகமிவ்வகைய கங்காம்பிகையுடுக்கு
நிதியினம்பரத்தோரிழை விலைபெறுவினைக்கின் ௮

வேறு.

எனவுரைத்ததாதிதனை மகிழ்ந்துநோக்கி யிதமுறைத்
துச் சங்கமர்முனினியராக, மனமுருகும்வகைபாடிக்கூ
டிநல்ல மதனகலைவிதமெல்லா மகிழச்செய்தே, யனகர்
வசவேசர்முனணைந்துநேரங் கவர்தேவிகங்காம்பையழ

காற்சாத்துங், கனகமிகப்பெறுஞ்சேலை கேட்டுவாங்கிக்
கடிதின்னேவரிலென்மேற் காதலுள்ளீர். ௬

வே று.

அவளுரைத்தனவச்சொற்கேட் டப்படிசெய்துமென்று, தவளவெண்ணீற்றுநெற்றிச் சங்கமர்விரைந்துசென்று, பவளமெய்வசவதேவர் பாற்சென்றுவசவகேணின், றுவளுநுண் ணிடைகங்காம்பை யுடுக்குமென் றுகிலீயென்றார். ௰

சங்கமருரைத்தசொல்லைச் சங்கமேசுரன்சொல்லென்றே, யங்கநற்புளகங்கொள்ள வந்தரின் னடியேன்செய்த, துங்கமாதவமின்றன்றோ துணைசெய்ததெனக்கென்றன்பான், மங்கைகங்காம்பைதன்னை வரச்சொலுகென்றுள்விட்டார். ௰௧

தாதியர்தூதர்வார்த்தை தன்னைக்கேட்டுண்ணடுங்கி
நீதிசேர்தண்டநாத னிறைந்தபட்டத்திராணி
கோதில்பத்தினியாசாரக் கூடத்தில்வருவதென்னென்
றோதியுள்ளஞ்சிக்கங்காம்பிகைசெவியுறவுரைத்தார் ௰௨

சிவனருச்சனைமேன்மோகி செய்யவெண்பூதியாகி
தவநெறிவிவேகியாகி சதாசாரநித்தாகி
பவநெறிவிராகிதுய்ய பதிவிரதத்தாலேகி
புவமையிலஞ்செழுத்தா யூகிதன்மத்தியாகி ௰௩

தங்கநற்குகையிற்காய்ச்சித் தையலாய்வார்த்திழைத்த
பங்கமில்பாவையாவி படைத்தொளிமணிகள்பூண்டு
மங்கலமுறநடந்து வருதல்போற்றிரண்டுமாத
ரங்கணைத்திரண்டுபாலும் வாச்சபையணைந்தாளந்தோ.

வந்தகங்காம்பைதூய மதிமுகம்வசவதேவர்
சிந்தனைமகிழ்ந்துநோக்கிச் செய்யவித்தம்பிராற்கு
விந்தவண்சேலைதன்னை யிங்ஙனங்கொடுப்பாயென்று
ரந்தமொன்றில்லாநாண மதனினலையர்ந்துநின்றாள். ௰௫

இன்றுமானபிமான மின்றிநந்திரியுடுத்த
மின்றுனுஞ்சேலைவாங்கி விரையநாமிவர்க்களித்தால்
வன்றுயர்ப்பிறவிச்சேலை மண்ணின்மேல்மாறிமாறிப்
பொன்றுதலின்றிப்போம்போமென்றுநற்புத்தியன்பால்

உரிந்தனர்தங்கையாலே யொண்ணுதறிரும்பாநிற்பப்
புரிந்தகங்காம்பைகற்பின் பொற்பதோவசவராசர்
பரிந்தகைப்பரிசமேன்மைப்பான்மையோவாங்கவாங்கத்
தெரிந்திடவரிதாநீளச் சேலையாய்த்துலைவதின்றி. ௰௭

வெய்யவனுதிக்கும்வாரி மிசையெழுதிரையோவிஞ்சு
செய்யநற்கொடிமின்றுனே திங்களுட்டுளங்குமின்னே
துய்யவிச்சேலையென்னத் துலைவறவளர்தலாலே
யையநற்றண்டாத வமைபுங்காணமக்கிதென்றார். ௰௮

அமையுமென்றவருனைத்த வளவிலக்குறிகொண்டற்ற
சமமுறுஞ்சேலைதன்னைச் சரணராம்வசவதேவ
ருமையொருபாகர்வேடர்க்குவந்தளித்திறைஞ்சிநின்றார்
கமையுறுங்கருத்தராகிச் சங்கமர்களித்துச்சென்றார்.

அம்மைகங்காம்பையுள்ளே யன்னமோபிடியோ வெ
ன்னச், செம்மையாநடந்துமெல்லச் சென்றுறுபோதி
ருந்தோ, ரெம்மையாதரவிற்பெற்ற விவணாநம்விழியா
ற்காண, வெம்மைதீர்தவநாஞ்செய்த மேன்மையேமே
ன்மையென்றார். ௨௰

வேறு.

படிமகளிவர்பதப் பரிசுவேண்டியே
முடிவரும்பொறையினை முன்னமெய்தினள்
கடிமலர்மகளிவர் கனத்தநல்லியல்
வடிவினைவிரும்பிவாழ் மனையினையினள். ௨௧

கலைமகளிவருணா கற்கவேண்டியே
நலமலரயனிட நாவினையினள்
சிலைநுதலிவர்பதி விரதந்தேடியே
யுலைதலாலருந்ததி யுடலங்குன்றினள். ௨௨

வேறு.

இவரபிமானம்பெற்ற விவருங்கற்பினாலுந்
தவநெறிவசவதேவர் சற்பாவநிலையுமென்றே
யவரவரிருந்தங்கேத்த வன்னையன்பாற்போற்றிச்
சிவநெறிவசவதேவர் முன்னுளோர்செய்திசொல்வார்.

வே று.

எந்நெறியுமோர்நெறியாய்த்தேவரீர்கள் இயம்புவதெ
ன்னென்றஞ்சியிச்சையாலே, பன்னிரண்டாண்டிருந்து
நெய்தபட்டோரன்பர்பரிந்துதரவெனச்சேடதாசரீந்தா,
ரிந்நெறிவல்லாளரியற்பகையரானு ரிருவருந்தமில்லாளை
யிசைந்தளித்தா, ரந்நிலையேமானக்கஞ்சாறர்பெற்ற மக
ள்குழலைமணப்பந்தர் மகிழ்ந்துதந்தார். ௨௪

விருப்பமுடனமர்நீதி நேயரொன்பார் விமலனன்பர்க்
குடலாதிமிகுவாழ்வெல்லா, மருத்தியினலளித்திலரோ
வரிவைமோக ராந்தவர்க்குநரசிங்கமுனையராவார், பெ
ருத்தநிதியிரட்டிகொடுத்தருளடைந்தார் பெருங்கருப்பி
னெற்கவர்ந்தோர்பேச்சுக்கேளா, விரக்கமுடனிடங்கழி
யார்தமதுசெல்வ மெல்லாநம்மாதவத்தோர்க்கென்றன்
றீந்தார். ௨௫

என்றுவசவேசர்முன்னோர்செய்தசெய்தி யியம்பியே
தம்மையெண்ணுதிருந்தாரிப்பாற், றுன்றுகுழற்கங்காம்
பையம்மையுந்தந் தூயவந்தபுரத்தானைத்துதித்தேபுக்கா
ர், நன்றுறுமிந்நாளின்மற்றோர் தூர்த்தவேடர் நங்களன்
னைகங்காம்பைநலத்தகன்ன, மின்றிகழ்காதபரஞ்சியோ
லைகேட்டார் விரும்பிபளித்தாரவரோர் வேசிக்கீந்தார்.

ஆடைவளர்ந்த திருவிளையாடல்
முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௪௮௪.

உ

திருச்சிற்றம்பலம்.

ஆடைவளர்ந்த திருவிளையாடல்

வசனம்.

ஸ்ரீவசவதேவ ரிப்படியிருக்குநாளில், நாள்தோறு மிவரிடத்துப் பொருள்பெற்றுச் சிவிக்கும் விடஜங்கமரது பொருட்பெண்ணொருத்தி தனது மாளிகையினின்று மொருதாதியையழைத்து நமது சங்கமனாக் காணுமையால் வசவதேவரிடத்துச்சென்று நாமனுப்பினேமென்றுசொல்லிச் செலவுகளுக்கு வேண்டும்பொருளைக்கேட்பின் அப்படியே பொருளைத்தருவர் நீ வாங்கிக்கொண்டு வருவாயென்றனுப்ப, அத்தாதியு மவ்வாறுசென்று அவரது பத்னியாராகிய கங்காம்பையார் தரித்திருந்த பீதாம்பரத்தைக்கண்டதிசயித்துத் திரும்பி யுடனே தனது தலைவியினிடத்துவந்து கேட்பாயம்மா வொருவிசேடமிருக்குது, கங்காம்பையார் தரித்திருக்குஞ் சேலையைப்போ லுலகத்தி லெங்குமிராது, திருக்கைலாயத்தி லுமாதேவியார் தரிக்குஞ்சேலை யொருகாலிவ்வாறிருக்குமென் றெண்ணுகிறேன்.

உன்னிடத்தில் வந்துபோகும் ஜங்கமர் வசவதேவரிடத்துச்சென் றச்சேலை வேண்டுமென்றுகேட்டா லுடனேதருவர் நீயும் உடுத்திக்கொள்ளலாமென்று சொல்ல, அப்பொருட்பெண்ணு மவ்வாறே தனக்குரிய விடஜங்கமருக்குச்சொல்ல, அச்சங்கமருமவ்வாறே வசவதேவனைச் சென்றுகேழ்க்க, வசவதேவருந் தமது பத்னியானையழைப்பித்து ஆடையையவிழ்த்துத் தருவாயென்ன, பத்னியாரும் நாணமடைந்து முகந்திரும்பியிருக்க, வச

வதேவர் தாமேசென் றுடையையவிழ்க்க, அதுவு மவிழ்க்குந் தோறுந் தலையாதுவளர, விடஜங்கமரும் இதுவே போதுமான து இனிவேண்டுவ தின்றெனமறுக்க, வசவேசரு மதனையவ்வள விற் சேதித்துத் தந்தநின்றனர். விடஜங்கமருங் களித்துச்செ ன்றனர்.

மற்றொரு விடஜங்கமரும் நாகாம்பையாரணிந்திருந்த ஸ்வ ர்ணரத்னகசிதமான காதணியைக்கேழ்க்க, வசவதேவரு மவ்வா றுகொடுக்க ஜங்கமரும் வாங்கிச்சென்று தமதுவேஸைக் களித் தனர்.

ஆடைவளர்ந்த திருவிளையாடல்வசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

முத்தசங்கையர்புராணம்.

——*○*——

அமலமெய்தரித்தாய்போற்றியருளையாதரித்தாய்போ ற்றி, எமைகிரந்தரித்தாய்போற்றி யேதமதரித்தாய்போ ற்றி,கமையுழிதரித்தாய்போற்றிகருமமுத்தரித்தாய்போ ற்றி, சமணிலுத்தரித்தாய்போற்றி சைவம்வித்தரித்தா ய்போற்றி. க

வேறு.

அறவராந்தண்டநாயகர்க் கணியராந்தோழர்
செறியிலிங்கநன்னிட்டராய்மற்றென்றுந்தேரா
ருறவுவெம்பகைதெரிவைய ரின்பமொன்றுன்னர்
முறைமைசேர்முத்த சங்கையரொன்றொருமுனிவர். ௨

தண்டநாதர்பால்விடர்களாஞ் சங்கமர்சார்ந்தே
யொண்டருந்தமதரிவையர்க் குதவுநன்னிதியுந்
தண்டருந்துகில்குங்குமஞ் சந்தனம்பன்னீர்
கொண்டுகொண்டனுதினஞ்செலுங்குறிப்பினைக்குறியா

இவர்சிவார்ச்சனைபுரிவதற் கிதத்தவைகொண்டு
தவமிராத்தொறுமாதர் பாற்செய்யவேசார்வார்
நவமதாகயாமிவர்களைப்போ லின்றுநன்றுஞ்
சிவனருச்சனையரிவைய ரிடஞ்சென்றுசெய்வாம். ௪

என்றுதண்டநாயகர் தமையழைத்தெதிரிசைப்பார்
வென்றிமாதவர்போலயா மாதர்பான்மேவி
யொன்றுநற்சிவபூசனை புரிவதற்குடனு
நன்றுமங்கையுமதற்குள பொருள்களுநல்கி. ௫

செல்லுமாதவர்தம்முட னம்மையுஞ்சேர்ப்பாய்
வல்லையென்றலுந் தண்டநாயகருளமகிழ்ந்து
நல்லதென்றுறுநண்பினுன் மெல்லெனநகைத்துப்
புல்லிநேயராயிருகரங் குவித்தெதிர்போற்றி. ௬

எனைத்துநெஞ்சினுல்வாக்கினு லிகழ்ந்திடாதிசைந்து
வனைப்பின்மிக்கநூசாரங்கண் மணவகையடைக்காய்
கனைத்தநன்னிதிபுதுமல ரிவையெலாங்கட்டி
யனைத்துநின்றுசெய்பரிசனர் கரங்களிலளித்தே. எ

எழுதுமோவியப்பாவையோ விருஙிநியதனுற்
பழுதிலாதுசெய்மங்கையோ பதுமையோபவளக்
கொழுவிதாகியகொடிகொலோ வென்னலாங்கோல
மொழுகுமேனியாளுருத்திர கணிகைபாலுய்த்தார். அ

இதமுறும்பலவளம் பரிசனத்தர்கொண்டேக
முதிர்மனத்தராமுத்த சங்கையரொனுமுனிவர்
மதனகாலனேமடந்தையர் தந்தையோவென்ன
வதிகருபியாங்கணிகையா ளகத்துறுமளவில். ௬

வசவதேவர்தமிசையெனும் வளரொளிவனப்பி
னசைவிலாமையைப் பருதிகண்டஞ்சிப்பினிடைந்து
விசையில்வீழ்வதுபோலவே விரிகதிர்குறைந்தெண்
டிசையின்மேற்கதாங்கடலிடைவீழ்ந்துகீழ்ச்சென்றான்

அவந்தரும்பரசமயர்மே னந்தியாரங்கண்
சிவந்தபோலவேமேல்கட லிடத்துவிண்சிவந்த
பவங்கொளப்பரவாதர்கள் பலமுகமொடுங்கிக்
குவிந்தபோலவன்பங்கய மலரெலாங்குவிந்த. ௰௧

வேறு.

உததியிற்பிறந்தவெம்மோ டுதித்தமாவசவதேவர்
விதமணையிருக்கப்பெற்றாள் விதுவரன்சென்னியுற்றா
னிதழுறவெம்மைமண்ணோ ரெச்சில்செய்கின்றாரென்று
கதறுதல்போலக்கோயிற் கண்டொறுஞ்சங்கமார்த்த.

இனியநம்வசவதேவ ரியல்கண்டுசமணைப்பற்றி
வனிதைமார்நகுதல்போல மலர்ந்தனவாம்பலெங்கு
மனியராமமணர்முற்று மடங்குதல்போலத்தத்த
நனியுறுசேக்கைதோறு நண்ணினபுட்களெல்லாம். ௰௩

வேறு.

வெய்யபுன்சமண்கள்ளர்தாம் வெருவிடவந்த
செய்யதண்டநாயக ரெனவெழுந்ததுதிங்க
ளையர்நந்திகளருளினா லணைத்துளோர்நுதலி
னுய்யவந்தவெண்ணீறு போலுதித்தனவுடுக்கள். ௰௪

இந்தவாறிராத்திங்கள் வந்திசைதரும்பொழுதி
னந்தமெய்த்தவர்சங் கையரெழுந்தருள்வானாச்
சந்தவோவியமுயிர்பெற்றுச் சரிக்குதல்போல
வந்துருத்திரகணிகையா ளெதிருறவணங்கி. ௰௫

கரங்கொடுத்தகங்கொண்டு போய்க்கழலிணைவிளக்கி
யிரங்குமன்பினாற்றீர்த்த மதருந்திநீடெழிலாற்
றிரங்கொளாதனத்திருத்திமுன் னினியனசெப்பி
வரந்தருந்திருநீறடைக் காய்வைத்துவணங்கி. ௰௬

வளந்தரும்பரிசனத் தனைச்செலுமென்றுமகிழ்வா
லுளங்குளிர்ந்தகம்புகும்பொழு துருத்திரகணிகை
தளங்கொண்மாளிகைபடிக மாமணியினுற்சமைத்தங்
களந்திடற்கரிதா மொளிமண்டபமதனில். ௰எ

கிள்ளைசாரிகைகபோதங் கண்முழங்கவேகளித்த
வுள்ளநைந்திடவீணை யாழ்கின்னரியொலிப்ப
வள்ளிதாகியதமனியக் கட்டின்மேல்வனப்பார்
பள்ளியொள்ளியபஞ்சணை மேன்மலர்பரப்பி. ௰அ

தூங்குதிபங்கள்புடை தொறுமசைவறச்சுடர
வோங்குமென்றிரைவிரித்து மேற்கட்டிகளொளிரப்
பாங்குதாதியர்சவரங் களாஞ்சிகள்பற்றி
யாங்குதெண்பனிர்தெளித்தபூ விசிறிகளசைப்ப. ௰௯

வாசநீர்சின்னக்கெண் டிகைநிறைத்துமுன்வைப்பார்
பூசுசந்தனமாதிசேர் பொற்கிண்ணநிறைப்பா
ராசிலாவடைக்காய்தரு மடைப்பைமுன்பிடிப்பார்
தேசுலாவுபொற்படிகல விந்திகைசேர்ப்பார். ௨௰

ஆகுமெல்லையிற் கனகசோபானமேலைய
ரேகுபோதினிலுருத்திர கணிகையாளிருகை
மோகமேல்கொடுகொடுத்திட முத்தசங்கையர்தாம்
போகநேர்ந்தினரன்றியே யேறிபுட்புகுந்து. ௨௧

பைம்பொன்மாமணிப்பரியங்க சயனத்தைப்பார்த்தே
யெம்பிரானிருந்தரு ளூற்றபீடமீதென்ன
நம்பியன்பினனிமிகப் பயந்ததற்கருகாக்
கம்பளாதனம்போட் டதன்கண்ணிருந்தருளி.　　உஉ

நெடியவேணியைவிட்டு முன்கட்டிநேரிழைநீ
சடைகள்கட்டிலேயென்னிது சாற்றெனயாங்க
ளடையுமம்பிகையெங்களுக் கனுதியிலளித்த
கடிகொண்மெல்லியசடையிது வெனமயிர்காட்ட.　உ௩

பொறையுறுந்தமதுருவெலாம் பூதியைப்பூசி
நிறையவிந்தநீறென்முனே நீதரிக்கில்லாய்
யறைதியென்றலுமம்பிகை யெனக்குமுன்னளித்த
முறையினீறிதுவென்றுமெய் மஞ்சளைமொழிந்தாள்.

கண்டிதம்முடற்றரித்துநீ காரிகையிவைமேற்
கொண்டிடாததென்கூறென வுவர்க்கடற்கனாயின்
மண்டுமிம்மணிமாலையன் றரியபாற்கடற்றீ　　[ள்.
வுண்டிவ்வெள்ளைநற்கண்டிகை யெனமுத்தையுரைத்தா

முத்தசங்கையர்முத்த மூக்குத்தியைநோக்கிச்
சுத்தருத்திராக்கத்தைநற் சிரத்தினிற்றூய்தாய்
வைத்திடாதிந்தமூக்கினில் வைத்ததேனென்ன
வத்தநாரணுதீதனே வல்லெனவறைந்தாள்.　　உசு

சற்குணத்திரீகச் சட்டமொன்றையேதரியா
தெற்கொண்மெய்யெலாங் கலையினுன்மூடலேனென்ன
துற்பவித்திரட்டுணைவிழிக் கென்னுடறேன்று [த்
நற்கிரமத்தினுற்போர்த்தன னெனமனநயந்து. ௨௭

அரிவையாளிவளனுதிலாஞ் சனமுடையாளென்
றிருகைகூப்பிநின்றிந்நல் வேடத்திற்கெவர்தாம்
பெரியதேசிகர்கியமமே தாசாரபேதத்
துரிமையேதுநின்குருபரம் பரையெதுவுரைப்பாய். ௨௮

தவங்களெவ்வழிசெய்வை நீயாருடன்சங்க
மூவந்துபண்ணுதியுண்பதே துரையெனநகையா
சிவந்தவாயினள்செப்புவாள் வாமதேவாசா
ளவங்கொண்முன்னுபதேசத்தால் வெள்ளிமாநகமேல்.

அகிலநாயகியருந்தவஞ் செய்தவன்றன்னை
மிகமகிழ்ந்திடப்பண்ணித்தன் மேனியோர்பாலுந்
தகுமவ்வேடமுந்தந்திடப் பெற்றவத்தையல்
சகமளித்தருடேசிகை யாமவள்சமயம். ௩௰

தரணிமோகனலாஞ் சனதாரியர்யாங்க
ளருமறைப்புரைபுராணங்க ளிறையவன்றான்பால்
வரமுறும்படிகேட்டவ ளனைத்தையும்வகுப்பாள்
பரமகாரணிசந்ததிப் பாவையர்யாங்கள். ௩௧

அட்டமொன்றதாய்க் காய்ந்தபால்சருக்களையன்பா
லிட்டலிங்கத்துக்கீந் தியாமருந்துவமினிதாய்த்
தட்டிலாமலொண்கந்தமூ லாதிகடவத்தோர்
நட்டபத்தர்கடந்திடிற் கொள்ளுதுநயந்து. ௩௨

தனுமனந்தனம்வஞ் சனையின்றியேதவரு
தனுதினந்தருஞ்சங்கமர் தம்மையாமனைவோந்
தினமுமியாஞ்செயுஞ் செயலெலாஞ்சிவலிங்கபூசை
புனிதமுத்தியும்பத்தியு மெமக்கவர்புகலின். ௩௩

மூவிதத்தவாம்பொறிகளால் யாங்கள்செய்முறையீ
தாவிபோலுமெம்மாரி யர்மார்க்கமாலிட்டை
மேவுவேடங்கள்விரத நற்சரித்திரமிவையெந்
தாவில்சந்ததிமடந்தையர் சிவாலயஞ்சார்வார். ௩௪

ஐயவென்றுமின்னிசைத்தலு முத்தசங்கையர்தா
மெய்யிதென்னவேயவளை நற்றவரெனவிரும்பிச்
செய்யுமுன்வளம்பார்க்கெனத் தெளிசிவார்ச்சனைக்குத்
துய்யமஞ்சனமலர்தரு வாயெனத்தோகை. ௩௫

இவர்க்கிதத்தனசெய்வதே கருமமென்றெண்ணி
யவர்க்குமஞ்சனமலர் கந்தமாதியாமனைத்து
மூவப்பினல்கியே யூழியந்தவறறவுதவத்
தவத்தராமுத்தசங் கையர்சிவார்ச்சனைத்தருக்கால். ௩௬

போதவர்ச்சனைசெய்வதைக் கணிகையாள்புரியா
வாதரத்தினிற்றன்பரி சனத்தனையழைக்கக்
கோதின்மாமயிற்றிரள்களோ வன்னத்தின்குழுவோ
வோதுசித்திரப்பாவையோ வெனப்பலருறலும். ௩௭

ஒத்துமத்தளந்தாளங்க ளொத்துமின்காளஞ்
சுத்தமாகவேயூதுமின் றோத்திரந்துதிமின்
சத்தநல்லிசைபாடுமி னடுமின்றவருச்
சித்தமெய்த்தவர் பூசனைக்கேவனுன்செய்வேன். ௩௮

என்றுதூபதிபார்த்தி நன்னிவேதனமெல்லா
நின்றுருத்திரகணிகையா ணேயத்தினளிப்ப
வென்றுமெய்த்தவர்சிவார்ச் சனைவிருப்பமேமிகவு
மொன்றுநெஞ்சராயிரவெலாமெழாதிருந்துவந்தார் ௩௯

அரியமாதவர்முத்தசங் கையர்தந்துறவைப்
பரிவுபொங்கியேதோத்திரம் பண்ணுவார்போல
விரியிராவிடைக்குக்குடம் புள்ளினமெல்லாம்
பெரிதுகூவினசிலம்பின பிரிந்ததுகங்குல். ௪0

பழுதகன்றிலாப் பரசமயாந்தகாரங்கண்
முழுதகன்றிடச்சைவமா முளரிகண்மலரத்
தொழுபதாம்புயத் தண்டநாயகக்கதிர்தோன்றிற்
றெழுமினென்பபோ லாலயந்தொறுஞ்சங்கமியம்ப. ௪௧

ஐயமுத்தசங்கையர்தன் மாயையிடைங்கா
துய்யுமாற்றினையுணர்ந்தஞ் சிபுருத்திரகணிகை
பையவேஙகையொழிந்தவப் பான்மைபோற்கும்முதச்
செய்யமென்மலர்த்திரளெலாஞ் செவ்விபோய்க்குவிந்த

முற்றுமெய்த்தவர்முத்தசங் கையரொனுமுனிவர்
வெற்றிவேல்விழியாருட னிருப்பினும்விருப்பஞ்
சற்றுமில்லராந்தன்மைக்குச் சான்றியானென்றே
யுற்றநேயத்தினிற்றல்போற் பகலவனுதித்தான். ௬௩

தண்டநாயகர் தவநெறிப்பத்தியுந்தயாவு
மண்டர்கோனிடத்தவர்பெற்ற வருளுமுற்றறிந்து
கண்டபேருளங்களிப்புற முகமலர்ந்ததுபோல்
வண்டகன்றிலாப்பங்கய மலரொலாமலர்ந்த. ௬௪

காலையெய்தியகாலையின் முத்தசங்கையர்தாஞ்
சீலநந்திகண்முன்னணைந் தினிதுறைசெய்வா
ரோலவென்னுடனிராத் திரிவந்தறிந்திலையே
நீலகண்டனேவல்லன மடந்தையினெறியை. ௬௫

என்னைசொல்லுவ னிரவெலாந்துஞ்சுதலின்றி
யுன்னையுன்னினன் சிவார்ச்சனைக்காலையினுவந்து
முன்னைநல்வினையுள்ளவ ரந்தமென்மொழியா
ணன்னயஞ்செறிசிவார்ச்சனை மனைபினையணைவார். ௬௬

கண்டனன்பலதவத்தனை யிப்படிகாணேன்
வெண்டருங்கண்டிமென் சடைபொன்னனவிபூதி
மண்டுறுஞ்சகலாங்கதெளபி னமம்மடந்தை
கொண்டவேடங்க ளவள்பரிசனருமக்குறியால். ௪௭

இனையவாமுத்தசங்கைய ரிசைத்திட விருந்தோ
ரனைவருஞ்சிரித்தார்த்தனர் நந்திகளன்பான்
முனையினண்பிறன்முறுவல்செய் தானையேமுன்னிப்
பினையறிந்திலார் பெருமையைப்பேசரிதென்றார். ௪௮

முத்தசங்கையர் புராணம்
முற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - ௫௩௨.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

முத்தசங்கையர் புராண
வசனம்.

ஸ்ரீவசவதேவரிடத்துத் தோழமையுள்ளவர், லிங்கநிஷ்டாபரர், முத்தசங்கையரென்பவர் உலகவிகார மொன்றுமறியாதவர், அநேக விடஜங்கமர் வசவதேவரிடத்துவந்து வேண்டும் பொருளுடனே வஸ்திராபரணங்களையும் வாசனைத்திரவியங்களையும் வாங்கிச் செல்லுதலைக்கண்டு இவர்கள் சிவார்ச்சனைக்குரிய பொருள்களைப் பெற்றுக்கொண்டு மாதரிடத்துச்சென்று அத்ரவங்களை பிரவித்புரிவார்போலும் யாமுமிவ்வாறு புரிதல்

வேண்டுமென்றுகருதி வசவதேவரிடத்துச்சென்று இச்சங்கம ர்போல் யாமும் மாதரிடத்துச்சென்று தவம்புரிய விச்சித்தே ம், அதற்குவேண்டு முபகரணங்கண் முற்றுந் தருவீரென்று ரைக்க, அவருமவ்வாறே வேண்டும் பொருண்முதலிய சாதன ங்களைப் பரிசனங்களிடத்துக்கொடுத்து ஒருகணிகைவீட் டிச்ச ங்கமரை யடைவிப்பீரென் றுஞ்ஞாபிக்க, அவருமவ்வாறே அ ழைத்துக்கொண்டுபோய் விட்டனர். அவ்வேசியரும் எதிர்செ ன்றழைத்துச்சென்று பாதங்களைவிளக்கி யத்தீர்த்தயருந்தி அ டைக்காய்த் திருநீறுவைத்து வணங்கியுபசரித்துத் தமது பஞ்ச ணையிற்சேர்க்க, அதுகண்ட முத்தசங்கையர் இந்ததிவ்யபுஷ்பா லங்காரசயனம் எமது சிவபெருமானுக் கருச்சிக்கும் பீடஸ்தா னமென்று நினைத்து இதனைநெருங்க யாமருகரல்லோமென்று பக்கத்தோர் கம்பளமிட்டு அதிலிருந்தனர். அக்கணிகை மதன லீலைக் கெவ்விதத்துள்ளாக்கவு மக்குறிப்பொன்றுமறியாது இவ் வேசையனாயுந் தவமுடையாராகநினைத்து நீவிர் சடைதரியாம ல் உருத்திராக்ஷமணியாமல் திருநீறுதரிக்காமல் கச்சட்டமுடுக் காமல் உடல்முழுதும் ஆடைகொண்டு மறைத்தகாரணம் யா தென்ன, வேசை யிவர் மோக்ஷகாமியென்றறிந்து யாம் கௌரி மதஞ்சார்ந்தவராதலால் அதற்கேற்ப விக்கோலங்கொண்டனம். எமதுதேகத்தைத் தம்மைப்போல்வாராய ஜங்கமர் காணலாம ன்றி பவிகளானூர் காண்டல்கூடாதாதலால் இவ்வா றுடையான் மறைத்தனமென்ன, முத்தசங்கையரு மிவர் அநாதியான சத்தி ச்சின்னமுடையவரொன்று நம்பி மிகவு மவரிடத்தன்புவைத்து அவர்க்குத்தா மளவற்ற வுபசாரங்களைச்செய்து அக்கணிகையு மவள தேவற்பெண்களு முடனிருந் தேவல்செய்ய இரவுமுழு துஞ் சிவபூஜைசெய்து விடியற்காலத்தெழுந்து வசவதேவனாக்

கண்டு நேத்திராத்திரிபூஜையில் நீரு முடனில்லாததொன்றே குறையாகமுடிந்தது.

அம்மங்கையர்போற் றவமுடையாளை யிதுபரியந்தம் நாமெவ்விடத்துங் கண்டறியோம் என்று சொல்லவே அங்கிருந்தவர் யாவருஞ்சிரித்தனர். இவர்பத்திக்கிரங்கி வணங்கி யதிசயித்துத் தாமும் மனமகிழ்ந்து புன்முறுவல்கொண்டிருந்து சிவத்தியானமொன்றல்லது வேறறியாது பெருமை வாக்கு மனங்கட் கருமையுள்ளதென் றிருந்தனர்.

முத்தசங்கையர் புராணவசனம்
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

பசுபதிநாயனார் புராணம்.

இன்னவாறுநந்திகேச ரினிதுரைக்குமெல்லையின்
மன்னுசென்னவசவதேவர் மாமனாைநாடியே
நன்னெடுங்கரங்குவித்து நம்பனன்பின்மிக்கராய்
முன்னருந்தவத்தோழமுறைமையானதென்னென. க

சோதிசோதிதுற்றகண்ணர் துய்யதாரகைக்குழா
மேதுமுற்றுணர்ந்திடா திருந்தல்போலவெம்பிரான்
மீதிலன்புளோர்களெஞ்சின் மிக்கலோகவிதிகளா
கிதிபொன்றுமின்னதென்று நிச்சயித்தறிந்திடார். உ

பித்தர்பாலரோப்பர்ஞானர் பேசிலென்றுசெப்பவே
முத்தரித்தவத்தர்போல முன்னுமுள்ளரோவென
வித்தவத்தர்போலனந்த ரொன்னவெங்கணந்தியா
ரொத்தசென்னவசவராசையர்க்குரைத்ததோதுவாம். ௫

அரனிடத்திலளவினேய ரஞ்செழுத்தினெஞ்சினர்
தரைவிளங்கவந்தவெய் யனூரொனுந்தலத்தினர்
விரகிலாதமெய்த்தவத் தர்வீரசைவவிதியினு
ரூரமூலாவுளத்தர்பாசு பதிகளென்றொருத்தனர். ௬

ஓரிடத்துவீரசைவ வுத்தமத்தர்கூடியே
பாரசித்தனதிகநூல் படித்திருக்குமெல்லையின்
வாரியைக்கடைந்தபோது வந்தெழுந்துவந்தமா
கோரமுற்றகார்விடம் பரந்தறக்கொதிக்குநாள். ௫

அஞ்சிவானரசுரர்கூடி யபயமபயமபயமென்
றெஞ்சியோடுமெல்லையி னெழுந்தவெய்யவிடமெலா
நஞ்சிதென்றெணுமலத்த னுண்டசொன்னவிற்றலு
நெஞ்சுபாசுபதிகளா ரழிந்தருண்டநினைவராய். ௬

என்னவென்னசொல்லுமால மெம்பிரானயின்றதெ, னன்னசெய்தி மெய்கொலுள்ள தறையுமென்னவவர்க ளு, மன்னவுள்ளதென்னவே மயங்கிமண்ணின்மேல்வி ழுந், தொன்னலார்கொல் விண்ணரொன் றுலைந்துநைந் துருத்தெழா. ௭

விடமருந்துகென்றொருத்தர் வேண்டிலொன்றி யுண்ப
ரோ, மடமணைந்துளோருமால மனமிசைந்துகொள்வ
ரோ, திடமிருந்தகாளமுண்டுசெத்தபேரொணைந்துளோ,
ரடுமிதைத்திருப்புமந் திரங்கள்வல்லரார்கொலோ. அ

புக்கவாலமந்தவேலை யிற்புறப்படுத்தமெய்
யொக்கலாகவருகிருந்து ளோர்களில்லையானதே
திக்கெனக்குநியலாது தேவரில்லையென்செய்கே
னிக்கணத்தினஞ்சுமிழ்ந்தெனக்கிதஞ்செயெம்பிரான்.௬

ஆலமுண்டபோதுதேவி யருகிருந்ததில்லையோ
சாலவேணியுற்றகங்கை தானுமொத்திருப்பதே
ஞாலவோலந்திகேச ருற்றசுற்றமல்லவோ
வேலனானறிந்துண் டெனிற்றவிர்ப்பனென்செய்கேன்

இந்தநாலையிந்தமாத வத்தர்தாமிசைப்பதேன்
றந்திமாமுகத்தர்வேலர் தந்தையன்பிலார்கொலோ
பந்தரானவீரபத்தி ராதிபல்கணங்கணீர்
வந்துகையிலும்பறித் தெறிந்திலீர்மறந்திரோ. ௰௧

இவ்விடந்தலைக்கொள்கின்ற வேலையிற்புகுந்துநீ
ரவ்விடத்துநன்மைசெய்த லன்பதன்றதற்குமுன்
வவ்வியையர்தாளிலே வணங்கியோர்மருந்தரித்
தெவ்விதத்தெனுந்திருப்பு மென்சொலுக்கிரங்கியே.

தீயதத்திதொன்றையுந் திருப்பிலத்தனெம்பிரா
னாயுமற்றனந்தநா ளிருப்பனாருமில்லையே
நாயகன்விடத்தையுண்ண நானிருக்கிலேனெனப்
போயிருங்கடற்குதிப்ப னென்றுபோதுபோதிலே. ௰௩

தேவதேவன்விடையின்மீது தேவிபங்கனெய்தியே
பூவின்மாரிவிண்ணுளோர் பொழிந்துகைகுவிக்கவே
யாவன்மீதுசிவகணத்த ரரவெனுஞ்சொலொலியுட
னாவதொன்றுனக்கிதத்த கேளளித்துமென்னலும். ௰௪

பாசுபதிகளீசர்தாள் பணிந்துநின்றுபகருவார்
தேசவிறைவநீயயின்ற தீயவாலமொத்தியே
நாசமணையிலென்னசெய்வ னஞ்சையிங்குமிழ்ந்திடி
னாசிலாவரமெனக்களித்ததொக்குமென்றலும். ௰௫

முத்தனெம்பிரான்மகிழ்ந்து முறுவல்செய்துநாடியே
பத்தவிந்தவாலநா முமிழ்ந்திடிற்பரந்துமண்
மெத்தவெந்துவானிறந்து விடுமிதெம்மிடத்துமே
லொத்திருந்துபோவதன்றி யொன்றுமின்றெமக்கென.

கண்டமுற்றகடுவிழிந்து கடுகிலென்னசெய்குவே
னண்டநாதநம்பகில்ல னாவியங்கழிப்பனென்
றெண்டியங்குமன்பர்சொல்ல வெம்பிரானிரங்கியா
முண்டநஞ்சிழிந்திடாது நங்களத்தினாழியலால். ௰௭

நம்பலாதபோதுநம்ம டித்தலத்துநண்ணியே
யெம்பெருங்களத்தினஞ் சிழிந்திடாதுபார்த்திரென்
றும்பர்கோன்வலத்துடைக்கனுற்றநண்பில்வைத்தன
னம்பரத்தர்மாரிபோ லலர்க்கைகொண்டுவீசினர். ௰அ

கங்கைவேணிகொண்டநஞ்சு கண்டம்விட் டிழிந்திடா
தங்கரன்மடித்தலத் தமர்ந்துநாடுமன்பரா
மெங்கள்பாசுபதிகளாரி லங்குமேன்மைதன்னையார்
சங்கைசெய்துரைக்கவல்லர் தம்பிரானையன்றியே. ௰௯

பசுபதிநாயனார் புராணம்
முற்றிற்று.
ஆகதிருவிருத்தம் - ௫௫௧.

உ
திருச்சிற்றம்பலம்.

பசுபதிநாயனார்புராண
வசனம்.

ஒருதினம் ப்ரஸாதமே திருமேனியாயுள்ள சென்னவசவ தேவர் தமதுமாமன் ஸ்ரீவசவதேவரைநோக்கி தவமுடையாரெல்லா மேனழியராயினகாரண மென்னையென்றுகேட்க, உலகத்தில் சூர்யோதயங்கண்டவர் கண்களுக்கு நக்ஷத்திரவொளி தோற்றாது. அதுபோல சிவதர்சனம்பண்ணுந் தவமுள்ளார் உலகத்துப்பொருளை யெப்போதும்விரும்பார். பித்தர்போலவும் பாலர்

கள்போலவும் ஞானிகளிருப்பரென்று சொல்ல, இவர்போலும் ஞானிகள் முற்காலத்துமுளரோவென்று சென்னவசவதேவர் வினவ, இவர்போ லனந்தஞானிகள் உண்டு அவரிலொருவர் பசுபதிநாயனரென்பவர், வெய்யலூரென்னூர் திருத்தலத்தையுடையவர், வீரசைவாசாரமுள்ளவர்; இவர் வீரசைவ உத்தமர்கள்கூடி சிவாகமமுதலிய நூல்களைப் படிக்குங்காலத்தில் திருப்பாற்கடலில் கோரமான வாலகாலவிஷமுண்டாய் எங்கும்பரவிக் கொடுமையைச்செய்ய அக்காலத்துத் தேவாசுரர் முதலாயினோர் நடுங்கிச் சிவபெருமானிடத்து அபயம் அபயமென்று அடையுமிடத்து கிருபாமூர்த்தியாகிய சிவபெருமான் அக்கொடியவிஷத்தை லோகரக்ஷணார்த்தமாகத் தாமுண்டனர் என்றுசொல்ல, அதைக்கேட்டு மருண்டசிந்தையுள்ளவராய் என்சொன்னீர் என்சொன்னீர் எமது சிவபெருமான் விடமுண்டாரென்பது உண்மையோ சொல்லுங்களென்றுசொல்ல, அஃதுள்ளதேயென றவர்கள்சொல்ல, அப்போது பசுபதியார் மண்மேல் மயங்கிவிழுந்து பின்னருமெழுந்து கோபாவேசமுள்ளவராய் இத் தேவர்யாவருஞ் சத்துருக்களோ ஒருவர் விஷத்தையருந்தச்சொல்லினால் அறிவில்லாதவருஞ் சமாதானிக்கார், கொடியவிஷத்தையுண் டிறந்தவ ரெவ்வளவுபே ரிவ்வுலகத்துண்டு, இதைத்திருப்பு மந்திரவாதிக ளெவரிருக்கின்றார், விஷம்பிறந்தகாலத்துச் சுற்றமாயுள்ளவ ரொருவருமில்லாராயினர். ஸ்வாமி சிவபெருமானே உம்மையன்றி யெமக்கும் வேறுதிக்கில்லை, ஆதலா லிந்தக்ஷணமே நீருண்டவிஷத்தை யுமிழ்ந்தருளவேண்டும், அவ்விஷமுண்டபோது உமாதேவியார் அருகிலிருந்ததில்லையோ, கங்காதேவியாரும் ஒத்திருந்ததுண்டோ, நந்திகேசுரருமக்குச் சுற்றத்தாரன்றோ, நானறிந்தேனாயி னுடனேதவிர்ப்பேன், இந்தநூலை யித்த

வமுடையார் படித்தன்றோ இக்கெடுதி கேட்கலாயிற்று. விநாய ளர் கந்தரிருவரும் தமதுதந்தையாரிடத் தன்பில்லாதவரோ, வீ ரபத்திராதிகணங்களே நீங்களாவது அவ்விஷத்தைவாங்கி யெ றியாதிருந்தீர், இவ்விஷந் தலைக்கேறுமுன்னேதானே எவ்வித த்தாலாவது திரும்பும்விதத்தை என்னிடத் திரக்கத்தாலாவது செய்யுங்கள், இப்போதுநேரிட்ட தத்துநீங்கினுல் எமதுசிவபெ ருமா னின்னும் வெகுகாலம் ஆயுளோடிருப்பர் என்று பலவாறு கூறி இவ்வாபத்தைதீர்க்குவா ரொருவருமில்லாமையால் நானினி யுயிரோடிரேன் சமுத்திரத்தில்விழுந் திறப்பேனென் றெழுந்து செல்ல, அப்போது தேவதேவராகிய சிவபெருமான் விருஷபா ருடராகத் தேவர்கள் புஷ்பமாரிபொழிய சிவகணங்களெல்லாம் ஹரஹரவென்று ஸ்தோத்திரங்கள்பண்ண எழுந்தருளி ஓ பசுப தியே யுனக்காகவேண்டுவ தெதுவானுலு மதனைக்கேளென்று சொல்ல, அப்போது பசுபதியார் சிவபெருமானது திருவடிகளி ல்வணங்கி ஸ்வாமி தமது கிருபாநோக்கத்தால் யாதொருசஞ்ச லமுமெனக்கில்லை, தமது கண்டத்துவிளங்கும் விஷத்தால்வரு க்கெடுதிக்கே வருந்துகிறேன் அதை யுமிழ்ந்தீராயின் அப்போ தே என்சஞ்சலமொழிந்தது என்றுசொல்ல, அப்போது பரம சிவமும் மனமகிழ்ந்து பக்தனே, நீசொல்வதுசரியே இதையுமி ழ்ந்தா லப்போதே யுலகத்தை நாசம்பண்ணும், ஆகாயமு முடி வையடையும், இந்தவிஷ மெம்மிடத்தொத்திருப்பதன்றிக் கொ டுமைசெய்யாது, ஆதலால் நானிறக்கமாட்டேன் நீயும் பயப்ப டவேண்டிய காரணமில்லையென்றுசொல்ல, ஸ்வாமி கண்டத்தி லிருக்கும்விஷம் உள்ளேசெல்லமாட்டாதென்று என்னநிச்சய ம், அப்படியிறங்கினுல் நானுமுடனே யிறந்துவிடுவேன் என்று பசுபதியார்சொல்ல, அவ்வாறு உனக்கு நம்பிக்கையில்லாதிருக்க்

மானல் எமது மடியிலிருந்து எப்போதும் பார்த்திருப்பாயென்று கடாக்ஷித்தனர். பசுபதிநாயனாரும் விஷமிறங்காதபடி மடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். இப்படிக்கொத்த அன்புள்ள பசுபதிநாயனாரது பெருமையைச் சொல்லவேண்டுமானால் பரமசிவமே சொல்லவேண்டும் என்று சொல்லியருளினார்.

பசுபதிநாயனார் புராணவசன
முற்றிற்று.

உ
திருச்சிற்றம்பலம்.

கோட்கூச்சவ்வை புராணம்.

தாரணிபுகழுங்கோளூ ரென்னுமத்தலத்தில்வாழுஞ்
சீரணிசைவவேந்தர் சிவதேவசரணனென்னும்
பேரினரவர்பயந்த பேதையர்கோட்கூச்சவ்வை
யேரிளம்பருவமின்னா ரிவர்செயலியம்பலுற்றாம். க

செந்நெறியினராமந்தச் சிவதேவ சரணனென்பார், நன்னெறியாயதம்மூர் நம்பர்போகேசர்க்கான்பாற், றன்னருநேயத்தாலே துகளறத்தினநிவேதித், தென்னையாளுடையாய்காப்பா யென்றுநின்றிறைஞ்சியேத்தி. உ

ஒழுகுமந்நாளிலோர்நாளும்பர்கோன்கருமமாகச், செழுவிதோர்நகர்க்குச்செல்வார் சிறியதம்மகளைநோக்கி,வழு

விலெந்தம்பிராற்கிவ்வள்ளத்திலிந்தப்பாலைப், பழுதிலா
தமுதுசெய்யப் பண்ணுவாய்தினமும்பாவாய். ௩

அன்னையேயுனக்குநற்சிற் றுடையுமங்கைச்சங்கும்
கன்னமாரோலையும்பொற் கடகமுங்கனகப்பொட்டும்
மின்னுமம்பாவையுநின் விரற்குமோதிரமுங்கொண்டிங்
குன்னைவந்தனைவோனாளையுண்மைநீயொன்றுமஞ்சேல்.

பாலைநம்பிராற்குக்காய்ச்சிப் பரிவினன்னிவேதஞ்செய்வாய், காலமொன்றிடவேயென்றுசென்றனர்கன்னியார்தா, மேலவப்படியோர்வள்ளத் தினிதுறப்பெய்துகைக்கொண், டாலமுண்டருள்வார்கோயிலணைந்தவர்முன்வைத்தன்பால். ௫

குடித்திபாலையவென்று கூறிமுன்குலவுநண்பால்
அடிக்கடிபுபசரிப்பா ராகவுமருந்தாராகி
டிடித்திருப்பதனைக்கண்டு நேசநன்னெஞ்சினாலே
யெடுந்திருக்கையிலேந்தி யேனையாவிப்பால்வேண்டாய்.

செல்லப்பால்காய்ந்ததின்றோ செழுமணமின்றோவாறிற், றில்லையோபசிதானின்றோ திரிந்ததோகண்டாலொன்றோ, வல்லதானற்பமென்றோ வறிவிலேன்றந்தேனென்றோ, சொல்லுற்றேடில்லையென்றோ தூவட்டில்விளக்கேனென்றோ. எ

தண்ணெனவாறிற்றென்றோ தண்ணீர்கூடியபாலெ
ன்றோ, வண்ணியர்க்களித்தேனென்றோ வரவுநான்று
ழ்த்தேனென்றோ, வொண்ணெய்கூடியதில்லென்றோ
வோடிமுன்கொணர்ந்தேனென்றோ,வெண்ணியித்தனை
யும்வேண்டா வென்பதோபருகாதென்னி. அ

பாலுடன்சற்றுச்சோறு பழங்கலந்தில்லேனென்றோ
சாலவேயினியதேனற் சர்க்கரைபண்ணியாரங்
கோலவெம்மனையிலுண்டுகொணரவோகோவினெய்தா
ன்,மேலுறுகுடத்தினுண்டுதருகவோவிருப்பேதன்றி.கூ

என்னையன்குருக்களுளை யெழின்மயேசுரநற்பூசை
நன்னெய்பாலுடனளிப்ப னுனையழைத்துப்போவன்
பின்னையேனன்னையப்பன் பெரிதவறேங்காய்தந்தார்
முன்னுனக்கிடுவெனிப்பான்முந்திநீயயின்றுன்மறறும்.ய

நாளையென்றந்தைதாயார் நற்பொன்மோதிரஞ்சிலம்பு
தோளுறுங்கானன்முத்தின் றூழ்வடந்துலங்கும்பாவை
நீளொளிசிற்றிற்றெட்டிற் றருவரின்னினாகளெல்லாங்
கேளுனக்களிப்பனிப்பால் கெடாமுனமருந்துகென்று.

இன்னநான்றந்தபாலை யின்றுநீகுடியாயேலென்
றந்தைதாய்கேட்கிலென்னைச் சாம்படியடிப்பரந்தோ
வந்தவரறியாமுன்ன மருந்துவாயெனவணங்கி
நொந்தமும்வட்டிற்பாலை நோக்குநிந்தனையுநோக்கும்.

திரும்பவுமிறைஞ்சியேங்குந் தேம்புகின்றழுந்திகைக்குங்
கரங்களைநெரித்திரங்குங் காளிலங்கோட்டுங்கண்ணீ
ரரும்பினைத்துடைக்குமிவ்வா றுருகுமிப்பேதையன்பை
விரும்பியங்கிருந்தபாலை விளைந்தானமுதுசெய்தான்.

இம்முறைகன்னியார்பா லிறைவற்குநிவேதஞ்செய்து
தம்மனமகிழுநாளிற் றாயருந்தந்தையாருஞ்
செம்மையாங்கருமமுற்றிச் சென்றவூர்நின்றுமீள்வா
ரம்மையோர்பாகர்கோயி லருகுறவணையுமங்கண். ௰சு

கோதிலாக்கோட்கூச்சவ்வை கொடியிடைபாகர்க்கா
ன்பா, லாதரவுடனிவேதித் தங்கையின்வெறுங்கிண்ண
ங்கொண், டேதியங்கொளச்செல்வாளை யுன்னிநற்றந்தை
யார்கண், டிதென்னதம்பிரான்பா லென்செய்தாய் பா
வியென்று. ௰ரு

எங்குநீசென்றுய்வட்டிற் கினியபாலேதுமின்றி
யங்கையிற்றருவதேதங் கார்க்குணவளித்தாயந்தோ
மங்குறக்கவிழ்த்திட்டாயோ மருவித்தானருந்தியப்பாற்
பங்கமாக்கினையோவென்றே பாவிநீபகர்வாயென்ன.

இல்லைநீசொன்னவாறே யிந்தவள்ளம்விளக்கி, நல்ல
பானிறைத்துச்சென்று நம்பன்முன் வைத்திறைஞ்சிச்,
சொல்லினன்குடிப்பாயென்று தொழுதுநின்றழுதேனு

ண்டான், வல்லிநீசெல்கென்றென்கை வட்டிலைத்தந்தா
ன்வந்தேன். ் ௰எ

என்றுகன்னிகையார்சொல்லச் சிவதேவனொழுந்துவெம்
நின்றுசாதித்தல்பாரீர் நீலிபோலென்னவையா [பி
மன்றுளார்பாலருந்தன் மாயமீதறிவோமென்று
பின்றைநாட்டம்மடத்து எழுதையவ்வட்டிற்பெய்து.

அரிவையார்கோட்கூச்சவ்வையார்கையிற்கொடுத்துவா
வென்,றெரியுறுகரத்தார்முன்சென்றிருத்தியிங்கமுதுசெ
ய்வி, யுரியநின்பத்திகாண்பனென்றலுமுவந்துமுன்போ
ற், பரிவினுற்பாலைவைத்துப்பாவையாருபசரிப்பார். ௰கூ

பெண்ணிளம்பேதையார்தம் பெரியநற்பத்திநேயந்,
திண்ணிமையுலகர்காணத் தெரிவிப்பான் செங்கணேற்
முர், தண்ணிறை பாலருந்தாத் தன்மைய ராயிருந்தார்,
கண்ணிணைப்பிசைந்துபோதக் கலுழ்ந்துகன்னிகையார்
சொல்வார். உ௰

இன்றுநீபாலருந்தேனென்பதென்னெனவருந்தி,யொ
ன்றியநென்னலிற்பா லுனக்கையசெரித்ததின்றே, வன்
றியிங் கென்னைக்கொல்ல வகத்தினிற் குறித்தாய்கொல்
லோ, வென்றலுஞ் சிவதேவைய னொரியென வெகுண்
டெழுந்து. உக

தேவியோர்பாகன்பாலேச் சிந்தித்துத்தீண்டார்ன்பாரான்
பாவிநீயெம்பிரான்றன் பருகினனெனப்பகர்ந்தா
யாவிநீயிழந்தாய்சென்னி யரிவனென்றடார்ந்துசெல்லக்
காவியோர்விழியாளஞ்சிக் கதறியேயபயமென்று. உஉ

ஐயநின்னபயநாளென் றத்தர்பாலலறியோடுஞ்
செய்யமான்சிகழிபற்றிச் சிவதேவரீர்க்கும்போது
தையலாடந்தபாலேத் தம்பிரானமுதுசெய்தா
ருய்யநீமதுமார்வத் துறுமினென்றுவந்துவைத்தார்.

இச்செயல்கண்டருண்டு சிவதேவரிளகுநெஞ்சா, னிச்ச
யாச்சரியமெய்தி நின்றனர் நிமலர்மார்பின், கொச்சை
மான்சிகழிதோன்றுங் குறியினுற்குவலயத்தோர், நச்சி
யேகொப்பிலிங்கமெனவின்றுநவிலாநிற்பார். உ௪

கோட்கூச்சவ்வை புராணம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௱எ௫.

உ

திருச்சிற்றம்பலம்.

கோட்கூச்சவ்வை புராண வசனம்.

திருக்கோளூரென்னுந் திவ்யஸ்தலத்திலிருந்த சிவதேவசாணரென்பவரது திருமகளார் கோட்கூச்சவ்வையென்னும் நாமதேயமுள்ளவர்.

இவர்தந்தையார் நியமமாகத் தினமும் அவ்வூரிற் போகேசரென்றுசொல்லுஞ் சிவபெருமானுக்குப் பசுவின்பால்கொண்டு நிவேதித்துவருவார். சிவகைங்கரியநிமித்தம் ஒரூர்க்குச்செல்லக் கருதி தமதுமகளார் பேதைப்பருவமுள்ள கோட்கூச்சவ்வையாரைநோக்கி தினமும் நைவேத்தியஞ் செய்வதுபோல பசுவிலுண்டாகும் பாலமுதைச் சிவபெருமானுக்குத் தவறாமல் நிவேதித்துவருவாய் நினதுதாயும் யானும் அருகிலிருக்குமூர்க்குச்சென்று வரும்போது உனக்குச் சிற்றாடை வளையல் காதுக்குப்பொன்னோலை கடகம் நெற்றிப்பொட்டு விளையாட மரப்பாவைகள் கைக்குமோதிரம் இவைவாங்கிக்கொண்டு வருவோம் பயப்படாதிருப்பாயென்று சொல்லிப் போயினர்.

கோட்கூச்சவையாரு மப்படியே நியமந்தவறாமல் பாலைக் கறப்பித்துக் காய்ச்சி ஒருபாத்திரத்தி லெடுத்துச்சென்று சிவபெருமானது திருமுன்பாகக் கொண்டுவைத்து ஸ்வாமி போகேசரே இப்பாலை நீருண்ணக்கடவீரென் றன்போடநேக வுபசாரங்களைச்சொல்லி நெடுநாழிகையாயுஞ் சிவபெருமா னஃதருந்தாமை கண்டு அப்பாலை இரண்டுகையினாலு மெடுத்து முகத்தளவா யேந்திக்கொண்டு ஸ்வாமி இப்பாலையேன் நீரருந்தா

திருக்கின்றீர் இப்பால் செவ்விதாகக்காய்ந்து பக்குவப்படவில்லையோ செழிய வாசமில்லையோ சூடாகவிருக்கின்றதோ உமக்குப்பசியில்லையோ முறிந்துவிட்டதோ திருஷ்டிதோஷப்பட்டதென்று நினைக்கிறீரோ குறைவாகவிருக்கிறதென்றோ விதிவிலக்கறியாத வென்னாற் கொண்டுவரப்பட்ட தென்றோ பாலிலேடில்லாதிருக்கின்றதென்றோ இப்பாத்திரம் விளக்காததென்று நினைத்தீரோ மிகவுமாறித் தண்ணென்றிருந்ததோ தண்ணீர் கலந்தபாலென்றோ என்றோழிகளுக்குக்கொடுத்தமிச்சமென்றையமோ அல்லது நான் வரத்தாமசப்பட்டதென்றோ நெய்யுஞ்சேர்த்துக்கொண்டுவரவில்லையென்றோ ஒடிக்கொணர்ந்தே னென்றோ இவ்வாறுநினைத்து வேண்டாதிருக்கின்றீரோ, அல்லது அப்பாலுடன் சிறிது சோறும் பழமுங் கலக்கவில்லையென்றோ இன்னமும் இனியதேன் சருக்கரை பண்ணியாரவகைகள் எமது வீட்டில் நிரம்ப விருக்கின்றது பசுவினது நெய்யுங்குடங்களி னிறைத்திருக்கின்றது எமது பிதாவின்மடத்தில் மஹேசுவர பூஜை நடக்கப்போகிறது அதற்கும்மையு மழைத்துக்கொண்டுபோவேன் எனது தாய் தந்தைகளூர்க்குப்போகும்போது அவல தேங்கா யிரண்டுமெனக்குத்தந்துப்போயினர். இப்பாலையிப்போது முன்னேயுண்டால் பின் அவற்றையுந்தருவேன் இனி யென்றுய்தந்தைகள் கொண்டுவரப்போகிற முத்துமாலை மோதிரங் கடகம் முதலியவாபரணங்களினு மும்க்குச்சிறிது தருவேன் இப்பால் கெடாதமுன்னமே அருந்தல்வேண்டும் நீரருந்தாதுவிட்டால் எனது தாய்தந்தைகளென்னைப்புடைப்பர் அவர் வரவுக்குமுன் நீரிப்பாலை யருந்துவீர் என்று வணங்கி மிகவும் வருத்தமுற்று அழுது பாலையும்பார்த்துச் சிவபெருமானது முகத்தையும்பார்த்துத் தன்னையும்பார்த்து மீட்டும்

வணங்கி யேங்கித் தேம்பித்திகைத்துக் கைகளெரித்து இரங்குவார் கண்ணீராயுர்துடைப்பார் இவ்வாறுனகோலத்துட னிவரதன்மைக்கண்ட சிவபெருமான் அப்பாலே யமுதுசெய்தருளினர். இதைக்கண்ட கோட்கூச்சவ்வையாரும் மனமகிழ்ந்து திரும்பிச் செல்லுங்காலத்து ஊர்க்குச்சென்ற தாய் தந்தையரிருவருங் கோயிலுக்கருகேவர அவ்விடத்தே வெறும்வள்ளத்தைக் கையில்வைத்துக்கொண்டிருந்த தமதுமகளைக்கண்டு தாயே பாலையன்றி வள்ளத்தோடுவருங் காரணமென்னென்றுகேட்க சிவபெருமா னுண்டனரென்று கோட்கூச்சவையாருஞ்சொல்லத் தந்தையாரும் பலவாறுகோபித்து மனம்வருந்தி வீட்டிற்சென்றிருந்து மறுநாளுஞ் சிவபெருமானுக்குச் செலுத்தும்பாலைத் தமது மகளாரிடத்தனுப்பித் தாமும் மறைவிற்சென்றிருக்க மகளாருஞ் சுவாமியினிடத்துவைத்து நேற்றையதினம்போலவே வருந்த இதெல்லாங்கேட்டிருந்த தந்தையாரும் இது முடியாதகாரியமென்று கோபித்து விரைந்துசென் றுயிர்த்தண்டமுஞ் செய்யக்கருத அப்போது மகளாருங் கூக்குரலிட்டு அலறிச் சிவபெருமானிடத்துச் செல்ல, தந்தையாருங் கூந்தலைப்பற்றியிழுக்கச் சிவபெருமானு மத்தருணத் தப்பாலையெடுத்துண்டு பெண்ணே நீ பயப்படவேண்டுவதுமில்லை உன் றய்தந்தைகளிடத்துச் செல்லவேண்டியதுமில்லை நமது மார்பத்திலே யெப்போது மிருக்கக்கடவாயென் றருளிச்செய்தனர்.

இதைக்கண்ட சிவதேவசரணரும் மருண்டுமெகிழ்ந் தாச்சரியமடைர்திருந்தனர். இக்காரணத்தா லிவ்வுலகத்துள்ளவரின்னமும்அவ்விலிங்கத்தைக் கொப்பிலிங்கமென்று சொல்வர் என்று சென்னவசவதேவர்க்கு ஸ்ரீவசவதேவரருளிச்செய்தனர்.

கோட்கூச்சவ்வைபுராணவசன முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

—*—

அம்மவையென்னும்
பெச்சமர்தேவியார் புராணம்.

அண்ணலிடஞ்சேர்கோட்கூச் சவ்வையாரன்றிமற்று
மெண்ணிலிவரொருமடவா ரேழையன்பினின்மிக்கார்
கண்ணுதலையிட்டலிங்கக் காதலினாலருச்சிக்கும்
பெண்ணினல்லாரிவர்திருப்பேர்பெச்சமகாதேவியார்.க

ஏழைமையாற்றம்பிராற் கெழின்மனையார்மக்கண்மற்று
ந், தாழடிமைத் திறம்படைத்துந் தாயிலாத்தன்மைய
னென், ருழுமனத்துயரினா லாரிருந்தென்னனையின்றி,
வாழுமக்கள்சுகமென்ன வெனநினைந்துமயங்குவார். உ

பெண்டகையாம்பேதைசேர் பெச்சமாதேவியர்க்கு, ம
ண்டருநற்சிவநேச மனத்தகத்துவளர்தலா, லண்டர்பி
ரான்றிருவருளா லாருயிர்க்காரியமாகக், கொண்டகொ
ண்ட திருக்கோலங் குறித்திரங்கிக்கூறுவார். ௩

அன்னையின்றிவளர்ந்ததெவ்வா றையாநீபிறந்ததற்பி
னன்னையுன்னையிளங்குழவி யாகவைத்துமரித்தாளோ
வன்னையிருந்தாற்பொல்லா வதளுடுக்குமாடலெவ [ன்.
னன்னையிருந்தாலெலும்பாபரணனெனுமவத்தொனியே

அன்னையிருந்தாற்பாம்புன் ஞகமுறப்பொருந்தாளே
யன்னையிருந்தாற்சுடுகோட் டாடிவரப்பாராளே
யன்னையிருந்தாற்பேய்க்கூட் டத்திலுறவிசையாளே
யன்னையிருந்தாலால மருந்தாமலகற்றுவளே. ரு

தாயிருந்தாற்றுயிலியேன் சத்தநான்கேளேனே
தாயிருந்தாற்சடைகட்டித் தவம்புகுதப்பொருந்தாளே
தாயிருந்தாற்பிச்சையன்னந் தனையருந்தவொட்டாளே
தாயிருந்தால்வேடனெச்சிற்றசையுணுங்காற்றபேப்பாளே

தாயுளதேலுடம்பெல்லாஞ் சாம்பரோனிறைந்திருக்குந்
தாய்முலைப்பால்வெண்ணெயெண்ணெய் தனையருத்திக்
குளிப்பாட்டித்,தாய்வளவாதிவ்வாறு தான்வளர்ந்ததிரு
மேனி,தாயுளதேலெவ்வாறுதருக்கிவளர்ந்தோங்குமோ.

வதுவையுடனேனென்புநன்னாள் வந்தக்காலீராட்டிப்
புதியமஞ்சட்காப்பணிந்து புத்தாடைபுனைந்துடுத்தி
விதமுறுநன்பணிபூட்டி விழியாரமிகப்பார்த்திங்
கிதமுறுநல்லமுதூட்டி யெடுத்தணைப்பாரில்லையே. அ

என்செய்கோநாமேனு மினித்தாயாயிருப்பமெனு
மின்செய்யுநுண்ணிடையார் மிகவிரும்பினைத்தளவின்
முன்செய்யவடிவொழிந்து மோகமகவுருவானன்
றன்செய்யநேயர்மனந் தனக்கிசைந்ததம்பிரான். கூ

ஆதலினாற்பெச்சமா தேவியாரம்மனையாய்
மாதனங்கண்மிகச்சுரந்து மனமகிழ்ந்தேயமுதூட்டிப்
பேதமறத்தவம்பண்ணிப் பெற்றபிள்ளையெனவுவந்து
காதலினாற்காணுக்கண் கண்டார்போற்களிகூர்ந்து. ௰

இரண்டுருவினும்பரனை யிருத்தியயனறியாத, சிரந்தனி
லெண்ணெயைத்தேய்த்துச்செய்யமூக்கினைநீவிப், பரந்
தகண்ணிலெண்ணெய்சற்றும்படாதவகைபார்த்தன்பா
ற், சுரந்தமூலமேலொழுகத் தூயசெவித்துணையுருவி.

உரமுதரங்களிற்றேய்த்தேயொண்சிரமெல்லெனவொத்
திக், கரமொடுமாலறியாதகாலிரண்டுங்கரத்துருவி, யர
வணிநீங்கியவுடல மானதெலாந்தைவந்து, பொருமம
னையுதைத்தவுள்ளம் புயப்பதமெல்லெனவருடி. ௰உ

எண்ணெய்விடுந்திரவியங்க ளிட்டிதத்திற்றேய்த்து
வெந்நீர், தண்ணெனுநீர்க்கலந்துகரந் தான்பொறுக்கத்
தொட்டுப்பார்த், தண்ணறிருமுடிமிசையி னள்ளியள்
ளித்தப்பியபி, னுண்ணெகிழன்பினினீர்வாய் மூக்குரு
துகந்தாட்டி. ௰௩

அரிசனந்தந்துணைத்தெழிலா ராகமெலாந்தரித்துநீர்
பெரியகண்பாலாட்டியபின் பெருவிழிகண்மூக்குந்தி
யுரிமையினாலூதியுகி ருறுமழுக்குமேல்வாங்கி
யரியகண்ணேறணையாம லந்நீர்சூழ்வரவிறைத்தே. ௰௪

நிலத்துமிந்துவிரற்றேய்த்து நெற்றியிலொண்டிலகமிட்
டு, நலத்தவுலைத்தலத்துவெந்த நன்னீறுநுதற்சாத்தி, வ
லக்கைகொடுசிரங்கழுத்துவளையாமல்வயிற்றெடுரத்,தல
த்திலணைத்திருசுடராந் தண்விழிக்கஞ்சனமெழுதி. ௰௫

திருநுதன்மேல்விழியதெனச் செய்யசுட்டிசேர்த்தார்த்
விரலினிதுமோதிரங்கள் மிகச்சாத்திவிருப்பினு [து
லணாவடங்காப்பணிந்துபல கறைவீக்கியாராபொன்
றிருமறைகேட்பார்செவிக ளின்பமுறத்தாலாட்டி. ௰௬

அருத்திமுலையெண்ணெயமுக் கறக்கழுவிவிழுங்கவி
ட்டுச், சிரித்தருளமுகமசைத்துச் சிரிப்பெழுப்பிநகைத்
ததற்பின், றரிப்பருமன்பினின்மகிழ்ந்து தாருமுத்தமெ
னக்கேட்டங், கிருக்கொடுநான்மறையிருக்கு மெழிற்றி
ருவாய்முத்தமிட்டே. ௰௭

மடித்தலத்துநீங்காமல் வைத்திருந்தென் வாழ்முத
லென், றடிக்கமலங்களைக்காவி யனவிழியிலணைத்தேந்
தி, முடித்தலத்துஞ்சேர்த்தெனது முழுமுதலேயென
த்தழுவிப், பிடித்தநண்பாற்பிறவாத பிள்ளைவளர்த்திடு
ம்போதின். ௰௮

பெண்ணணங்காம்பெச்சமா தேவியார்பேதையன்பி
ன், றிண்ணிமையை யுலகோர்க்குத் தெரிவிக்கத்திரிவி
ழியார், வெண்ணெயுணூர்பால்பருகார் மெய்த்தாயர்மு

லையருந்தார், கண்ணயரார்பிணிகொண்டு கலங்குமகப் போலிருந்தார். ம௲

அச்சமுற்றுப்பெச்சமா தேவியாமம்மனையா, ரிச்செய லென்பாவியென யாவர்கண்ணேறெய்திற்றோ, பச்சை வெண்ணெய் பால்செரியாப் பான்மையோ வெனப்பசி யாற், றுச்சவனக்கறிக்குற்றஞ் சூழ்ந்ததோதோன்றலே.

முன்னைவினையென்னைவந்து மூடிற்றோகெட்டேனே யுன்னையிந்தநோய்சூழ வுற்றுப்பார்த்திருக்கவோ வென்னசெய்கேனையனே யென்றுபெரிதுயிர்த்தேங்கிப் பின்னயர்ந்துமிகத்தளர்ந்துபிள்ளையைப்பார்த்தரற்றியே

உலையுமனத்தாலுதரந்தட்டிப்பார்த்தோவென்று, முலை யருந்தாதோவென்றுமோகத்தாற்கொடுத்தழுதுந், தலை கவிழ்ந்ததோவென்றுந் தழுவியெடுத்துறவயர்ந்து, நிலை யெனக்காரினியென்று நின்றுமுகத் தறைந்தறைந்தும்.

இந்தவெங்நோய்முற்றிவிட்டா லென்செயுமோ விதற்கு முன, மந்தவெனதாவியினை மாய்ப்பனெனமனந்துணி ந்து, கந்தரத்திற்படைவைத்துக் கனன்றரியக்கண்ணுத லா, ரந்தவுருவேபழைய வாகமாய்முன்னின்றே. உ௲

மெய்ச்சினனினையம்ம வேண்டியகேளளிப்பமெனப் பெச்சமாதேவியார் பேசுவார்பெருமானி

னச்சிலுற்றநோயகன்ற வவ்வளவேபோதுமற்றே
ரிச்சையிலேநீசுகமேயிருக்கவெனக்கிச்சையென்றாள் ௨௪

நம்மவைநீயிருத்தலினு னம்மையேனுய்சேரு
மிம்மையினிலுனக்குரித்த மினிதளித்தேமெம்மைநீ
செம்மையினல்வளர்த்தெடுத்த செய்தியினனீநமக்கு
மம்மனைகாணெனவுரைத்தங்கருஞ்சோதியாயினர் ௨௫

பெச்சமாதேவியார் புராணம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௬00.

திருச்சிற்றம்பலம்.

பெச்சமாதேவியார் புராண

வசனம்.

கோட்கூச்சவையாரன்றிப் பெண்ணுவாரில் பெச்சமாதே வியாரொன்பவரொருவர் இஷ்டலிங்க பூஜையைச்செய்பவர்.

சிவபெருமானுக்கு அடிமைகளும் மக்களும் மனைவியருமெல்லாமிருந்துந் தாயில்லாத குலறயுடையவரொன்று வருந்துநெஞ்சினராய் எவரிருந்தும் பயனென்ன தாயில்லாதபோது சுகமில்லாத தாகவேண்டும் என்று மனத்திலன்பு மிகுந்து பக்தானுக்ரஹ ரூபமாய் அவர்கொண்ட திருமேனியைக்குறித்து ஸ்வாமி நீர் தாயில்லாமலெவ்வாறு வளர்ந்தீர் அல்லது நீர் பிறந்

தவுடனே தாயும் விட் டிறந்தனளோ தாயொருத்தி யிருந்தா ல் தோலாடை தரிக்கவேண்டுவதென்ன எலும்பாபரணந் தரிக் கவேண்டுவதென்ன உன்மேனியெல்லாம் பாம்புகள் சூழ்ந்தி ருக்கச் சகிப்பளோ சுடுகாட்டிற்சென்று நிருத்தமிட வொப் புவளோ பேய்க்கூட்டத்திற் செல்லவிடுவளோ விஷமுண்டகா லத்துப பார்த்திருப்பளோ தாயிலியென்னும் பேருமக்கு வரு வானே பிச்சையெடுத்துண்ணுவானே வேடனெச்சி லுண்ண ச்சகித்திருக்கமாட்டாள் தலைமயிர் சடையாகவுந் தவசுகோல ங்கொள்ளவும் பார்த்திருப்பளோ திருமேனிமுழுதுஞ் சாம்ப லாக விருக்கவேண்டிய காரணமென்ன தாயொருத்தியிருந்து வளர்க்காமலே யுமதுதிருமேனி யிவ்வளவழகாக விருக்கும்போ து தாயினது ரக்ஷணத்திலிருந்து வளர்வீராயின் எவ்வளவு வொளியுடையவரா யிருப்பீரோ, கல்யாணம் நோன்புமுதலிய சுபதினங்கள் வருங்காலத்து நீராட்டி மஞ்சட்காப்புசாத்திப் பு தியவாடைதரித்து ஆபரணங்களையும்பூட்டிப் பார்த்து மகிழ்ந் து அமுதூட்டி யெடுத்தணைப்பவ ரொருவருமில்லையே இதற் கு என்னசெய்வோம், அல்லது இத்தருணம் நாமாவது தாயா கவிருந் திச்செயல்களைச்செய்வோமா வென்று பெச்சவ்வையார் மனமுருகி நினைத்தமாத்திரத்தில் சர்வகாருண்யனுகிய சிவபெ ருமான் ஒருகுழந்தைத் திருக்கோலங்கொண்டு கிடந்துவாய்வி ட்டழுதனர். அதற்கேற்பப் பெச்சவ்வையார்க்குந் தாய்க்குமு லைப்பால் சுரப்பதுபோலச் சுரந்து பெருகி வழிந்தது அக்குழந் தையைப் பெச்சவ்வையுங் கண்ணில்லாதவர் கண்பெற்றதுபோ ல மகிழ்ந்தெடுத்துப் பஞ்சகவ்யத்தையூட்டித் தமது இரண்டு துடைகளினிடமாகக்கிடத்திப் பிரமதேவனுமறியாத வக்குழந் தையின் சிரத்தி வெண்ணெய்க்காப்புச்சாத்தி நாசியையுந் தட

விக் கண்களி லெண்ணெய்படாதவண்ணஞ் செவிகளையுமுருவி மார்பிலும் வயிற்றிலுந்தேய்த்துக் கைகளையுந் திருமாலுமறியாத கால்களையுமுருவிப் பின் திருமேனிமுழுது மெண்ணெய்சாத்தி எமனையுதைத்தவுள்ளங்காலையும் மிருதுவாகத்தடவி எண்ணெய்போக்குந் திரவியங்களாற்றேய்த்துக் கைபொறுக்கத்தக்கவெந்நீர்கொண்டு குளிப்பாட்டிப் பின் நலங்குப்பொடிகளாலலங்கரித்ததனையுங்கழுவிப் பின் திருவொற்றுடையாலொற்றிக் காது நாசிமுதலிய ஸ்தானங்களில் நீரநலூதிக் கண்ணேறு வாராமல் நீரால் வலமாகச்சூழவிறைத்து நிலத்திற்றேய்த்த மண்பொட்டுமிட்டுத் திருநீறுசாத்திக் கண்களுக்கு மையெழுதி நெற்றியிற் சுட்டியென்னு மணியையுந் தொங்கவிட்டு மற்றைய வாபரணங்களையுந்தரித்து முலையமுதுண்பித்துத் தொட்டிலி லிட்டுத் தாலாட்டி முத்தமிட்டு மடியில்வைத்து இவ்வாறு வளர்க்கும் போது சிவபெருமான் இப்பெச்சவ்வையாரது பேரன்பை உலகத்து வெளிப்படுத்துங் கருத்துடையவராய்ப் பால் வெண்ணெய் முதலியன வருந்தாமலுந் தூங்காமலு மழுதவண்ணமாகப் பிணிகொண்ட தொரு குழந்தைபோற் கோலங்காட்டினர்.

இதுகண்ட பெச்சமாதேவியாரும் நடுநடுங்கிப் பாவியேனுடைய தீவினை யிவ்வாறு மூண்டதென்று சகல துன்பங்களையு மடைந்து இக்குழந்தை யினிப்பிழையாது நானும் அதற்குமுன்னேதானே பிராணனைவிடுவேன் என்று ஒரு கத்தியையெடுத்துத் தமது கண்டத்தில் வைத்தரியுஞ் சமயத்தில் சிவபெருமான் முன்போலவே திருக்கோலங் கொண்டு நின்று பெச்சவையே உன தன்பை மிகவும் மெச்சினோமாதலால் நீ விரும்பி யவற்றைக் கேளென் றருள்செய்ய, பெச்சமாதேவியாரும்

ஸ்வாமி உமது குழந்தைக் கோலத்துககண்ட நோய்போனதே யெனக்குப் போதும் உமது திருமேனி சுகமாயிருக்கவேண்டும் என்றுசொல்லச் சிவனும் நீ நமக்குத் தாயானபோதே எமக்கொரு பிணியும்வாராது உனக்குமதனு லம்மவையென்றுபெயருண்டென்று சொல்லிச் சோதிவடிவாயினர்.

பெச்சமாதேவியார் புராண வசன

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

கலியநாயனர் புராணம்.

மருவில்செய்தியேழையன்பர் மற்றுநன்றுருத்தனு
ரறையுமஞ்செழுத்தலா லணைந்திலாதநாவினர்
பிறைமுடித்தசித்தனிச்சை பெருகுகின்றநெறியதா
முறைமைகண்டுகலியவொன்று மொழியுநாமமுற்றுளார்.

நல்லசிலர்துய்யசைவர் கலியர்மற்றோர்நற்பதி
செல்லவேணுமென்றெழுந்து செல்லுகின்றவதியிலே
வல்லிபாகர்கோயிலின்றி மாவனத்துவைகல்கண்
டொல்லையோடிநீடுதுக்க முற்றநெஞ்சராயரோ. உ

அணிந்துமுன்பணிந்தெழுந் தணைத்துநெஞ்சகங்களாந்
திணைந்தநேயராயுயிர்த் திரண்டுகண்களொழுகுநீர்
தணிந்துவீழவேதளர்ந்து சங்கையற்றதுன்பராய்த்
துணிந்துகைகுவித்திரங்கி நின்றருண்டுசொல்லுவார். ௩

தக்கன்வேழ்விசெற்றபோது தம்முனோந்ததேவர்தா
மிக்ககுற்றமொன்றுசெய்யின் மேவியார்விலக்குவா
ரிக்கன்மேனிசுட்டதற்கவ் விக்கனென்றுசெய்யினு
னக்கனென்னசெய்குவன்சொலையனேயெனத்தொழா. ௪

வேதனஞ்சிரந்துணித்த வெம்பகைக்கவன்றொடர்ந்
தேதமொன்றுசெய்யினுளிறப்பன்மெய்யதெம்பிரான்
பாதமொன்றினுலுதைக்க வன்றுலேந்தபகையமன்
றீதுசெய்கிலென்செய்கே னெனத்தியங்குசித்தராய். ௫

மிகைத்தநாரசிங்கன்மேனி வீயநீபிளந்தவப்
பகைக்கவன்செறுத்துடன்று பற்றிலென்னசெய்குவே
னகைத்துமுப்புரங்கள்சுட்ட ஞடிபந்தவழியுளோ
ருகைத்துவந்தடர்க்கிலென்ன வுத்தரங்களோதுவேன்.

அந்தகாசுரற்பிளந்த வப்பகைக்கவ்வழியுளோர்
வந்தடர்க்கிலவனாயான்வதைக்கவெண்ணில்வல்லனோ
முந்துசக்கரத்தினுன் முடிந்தவச்சலந்தர
னந்தவர்க்கர்வந்துறுக்கி லையவென்னசெய்குவேன். ௭

வலியமுன்னுரித்தவந்த வாரணப்பழிக்குமப்
புலியிறும்பழிக்குமிப் புனத்துயானைபுலிகணீ
மெலியவொன்று செய்யின்யார் விலக்குவார்விளாங்தெ
ளக், கலியர்நைந்திரங்கியே கலுழ்ந்துநின்றுகழறுவார்.

நம்மினுஞ்சிறுத்தமானி டர்க்குநம்பதத்தினுஞ்
செம்மைசேர்பதங்களைச் சிவன்கொடுப்பதேனெனத்
தம்முளேவெறுத்திருக்கு மண்டர்நீதனித்துறின்
வெம்மைசெய்யினையவென்னசெய்வனென்றுவிம்மியே

மடப்பமாமலைப்பிறந்த மயிலிருத்தல்கண்டிலேன்
றிடத்துமாதவத்தர்பூசை செய்தசெய்திகாண்கிலே
னெடுத்தொருத்தனொன்சிரத் திருத்திலிக்கணத்திலே
யடுத்தவெங்கணூரிலால யஞ்சமைத்துமாற்றுகேன். ௰

நினைத்திடாதவகையெலா நினைக்கிலாவதென்னெனு
வினைப்பகைத்திறங்கள்வல்ல மெய்ச்சகாயரின்றியே
யெனைத்துமொன்றுமெண்ணிடா திருக்குநந்தமீசனே
முனைத்தனத்தனுகுமென்றுகலியர்நின்றுமுன்னியே௰௧

ஆடுமையர்தம்மைவிட் டகன்றிடாதிருந்துதங்
தேடுமாதனங்களுஞ் செழுமணித்திறங்களு
மாடுகன்றுமடிமையான வகையுமற்றுமுளவெலாங்
கூடுமன்பிலிட்டரற்கொ ராலயங்குயிற்றுவார். ௰௨

ஆனகெர்ப்பககமொடத்த மண்டபமமைத்தபின்
வானமெட்டுகோபுர மதிற்புறத்திலகழ்சமைத்
தீனமற்றவாயில்கட் கிருங்கபாடமிட்டரோ
சேனேசுற்றுமுத்திகைச்சிறைப்புரு தவகையெலாம். ௰௩

செய்தபின்புகோயிலுட் செழுஞ்சலங்கொள்கூவல்கண்
டையர் துய்யவமுதினுக் களக்குநெல்லுமுட்செறித்
துய்யநல்லபூமரங்க ளொத்தவன்பின்வைத்தரன்
பொய்யலாததுய்யபூசை நாடொறும்புரிந்துளார். ௰௪

தம்முடன்றமக்கிதத்த தன்மையாளைநேடியே
யெம்முடன்சலிப்பதற் றிபங்கவல்லபேர்களாய்
வம்மினென்றுநம்மையாளும் வள்ளலார்மதிற்புறஞ்
செம்மிநின்றிராப்பகற் சினேகமிக்கசித்தராய். ௰௫

மதிற்புறங்கடந்துசத்து ருக்கடம்மதத்தினுங்
கதத்தினுங்கடக்கொணுத காவலாளராகியே
குதிப்பர்நிற்பரார்ப்பரிப்பர் கொக்கரிப்பர்தம்மனத்
திதத்தவன்பினித்திற மியற்றுநாள்கள்சில்செலா. ௰௬

அளவிலாததனமெலா மமர்ந்திடுநிமந்தர்கட்
குளபதாதிகட்குநாளு முதவலாலுறும்பொருள்
சிலவதாகிமுன்னுளோர் சிதைந்துபோயுமத்தர்தம்
வளநிலாவுகோயில்காவல் வழுவிலாதவகையராய். ௰௭

வே று.

தொனிமிகுத்தமணிகளாசூழக்கட்டிச் சுரிகையொ ருகரத்தெடுத்துச் சோதிப்பந்தம், புனிதமுறுகரத்தேந் திப் பிறவிவேங்கைப் புலிவேட்டையாடுவார் போலக் கொண்டே, நனிமணியினேசைகணின் கணினதென் ன நற்கரத்தின்சுரிகைகலின் கலினதென்ன, வனுதின முங்கலியனாிரவதெல்லா மத்தர்திருவாலயத்துளன்பா ற்காப்பார். ௰அ

பலரிருந்துகாப்பதெனவொருவர்தாமே பலகாலுமா ள்வாரியேறிப்பார்ப்பார், சிலதினமிப்படிசெல்லக் கலிய னார்தாந் திருக்கரத்திற்பந்தத்துக்கெண்ணெய்கொள்ள, நலபொருளொன்றின்றியணியாடையெல்லா நற்பொரு ளுக்கீந்ததுவுஞ்செல்லபின்பங், குலரும்விறகினைப்பொ றுக்கிச்சுளுந்தாச்சுட்டவ் வொளியினாற்சிலவிரவங்குவந் துகாத்தார். ௰கூ

ஆலயத்தையாமகன்றிந் தனத்துக்கேகி லையர்க்குத் தனியெனத்தாமரையிற்சாத்துஞ், சேலையுடன்றலைவாச ங்கொளுத்திநோக்கிச் சென்றதற்பினென்றுமிலாச்செய லராகி, வேலைவிடமுண்டபிரான்கோயில்காக்கும்விருப். பினாற்றலைமயிரைமேன்முடிந்து, கோலமுறும்பந்தமெ னக்கொளுத்திபீசன் கோயில்வலம்வந்தன்பாற்குலவும் போதில். உ௰

வெந்துமயிரங்கிகபாலத்தைமேவி விரவுறவும்விமலர் பத்திவிலங்காராகிச், சிந்தைமகிழ்ந்தாலிக்குங்கலியனார்த ஞ் செய்ய துய்யமனத்துறுதிச்செயலையெல்லாங், கந்தவி தழிச்சடையார்திருவுளத்தாற்கண்டுலகர்க்கிவர்தன்மை காட்டவேண்டி, யுந்துமழவிடையின்மேலுமையுந்தாமு முருகுசிவகலியர்முனமுவந்துபோந்து. ௨௧

வே று.

சடையணி கங்கையாளுஞ் சந்திரத்துண்டுங் கண்டத், தடைவுறுநீலவாலத் தழகுடன்மழுமான்கையும்; பு டைபெயர்கருணைநோக்கும் பொருந்துவார்தம்மேற்பே ரன், புடையராங் கலியர்தம்மை யுனக்குவேண்டியதே தென்றார். ௨௨

என்றலும்பணிந்தெழுந்தங் கெனக்குவேண்டியதாமி ன்ப, மொன்றுவிண்ணப்பஞ்செய்கே னுறுமிடித்தேவ ர்போலத், துன்றுமிவ்வனத்திராமற் றூயநின்கயிலாய த்தே, யின்றிவண்கணங்களோடுஞ் செல்லுதும்வாவா வென்றார். ௨௩

உருகிநின்றிவ்விண்ணப்ப முரைக்குநங்கலியனார்மு னரியபூவிமானந்தோன்ற வதனிடையரனுமத்த னிருமைசேர்கோயிருனுங் கலியருமேறித்தேவர் மருமலர்விழிக்கணங்கள்வாழ்த்தவண்கயிலைபுக்கார். ௨௪

அத்தனையழைக்கச்சென்றார் கயிலையிலன்பரொல்லா
மத்தனைநிலயத்தோடே கலியனாரழைத்துக்கொண்டே
யத்தமாவிமானமேறிக் கயிலையிலணைந்தாரொன்றே
யத்தலோகத்தோர்மண்ணோ ரதிசயமுற்றாரார்த்தார்.

கலியநாயனர் புராணம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - சுஉடு.

உ

திருச்சிற்றம்பலம்.

கலியநாயனர் புராண

வசனம்.

பஞ்சாக்ஷரஜபபராயுள்ளவர், சிவபத்தியே வடிவமாயுள்ளவர், கலியர்என்னுந் திருநாமமுள்ளவர், இவர் தமது நகரத்தினின்றும் வேற்றுநகரத்துச் செல்லுகையில் வழியிலொருகாட்டிற் சிவலிங்கமொன்றுகண்டு விரைந்தருகாகச்சென்று துக்கமுற்றுப் பணிந்தெழுந்து சிவலிங்கத்தை யணைத்துக்கொண்டு மனமுருகிப் பெருமூச்செறிந்து இரண்டுகண்களிலு நீர்பெருகத்தளர்ந்தளவற்ற துன்பத்தழுந்தி ஸ்வாமி யிக்காட்டிற் றனித்திருப்பின் உமது பகைவர்களாகிய திரிபுராதிகள் இயமன் காமன் ஜலந்தரன் பிரமன் நரசிங்கன் அந்தகாசுரன் முதலான வநேக ருண்டா யிருத்தலால் அவராவது அவர் வழிவந்தவராவது கண்டு உம்மைப்பழிவாங்க வெண்ணங்கொண்டால் இத்தனிமைக்கெவர் காவலாவர் முன்னர் தாருகா வனத்து

ள்ள ரிஷிகளால் ஏவப்பட்ட யானையையும் புலியையு முரித்து
ப்போர்த் திடையிலுந்தரித்தீர் அதுசெய்தி யிக்காட்டி லுள்ள
யானை புலிகளுக்குத்தெரிந்தால் சாதி யபிமானத்தா லும்மைப்
பகைத்துவருமே நானிதற் கென்ன செய்வேனென்று வருந்தி
இப்போ தென்சிரத்தி லாராவது தூக்கிவைத்தா லெம்மூர்க்கு
கொண்டுபோ யாலயமொன்று கட்டி யதில் வைப்பேன் இதெ
ல்லா நினைத்து முடியாதகாரியம் இக்கடவுள் இப்பகைகட் கஞ்
சாதவராய் ஒருவர் சகாயத்தையும் வேண்டாதவராகையா லிவ்
வனத்திற்றிடசித்தத்துட னிருக்கின்றார் ஆதலால் நாம் பயப்
படவேண்டிய தொன்றுமில்லை யென்று நிச்சயித்து தமது நில
ம் நீர் வீடு வாயில் ஆடு மாடு அணிகள்முதலிய போக்கியவஸ்து
க்களை திரவியமாக்கி கையிலிருந்த மற்றைய பொருள்களையுங்
கொண்டு சிவாலயத் திருப்பணிசெய்து சிவலிங்காதி பிரதிஷ்
டையுஞ்செய்வித்து உற்சவாதிகளுஞ் செய்வித்து நித்தியநைமி
த்திய பூஜைகள் விதிவத்தாய் நடக்கும்படி தக்க குருக்கள்மா
ரையும் பிரார்த்தித்து தமக்குரிய மித்திரரோடு தாமுமநேகவா
யுதங்களுடனே காவலாகவு மிருந்தார், சிறிது பொருட்குறை
வால் மற்றையர் வாராது நிற்க இராத்திரிகாலங்களில தீப்பந்
தங்கள் கொளுத்திக்கொண்டு காத்திருந்தனர் விலைகொடுத்து
எண்ணெய்வாங்கச் சத்தியில்லாத காலத்தி லிறகாற் பந்தங்க
ட்டி யெரித்தனர். அதுவுங்கூடாத வொருதினத்தில் தமது
தலைமயிரைப் பந்தமாகக்கட்டிக் கொளுத்திப் பிரகாசிக்கச்செய்
து தமது கபாலத்திற் றீப்பற்றிக் கொதித்தெரியவும் கலங்காத
சித்தமுள்ளவரா யானந்தமடைந்து துதித்து நிற்கும் கலிய
நாயனாரது பத்திமையை யுலகத்து வெளிப்படுத்த வேண்டி வி
ருஷபாருடராகப் பிரத்தியக்ஷமாய் உனக்குவேண்டும்வரத்தைக்

கேளென்றருள்செய்ய கலியநாயனாரும் வணங்கி யெழுந்தானந்தத்திலமூர்த்தி ஸ்வாமி யவ்வாறே விண்ணப்பஞ்செய்வேன் இந்தக்காட்டில் ஏழைத் தேவர்போலிராது கைலையிற் சென்றிருப்போம் என்று சொல்ல அப்போது சிவானுக்ரஹத்தால் அவ்விடத்தொரு புஷ்பகவிமானந்தோன்ற அந்த விமானத்தில் சிவபெருமானும் பரிவாரதேவதைகளும் கலியநாயனாரும் அவர்கட்டுவித்த திருக்கோயிலும் ஏறித் திருக்கைலாயத்திற்சென்றனர். இதைக்கண்ட மண்ணுலகத்தோர் விண்ணுலகத்தோரெல்லாம் பேரானந்த வாச்சரிய மடைந்தனர்.

கலியநாயனார் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

நமிநந்தியடிநாயனார் புராணம்.

அவ்வழிசேர்கலியர்சிவத் தணைந்ததற்பினவரைப்போற்
செவ்வியராமேழையன்பர் சிவநேயத்ததிகனார்
வவ்வியதமிட்டலிங்க வடிவமலான்மற்றறியா
ரிவ்வழிசேர்நமிநந்தி யடிகளெனுமெழிற்பெயரார். ௧

இக்கடல்சூழ்வையகத்தோ ரொழிற்பதியிற்றிருவெழுச்சித்தக்கவிறாத்தெரிசிக்கந்தாமணைந்துதாண்டவஞ்செய்

விக்கிரகங்கண்டென்ன வியாதியோவெனவஞ்சாப்
புக்கரனைப்பூசிக்கும் பூசுரனைவினவுவார். உ

பரமனடுக்கோடியதென்பாதமொன்றங்கெடுப்பதுவெ
ன், றனையிடையொன்றூன்றியதென் றண்கரமுன்வீசி
யதென், விரிசடைகணன்றதுவென்விழியிமையாதிருப்
பதுவென், பெரியபொல்லாவாதமெங்கள்பெருமானைப்
பிணித்ததோ. ௩

இப்பொழுதேயிவ்வாத மேகமருந்தில்லையேற்
செப்பமுறுந்திருமேனிக் கென்னுமோதெரியாதே
யப்பனெங்கள் பிரான்முடியு மற்பஞ்சாய்ந் திருந்ததை
யோ,விப்பிறவிப்பிணிநீங்கவினையமருந்தேதென்றூர். ௪

இவர்மிகவுமேழையன்ப ரெனவறிந்துசிவமறையோன்,
கவலைதருமிவ்வாதங் கடுகவிடுமருந்துண்டு, நவநிதியம்
போதவென்கை நல்குதிரோலென்றளவி, லுவகையினூற்
றமதுசெல்வ முள்ளவெலாங்கொணர்ந்தளித்தார். ரு

எனையாள்வான்பிணியின்றுநின்றுவிட்டால்யானுமெ
ன்றன், மனையாளுமக்களுநின் வழியடிமையெனவண
ங்க, வினையேதுவேதியனவ் வெறுக்கைமுற்றுங்கைக்
கொண்டு, நினைவாரமகிழ்ந்திதுந னேர்த்திமருந்தெண்
ணெயென்று. சு

உய்யவந்தநமித்தண்டி யுடையர்கையிற்கொடுத்தகன்றா
ன், செய்யசித்தமகிழ்ந்தன்பர்தேவர்பிரான்மருங்கணை
ந்து,மெய்யதெல்லாநிறையவிட்டு விருப்பினான்மிகவருட
த்,தையல்பங்கன்மெய்வாதந் தவிராமற்றளர்ந்தயர்வார்.

அந்தோநின்றிருமேனிக் கணைவதேனிவ்வாத, மெந்தா
யானென்செய்கேனெனமுகத்திலறைந்துகொண்டு, மு
ந்தாவலாலழுது மோகத்தால்விழுந்துபுரண், டிந்தாயா
னென்னுயிர்மாய்த் திறக்கின்றேனெனவெழுந்து. ௮

கழுத்தினிடைப்படைவைத்துக் கடுகவரிந்திடும்பொழு
து, மழுக்கரத்தார்மதிப்பிளவும் வானதியுமாசுணமுஞ்,
செழித்தசடைமுடியுநெற்றிச்செய்யகண்ணுஞ்சிறுநகை
யு, முழுக்காளகந்தரமு மாகவந்துமுன்னின்றே. ௯

நில்லுநில்லுசழுத்தரியனின்னைநன்றாயாமகிழ்ந்தே, மெ
ல்லையற்றநேயத்தா யேதுனக்குவேண்டியதா, னல்லது
கேளிப்பமெனநமித்தண்டியார்வணங்கிச், சொல்லு
மிகத்தழுதழுத்துத் தொழுதுநின்றுசொற்றயர்வார். ௰

எனக்கொன்றுமிச்சையிலை யெம்பெருமானின்னுடைய
வனப்பொன்றுந்திருமேனி வாதத்தால்வளைந்ததெலா
முனக்கின்றுகுணமாகி யொண்மைபெற்றாற்போதுமெ
ன, வினைக்கஞ்சுநமித்தண்டிமெய்யன்பர்விளம்புதலும்.

வா,தமலநமக்கிதுயாம் வையகத்தைபைந்தொழிலா
னீதிதரநிறுத்துகின்ற நிருத்தங்காணீயறியென்
ருதரவாலெம்பெருமா னருணடமாடலேயறைவான்
பூதலமும்பாதலமும் பொன்னுலகும்பவுரிகொள்ள.௰௨

அரிபிரமராதிவிண்ணோ ரனைவோருமரகரெனப்
பரிபுரத்தின்ருெனிபுவனம் பதினலுஞ்செவிடுபட
வுரியவுமைகைத்தாள முற்முழக்கவுயிர்ப்பினுற்
றரணியெட்டுங்கிரிசேடன் றலைபுரட்டியலையவே. ௰௩

சடைமுடியின்மதிவெதும்பித் தண்ணமுதந்தாழ்ந்து தலைத், தொடைமிசையின்வீழவுயிர் தோன்றியவர்தோத்திரஞ்செய், திடையறமுன்முறையிடயா மெழினடமாடுதல்புரிவே, மடையுமவர்க்கேதுவர மெனக்கேட்டங்கருளுவேம் ௰௪

ஐந்தொழிலாந்தாண்டவத்தை யன்பரறிந்தாலிப்பா
ரிந்தநிலைநாட்டியத்தி னியல்பிதெனவறிவித்தே
நந்தநமித்தண்டிகளை நம்பர்விமானத்தேற்றி
வந்துறுநங்கயிலையென மகிழ்ந்துகொடுமென்னிஞர். ௰௫

நமித்தண்டிநாயனர் புராணம்
முற்றிற்று.

ஏழைமாதவச்சருக்க முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௪௦.

உ

திருச்சிற்றம்பலம்.

நமித்தண்டிநாயனார் புராண வசனம்.

நமித்தண்டிநாயனாரென்பவர் ஏழையன்பரிலொருவர், சிவ பக்தியி லக்ரகண்யர். இஷ்டலிங்கபூஜாபரர், எங்குமுள்ள சிவாலயங்கடோறுஞ்சென்று திருவிழாவி லுற்சவத்திருக்கோலந் தரிசிக்கும் நியமமுள்ளவர் ஒருதின மொரு சிவஸ்தலத்தில் நடேசரது உற்சவகாலத்திற் சென்று தெரிசித்து தமதேழையன்பு காரணமாக இந்நடேசப்பெருமானுக்கேதோவியாதி யுண்டென்று சங்கித்து அவ்வாலயத்தருச் சகரிலொருவனை யழைத்து ஸ்வாமி யருச்சகரே இக்கடவுளுக்கு இடைவளைந்திருக்கிறது ஒருகாலுயர்ந்திருக்கிறது ஒருகை வீசியவண்ணமாக விருக்கிறது முகத்திலுஞ்சமமான பார்வையில்லை சடைகளு மவிழ்ந்தசைகின்றன முடியுஞ்சாய்ந்திருக்கின்றது இந்நோய் எதனால் நீங்குமென்று கேழ்க்க அச்சிவப்பிராமணரு மிவனை யேழையன்பனென்று தெரிந்து அவரிடத்தநேகம் பொருளைப் பற்றிக்கொண்டு தைலமொன்று கையிற்கொடுத்திதனாற் றீருமென்று சொல்ல நமித்தண்டியாரு மதனைவாங்கிச்சிவபெருமானது திருமேனி முற்றுஞ் சாத்தி யுருவியுந் தீராமைகண்டு ஸ்வாமி யிவ்வாதநோயுமக்கா வரவேண்டும் நானென்செய்வே னென்று முகத்திலறைந்துகொண்டு அழுது விழுந்து புரண்டு இப்போது நானுயிரை மாய்ப்பேனென்று கத்தியையெடுத்துத்தமது கழுத்தில்வைத்தறுக்குஞ் சமயத்தில் சிவபெருமான் நில்லு நில்லுஎன்னுஞ் சொல்லுடனே ப்ரத்யக்ஷமாய் உனக்கு வேண்டும் வர

த்தைக்கேளென் றருளிச்செய்ய நமிநந்தியடியாரு முமது தி ருமேனியிலிவ்வாதப் பிணிநீங்கின லதுபோதுமெனச்சிவபெரு மானு மிதுவாதநோயன்று பஞ்சகிருத்திய வடிவமென் றருளிச் செய்து ஒருபுஷ்பக விமானத்தேற்றிக் கைலைக்கு வருவாயெ ன்றழைத்துச் சென்றருளினர்.

நமிநந்தியடிநாயனர் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

திருக்கூட்டச் சருக்கம்.

சகளேசமாதிராசையர் புராணம்.

—*—

துறந்த மேதகனேபோற்றி சோதிமெய்த்தகனேபோ ற்றி, கறுந்தபாதகனென்போற்றி கைக்கொள்வித்தக னேபோற்றி, யறத்தர்சாதகனேபோற்றி யருட்கொள்வ த்தகனேபோற்றி,மறந்தர்பேதகனேபோற்றி வச்சவபோ தகனேபோற்றி. க

பத்தருட்பத்தராவார் பரமமாயேசர்தம்மு
ணித்தமாயேசாராவார் நேயநற்சரணர்தம்பான்
மெத்துமெய்ச்சரணராவார் வேந்தருள்வேந்தராவா
ரொத்தமாபெரியோர்தம்முளுயர்தரும்பெரியோராவார்

பரமனைவிரும்பார்தம்மைப் பரிசியார்பண்பான்மிக்கார்
விரவியநாதகீத வீணைநற்பரதம்வல்லார்
திரமறைமுடிவறிந்தார் சித்தாந்தந்தெரிந்துவல்லா
ரரியவில்வாழ்க்கையிச்சை யற்றுளார்போலிருப்பார். ௩

இயமமாநியமமாதி யெண்வகையோகம்வல்லார்
சமையுளார்கருணைமிக்கார் கனத்தநற்சரித்திரத்தா
ரமைதருமிசைபடைத்தா ரணிமையினம்பையென்னுஞ்
சமமிலாத்தலத்தார்தம்பேர் சகளேசமாதிராசர். ௪

மேதினிபுரப்பார்துய்ய விதரணவித்தையுள்ளம்
போதவேபடைத்துவாழ்வார் புனிதநற்குருவிலிங்கத்
தாதாமிக்கபத்தி யன்பினாலதிகராகி
யோதுநலுபசாரங்க ளளவிலவுவந்துசெய்வார். ௫

அடிக்கடிபெரியோர்தம்மை யன்பினாலகலாதேத்திக்
கடிப்பலமலர்நீர்கொண்டு காதலாற்றம்மகத்து
நெடிக்கிலாதருச்சித்துன்னி நிமலனைத்துதித்துமற்றும்
பிடித்ததண்டிகையின்முப்பத் திரண்டிராகம்பிணித்தே

நேரத்திற்கேற்றராக நித்தர்தஞ்சகளேசர்க்கே
யாரத்தாம்பாடிமற்று மகமகிழ்ந்தந்தவாறு
சிருற்றகவுரிவீணை யிராவணவீணைசெய்ய
மேருக்கொள்கரத்தான்வைகும்வெள்ளியங்கயிலைவீணை

அம்பரவீணைமற்று மருந்திறற்பினாகிவீணை
நம்புசாரங்கவீணை நச்சுகச்சப்பவீணை
யெம்பிரான்மாதிராச ரினியராகங்களாலே
தம்பிரான்சகளேசன்சீர் தாழ்வறநவிற்றிநாளும். ௮

நல்லவரதிசயிக்கு நாளிலில்வாழ்க்கையிச்சை
யில்லராயுலகாளின்ப மில்லராமிவரோர்நாளின்
மல்லிராசையனொன்றோர் மன்னவருலகங்காத்தீ
தல்லலென்றகன்றுநித்த னரும்பருப்பதத்தணைந்தே. ௯

அங்கணிச்சலத்தராகி யானந்தமோகராகித், துங்கவில்
லஞ்சூழ்காவிற் றுணிந்துறுமல்லிராசர், தங்கருத்ததிக
பத்தித் தன்மையுஞ்சமாதியோகம், பொங்கலுஞ்சிவா
னுபோகம் பொருந்தலுங்குணமும்பண்பும். ௰

வந்துமாபெரியோர்சொல்ல மகிழ்ந்துநம்மாதிராசர்
சிந்தையிலன்பாய்க்கேளாத் தேசத்திலாசையின்றி
யந்தமாம்யோகிதன்னை யரும்பெருந்தவத்தினானை
யெந்தநாட்கண்டவன்று ளியான்வழிபடுவேனென்று.

அப்பருப்பதத்தையுன்னி யஞ்சலிசெய்துபோற்றி
செப்பருமாதிராசர் செப்புவார்கேதாரத்தி
லொப்பினீர்பருகிற்காசி யுற்றிறந்திடலாமுத்தி
யிப்பெருந்தவம்வருத்த மெளியதன்றென்னவெண்ணி.

அன்னகர்ச்சிகரங்கண்டார்க் கவ்வயின்முத்தியாகு
மென்னல்சத்தியமாமந்தவெழிற்கிரியடுத்துப்பார்ப்போ
மன்னுபுண்ணியத்திலக்க மட்டிலையாதலாலே [ர்
முன்னியத்தலத்துவாழ்வோர் முக்கணராவரன்றே. ௰௩

மிக்கநற்றீர்த்தங்கட்கும் விண்ணவர்முனிவோர்கட்குந்
தக்கவாதானமாகிச் சாதகசித்தராணேர்
பக்கமானவையளித்துப் பணிந்தமானிடருக்கன்பா
லக்கணத்தின்பநல்கும் பருப்பதத்தளவார்சொல்வார்.

வந்தகத்தியன்புடைக்க மண்ணுள்வீழ்ந்ததுபுதைந்து
விந்தியமந்தரந்தான் விண்டுவின்கரத்தானின்ற
தந்திவானிறத்தோனெந்தை யங்கைவில்லாய்த்துமேரு
வுந்தரிக்கஞ்சிமுன்னி ரொளித்ததுமைநாகந்தான். ௰௫

வருநதிகங்கைகொய்ய மாவியவந்தங்குன்றிப்
பெருகிலாதாதவன்றன் பெருகுமெவங்கிரணத்தாலே
சொரிபனிசுவறித்தோன்று மிமையமல்லாதுதோன்று
திரவியான்விளங்குமல்லாதிருள்கொளுமுதயவோங்கல்

வந்துசனுகரம்புக்க தினகரன்கிரணமாற்றி
யந்தருங்கயலஞ்செற்ற தத்தமனஞ்சேரோங்க
லெந்தையையொருநாட்டாங்க மானதோத்தரமிளைத்த
துந்துகன்மணியின்குற்ற முரோகணுக்கிரிபகற்று. ௰எ

இப்படிமலைகட்கொவ்வோ ரேதமுண்டெந்தையார்வா
ழுப்பருப்பதத்தையொப்ப தாங்கிரியில்லென்றேத்திச்
செப்பருமாதிராசர் சிரத்தையாலெழுந்திறைஞ்சி
யொப்பருங்கிரீந்திரத்தை யுறுவனெனென்னவுன்னி. ௰௮

திருப்பருப்பதத்தைச்சேர்ந்து செய்யமல்லையர்தாளைக்
கருத்துறக்காண்பேனென்னுங் காதலான்மாதிராசர்
விருப்புடன்சென்றுவெற்பின் மிக்கமாதீர்த்தத்துள்ளுந்
தெருட்டருந்தானத்துள்ளுஞ் செய்யமாநதிகளுள்ளும்.

மங்கலகிரிதுர்க்கத்தும் வனதுர்க்கஞ்சலதுர்க்கத்தும்
பொங்கிருமுழைகளுள்ளும்பொலிதரும்பிலங்களுள்ளு
சங்கையில்படிகமேம வச்சிரச்சயிலத்துள்ளுங் [ஞ்
கொங்குலாங்கிரியுட்டொன்று வனசரர்குறிச்சியுள்ளும்.

பாதலவுழைகளுள்ளும் பஞ்சலோகக்குன்றத்துஞ்
சீதமார்பரிசவேதித் திரளினுந்தெரிசித்தோர்க்கு
நீதியாமுத்திநல்கு நிலயத்துமலர்வனத்துஞ்
சோதிசேரிந்துகாந்த நவமணித்தொகைக்குன்றத்தும்.

உரகமாவிலங்குபுட்க ளுறைவிடத்துள்ளுமோங்கற்
சரிவுகளிடிந்துவீழுஞ் சாரினுந்தங்கித்தங்கிக்
காமுறுமிலிங்கபூசை காதலிற்செய்துவாழ்த்தி
வாமுறுவில்லமோங்கு வனங்களைச்சமீபமான. ௨௨

கண்டிகைகத்துங்கண்டி தருசிலேக்கணங்களுள்ளும்
வெண்டிருநீற்றுவெற்புத் தருச்சிலேமிகுமிடத்து
மொண்டருமிலிங்கவோங்கன் மரஞ்சிலேசெடிகளுள்ளு
ம்,புண்டரநுதன்மாயேசர்போலுமாகிரிகளுள்ளும்.உ௩

சங்கமம்போலுந்தாருக் கொடிபுதற்றலங்கடோறு, மிங்
கிதந்தம்முட்பேசுங் கிரிகொடிப்புதல்கடோறுந், தங்க
ளிலிதங்கள்பேசுந் துணைமலர்த்தருக்கடோறும், பொங்
கெரிபோலவின்னிற் பொருந்துமாவனங்கடோறும்.

நடிக்குமாகிரியினங்க ணற்கொடிசெடியிடத்து
நடிக்குமாவிலங்குபுட்க ணஞ்சராவிடங்களெங்கு
நடித்தெழுசிலேயினங்க ணண்ணினநிலங்கண்முற்று
நடித்துயர்தருவினங்கணனியுறுந்தலங்களெல்லாம்.உரு

பாடுமங்கிரிமரங்கள் பலகொடிநெருங்கிடத்தும்
பாடுநீண்மிருகம்வண்டு பற்றுருப்பலவிடத்தும்
பாடுமொண்சிலேகண்மந்தி பல்லரிதங்கிடத்தும்
பாடுமாகிரியினங்கள் பறவைகணெருங்கிடத்தும். உசா

மின்னெறிகாட்டப்பாலு மின்னெறிபுட்கட்பாலு
மின்னெறிவாலுகங்கண் மிக்கெழுகுவையின்பாலு
மின்னெறிநதியினங்கண் மேவுதீர்த்தத்தின்பாலு
மின்னெறிபலநீரோங்கன் மரஞ்செடிமேவும்பாலும்.

பலநிறத்தருவின்பாலும் பலநிறக்கொடிசூழ்பாலும்
பலநிறப்புதலின்பாலும் பலநிறச்சிலைசேர்பாலும்
பலவுருப்பாதவங்கள் பலபலபணைக்கும்பாலும்
பலவுருக்கொடியினங்கள் செடியினம்படரும்பாலும்.

கேசரத்தருவின்பாலுங் கேசரச்சிலையின்பாலும்
பேசுறிற்கேசரஞ்சேர் பெருங்கொடிசெடியின்பாலு,
மாசிலாமிருகரூபர் மணிமரச்சயிலப்பாலுந்
தேசுலாம்பறவைபோலுந்திரண்மரப்பொதும்பர்பாலும்

ஒளிவிடும்பறவைபோலுமொண்மையாமோங்கற்பாலுந்
தெளிதருந்தேவர்போலும் பாதவச்சினையின்பாலுங்
குளிர்நிழற்றிரும்பாத்தாருச் சிலைகளின்குழுவின்பாலும்
வளர்நிழலின்றிநிற்கு மரமலையினத்தின்பாலும். ௬௰

தூரத்தினிழலாய்த்தோன்றுந்தோகைமாமலையின்பாலு
ஞ்,சேரப்போய்ப்பார்ப்போர்க்கெல்லாந் தினமொருவடி
வாய்த்தோன்றும், பாரப்பூதரத்தின்பாலும்பாதவத்திர
ளின்பாலுஞ்,சீருற்றமாதிராசர்மல்லிராசையனைத்தேடா

மரங்களைமரங்களேறி மரங்கள்சேவிக்கவாழும், பெரு
ந்தருவினத்தைப்பார்த்தும் பிரியத்தினேறிப்பார்ப்போ
ர், நெருங்குலகனைத்துங்காண நிற்கின்றதருக்கள்பார்த்
தும்,பொருந்திலப்படியேநிற்கும்பொருப்பினமவையை
ப்பார்த்தும். ௬௨

ஓரிடமுன்னியேறிலவ்விடத்துய்க்கும்வெற்பைத்,தே
ரிலப்படியேசேர்க்குந் திரண்மரக்குழுவைப்பார்த்துஞ்,
சாருருவுடையோரோறிற் றமைக்காணுத்தருவைப்பார்த்
துஞ், சூரியன்போலத்தோன்றிச் சோமனுந்தருவைப்
பார்த்தும். ௬௩

பாதிமாமிருகமாயும் பாதிமாமலையதாயும், பூதரம்பாதி
யுள்ளோர்பாதியாய்ப்பொருந்தும்வெற்பை, மேதகுவே
லைதோறும் வெவ்வேறுபழுத்துவீழுங், கோதிலாமரத்
தைவெட்டிற்கூடுமாசெடியைப்பார்த்தும். ௬௪

தூரவேயெடுத்துப்போடிற்றொடர்ந்துவந்தவ்விடத்தை
சேருமாகல்லைவெய்யோன் செறிந்தெழிலெழுந்துவீழிற்
பாரிடையடங்குந்தாருப் பகுதியைப்பரிவாற் பார்த்துஞ்
சூரியனெழிலவ்வாறேதோன்றிவீழ்கிரியைப்பார்த்தும்.

நாற்றிசைக்கொம்பிலேறி நாடுங்காற்கயிலாயத்து
நாற்றிசைவாயிற்றென்று நல்லமாமரங்கள்பார்த்து
நாற்றிசைச்சிகரமேறி நாடுங்கால்வெள்ளிவெற்பி
னற்றிசைத்துவாரத்தோடு புரந்தெரிநகங்கள்பார்த்தும்.

மீதுறுமாந்தர்தம்மை மிக்கபாதாளகங்கை
கோதறவாட்டுவிக்குங் கோத்திரந்தருக்கள்பார்த்து
மாதாவுடனேசேரி னறுபத்தெட்டானதீர்த்த
மீதிதுவென்னக்காட்டு மினக்கிரிதருக்கள்பார்த்தும்.

ஒன்றையொன்றுரிஞ்சித்தோன்றுமொளியெரியதனு
ல்வேகு, முன்றிகழ்மரம்போய்வேறே முளைத்தெழுதரு
க்கள்பார்த்து, மின்றியுஞ்சீதமிஞ்சு மிடையிருள்வெயி
லைத்தம்பாற், சென்றபேர்க்களிக்குந்தாருக் குழூஉக்கிரி
த்திரளைப்பார்த்தும். ஈஅ

வெயின்மிகும்போதுதம்பான் மேவினேர்விரும்பத்திங்
கள், பயிலவேசெய்யுமோங்கற்பகுதிபன்மரங்கள்பார்த்
து, மயிலுறும்பாலாறேரி யருஞ்சுனைப்ருவிபார்த்துந்,
தயிர்நிறைதடாகங்கூபந் தண்சுனைநதிகள்பார்த்தும்.

நெய்யுறுமருவியாறு சுனைநதி நின்றுபார்த்தும், பைய
வேமாதிராசர் பலவில்லவனம்புகுந்து, பொய்யில்பொ
ன்கிரிமரங்கள் கொடிசெடிவிலங்குபுட்கள், செய்யவம்
மணத்துக்கோயில் செறியும்பாலனைத்தும் பார்த்தும்.

நவமணியினங்கள்போலு நாகங்கணண்ணிப்பார்த்து
நவமணியினங்கள்போலு நற்கொடிசெடிகள்பார்த்து
நவமணியினங்கள்போலு நாற்பதம்புட்கள்பார்த்து
நவமணியினங்கள்போலு நன்மலர்த்தருக்கள்பார்த்தும்

ஒருமுதலாகிப்பல்பே ருற்றபல்கொடிகள்பார்த்து, மரு
வொடுவாயுலிங்க மந்தரம்விளங்கல்பார்த்தும், பரிவின
ன்னீர்தெளித்துப் பணிபுமாமழையைப்பார்த்துந், தரு
வினமலராற்கோலஞ் சமைக்குமத்தகைமைபார்த்தும்.

வந்துசங்கரனையாட்டு மஞ்சனத்தீர்த்தம்பார்த்துஞ்
சந்தனந்தினமுஞ்சாத்துஞ் சந்தனத்தருக்கள்பார்த்துங்
கொந்தலர்தந்துசாத்து மலர்வனக்குழுக்கள்பார்த்து
மந்தருந்தூபங்காட்டு மருந்தூபமரங்கள்பார்த்தும். ௪௩

தீபஙம்பரற்குக்காட்டுந் திரண்மணியரவுபார்த்து
மேவுநற்பலநிவேதம் விரும்பிச்செய்தருக்கள்பார்த்து
மாவலாலடைக்காயேற்று மம்மரக்கொடிகள்பார்த்துந்
தாவரமாதிராசர் தருக்கியேசெலுங்கான்மற்றும். ௪௪

பாதவவரவென்றேத்திப் பாதவம்பலவிறைஞ்சுங்
கோதிலாத்தருவிலிங்கங் குலவிடங்குறிகிப்பார்த்துந்
தீதறும்பறவைமன்ன வெனச்சொலிசெய்யபுட்கள்
பூதலமுறவிறைஞ்சும் புள்ளிலிங்கங்கள்பார்த்தும். ௪௫

மிருகமன்னவவென்றேத்திவிரும்பியேயிறைஞ்சநாளுந்
தெரிதருமிருகலிங்கஞ் சேரிடஞ்சென்றுபார்த்து
முரகவல்லபவென்றேத்தி யுரகங்கள்பணியநாளும்
வரமருளுரகலிங்க மன்னிடமகிழ்ந்துபார்த்தும். ௪௬

அளிக்குலமன்னவென்றே யரியினமிறைஞ்சியேத்த
வெளிப்படுமளியிலிங்க மேவிடம்விரும்பிப்பார்த்துந்
தெளித்தநீர்மன்னவென்றுசெழுஞ்சலமிறைஞ்சநாளுங்
களிக்குநற்சலலிங்கத்தைக் காதலிற்சென்றுபார்த்தும்.

சவரவல்லபவென்றேத்திச் சவரர்களிறைஞ்சநாளுந்
தவறைவரமளிக்குஞ் சவரலிங்கங்கள்பார்த்தும்
விபுதவல்லபவென்றேத்தி விபுதர்களிறைஞ்சநாளு
மவர்களுக்கினிமைநல்கு மமரலிங்கங்கள்பார்த்தும்.௪௮

மலையெனப்புற்றுமூடி மறையுமாதவனைப்பார்த்து,மிலை
மரமூடித்தாரு வெனவுறுந்தவனைப்பார்த்துஞ், சிலையெ
னச்சிலைமேன்மூடிச் செறியுமாதவனைப்பார்த்துந், தொ
லைவிலாமயிர்மேன்மூடித்தோன்றலாதவனைப்பார்த்தும்

பரமயோகத்தாற்காட்டப் பான்மையாந் தவனைப்பார்த்
சிரநிலமூன்றிக்கைகால் சேணிடைநீட்டிவாயுப் [துஞ்
பருகுமாதவனைப்பார்த்தும் பாதவங்குட்டமொன்றே
தனையிடையூன்றிநின்றுசலிப்பின்மாதவனைப்பார்த்தும்.

பரந்தபஞ்சாங்கியூடே பற்றுமாதவனைப்பார்த்து
முரந்தரவேரடுமொற்றி னுற்றிருங்களமமிழ்ந்த
நிரந்தரமகிழ்ந்துநிற்கு நித்தமாதவனைப்பார்த்து
மருந்துநீர்த்துளிவாலூகத்தமையுமாதவனைப்பார்த்தும்

மரங்களையயங்கேட்கவளைந்திடும்பலங்களுண்டும்,பெ
ருங்கிரிவணங்கிநல்கும் பெருமரத்தேனயின்று, மிருந்
துமாதவங்கள்செய்வோ ரிடங்களிற்சென்று பார்த்துந்,
திருந்துநற்சலக்கிரீடை செய்யுநங்திருவர்ப்பார்த்தும்.

செய்யநற்சிவார்ச்சனுவற் சித்தனைப்பார்த்துந்தேவர்
தையலாருடனேயாடுஞ் சமுகங்கடம்மைப்பார்த்து
முய்யநீராமினுர்க ளுறுபிலங்களேநேர்பார்த்தும்
பையரவுலகராடும் பாதலமுழைகள்பார்த்தும். ௫௩

கரியரிபுண்டரீகங் கரடிகண்முதலாயுள்ள
தெரிவருமிருகந்தம்முட் செறிபகையொழிந்துசேரு
முரிமையைமாதிராச ருகந்துபார்த்துயர்ந்துவில்ல
விரிவனந்தன்னேப்பார்த்து மிகமனமுருகிப்போற்றி.

மெய்த்தவமல்கிராசர் மேவிடமேதென்றெண்ணி
யத்தகைவில்லஞ்சூழு மருவனமனேத்துந்தேடு
முத்தாமாதிராசர் முறைமையையறிவாமென்னுந்
சித்தராயத்தவத்தர் திருவுள்ளத்துன்னித்தேர்ந்து. ௫௫

வேறு.

நல்லதோர்பெருவடிவினேநண்ணிமுனடுவே
மல்லன்மாமலேதொடங்கி விண்ணளவதாய்வளர்ந்து
தொல்லேகீற்றருங் கிரியதோசோதிமாமயமோ
வெல்லேயற்றருத்திராக்க மாமரம்படரியல்போ. ௫௬

கோரசம்புவின்வடிவமோ குறித்துயாமொருகா
லோரிடத்திலுந் சொல்லொணுதென்னெனவுணர்ந்து
திரமாதிராஜையர்தாஞ் சென்னியேதென்று
தேரவேணுமென்றுண்டு மூன்றியங்கிபுந்தெரியார். ௫௭

பத்திதப்பினம் பதமுனங்தேடிலாதென்னுஞ்
சித்தமுற்றயர்ங் தனுதினஞ்செம்பதங்தேடி
யத்திறத்தினி லையிரண்டாண்டுழன்றறியார்
முத்தவிப்படி யடியனைமுனிவதோமுறைமை. ருஅ

உன்பெருந்திருவடி வினையிதெனவுன்னி
யென்பெரும்படியறிவினு லறிதரவெளிதோ
நின்பெருந்திரு வருளினுனின்பதங்காட்டென்
றன்புடன்றுதித்தொருதிங்கள்பணிங்தெழாதழவே. ருகூ

மெல்லவேதிருமுறுவல் செய்தருண்மிகுநோக்கான்
மல்லிகார்ச்சுனயோகர்முன் வடிவினைமாற்றி
நல்லதந்திருவுருவினைக் கொண்டுமுனண்ணி
யல்லனீயறவவ்வடி வானமென்றறையா சூ0

சாணநீயினியெழுகெனத் தன்னிருகரத்தா
லருளின்மாதிராசையனை யெடுத்துகந்தணையாப்
பாமபத்தியானம்மை யிக்கிரிமிசைப்பார்க்க
வுாமிகுந்தவஞ்செய்தனை வருதியென்றுவப்பால். சூக

தன்சிநேகநற்ற வாச்சிரமங்கொடுசார்ந்து
நன்சிவார்ச்சனை வேளையிற்சேடமுநல்கிப்
பின்சிவானுபவத்துனா பெருகவேகாட்டி
முன்சினுழிகைவைத்திருந் தினியனமொழிவார். சூஉ

இன்னரீதனாமீதினிற் சிலதினமிருந்து
பன்னருந்தவஞ்செய்தலா னம்மிடம்பலியா
தொன்னலத்தினுற் செல்கெனமல்லிகார்ச்சுனர்மு
ன்னலம்பெறப்பணிந் தெழுந்தழுதன்பினவில்வார்.

பிறவிமாமிடியாயினேர் பெருநிதிகண்டா
லுறவினுற்கொள்வால்லது விடுவரோவுன்று
ளிறைவயானின்று கண்டினிமண்செலேனென்ன
வறவன்மென்னகை தன்னினனன்றெனவறைந்தே.௬௪

பத்தர்ஙன்னிதியாகிய பரமன்மாதிராசர்
சித்தமொப்பயாந்திட்டமிட் டகற்றுதுமென்றே
மெத்துமோர்கருவேனிழன் மெல்லெனக்கொடுபோ
யத்தலத்தினிலிருவெனமறைந்தொராயனேப்போல்.௬௫

வே று.

முருட்டுவென்காலினிட்ட மொய்த்தவார்ச்செருப்புஞ் சுற்று, மிருட்கொள்கம்பளமேலார்த்த விருங்கயிற்றனையுமாடு, வெருட்டுதிண்கோலோர்கையும் வெறுங்கடமொருகரத்து, மருட்டுறுவிழியுங்கோணல் வதனமும் பாசிப்பல்லும். ௬௬

தடித்ததிண்காதுங்கட்டைத் தாடியும்பருத்தமூக்கு
மெடுத்தகோல்பின்னிறுத்தி யதனிடைச்சார்ந்தோர்கா
மடித்தொருகாலினின்று வலக்கரநுதற்கவித்தே [லே
யடிக்கடியாடுபோர்க்கு மக்கமுமதட்டுவாயும். ௬௭

கொடுமைசேர்பரசினேடுங் கூர்முடங்கணிமருங்கு, மு
டையராய்நாய்விளிக்கு முனையராயுள்வளேந்து, செடி
தொறுமேயுமாட்டைத் திரட்டிவந்திவரிருக்கு, நெடிய
மாவேலின்கொம்பை ஞெமிர்த்துமை தின்னவிட்டார்.

விட்டிடமாதிராசர் வெகுண்டியாமிருக்குநீழ, லிட்டமா
மரத்தைவெட்டி யிப்படிநிழற்கெடுத்தாய், மட்டறுகா
ட்டினிந்த மரமலாதிலேயோசொல்லாய், துட்டனீகட்
டன்முட்டன் றுச்சனஞ்மதத்தாய்கொல்லோ ௬௯

பாவிநீயிடைபாவுன்னைப் பதறியான்சபிப்பனென்று
ரோவமிலாயராகு மிருடியார்சிரித்துச்சொல்வார்
கோவிநீநன்றுநன்று கோபியேபாவியல்லா
ஞவினல்வெம்மைசொல்ல நானலன்பாவியென்று. ௭0

கோபமேவதைக்குங்கூற்றங் கோபமேதுன்பமூலங்,
கோபமேதிருவையோட்டுங் கோபமேகுணத்தைக்கொ
ல்லுங், கோபமேசிந்தையேது கோபமேகொடுஞ்சொற்
கூட்டுங், கோபமேநரகஞ்சேர்க்குங் கோபமேகொடுமை
யாமால். ௭௧

சலமெனுந்திரையாற்றுய்ய தவமரக்கலஞ்சாயாதோ, சல
மெனும்வெயிலானெஞ்சத் தாமரைதான்கன்றுதோ, சல
மெனுநெருப்பாலெல்லாத் தருமமும் பொடியாகாதோ,
சலமெனுங்காற்றுன்ஞானத் தருவினஞ்சாய்ந்திருதோ.

ஞானமேலிடோவுன்ற னல்லவதானக்கல்வி
யானவாங்காரந்தானே வருந்தவத்தகந்தைதானே
நீநல்லனல்லன்கோப நெஞ்சினனீயிருக்கக்
கானமிங்கிதனுள்வேறு கருதினன்னிழல்களின்றே.௭௩

நல்லனீசாந்தமேவு நற்றவருன்னைப்போல
வில்லையிக்கிரியின்மேவு மிருந்தவர்தம்முளெல்லா
மொல்லையினெல்லாமற்ற வுனக்கிந்தநிழலினாசை
யெல்லையற்றிருந்ததென்றாற்றெளிவுதானெளியதன்றே.

நேசமாய்த்தீயில்வீழு நேரிழையுடுத்துச்செல்லும்
வாசமாரழல்வேமென்றுமனத்திடைமதித்தல்போன்று
கூசுதலின்றிச்சாகக் குறித்தவள்கூபம்வீழ்ந்தங்
காசையாற்றெப்பந்தேடு மறிவுபோலாய்த்துன்னாசை.

மருளெனக்கிலைபுலக்கை வாங்கிவாவினாயவென்றன்
சிரமிசைசுற்றவென்போர் செய்திபோற்சன்னாசஞ்செ
யொருமறையோன்றன்வாழ்வையொருவன்கையொப்பி
த்தேகு,மருமயல்போலுமுன்றனாசையையறையுங்காலை

கடுவிசைபெருகுமாற்றின் கரடிகம்பளமதென்று
மூடுகிநீந்திப்பிடித்த மூடனையதுதான்பற்றி
யடுதலிற்கரையிருந்தோர தனைநீவிடுவிடென்ன
விடுகினும்விடாதென்செய்கேனென்றவன்வீழ்ந்தபோல

விட்டவன்றனைபுமாசை விடுகிலாக்காலமாகு
லொட்டுமோநன்ருய்நீங்கவுனக்கியாமுரைப்பதென்னுந்
தொட்டதோரிருப்புலக்கை சூதிறைற்றுணிக்கத்தப்பி
லெட்டருமளவதேனுந் தோல்விகாணெனவுரைப்பார்.

நாணியேயாசையெல்லா நமுவினோர்திரும்பப்பற்றி
ஞணியாய்ப்பற்றுஞ்சென்மத் தருவினையெனத்தவத்தர்
பேணியங்குரைத்துமுன்னைப்பெருகருள்வடிவங்காட்ட
பாணியாற்றெழுதிறைஞ்சிப்பரவிமுன்வெள்கிநின்ருர்.

அதிகதுக்கத்தராகி யஞ்சிமெய்நடுங்கவென்பாற்
கதிநெறியில்லைநீதிக் கருத்தில்லைப்பத்தியில்லை
மதியின்மெய்ச்சாந்தமில்லைமதமுளேனேங்குற்றேனின்
விதிசகளேசவென்னை விடுங்கொலோ விடாதேயையா.

கருமமுள்ளளவுமந்தக் கருமத்திற்கேற்றசெய்து
திரியுமதன்றியென்றுஞ் சிவனருள்சித்தியாது
நிருமலநெறியாகாது நீண்டவாதரவாற்காயை
மருவியேகொய்தாற்றுய்ய மதுரமென்கனியாகாதால்.

பரதபோதனனேபோற்றி பத்தர்பாக்கியமேபோற்றி
சரணநின்சரணேயல்லாற் சார்விலேனென்றுநின்ற
வரமுறுமாதிராசர் மனங்கொளுமிரக்கநோக்கி
யருளுறுமல்லிராச ரன்பினுலணைத்துகந்து.   அஉ

அஞ்சலிவேண்டாந்துக்கத் தழுந்துதலொழிவாயற்ப
நெஞ்சிடையகந்தையுள்ளோர் நம்மிடைவிற்கொணுகா
ணஞ்சொனிகேளேனென்று நவின்றதாலிவ்விகற்ப
விஞ்சையாஞ்செய்தோமென்று மல்லிராசையர்விளம்ப.

மன்பரன்கருணையாலே வந்தவன்வசவராச
னென்பவன்பத்தியென்னு மிரும்பொருணிறுத்தவேண்
துன்பமண்ணகலநம்பாற்றோன்றினன்சுகானுபூதி [டித்
யன்புளக்கவன்றனிலையாகுரீயவன்கண்செல்வாய். அசு

வரசிவாசாரவாரி வைகியேசரிப்பாவென்ற
னானருளாற்பதிற்றைந் தாண்டுகளறு நூறாண்டு
தனையிடைவசவேசன்பாற் றங்கிப்பினமழைக்கப்
பரிவினலெம்பால்வந்தைம் பதுவருடங்கள்சென்று.

ஆகநிற்கெழுநூறாண்டி னந்தத்திலன்றிமுத்தித்
தாகமுண்டாகாதிங்ஙன் றருவதேதேனுங்கேட்பா
யிகநாஞ்சொல்வாயென்ன மாதிராசையரிரங்கி
யோகராமல்லிராசர்க் குறப்பணிந்துணாக்குகின்றார்.

திருவையிச்சிப்பனென்னிற் பிறர்திரியாயுவென்னி
லருளுறுமாயாரூப மண்டர்போகங்கள்வேண்டுந்
தரமலவனித்தத்தாலே தாழ்விலாமுத்தியென்னிற்
பரமனற்பதவியாகும் பற்றிலேனென்றுமென்று. அள

ஐயமுற்றுணர்வாரீர மகத்துளாயத்தனேயென்
றுய்யமண்மீதுநன்று யுறப்பணிந்தெழாதமுன்னஞ்
செய்யநற்கல்லியாணச் செழுநகர்நந்தியாரா
மெய்யர்பான்மாதிராசர் விரைந்துமுன்னிற்கநோக்கா.

கூடலசங்கமேச னென்னவேகுலவிநோக்கா
நீடவட்டாங்கமாக நேசத்தாற்பணிந்துபோற்றித்
தாடலைமீதுசாத்திச் சகளேசமாதிராசர்
சீடராம்வசவராச ரென்னநற்சேவைசெய்யா. அகூ

நறசிவலிங்கபூசை நண்பராயகத்துமுள்ளு
மற்புதத்துடனேசெய்தங் கானந்தவமுதமார்ந்து
சிற்குணமாதிராசர் தேட்ரும்பத்தரான
பொற்புறுநந்திகேசர் பொருவறவைகுநாளின். கூ௦

சகளேசமாதிராஜையர் புராணம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எகூ௦.

திருச்சிற் றம்பலம்.

சகளேசமாதிராஜையர் புராண வசனம்.

திருவம்பை யென்னுந் திவ்வியஸ்தலத்தை யுடையவர் சிவநேய மில்லாதவனைப் பிணமென்று நினைத்துப் பரிசிக்கவஞ்சித் தூரத்திற் செல்பவர் பரத சாஸ்திரங்களிலும் வீணவாத்தியங்களிலும் வல்லவர், வேதாகமமுடிவை நன்றாகவறிந்தவர் யோகமார்க்கத்திற் பயிர்ச்சியுள்ளவர், இல்வாழ்க்கைப் பற்றில்லாதவர், போதுமான கீர்த்தியையுடையவர், சகளேசமாதிராசரென்னுந் திருநாமமுள்ளவர், உலகத்தையாளப்பட்டவர், இவர் குருலிங்க ஜங்கமபத்திமிகுந்து சிரத்தையோடுபூசித்து அநேக உபசாரங்களைச்செய்பவர் சிவபூஜைமுடித்துப் பூஜாந்தத்தில் கௌரிவீணை கைலாசவீணை இராவணவீணை பிருங்கிவீணை கச்சபவீணைமுதலிய வநேகம் பேதமுள்ள வீணவாத்தியங்களிற் காலத்துக்குத்தக்க ராகங்களையிசைத்துச் சகளேசனென்னுஞ் சிவபெருமானுடைய கீர்த்தியைப்பாடுவோராய் இல்வாழ்க்கையை முற்றத் துறந்து ராஜ்யபாரத்திலு மிச்சையற்றனர். இவர் இப்படியிருக்குநாளில் மல்லிராசையனென்னு மரசனொருவர் உலகத்தைநெடுநாளாண்டு இது அல்லலுள்ளதென்று அவ்வரசாட்சியைவிட்டுநீங்கி சிவஸ்தலங்களிற்சிறந்த பருப்பதத்தையடைந்து நிச்சலசித்தராய்ச் சிவானந்தமேலிட்டு ஒருவில்வவனத்தில் தனித்துத்தவஞ்செய்யுமவரது பத்தித்தன்மையையும் சமாதி சாமர்த்தியத்தையும் சிவானுபோகத்தையும் தபஸ்விகள் பலர்வந்து சொல்லக்கேட்டு பேரானந்தமடைந்து அவரது பாதங்

களை யெப்போதுஞாண்பமென்னு மேச்கமுடையவராய் பருப்ப தமலேயையடைந்து அங்குள்ள தெய்வீகங்களைக்கண்டுமகிழ்ந்து மல்லிராஜர் தவஞ்செய்யும் வில்வவனத்தையுங்கண்டு அதிகமகி ழ்ச்சியோடு அவனைத்தேடும்போது அவரு மாதிரா சையரது முறைமையை யறிவோமென்று தமதுதிருவுள்ளத்திலெண்ணி மலேமுதலாகாயமுள்ளளவும் விசுவரூபமொன் றெடுத்துப் பிர மிக்கும்படி நின்றார். அநேகவருஷகாலந்தேடியும் அவரது அடி முடியைக்காணுமல் இளைத்துவருந்தி ஸ்வாமி மல்லிராஜரோ யு மது விசுவரூபத்தைச் சிற்றறிவையுடைய வெளியேனறியவ ல்லனே, உமது திருவருளா லும்மைத்தெரிசிக்க வருள்செய்வீ சென்று தண்டாகாரமாகப் பூமியிற்பணிந் தவ்வாறே ஒருமா தம்வரையி லெழாதுகிடந்தழவே அப்போதுமல்லிராஜரும் அ ருண்மேற்கொண்டு இதுதான் எம்முடைய வடிவமென்று தம து சுபாவவடிவத்தோ டெதிர்நின் றினி யெழுந்திருப்பீரென்று தமது ஸ்ரீஹஸ்தங்களா லெடுத்தணைத்து அழைத்துக்கொண் டுபோய்த் தமதாச்சிரமத்திற் சென்று சிவநைவேத்தியசேஷத் தைக்கொடுத்தருந்தச்செய்து இவர்க்கனுக்ரகிக்கக்கருதி மாதி ராசனை ஒரு வேலமரத்தடியி லிருக்கச்செய்து மறைந்துபோ. ய் ஓரிடையனைப்போல் வடிவமெடுத்து ஆட்டின் மந்தையைச் சாய்த்துவந்து மாதிராஜரிருந்த கருவேலமரத்தை யொடித்து த்தள்ள மாதிராஜர்க்குக் கோபமுண்டாக அதுமூலமாக அக் கோபத்தைத்தணித்து ஞானத்தைப்போதித்துத் தமதுதிருவுரு வை யதாப்பிரகாரந்தெரிவிக்க, அப்போது மாதிராசரும் நாண மடைந்து அதிதுக்கிதராய் நடுநடுங்கி ஒன்றுந்தெரியாத அபக்கு வனையாள்வதற் கிதுசமயமென் றிரக்கமுற்றுநிற்க, மாதிராஜரோ நீர் அஞ்சவேண்டுவதில்லை துக்கத்தினின்று மொழிவீர், சிறிதா

யிறும் அகந்தையுள்ளவர் எமதுமுன்னே நிற்கக்கூடாது உம நபக்குவநிமித்தமாகவே இந்தவித்தையைக் காட்டினோம் என்றருள்செய்து அன்பர்க்கருளுநிமித்தமாகச் சிவானுக்கிரஹத்தாற் பூமியி லவதரித்தவராகிய ஸ்ரீநந்திகேசுவரரிடத்தில் ௬00வரு சென்றிருந்தால் பின்பு நாமழைப்போம் அப்போது நம்மிடத்தில்வந்து ஐம்பதுவருஷமிருந் தானபின் சிவானுக்கிரஹத்தால் இப்போது சென்றவயதோடு ஆகவரு - எ00, இந்தவருஷம் எழுநூற்றினந்தத்திலன்றி உமக்கு மோக்ஷத்திலிச்சையுண்டாகமாட்டாது வேறொருவிஷயத்தி லிச்சையுண்டாமாயின் அவ்வாறே தருவோமென்றுசொல்ல, மாதிராஜரு மற்றொன்றினுமிச்சையில்லாதவராய்ப் பூமியில் தண்டாகாரமாய் நமஸ்கரித்து எழுந்திருக்கு முன்னமேதானே கல்லியாணபுரத்தில் ஸ்ரீவசவதேவர்க்கு எதிரில்நிற்க, வசவதேவரும் வணங்கி யிவரோ குருவாகிய கூடலசங்கமேசரென்று பாவித்துப் பத்திபண்ணிக்கொண்டு மாதிராஜருந் தாமுமாக இருக்குநாளில்,

சகளேசமாதிராஜையர் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

சிக்கமாதையர்புராணம்.

திண்ணியகாலனைத் தீக்கண்மீதிலே
மண்ணினையிறைத்தவன் வாய்மடித்தயன்
பண்ணியவிதியினைப் பறித்துமாயையின்
கண்ணியையறுத்தநற் கருத்தராயரோ. க

மானிடர்தமக்குறும் வருட நூறெனத்
தானுலகுணாப்பதைத் தவிர்க்கவல்லரா
யீனமதுறும்வய தேழு நூறதா
யானுகந்தேறுவார்க் கதிகாண்பராய். உ

முப்பொழுதருச்சனை முயலுநெஞ்சரா
யெய்ப்பறுமிட்டரா யிலிங்கசங்கமத்
தொப்பருநேயரா யுற்றபத்திசெய்
தப்பருமகிழ்ச்சியா மமுதருந்தியே. ௩

தத்துவஞானராய்ச் சரணராகியங்
கித்திறஞ்சரித்திவ ரியலுநாளிலே
யுத்தமபத்தரா யுண்மைநீங்கலாச்
சித்தரோரன்பர்பேர் சிக்கமாதையர். ௪

மருவுதமனைவியு மகனுந்தாமுமா
யருளுறுமாதிரா சையராந்தவ
ரிருகழலனுதின மிறைஞ்சுஞ்செய்தியே
கருதருமுயிருநங் கதியுமென்றரோ. ௫

உன்னியநெஞ்சரா யுற்றதந்தொழி
லன்னிலைவருபொரு ளற்பமாயினுந்
துன்னியதாயினுந் துக்கநற்சுக
மன்னியல்பின்றிநீண் மகிழ்ச்சிபொங்கியே. ௬

தந்தொழில்சாயினுந் தவறுசேரினு
மந்தருமாதிரா சையர்சேவைமேற்
சிந்தைபுநேயராய்ச் செய்யுநாளிலே
பொந்தனவுடலினைப் போட்டகன்றனர். எ

அவரிடமனைவியா ரந்தவாக்கையைச்
சிவதவர்பாதநற் றீர்த்தத்தாட்டியொண்
டவளவெண்பொடியினைத் தணியச்சாத்தியே
துவளுநெஞ்சில்லராய்த் துணிந்ததூயமையால். அ

தக்கநல்லணையொடு சாயத்திருத்தியே
யக்குறியயலவ ரறிவுறுமலே
மிக்கதஞ்சிவார்ச்சனை விரும்புமெல்லையின்
றெக்குறுசமாதியைத் தொட்டுமோசையால். கூ

துஞ்சியவம்மகன் றனுக்கெனத்தெளிந்
தஞ்சியீதென்னதா னன்னையெம்மையன்
பஞ்சணையொன்றியோர் பகர்வுங்காண்கிலேன்
வெஞ்சமெம்முட னுளவெலாம்விளம்புவாய். ம

ஐயனம்முடையர்க ளருகென்போகிலன்
செய்யநற்சிவார்ச்சனை செய்யுமெல்லையின்
கையுறவகழு மிக்கருமமென்னதா
னய்யநம்பார்க்குநல் லாற்றம்வேண்டியோ. மக

உன்னுடன்கோப மென்றொருதினத்திளி
னின்னுடன்வெம்மைதா னிகழ்ந்ததாயினும்
பின்னுடன்றீர்வனிப் பெற்றியின்றியு
மென்னெடும்பேசில னென்னையன்னையே. யஉ

வேளையிற்சிவார்ச்சனை விரும்புங்காலையி
னுளதாயொன்றுநீ யமைத்திலாய்கொலோ
நாளுநின்சீலநீ ணன்மைகுன்றியோ
தாளுறத்தவத்தர்பாற் றாழ்ந்திலாய்கொலோ. யங

திருமெழுக்கிடுகையிற் செந்துசெத்ததோ
வொருபுடைகோமய முற்றதில்லையோ
வருமைசேரரங்கநல் லாலயத்தழ
கொருவியேயிடையிடை யூனமானதோ. யச

விஞ்சியபவுழைக்கலம் விளக்கிலாய்கொலோ
மஞ்சனசாலையின் மலினமுற்றதோ
வஞ்சிநீவிந்திகை யழுக்கலுத்திடா
தெஞ்சியாசரணையி னிழிவுவந்ததோ. யரு

வத்திரங்கொண்டுநீர் வடித்திலாய்கொலோ
சுத்திநற்கந்தநீ துவளவைத்தியோ
யொத்திராதக்கதை யொடிந்திருந்ததோ
கொத்தலர்புழுக்கடி கூடியுற்றதோ. யசா

எடுத்தநற்றூப தீபார்த்தியின்மணம்
படைத்தொளியொன்றுபோற் பாவிற்றில்லையோ
சுடர்த்தருவிளக்கினைத் தூண்டிலாமலே
கெடுத்தனையோவிதென் கிளர்த்தியன்னையே. ௰எ

பரமன்முன்னமுதுநீ படைக்குங்காலையின்
முரலுநின்னாசியின் மூச்சணைந்ததோ
வரனருஞ்சேடமோ டருத்திலாதன
விரவிநீபடைத்தியோ விளம்புகன்னையே. ௰அ

உற்றதோமூவித வுதகமொன்றொடொன்
றெற்றெனவழைத்ததற் கென்னென்றில்லையோ
சற்றுநீயையன்முன் சாற்றிடாதவிக்
குற்றமேனின்றெடேன் கூறிலான்சொலாய். ௰கூ

ஐயநின்சினத்தினை யாறுகென்றியாங்
கைதொழுதின்சொலாற் காலின்வீழ்ந்திடின்
வெய்யதன்வெகுட்சிபோய் விரும்பிப்பேசுவன்
செய்குதுமிச்செயல் செய்தியன்னையே. உ௰

பரமனற்சேடமேன் பசியிலார்கிலன்
திரமதுடையர்பால் சென்றென்சேர்கிலன்
கரமலர்பற்றியான் கசிந்தழைக்கவோ
வுளாயெனவன்னைதா னெண்டுணைக்கையால். உக

பற்றிமுன்வாங்கிநீ பத்தரிற்றெறு
முற்றவர்சிவார்ச்சனை யுளாயையூன்றியே
கற்றனையல்லது கருத்திலாயெனச்
சொற்றியிவ்வேதிகை தொட்டிலுன்னையன் உஉ

சினமொழிந்துன்னுடன் செப்புமையநீ
நனவொழிசித்திரை நண்ணுகென்றுளங்
கனிவுறத்தலைவனைக் கண்டுநெக்கபின்
முனமுறுஞ்செய்திதான் முயலுங்காலையின். உங

புதல்வனுட்புறப்படாப் புறத்துவாயிலின்
கதவினைத்திறந்துளங் கலங்கிமுன்புதா
னிதமுறத்தந்தைபி னேகும்வீதிபோய்
மதமுறுத்தவத்தரா மாதிராசர்முன். உச

அன்புடன்வணங்கினின் றையவையகே
ளென்பிதாவென்னையோ வேதும்பேசிலான்
முன்பெனதன்னைபான் முனிவிலாதவன்
வன்புறுசினத்துடன் மவுனமாகியே. உரு

நீற்றினைநுதல்புய நிறையச்சாத்தியே
நேற்றுநீயளித்தமெ னிளத்தூசினை
மேற்றரித்தணையின்மேன் மேவிப்பேர்கலான்
சீற்றமுற்றென்றன்மேற் சினேகமெண்ணலான். உசு

அன்னைநற்சிவார்ச்சனை யகத்தைக்கொட்டினு
மென்னையோவகழ்ந்துமண் ணெடுக்குகின்றனள்
பின்னைவேறொருவராற் பிணக்குத்தீர்கலா
துன்னையானழைக்கவிங் கோடிவந்தனன். உஎ

நேற்றளவென்னைநன் னேசநெஞ்சுடன்
காற்றுடைமிதினுங் காத்தினுங்கொடு
போற்றியின்சொல்லினாற் புறத்துமீதுற
வேற்றுகந்தணைத்தெனை யிருகணொற்றியே. உஅ

விட்டபினெங்குநான் மேவினும்முடன்
மட்டறுமன்பினல் வாலலிங்கவா
விட்டமேவாவென தெந்தைவாவெனக்
கட்டிமார்பணைத்திரு கண்ணதென்னவே. உகூ

சிறியவென்சிகையினைச் சிக்கறுத்தொரு
குறியதோர்கயிற்றினாற் கூட்டியார்த்துமெய்
யுறுதுகளறத்துடைத் துவந்துபார்த்தபி
னிறையவேநெற்றியி னீறுபூசுவன். ௩௰

மருவியஞ்செழுத்திசை மைந்தவென்பனு
னுரைசெயுங்குதலைகேட் டுவந்துமோந்துநீ
யருள்வசவேசுர னகத்திற்றொண்டனே
சரிகைநற்சவுண்டையன் றொழும்புத்தாதனே. ௩௧

இசைந்தமாதிராசையர்க் கினியசேடனே
முசுண்டிவாழ்சவுண்டையன் மோகமைந்தனே
வசுந்தனாபுகழ்மடி வாலையன்றனக்
கசங்கிடாதேவல்செ யடிமைப்பையலோ. ௩௨

சங்கரதாசையன் றுளிலங்கனே
வெங்கடஞ்சேரமா னேவற்றொண்டனே
வங்கருலூரில்வா ழபயற்காளதாங்
துங்கநற்றொழும்பனே சொற்றியென்றபின். ௩௩

நிம்மவைபெற்றநன் னேயமைந்தனே
நம்மவைகாணாக்கா னங்கைப்பிள்ளையோ
வம்மவைபுதல்வனே வார்கொனீயெனச்
செம்மையாற்பார்த்தெனைச் செப்புமென்னையன். ௩௪

ஏதுவேண்டியதுனக் கென்றுகேட்டென
தாதரவுடன்பசி யறிந்தெனன்னையைப்
பேதுறப்பசியினுற் பிள்ளைநொந்தனன்
காதலால்வாலவிங் கனுக்கனம்படை. ௩௫

என்றபினன்னைதாழ்ந் திருக்கினின்னமு
தொன்றியநண்பிலிட் டேட்டியென்புறந்
தன்றிருக்கரத்தினுற் றைவந்துன்னிடஞ்
சென்றுறினென்னையுஞ் செய்யகைக்கொடே. ௩௬

வந்துநின்மலர்ப்பதம் வணங்கியுற்றபின்
மைந்தனல்லிச்சையான் மடியில்வைத்துயா
ணந்தருந்தன்குரு நாமமாகையாற்
சந்ததமென்றனைச் சற்றுநிந்தியான். ௩எ

இப்பொழுதழைக்கினு மேதுசொல்லினுஞ்
செப்பலனென்னுடன் றேவிதன்னுடன்
வெப்பமதிப்படி மேவலாகுமோ
வப்பனேனிக்குண மடைந்ததன்மைதான். ௩அ

பூசனைபுரிந்திடும் போதுமேல்விழை
ஞசையார்பூசைமு னமுதிடென்றிலே
னேசமோடாற்குநா னிவேதித்தன்றுணே
னேசுறுவீதியங் காடிக்கிச்சியேன். ௩௯

என்னிடைதப்பிலை யிப்பிணக்கெலா
நின்னிடநிமித்தமா நீங்கினல்லது
பின்னையாரொருவர்தம் பேச்சுங்கேட்கலா
னுன்னடிகண்டிடி னொழிவன்றன்சினம். ௪௰

தாமதமின்றியே சரித்தின்றெம்மட
நீமகிழ்ந்தணையென நின்றுவேண்டியே
பூமியிற்பணிந்துமுன் புலம்பிப்போற்றியே
காமுறுமனத்தினற் கலுழ்ந்துகைதொழா. ௪௧

ஐயர்தாஞ்சாத்திய வரியவேட்டியைக்
கையினலடிக்கடி கலுழ்ந்துவாங்கியே
துய்யதாள்பற்றிமுன் சோதித்தென்பிதாச்
செய்யுமம்முனிவுநீ சென்றலால்விடான். சஉ

கடிதுடன்வாவெனக் கரம்பிடித்திழா
மடமைசேர்கருத்தனும் வாலலிங்கனை
விடுவருகுதுமென விளம்பிமெய்த்தயா
வொடுமெனமுருகியே யுரைசெய்கின்றனர். சங

வே று.

தரைமிசைவிரதசீலர் தம்மிடங்களிலேகோபம், விரைய
வேவந்தாலில்லாள் விமலனர்ச்சனைசெய்வீட்டைப், பு
ரைபடத்தோட்டுகின்ற புதுமையாங் காணேங்கேளே,
முரையிதின்விவரமுண்டீ துற்றுடனுணர்துமென்று.

வாலலிங்காவாவென்று மாதிராசையர்தம்மைச்
சாலவேயாண்டுகொண்ட சகளேசர்சரணமுன்னி
நீலகண்டாவுன்னன்பர் நெஞ்சகநினைத்ததெல்லா
மேலநீயறிந்தளிக்கு மிறையவனதலாலே. சரு

நம்புநினடியேன்சொல்லு நற்றிருவாக்குப்போல
வெம்பிரான்பலிக்கும்வண்ண மின்றருளென்றோர்செய்
டம்பிரான்மாதிராசர் தஞ்சகளேசராய [யுட்
செம்பரன்மீதிற்பாடிச் சிக்கமாதையரிற்சென்றார். சசு

மனையகத்தென்செய்கின்றாய் மாதேயிவ்வாலயெங்க, ளி
னைவருமிருளிற்செல்லநீயறிந்திருந்ததென்னை,சினமுன
துடனென்சொல்லாய்சிக்கமாதையனுங்கென்று, வினவ
லுமனைபுண்மாது விரைந்துவந்திறைஞ்சிநின்றார். ௪எ

அருமைசேர்மாதிராச ரகத்திவனணைந்துமைந்தன்
றெருமால்விலக்கிடாதே சிக்கமாதண்ணுமோன
மருவிநீயிருப்பதென்ன வாசிவார்ச்சனைக்குவேலை
யொருமைசேர்பத்தியேகாண் முத்தியினுபர்ச்சிவாவா.

என்றுதங் கருணைநோக்கா லின்மொழி யுரைத்தவா
றே, சென்றவப்பிராணன்வந்து தேகத்துட்புகுந்துதூ
க்கம், பொன்றினார்போலெழுந்தார்பொறிபுலன்பொரு
ந்தினார்மு, னின்றமாதரசர்தம்மை நேர்கண்டார்நேசங்
கொண்டார். ௪௯

பயந்தருபத்திபொங்கிப் பணிந்தவர்பதாம்புயங்க
ணயந்தருநுதலிற்கண்ணி னற்புயத்தொன்றச்சாத்திச்
சயந்தருபுளகங்கொண்டு சலசமென்கரங்கள்கூப்பி
வியந்தெனையாளவந்த விமலனேபோற்றிபோற்றி. ௫0

பாவநாசனனேபோற்றி பத்தர்தம்வாழ்வேபோற்றி, மா
வரங் கொடுக்கவல்ல மாதிரா சையாபோற்றி, சீவனே
போற்றியென்றுஞ் சிக்கமாதையர்முன்னு, மூவரும்ப
ணிந்துநின்றார் முன்னுமுந்தவத்தோர்சொல்வார். ௫க

தந்தைதன்பத்தியாலே தனயன்றனுவியத்தன்
வந்திடச்செய்தானிந்த மைந்தன்றன்பத்தியாலே
யந்தமாந்தந்தையாவி யளித்தமையுணக்கேசெல்லுந்
தொந்தபாசங்களுன்னைத் தூரத்திற்கண்டாக்கின்றால்.

செவிடர்காதுன்சொல்லுற்றுற் றெளிந்தெலாங்கேட்ப
னுவமையினயனமுற்ற வூமருமுனைப்பரோபுன் [ரோசின்
பவமுறுங்குருடரெல்லாம் பார்த்தறிந்திடுவரோமு
னவமுறுமாமயத்தோ ரனுமயராவரன்றே. ருஙு

விருத்தருன்கருணைநோக்கின்வெளிப்படின்வாலராவார்
மரித்தவரொழுந்துபோற்றி மண்ணிடைநடத்தலாலே
யருத்தலாவிடமுந்துய்ய வமுதமாமையாயாங்கள், விரி
த்துனைப்புகழ்ந்துரைக்கும்விளம்பலமெய்யேயென்றார்.

அமுதபிள்ளைக்குத்தந்தை யருந்தனமளித்துநன்மை
தழுவுநின்பெருமைதன்னைச் சங்கரன்வல்லனென்றார்
வழுவிலாநண்பர்சிக்க மாதையர்வாழச்செய்த
விழுமியமாதிராசர் விரைந்துநம்மடத்தணைந்தார். ருரு

சிக்கமாதையர் புராணம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - எஅரு.

திருச்சிற்றம்பலம்.

சிக்கமாதையர்புராண வசனம்.

மாதிராசரென்பவ ரிவ்வாறிருக்குங்காலத்தில், உத்தமபத்தியுள்ளவராய்ச் சிவார்ச்சனையிற் சிறந்தவராகிய சிக்கமாதைய ரென்பவர் தமது மனைவி புத்திர னிவர்களோடு ப்ரதிதினமும் மாதிராசையரது பாதங்களில் வணங்கித்துதித்து அதுவே முத்தியென்னும் விவேகமுடையவராய் தமது தொழிலில் வரும் பொருள் சிறிதாயினும் பெரிதாயினுஞ் சுகதுக்கமின்றி தமது நியமந் தவறுதிருக்குங்காலத்தில் பிராணவியோகத்தை யடைந்தனர். அவர் மனைவியாரும் அவரதுதேகத்தை சிவசரணரது பாதோதகங்களால் திருமஞ்சனமாட்டுவித்து விபூதியையுநிறையத்தரித்து எவ்வளவுந் துக்கியாதமனமுடையவராய் பஞ்சணையோடுசேர்த் துட்காரவைத்தக்குறிப்பு அயலார்க்குத் தெரியாத வண்ணமாகப் பூசித்துச் சமாதிக்கிடம்பண்ணுங்காலத்தி லிவற்றையெல்லாம் பார்த்திருந்த இளமைப்பருவத்தையுடைய விவரதுபுத்திரன் தமது தாயைப்பார்த்து இதென்னவாச்சரியம் தாயே எமதையர் இவ்வணையிற் சாய்ந்துகொண்டு ஒருவார்த்தையுஞ் சொல்லாதிருக்கின்றார் நம்முடையவ ரிடங்களிலெங்குஞ் செல்லாதிருக்கின்றனர் இவற்றினுண்மையைச் சொல்லவேண்டும், இவர்க்கேதேனுங் கோபமுண்டோ உங்களிருவரிற் கோபமேதேனு மிருந்தாலு முடனேதீர்வது இதுகாறும் வழக்கம், இப்போது நீடித்துப்பேசாதிருப்பது யாதுகாரணம், எம்மிடத்தும் பேசக்காணேம், சிவார்ச்சனைக்காலத் தேவல்செய்யா

திருந்தனையோ, அல்லது அப்போ தாசாரமின்றியிருந்தனையோ, அதிதியாகவந்த பெரியோனை யேதேனு மவமதித்திருந்தனையோ திருமெழுக்கிடும்போது செந்துக்கள் சேதப்பட் டிருக்குமோ, பாத்திரங்கள் விளக்கவில்லையோ, திருமஞ்சனம் வடியாதெடுத்தனையோ, பத்திரபுஷ்பங்கள் தோஷமுள்ளதாக விருந்ததோ, இதுமுதலிய தோஷங்க ளேதேனுமுண்டோ என்று புத்திரன் கேழ்க்க, அதற்குத் தாயாரும் குழந்தையைப்பார்த்து நீ சிவார்ச்சனைசெய்யு மிடந்தோறுஞ்சென்று அந்தவார்த்தையை நன்குகக் கற்றுக்கொண்டாயாதலாற் றெரிந்தவன்போலிந்தவார்த்தையெல்லாம் பேசுகிறாய் கருத்தறியாதவனாக விருக்கின்றாய், இவ்வேதிகையையிடித்துக் குழிபறித்தா லுன்றந்தை யிப்போது பேசுவார், நீ படுத்து நித்திரைசெய்வாய் என் றக்குழந்தையைப் புறத்திற்செலுத்திப் பின்பு முன்போலவே தமது கிருத்தியத்தைச்செய்ய, அப்புத்திரராகிய வாலலிங்கையரும் தாழிட்டகதவைத்திறந்துகொண்டு வெளியேபுறப்பட்டு தமதுதந்தையோடு நாள்டோறும் வழககமாகச்செல்லும் வீதியிற்சென்று குருவாகிய மாதிராசையரிருக்கு மிடத்திற்குப்போய் அன்போடு வணங்கித்துதித்து ஸ்வாமி எமதுபிதாவானவர் யாதொருவார்த்தையுஞ் சொல்லாதிருக்கின்றார் அதுகாரண மறியேன், இதுகாறுமெமதுதாயினிடத் தொருகோபமுமில்லாதவர் இப்போது வலியகோபத்துடன் மவுனமாகி விபூதியை நெற்றியினிடத்தும் புஜத்தினிடத்துந்தரித்து நேற்றுத் தம்மிடத்துப்பெற்ற வஸ்திரத்தையும் போர்த்துக்கொண்டு அசைவற்றிருக்கின்றார், என்னிடத்துள்ள பக்ஷத்தையு நினைக்கவில்லை, எமதுதாயும் சிவார்ச்சனைஸ்தானத்தில் மண்வெட்டிகொண்டு குழி வெட்டுகின்றாள், எமதுபிதாவும் வேறொருவரால் அப்பிணைக்குத் திரமாட்டார் ஆ

தலா லும்மை யழைத்துப்போதற்கு ஓடிவந்தேன், தேவரவ்விடத்துச்சென்றாலல்லது அப்பிணைக்குநீங்காது, ஆதலா லிப்போதே தாமசமின்றி யெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க. மாதிராஜையரும் பூமியில் புருஷனிடத்துக் கோபம்வந்தால் பூஜாக்கிரகத்தைவெட்டிக் குழியாக்கும் புதுமைகேட்டதில்லையென்று நினைத்து அவரது பிரார்த்தனைப்படியே சிக்கமாதையரது திருமடத்துச்சென்று அவரது பத்தினியானாயுமழைத்து நடந்தவிருத்தாந்தங்களையெல்லாம் விசாரித்துத் தமது உபாசனமூர்த்தியாகிய சகளேசனைத் தியானித்து ஸ்வாமி நீலகண்டரே நீர் அடியார்நினைத்தவை நினைத்தபடி யளிக்கின்றவராதலால் அடியேன்சொல்லும் வாக்குப்போல வருள்செய்யவேண்டுமென் றொருசெய்யுளை பாடிச் சிக்கமாதையனைத் தமது திருவருளால் நோக்கிச் சிவார்ச்சனைக்கு முயற்சியொன்றுமில்லாமல் மௌனமாகவிருக்குங் காரணமென்ன அந்த மௌனத்திலும் பத்தியே முத்திகாரணமாகும் சீக்கிரத்தி லெழுந்திருந்துவாரும் என்றழைக்கச் சிக்கமாதையரும் தூங்கியெழுந்தவர்போல எழுந்துவந்து தமது மனைவி புத்திரரோடு மாதிராஜனைவணங்கித் துதித்துநின்றார். மாதிராஜரும் சிக்கமாதையர்க்கு அநேகஞ்சித்திகளை யருளிச்செய்து தமதுமடத்திற் சென்றார்.

சிக்கமாதையர் புராணவசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

—*—

மடிவாலமாச்சையர் புராணம்.

மற்றுமொருபேரன்பர் மடிவாலமாச்சையர்
நெற்றிவிழியாரன்பர் நேயரதிவீரத்தார்
வெற்றியுள்ளார்காலகன்ம மேவாதார்மெய்ச்சீலர்
பற்றியென்றும்பவிகளைத்தாம்பரிசியாப்பான்மையார். க

சிட்டர்கன்மஞ்சேராதார் திருந்தியமெய்ப்பத்தியினு
ருட்டருகாமாதியா ரென்றுமில்லார்சிதேந்திரியர்
சிட்டர்சுகர்சிட்டரேர் நியாயத்தர்நிமலமூத்த [ர்.
ரிட்டமுறுங்கோட்டிநன்று யிசைக்கவல்லவிருந்தவத்தா

தர்க்ககரிக்கரியன்னூர் சன்மார்க்கமன்றியொல்லா
ரெற்புயத்தின்வலிமிக்கா ரிப்பரிகபுரியென்னுஞ்
சொற்பதியார்தவராடை தூய்தாக்குந்தொழிற்குலத்தார்
நற்சரணர்நிதியனையார் நம்பனைநெஞ்சகலாதார். ௩

வந்துசிவதவராடை மகிழ்ந்தளிப்பாயெனக்கேட்கிற்
சிந்தைமகிழ்ந்தவர்க்குதவிச் சென்றுடையோர்கேட்குங்
லந்தவுடையேகொடுக்கு மதிகவரம்பெற்றுள்ளா [கா
ரிந்தநிலைமடிவால மாச்சையனெனும்பெரியோர். ச

வசையறியாவசவேசர் வண்பத்தியெனும்பெருமை
யிசையுலகமெங்கெங்கு மெய்தக்கேட்டின்புற்றே
விசையமிகுமாச்சையர் நந்திகள்பான்மேவியா
மசைவிலருந்தவராடை யழுக்கறுத்துய்வாமென்று. ரு

சென்றுகலியாணமுற்றுத் திருநந்திகளைப்பணிந்தா
வென்றிவசவேசுரரு மிகச்சரணமெனத்தொழுதா
ரொன்றுபெரியோர்க்கிவர்சி ருவந்துறைத்துமடங்கொடு
த்தா, ரன்றுமுதற்றவராடை யழுக்கறுத்தங்கமர்நாளில்.

பாவிடத்தும்பணியர்ச்சொல் பத்தியலவென்பதனைத்
திரநலத்தாரறிவிக்க நந்தியார்தெளிந்துன்னிக்
காதலத்தாங்கண்ணுதலைக் காதலினாலருச்சிப்பா
ருரவுள்ளத்தாலேத்துவா ருணரார்போலோதுவார். எ

என்னையொன்றுகேட்குமன்ப ரில்லாமலென்னுடல
நன்னயம்போயிளைத்ததென நம்பர்மேலொருவசனஞ்
சொன்னயத்தால்வசவேசர் சொலக்கற்றோர்மாச்சையர்
முன்னயந்துபாடுதலு முனிந்துகையாற்செவிமூடி. அ

அரகராவிந்தவுரை யார்கேட்பார்வசவேச
ரிவலர்கள்போற்றவரை யெண்ணினரோயிந்தமொழி
திரநலோர்வாக்கினுற் செப்புவதோதீனரோ
பரனையாதரிக்குமன்பர் பாவியேனெனப்பகர்வார். கூ

முத்திநெறியுத்தியல்ல முதிர்ந்தபேரறிவல்ல
பத்தியல்லசிவனன்பர் படிக்குநல்லதுதியல்ல
புத்தியுளாகநிகட்கிப் புத்தியென்னபோநீயொன், றொத்
திமொழிந்தானன்ப ருடையொலிக்கவுவந்துசென்றார்.

அவ்வசனமாச்சையர்முன்னணைந்துரைத்தோரகன்றஞ்
செவ்வியராம்வசவேசர் திருமுன்புசெப்புதலு [சிச்
மெவ்வமுறுமனத்தரா யாமறியாதிசைத்தவிந்த
வெவ்வியம்பின்குற்றமெந்த விதத்திறைல்விடுமென்று.

மடிவாலமாச்சையர் மலர்ப்பதத்தில்வந்திறைஞ்சி
யடியேனபராதி யபராதியாண்டருள்வாய்
கடியேனுங்காரிகொய்யன் கடுங்கோபியசடன்மெய்ந்நா
ல்,படியாதநுராசாரி ப்ராந்தினனிற்பாக்கியத்தேன். ௰உ

அவகுணியனறிவில்லே னைசவலேயகத்துறுவேன்
சிவகுருவின்வழிநில்லேன் றிறல்விடயத்தொழுகுவேன்
பவமதியன்வெங்கீதர் பாற்பிரியேன்பகரறியேன்
கவலைநெறியேயென்றன் கருத்தகங்தையகற்றுவாய். ௰௩

நாவிலக்கத்தெண்பதினா யிரம்வசனநவின்றதெல்லாந்
தாலமலையினைச்சுணங்கன் சந்தித்துக்குரைத்துநின்றாற்
போலுமெனதடிமைநெறிப்புன்மைநீபொருட்கொள்ளா
க், காலமெலாமென்பத்தி கண்ணுதலோர்க்கிதம்ன்றே.

அஞ்சலெனவெனத்தெருட்டி யரும்பத்திகாட்டாயேற்
றுஞ்செனச்சொலியதுய்ய சொற்குருவேநற்பொருளே
வஞ்சகனேனவகுணத்தை வாட்டுகெனுமிரங்குநாயாற்
றஞ்சமளியெனநிற்பார் தம்மொழிகேளாதவர்போல்.

அறிவிலார்தம்மனம்போ லாவதென்னவரனன்பர்
வறியருநாஞ்செல்வருமோ வசனமறிந்துணையாதென்
னெறிதெளிவிப்பாரில்லா நீதியோநன்றுநாஞ்
செறிபுநல்லவிதரணரோ சிவனடியாரிரவலரோ. ௰௬

வாங்கறிஞர்க்களிப்பவர்த மனைத்தநந்தை யென்னுனைப்
போ,நாங்கொடுக்குமிபங்குதினா நல்லாடைநாரியர்பொ
ன்,றுங்கரும்பேராசாரத் தவத்தோர்க்குச்சாக்கலவென்
றேங்கியதங்கரத்தாடை யுதகந்தோய்த்துதறினர். ௰௭

உதறியவத்திசைதோறு மொளிருநவமணியினங்கள்
சிதறியெங்கும்பரந்தகுழுத் திரடிரட்டியெடுக்கலாய்ப்
பதறியமின்னிறம்போலப் பல்கதிராய்விளங்குதலாற்
கதறியகன்றணைபசுப்போல் வசவேசர்கருத்தழிந்தார்.

பொங்கியவங்கலியாண புரத்தருடன்விச்சலன்வந்
தங்கிபலுமணிக்குவைகண் டதிசயமுற்றஞ்சிநின்றே
தங்கியசிர்ச்சிவகணத்தோர் தங்கருணைமாச்சையர்போ
லிங்கிலைபெற்றவரென்ன வேத்திமகிழ்ந்தேகினன். ௰௯

வளர்பெருமைமடிவால மாச்சையர்வண்பதமேற்
கிளர்பயத்தாற்பணிந்துவச வேசுரர்தாங்கீர்த்திப்பா
ரளவிலபாதிபா யறிவிலியாயாக்கத்தாற்
றளர்வுறுவேனின்மேன்மை தனைப்பார்க்கத்தக்கவனே.

நின்மலனீநுன்மலனா னீ,தன்மியானதமன்
கன்மமிலிநீவெய்ய கன்மியான்கடும்பாசப்
புன்மையிலானீபாசப் போதனான்பொறைஞானத்
தன்மையனீயஃதில்லாச் சடனீநிச்சழக்கனான். உக

சுத்தனீயசுத்தனான் சொற்குருநீசீடனா
னுத்தமனீயதமனா னுதாரனீயேற்போனான்
பத்தியுயிர்நீபத்திக் கீனனான்பற்றூர்பாற்
பெத்தகுணமுற்றக்காற் பெரியோர்கள்பார்ப்பரோ. உஉ

பணிமொழியும்பத்தியுமென் பாற்பார்க்கிற்சிறிதுமிலை
நுணிபொறியேனகந்தை நாறிபருள்வாழ்வளிப்பாய்
துணிபுசலசன்மார்க்கத் தூநெறிதந்தெனையாள்வாய்
தணிபுசிறையறிவிதெனத் தரும்பத்திப்பெருந்தருவே.

நாறுயிரங்குற்ற நோக்கிலென்பாலுண்டவற்றை
நீறுக்கியாளென்று நின்றவசவேசுரனா
யாறுரபுன்முறுவ லாலணைத்துமாச்சையர்
வேறுகாதுகந்திடலும் விரும்பிபருந்தவரெல்லாம். உச

ஆராயினாவிடத்து மருங்கோபமனுக்கிரகம்
பேராமலுண்டுலகர் பேணுநற்ருனியக்குற்றஞ்
சாராமனிக்கிபுண்பார் தம்மடியார்களங்கத்திற்
சேராமற்கழுபின்ரேதெளிந்தநல்லோராட்கொள்வார்.

உடையதன்மேற் கோபமன்றே யொலித்தலழுக் கோடவன்ருே, வடைகளங்கமறவன்ருே வருநிதியைச் சுடுகின்ருர், விடையுடையார்க்கினியவச வேசுரர்தாம் விரும்புபத்தி, கடைசெலவேமாச்சையர் கழுதலுங்க ளைக்கென்ருர். உ௬

இந்நிலையங்கிருந்தவரும் பத்தர்களுமேத்திநிற்கு, மன் னிலேயேதொழுங்காத்தரானவசவேசுரனை, நன்னிலேயா மாச்சையர் நாடிமனத்தகங்கரித்தாற், புன்னிலையாப்பந் தியெனப் புகன்றுமுன்னேர்செயலுணைப்பார். உஎ

மடிவாலமாச்சையர் புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - அ௬உ.

திருச்சிற்றம்பலம்.

மடிவாலமாச்சையர் புராண

வசனம்.

இன்னமு மொருசிவபத்தர் மடிவாலமாச்சையரென்னுந்திரு நாமமுள்ளவர், ஈரங்கோலியர்குலத்துத் திருவவதாரஞ்செய்த வர், அடியார்களாடை யழுக்கைப் போக்கும் விரதமுள்ளவர், இப்பரிகபுரியை யிடமாகவுடையவர், இவர் வசவதேவரது புக ழைக்கேள்விப்பட்டு அவரது சன்னிதியிற்சென்று அடியார்க ளாடை வெளுத்துக் கடைத்தேறுவமென் றெண்ணிக் கலியா ணபுரியிற்சென்று வசவதேவனை வணங்கித் துதித்து நின்றார். வசவதேவரு மவர்க்கெதிர்வணங்கி மடத்திலிடங்கொடுத்தனர். அன்றுமுதலாக அடியார்க ளாடையை யழுக்கைப்போக்கி யி ருக்குநாளில் ஒருபொருள் வேண்டுமென்று கேழ்க்கு மடியா ரில்லாமையா லென்னுடல மிளைக்கின்றதென்று வசவதேவர் சொல்ல, இதைக்கேட்டிருந்த வடியார் மாச்சையரிடத்துச்சொ ல்ல அவரும் ஹரஹரவென்று கைகளாற் செவிகளைமூடி இந் தவார்த்தையை யார்கேட்டுச்சகிப்பர் பாவியேனுதலாற் கேட் டுச்சகிக்கின்றேன், வசவேசர் அன்பரை யாசகர்போல் நினைத் ததாகத் தோற்றுகின்றது இந்நாதிகட்குப் புத்தி யிவ்வாறுனகா ரணமென்னென்று தமதுதொழிலிற் சென்றனர்.

அந்த வார்த்தையைக் கேட்டிருந்தவர் வசவதேவரிடத்து ச்சொல்லுதலும் நாமறியாதுசொன்ன விந்த வார்த்தைக்குற்ற மெவ்வாறு நீங்குமென்று ஆலோசித்து மடிவாலமாச்சையரிட த்துச்சென்று அவர்பாதங்களிற் பணிந்து அடியேன் அபராதி

அகங்காரி பொறுத்தருளவேண்டும், பத்திமார்க்கத்தையு மின்ன தென்றருள்செய்ய வேண்டும் எமது குருவேயென்று வணங்க, வசவேசரே அரனன்பர் வறியரும் நாஞ்செல்வருமென்றுநினைத் திரோ, சிவனடியாரிவரல்லவென்றுநினைத்திரோ, நாங்கொடுக்கு ம் யானை குதிரை வஸ்த்ராபரணங்கள்முதலாயின சிவஞானிகளு க்குப் பொருளல்லவென்றுசொல்லி தமதுகையிலிருக்கு மடியார் கள் ஆடையிலொன்றையுதறினர். அதிலிருந்துவீழ்ந்த நீர்த்து ளிகளெல்லாம் நவரத்னங்களாக அந்தத்திக்கெல்லாம் நிறைந்து மலைபோலக்குவிய வசவதேவரு மொன்றுந்தோற்றுமற் பிரமித் துநின்றார். இதைக்கேட்ட விச்சலராசனும்வந்து பலவாறுபுகழ் ந்து அதிசயித்தான். தேவர்களும் பூமாரிபொழிந்தார்கள். வசவ தேவர் மீட்டு மடிவாலமாச்சையனைப்பணிந்து உமதுபெருமை யையளியேனறிவேனோ,நீசத்தன் நான்அசத்தன் எவ்வளவுகுற் றமென்னிடத்திருந்தாலும் பொறுத்தருளவேண்டுமென்று பிரா ர்த்திக்க,மடிவாலமாச்சையரும் புன்முறுவலோடு வசவதேவரை யணைத்துக்கொண்டு கைவிடாமல் மனமகிழ்ந்தனர். அங்கிருந் த சிவனடியார்கள் மடிவாலமாச்சையர் கோபித்ததன்று சிவனி டத்துங் கோபானுக்ரஹ மிரண்டுமுண்டு அதுபோலஇந்தகோ பமும் அனுக்ரஹ நிமித்தமே, எதுபோலென்னில் ஆடையை யடித்தலும் பொன்னைச்சுடுதலும் அவற்றின் களங்கத்தைப் போக்குதற் பொருட்டன்றோ வென்றனர். இந்தச் சமயத்தில் வசவதேவரைப்பார்த்து உலகத்தில் எவ்வளவுபத்திசெய்தாலும் அகங்கரித்தா லுடனே யந்தப்பத்திமுழுதும் நாசத்தையடை யும் என்று ஒருசரித்திரத்தைச் சொல்லத்தொடங்கினர்.

மடிவாலமாச்சையர் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

சங்கரதாசையர் புராணம்.

திரைநரைமூப்பிடர்மரணஞ்சேராத்தீரர்சேயிழையா
ரிடையின்பஞ்சிந்தியாதார், தரையிலெதிர்பரவாதர்தர்க்
கம்போதச் சங்கரித்ததன்மையர்சங்கரதாசையர், பரநெ
றிநித்தானந்தர்காலகன்மப் பற்றிலார்பவித்திரத்தார்பர
தெய்வங்கள், வெருவவருபராக்கிரமர்வீரோசன்றன் வீர
மன்னவுக்கிரத்தார் விசயத்தோளார். க

சங்கமாபுரியென்னுந் தலத்துவாழ்வார் தாவாதபிறவி
மர்தனைத்தறித்தா, ரங்கவர்தந் தொழிறவத்தோர் கந்
தைதைப்பா ரஃதுதினமைஞ்ஞாழிநெற்கொடுப்ப, மங்
கையொருபாகனன்பர் வந்தோர்க்கெல்லா மாறுமலமு
தளிக்கும்வரம்பெற்றுள்ளார், பொங்குலகோரிவர்செய
ற்கைபுதுமையென்று போற்றிமகிழ்ந்திறைஞ்சவேபொ
ருந்துநாளில். உ

செந்நிலையச்சங்கமாபுரியில்வாழுஞ் சேடதாசையனொ
னுக்கிருப்பேருள்ளார்,பன்னிரண்டாண்டாகநெய்தோர்
பட்டின்றூசு பார்த்திபன்முன்விலைக்களிக்கப்பரிந்துசெ
ல்லு,மந்நிலையோர்சங்கமர்வந்தெமக்குத்தாவென்றறைந்

தளாவிலளித்திறைஞ்சவவரிலெல்லா,நன்னிதியுநெற்கூடு
நிறைந்தெந்நாளு நாசமுறுவகைபெற்ருர்நம்பனன்பால்.

தங்கியவித்தன்மையார் சேடதாசையர் சங்கரதாசை
யர்தம்மைச்சந்தித்தன்பா, ளங்கவலையறத்தொழுவாமெ
ன்றுசென்று நண்ணியவர்பதத்திறைஞ்சிநண்பாப்பேசி,
யங்கவர்தமகத்தக்க மொன்றுமின்றி யாயிருத்தல்கண்டு
டன்றம்மனையுளோகி, யிங்கதிகச்செல்வநா முற்றிருந்து
மிந்திலஞ்சங்கரதாசர்க் கென்னவெண்ணு. ௪

தப்பருநற்சிவானுபவச்சதுரராகுஞ் சங்கரதாசையர்ம
டத்திற்றவிடுதானு, நொய்ப்பிளவுமுமியுமிலை யென்று
நொந்து நுடங்கிடைத்தமனையார்க்குநுவன்றதற்பி, னப்
பொழுதங்கொருகூடை நெற்கொடுத்தோ ராளின்கைய
னுப்புதலுமவன்கொண்டேகி, யொப்பறுசங்கரதாசர்மு
ன்வைத்திங்கெ லுவந்துசேடத்தாசருமக்களித்தார். ௫

என்றலுஞ்சேடத்தாசர்நம்மேற்போதவிளியொனவி
ன்றறிந்தோமெம்பாலின்மை, குன்றவிந்தநெல்லளித்தா
ர்நன்றுநன்ருேர் கோசிகமெய்த்தவர்க்கீந்துகுறையாநெ
ற்கூ, டன்றுபெற்ருரின்றிதனையாங்கைக்கொண்டாலற
மிடியனுந்தமக்கொன் றளிக்கமாட்டோ, மொன்றியதம
னத்தன்பாலுகந்திந்நெற்று முதவினத்தாலுத்தமருத் த
மனொன்ருேதி. ௬

அந்தநெல்லையோர்பிடியுளடங்கும்வண்ண மங்கையா ற்சங்கரதாசையர்பிடிக்க, முந்தையகத்துளதனதானிய ங்களெல்லா முற்றுமற்றுச்செல்வமொன்று முன்னிலா ம, லுந்துகளஞ்சியந்தோறும்பார்க்கப்பார்க்க வொருநெ ல்லுமருந்திற்குமுளதாகாமல், வந்தமிடிகண்டுமிகச்சே டதாசர் வருந்தவதற்கவர்தேவிவாடிச்சொல்வாள். எ

தரமறிந்துசெய்யாதபத்தியெல்லாந் தவறுநம்மனத்த கந்தைத்தன்மையாலே, யரனையசங்கரதா சையர்க்கு நெல்லின்றுளின்கையனுப்பநமக்காயோநன்மை, பரமத வர்பசிதீர்க்கும்பத்தர்க்கின்மைப் பகுதியிலையவரிடத்து ப்பரன்முனின்று, வரமுனக்குவேண்டியதே தென்ன வென்முன் வந்துநீநின்றதேவரமற்றெல்லேன். அ

என்னமற்றுநாங்கொடுத்தல்வேண்டாமென்ப தியல் பல்லவேதேனுங்கேட்பாயென்று, நன்னயத்தாலருளுத லுமாகிலையா நாட்டமெனக்கிரண்டுமிராப் பகற்போற் றேன்றி, மின்னுகரத் தூசியினிற் சரடுகோக்க விளங் கொளிதாவெனவத்தன் விரும்பிநோக்கித், தன்னயனம் போனெற்றிக் கண்ணுமீயத் தாம்பெற்றதலைமையர்சங் கரதாசையர். கூ

குத்திரதெய்வங்கண்மதங் குலைப்பாராயுங் குலவுமத மெனுங்கிரிக்கோர் குலிசம்போன்று, மத்திராம்பரசம

யக்கயங்கட்கெல்லா மடற்சிங்கமெனநெற்றியம்பகத்தா, லொத்திவிழித்திடப்படிலென்பொடிந்துநெக்கங் குருவ மறநெறநெறென வுடைந்துவெந்தே, யத்தனாமேற்சித றியெங்கும்விழ்ந்துநாளா யழிந்ததுகண்டறபதெய்வமா மனைத்தும். ம

அஞ்சிமிகவிரைந்துவந்தங் கவர்முன்னின்றுன் னடி யோங்கட்கானதொழிலருள்வாயென்ன, நெஞ்சினிடை யருள்கூர்ந்தங்கவரைக்காத்து நீயினதுநீயினதுசெய்வா யென்ன, நஞ்சிறுமைநீங்கியுய்ந்தேமென்றுதத்த நல்ல டிமைத்தொழிலனைத்து நயந்துபற்றி, வஞ்சிநடுக்காளி முதலானதெய்வ மடந்தையர்கள்பணிசெய்து வணங் குநாளில். மக

இப்படிசங்கரதாசரீசன்கிர்த்தி யெங்குநிறைத்திருப்ப தனை யெண்ணுநகி, யப்பெரியகலியாணப் பட்டணத் தோ ரரிதாசன்சகதேவமல்லனென்பான், வெப்பமிகும ரிகரியைக்கோறல்போல மிக்கதேவனாயடர்த்தல்வீரம ல்லாற், றப்பறியாச்சிறுதேவர்தம்மைச்செற்றென் சங் கரன்பாற்பெற்றநெற்றித் தழற்கண்ணாலே. மஉ

ஆதியெம்மாதவனைவென்றுலன்றோவென்றி யதுமா ட்டானஞ்சலின்றி மாயன்றன்னைப், பூதிதருநுதற்கண் ணாலெதிர்த்துப்பார்த்துப் போவனேற்போதுமெனப்பு

கன்றிகழ்ந்து, நிதியலுமனத்தினனப்பட்டணத்துட்செய்யதொருகேசவாலயத்தைச்செய்யா, கோதரியுமூச்கிலரியுருவமாகக் குயிற்றியதன்மேற்பஞ்சலோகங்கூட்டி.

நிறுத்தியதற்கேற்றதுகிலாரமாதிநேசத்தாற்றரித்தருச்சித்தேத்திமேளங், கறுத்தகடலெனவிரவும்பகலுமார்க்குங் கடுமொலியைக்கேட்டதனைக்காண்பமென்று, செறுத்தபெருங்கோபத்தாற் சென்றுவென்றிச் சித்தராய்ச்சரணரொடு சேர்ந்துட்சேறி, யொறுத்தநெற்றிக் கண்ணினூன்றிப்பார்க்கயுயருமரியுருவானதுக்குநெக்கே.

மீதிலுற்றபஞ்சலோ கங்களெல்லாம் வெள்ளமாய்மிகவுருகிவிரைந்துவந்து, மாதவத்தர்சங்கரதா சையர்தாளின் வணங்குவார்போற்கிடந்த வாறுகண்டு, பூதலத்திற்பரசமயர் கூடிக்கூடிப் புகன்றஞ்சலறிந்து நல்லோர்போதங்கேட்டு, மோதவத்தைப்பின்புள்ளவறிவும்போய்த்தென் றுனைப்பதுபோன்முன்னுணர்வு மொழிந்தேமென்று. ௱௫

வேறு.

வல்லையாஞ்சங்கரதாசர் வயின்சென்றவர்தாள்வணங்கிமுன்னஞ், சொல்லுமின்பாலானதெல்லாஞ் சொல்லித்துதித்தானமைச்செல்வம், புல்லும்படியாமெனத்தம்முட்பொருந்திப்பேசிப்போந்தவர்பா, லொல்லும்வகைடாற்பணிந்தெழுந்தெம் முடையாய்கடையே முன்னடியேம். (௱௬)

செய்தபிழையைப்பொறுத்தருள்வாய் திக்குங்கதியுநீ யெம்பாற், கைதவங்கள்வந்தக்காற் காக்கவுனக்கேகட னையா, வைதமக்கண்மடியேறின் மாதாதள்ளின்வளர்ப் பார்யா, ரெய்தவரியவருட்கடனீ யாங்கள்பசுக்களினிதா ள்வாய். (மஎ)

உய்யுந்திறமீதெனவருளி யுன்றாட்கடிமை யுகந்தியா ஞ், செய்யும்படியீதெனக்காட்டித் தெருட்டிவளர்ப்பா யெனப்பணிந்து, நையுமனத்தானிற்பவரை நாடிச்சிறி துநகையராய்ப், பொய்யுமெய்யுங்கலந்தபத்தி புகல்வீ ரெங்குப்போகின்றீர். மஅ

கோடையாற்பெரிய வுத்தமர்நீர் கொடுப்பீர்நும்பால் வருகுவோ, மூடையாரல்லவெவ்வூர்போ யுற்றுத்திரும் பியிங்கணைந்தீர், படையாவகந்தை யுறும்பத்தி படைத் தீர்பத்தர்பாக்கியமே, விடையார்நேயமும்மிடத்தின்மே விக்கீழாய்வீழ்ந்ததால். மகூ

அன்றுசறுமற்றவத்தோர்க்கோராடைமாறிநீர்பெற்ற, பொன்றுவந்தக் களஞ்சியத்தைப் பொருந்தும்பண்டம் போயிற்றே, வின்றுதரவிலெமக்கினிய வேதுந்தந்நீரி லேயெனமு, னின்றார்தம்மையிவ்விடத்தைத் தொட்டுங் கொட்டானியென்றார். உம

காண்டற்கரியவிருத்திய மகழவகழக்கண்பின்றி, நீ
ண்டபெருமைகண்டஞ்சி நின்றுவாழ்த்துமிருவோரும்,
பூண்டநண்பாலட்டாங்கம் பூமிபொருந்தப்பணிந்தெழு
ந்துங், காண்டகுருசங்கரதாச ரடிமேல்விழுந்தங்கழுந்
துதலும். உ௧

கேளீர்மிடியரடிகளின்மேற் கிட்டிப்பணிந்தாற்கிட்டு
வதே, நீடுஞ்செல்வம்படைத்துண்ண நேசத்துடுக்கக்
கொளக்கொடுக்க, நாளும்படைத்தோர்தமைவணங்கி
நன்றுய்வாழுநமக்குள்ள, தாளும்பெருமானருளுமக்கி
ங் ககழ்ந்த நிதியமவையளித்தேம். உ௨

எருத்திலேற்றிக்கொடுபோவீ ரிதனேடெழுந்தமண்
ணிணையுங், கருத்திலிச்சையுளதாகிற் கடுகக்கொடுபோ
மெனத்தாசர், விருத்தமுடனிப்படியடியேன் வெருவத்
திருவாக்கருளாதென், பெருத்தபிழையைப்பரிகரித்துப்
பேணியருள்வாயெனப்பணிந்தார். உ௩

வணங்குஞ்சேடதாசனையும் வாழ்த்துமவர்தமனைவி
யையு, மிணங்கிலாச்சங்கரதாச ரினிதுநோக்கியெழுங்க
ருணைக், குணங்களாலேவரவணைத்துக் குறையாச்செல்
வநுமக்கியாம், மணங்கோர்பாகனருளாலே யளித்தோ
மென்றாரவர்பெற்றார். உ௪

இந்திரியாலெழுங்காம மேதக்குரோதமிலையென்று, மந்தலோப மருமோக மாகாமதமற் சரமிவைதான், வந்தகருத்தர்க்கில்லையா மனத்துக்கருணைவசவண்ணு, நந்தமானைப்பெற்றகந்தை நண்ணுந்தவனாயினிநவில்வாம். உரு

சங்கராசாரியர் புராணம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - அ௲எ.

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கராசாரியர் புராண வசனம்.

சங்கமபுரியென்னும் பட்டணத்துள் வாழ்பவர் சங்கராசாரியரென்னும் பெயருடையவர் சிற்றின்பத்தைக் கடந்தவர். பரமசிவம்போல திரிநேத்திர முள்ளவர் இவ ரடியார்களது கந்தைகளைப்பொத்திச் சரிப்படுத்துவதே தொழிலாகக்கொண்டு அதனால் தமக்குக் கிடைக்கும் ஐந்நாழி நெல்லைக்கொண்டு வருகின்ற அநேகஞ் சிவனடியார்கட்கு அமுதுபடைக்கும் வரம்பெற்றுள்ளவர் ஊண் இணை முப்பில்லாதவர் பரதெய்வங் சொல்லாம்பயப்படத்தக்க வுக்கிரமுள்ளவர் தமது செயலைக்கண்டு உலகத்துள்ளோ ரதிசயிக்கும்படி வீற்றிருக்குங்காலில்.

அந்தச் சங்கமபுரத்துவாழுகின்ற சேடதாசையரென்பவர் பன்னிரண்டுவருடத்தளவாகத் தாந்திறமாகச்செய்த ஒருபட்டுவெஸ்திரத்தை அரசனிடத்துக் கொண்டுபோகுங் காலத்தில் வழியில் ஒரு சங்கமர்வந்து இந்தப் பட்டாடையை யெமக்குத்தரக்கடவீ ரென்ன, அவ்வாறே சேடதாசருங்கொடுத்து வணங்கித்துதிக்க வவரது கிரகமுதலிய விடங்க ளெல்லாம் திரவியங்களும் நெற்குவியல் முதலிய தான்யக் கும்பல்களும் பசுக்களும் நிறைந்தன.

இத்தன்மையரான சேடதாசையரென்பவர் ஒருதினஞ் சங்கரதாசையனாச் சந்தித்து நமது கவலைநீங்கத் தொழுவோமென்றுநினைத்து அப்படியே சென்றுவணங்கித் துதித்துவருங்காலத்திற் சங்கரதாசையர்வீட்டில் தான்யமுதலிய செல்வமொன்று மில்லாமலிருப்பதைக்கண்டு வினைந்து தமது வீட்டிற் சென்று நம்முடைய செல்வம் மிகுந்திருந்தும் சங்கரதாசர் விஷயமாய்ச் சிறிதும் பயன்படா வாயினவென்று தமது மனைவியாரிடத்துஞ்சொல்லி யிரக்கப்பட்டுப் பின்பொருகூடையில் நெல்லைநிறைத்து ஓராளின் வசமாகச் சங்கரதாசர் மடத்துக் கனுப்ப அந்த ஆளும் அவரது மடத்துச்சென்று சேடதாசர் கொடுத்தனர் என்று கொண்டுவைத்தனன் இதைக்கேட்ட மாத்திரத்தில் நம்மிடத்துச் சேடதாசர் மிகவு மன்புள்ளவர் ஒருசங்கமரிடத்துப் பட்டாடைகொடுத்து நெற்குவியல்முதலிய வளத்தைப்பெற்றனர், இப்போது எமது தரித்திர நிவிர்த்தியின் பொருட்டு இந்நெல்லைத்தந்தனர் பின்னைகொடுக்கச் சத்தியில்லாத வெமக்குத் தமது மிகுந்த வன்பால் இந்த நெல்லைத் தந்தனுல் இவருத்தமரென்றுசொல்லி அந்நெல்லைத் தமது கையிலொருபிடியி லடங்கும்படி பிடித்தனர். அப்போதே சேடதா

சர்வீட்டிற் சகல வளங்களுங்குன்றின இதுகண்ட சேடதாசர் இது என்ன காரணமென்று வருந்தினின்றனர். இதைக்கண்டவவர் பத்தினியார் சொல்வார் சங்கரதாசையர் மகிமை தெரியாமல் அவர்க்காளின் வசமாக செல்லனுப்பத்தகுமோ பரமசிவமேவலியவர் தமக்கென்னவேண்டுமென் றருளிச்செய்யவும் நீர்வந்ததே போதும் என்ன சிவபெருமான் வலிந்து கொடுக்கப்பெற்ற நெற்றிக்கண்ணால் அகங்கரித்த தேவர்களையெல்லாஞ்சுட்டு சகதேவமல்லனென்னும் ஒரு விஷ்ணுபக்தன் எத்தேவரையும் நெற்றிக்கண்ணாற் சுட்ட விச்சங்கரதாசர் எமது நாராயணனைச் சுடுவரோவென்று ஒரு நரசிங்க விக்கிரகத்தை வார்ப்பித்துப் பூசித்துக் கொண்டுவர ஒருநா ளிவர்சென்று அந்த விக்கிரகத்தைப்பார்க்க அது உருகித்தாரையாகவோடிப்போயிற்று. இப்படிக்கொத்த மகிமையையுடையவரை யெளியராகநினைத்து செல்லை யாளின்வசமாகக் கொடுத்தனுப்பின கொடுமைக்காக இப்போதே அவர் பாதங்களிற்சென்று வணங்கித் துதித்திரங்கி நிற்போமாயின் நமது தரித்திரமெல்லாம் ஹதமாகுமென்று சொல்லச் சேடதாசரும் தமது பத்தினியா ருடனே சங்கரதாச ரிடத்துச்சென்று வணங்கித் தமது குறைகளைச் சொல்லி பலவாறுதுதித்து அடியேங்கள் பெரும்பிழையை க்ஷமித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து அவரா லனுக்கிரகிக்கப்பட்ட சகலபாக்கியங்களையு மடைந்திகத்தில் வாழ்ந்திருந்து மோக்ஷ சாம்பிராச்சியத்தையு மடைந்தனர்.

சங்கரதாஸசையர் புராணவசனம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

நிம்மவைபுராணம்.

எந்தமவ்வைநிம்மவ்வை யென்னும்பேராமொழிற்சரணர்
புந்திக்கினியசெய்தியினார்புகலேயெனுமூர்பொருந்துவார்
சந்தத்தாசாரத்தொழிலார்சாராரில்வாழ்க்கையின்மயக்க
நிந்தையில்லாமெய்ப்பத்தி வீரவிரதநிறைந்துள்ளார். க

நித்தனன்பரகந்தோறுநீர் தானளிக்குநிலைத்தொழிலார்
மெய்த்தமைந்தனவர்பசுக்கண் மேய்க்குந்தொழிலாற்றி
னந்தோறுந், சித்தமகிழவரும்பொருளாற் சிவபுண்ணி
யத்திற்றிரியாதே, யத்தனேயர்க்கமுதளித்தங் கமர்ந்து
வாழுமந்நாளின். உ

குற்றமகன்றசெங்காட்டங்குடியுண்மறையோர்சிறுத்
தொண்டர், பெற்றமகனைக்கறியாக்கிப்படைக்கமகிழ்ந்த
பிரானருளான், மற்றுமணைந்தமகனுருந் தாமுமத்தன்
வாருமென, வுற்றகயிலேயிடத்தெம்மா னேலக்கத்திலு
றுங்காலே. ங

அமலனிருக்குமலங்கார மதனைப்பார்த்தங்கணைகண
த்தோர், கமலமுகங்க டமைப்பார்த்துக் காதன்மகனைப்

பார்த்தவனே,யுமையோர்பாகர்க்கரிந்தாக்கியுவந்துபடை த்தவுறுதியைப்பார்த், தெமதுபெருமைக்கொப்பவரிங் கில்லையெனவேயெண்ணினர். ௪

என்னுமளவிலரன்சிறிதே யினியமுறுவல்வதனத் தா, லன்னும்பரையையங்கிருத்தி யணைந்தகணத்தோ ரனைவரையு,'நன்னுமிடங்கள்செலவிடுத்து நன்மைச்சி றுத்தொண்டருந்தாமு, மண்ணிலெழிந்தார் நிம்மவ்வை மனையைக்குறித்தார்வந்தணைந்தார். ரு

அணையுந்தவத்தோ ரடிகளின்மே லட்டாங்கத்தாற்ப ணிந்தெழுந்து, தணியுமன்பாற்பதம்விளக்கித் தருக்கி யுள்ளாதனத்திருத்தித், துணியுமுறுதியுட.னின்று தூ யோர்மகிழத்துதித்திறைஞ்சிப், பணியுமொழியாற்பசி த்தனரெம் பரமரென்றுபரிந்தடிசில். ௬

முடுகியமைத்தங்குள்ளிருத்திமோகநன்னீர்தரவணை ந்தார், வடுவொன்றில்லாரிருவருங்கண் விளர்வார்போன் றூர்மைந்தன்வந், தடுவெம்பசியாலன்னேயென் றழைத் துக்காறுதுட்புகுந்து, கடிதினெடுத்தோர் பணியாரங் காதலாலங்கருந்துதலும். ௭

தாயார்நீர்தந்துட்புகுந்தத் தன்மைகண்டு தண்ணீர் வைத், தேயாவெம்மையெழவெகுண்டிங் கென்னேயெ

ன்னேயிதுசெய்தாய், நாயானதுவோகெட்டேனென்று
தனமுறைநண்ணுமெனத், தியாங்கோபத் துலக்கையி
னுன்மைந்தனுவி செலப்புடைத்தாள். அ

இறந்தமகனைக்கதுமெனவே யீர்த்துப்புறத்துமூடிய
வன், றிறந்தபாண்டத்தமுதுகறி சேரவப்பாற்செலவெ
றிந்து, நிறைந்தபயத்தான்மடமெங்கு நேயநிறைவான்
மெழுகியபி, னறந்தங்கன்பர்முன்போலங் கடிசில்சமை
க்குமமயத்தின். கூ

அந்தோவையர்பசித்தனரொன் றுவிக்காவியினர்பசித்
தா, ரந்தோவந்தோவிந்நோ மமுதுசெய்யாதிருப்பதே,
யந்தோவென்னகுறைசெய்தே னந்தோநாயேனறக்கொ
டியே, னந்தோவென்பாலொருபுதல்வ னுகிப்பாவியவ்த
ரித்தான். ௰

வேண்டிப்பார்த்தவிழியைப்போய் வேலாற்கிளறிவி
டுகேனே, தீண்டுங்கரத்தைத்துணிக்கேனே தின்றவா
யைக்குடைகேனே,கோண்டங்கிருந்தகுணனுடலைக்கொ
ந்திக்கொந்தியெறிகேனே, வாண்டபிரானர்பசிப்பரோ ய
தினும்பொழுதையகற்றினல். ௰க

என்னவயர்ந்துபயந்தன்பா லினியவமுதஞ்சமைத்தி
ட்டு, மன்னபத்தியுறுதியினே யரனுர்தொண்டர்க்கருள்

விழியாற், சொன்னவளவிலநிசயித்தார் தூயவடிசில்ச மைத்தளவி, லுன்னவரியார்திருமேனிக் குவந்துதிரும ஞ்சனங்காய்ச்சி. ௰௨

அந்நீர்நன்றுபாட்டியபி னரியசிவபூசனைக்கிருத்தி, ந ன்னிர்மையினுலேவல்செய்து நம்பர்க்கமுதுபடைத்தி டலும், பொன்னிர்சடையார்புகலுவார் மின்னேநீர்க்கு ப்போய்த்தாழ்த்த, தென்னிபயந்தமகன்பசிபா லுன்னை த்தேடியிந்நேரம். ௰௩

அலறிப்பசியாலழைத்தங்கு னகன்றுனந்தோவந்தோ நீ, யுலகர்பிள்ளைப்பசியையறிந் தூட்டுங்கருணை காணு யோ, விலகுமகனெங்கணைந்தனனே விரைந்துதேடிய ழையவனை, நலவாதரவால்வரவணைத்து நன்றுவளர்க்க வேண்டாவோ. ௰௪

என்னேயென்னேயரசரா விநயமைந்தர் தமைநீங்கி, முன்னேயருந்தக் கைபெழுமோ மோகமைந்தர் தமை யாமு, மன்னேயத்தாற்பெற்றிலமோ நல்லசமைக்குநன் ஞளின், றன்னேயத்தாற்றனயருட ஹுண்பார்பிள்ளைத்த யாவிலிநீ. ௰௫

பரிவின்மைந்தன்பசித்தகல நமக்கேனமுதுபடைத்த னைபோய்த், தெரியும்படியத்திசைதோறுந் தேடிமகனை

யழையாமற், பிரியமிழந்துநிற்பதெல்லாம் பிழைகாண்
விளிப்பாயெனநகையா; வரியையெனக்குநீயேகா ணோர்க்
குன்மாயையறைகின்ருய். ௰௬

பெண்ணென்றறியாளெனநினைந்தோ பிள்ளைக்கதை
நீபேசுகின்ருய்; திண்ணமுடையேனெனையந்தச் சிறுத்
தொண்டனாப்போற்சிந்தித்த; லெண்ணமலநின்பெருந்
தன்மைக் கிதுதானியல்போவெம்மானே; யண்ணலேபு
ன்னடியரகத் தடியாணியமமறியாயோ. ௰௭

முடியவிந்தவமுநினைநீ மோகத்திங்ஙனருந்தாயே, ல
டியொன்றுன்னையிடவொட்டே ணோர்க்குச்சமைத்தேனே
யனே; கொடியகுற்றஞ் செய்தோனைக் கொன்றேனென்றி
ரும்பக்கூவென்ருற்; படியிலுயர்ந்தநின்கயிலைப் பதமே
வேண்டேன்பரம்பொருளே. ௰௮

செய்யாவெய்யகுற்றமாஞ் சிவத்துரோகஞ்செய்திறந்
தா; னையாவந்தப்பாவியையா னறுவாயழையேனென்ற
லுமே; நையாநையாப்பெரிதுயிரா நாணுநாணுத்தலையிற
ங்கா; மெய்யார்நடுக்கத்தினராகி வெருளுற்றிருந்தார் சி
றுத்தொண்டர். ௰௯

கண்டார்மொழியார் நிம்மவ்வை கருத்தினுறுதிகண்
டானுர்;கொண்டார்பழையகோலத்தைக்கோலமடவார்

கூறுவா; ரண்டாதிபகேளுனக்கிதுதா னதிகமலக்காண
திகர்க்கி;தெண்டானலக்காணியல்பலகா ணினியோரோ
ருவிண்ணப்பம். உ0

ஒழுகுமுலைப்பாறனேவேண்டி யோலோலென்னத்தா
ளுதறி; யழுதுகுழந்தையாய்க்கரத்தா லன்பின்வருடிய
ருந்திமற்றும்;பழுதில்சங்காலத்தனப்பால் பருகியன்னே
ப்பயோதரத்தை; முழுதுமகன்றுசென்றுற்போன் மோ
சம்போக்கிச்செலவரிதால். உக

ஆவிக்குடலாமாதார மதனுங்காவியாதார; மேவிக்கொ
ளல்போற்குருலிங்க மேனியிவற்றைவிட்டுநீ;சேவுற்திரு
ந்தவடிவெடுத்தாற் செய்யவந்தவுருவினதாய்ப்; பாவிப்
போர்களுன்றனேயு மென்னேயுஞ்சிரித்துப்பழிப்பாரோ.உஉ

இந்தநிலைமைக்குடனுகே னிந்தவெகுருபேனுனக்கென்,
சிந்தையிடத்துமுன்வடிவைச்சிறிதுமிகந்ததில்லைகா,ண
ந்தவிகற்பமென்னிடநீயளித்ததில்லையறுவாக, நிந்தையு
ளதோர்வடிவென்று மிலதொன்றென்றுநினேக்கிலேன்.

வே று.

இக்கண்மூன்றிவைக்குமேலேயின்னமுக்கண்ணுண்டே
னு, மக்கணதன்றிமற்றோ ராயிரங்கண்ணுண்டேனும்,
பொக்கமாறுடாதங்குற்றம்போம்படிபோதிக்குங்கான்,
மிக்கநீமுன்னங்கொண்ட வேடமேவேண்டுமன்றே.உச

வாலிபநீலகண்டர் மகிழவேகொடுக்கப்போம்போ
தாலமார்கண்டங்கொண்டோ வணங்கனேசேடதாசர்
சேலேநீகேட்குமங்கண் சென்னியிற்கங்கையுண்டோ
பாவிலாரணங்குடைத்தோ பாலனூனருந்துங்காலே.உரு

அன்றுவல்லர்ளன்றேவிக் காகநீசெலுங்கால்வேணி, மி
ன்றிகழ்திங்களுண்டோ விரும்பிமானக்கஞ்சாறர், மன்
றல்செய்மகளார்கூந்தல் வாங்கமுன் போங்கால்பாலத்,
தொன்றியநயனங்கொண்டோவுற்றெளிர்பந்தர்நின்றாய்

தேறியகுறிப்புத்தொண்டர் சேருமத்துறைக்கணந்தி
யேறியோசென்றாபுன்ற னிருகையின் மழுமான்கொண்
வீறியபசியான்மாறர் வீடுற்றாய்கோவணத்து [டோ
மாறமர்நீதியார்பால் வாங்குநாட்புயநாலுண்டோ. உஎ

நின்னுவிதங்களான நெருங்குமந்திரங்களொன்றும்
பன்னுமற்றவிர்வாயையா வுனக்கெனப் படைத்தவன்ன
மென்னுணேயமுதுசெய்வா யென்றலுமுறுவல்செய்து
பொன்னனதிருவாயாரப் புரிந்திருந்தமுதுசெய்தார்.

அந்தமொன்றில்லார்தொண்டர்க் கறைகுவார்தண்டியா
தி, முந்தையர்நம்பொருட்டான் முனிந்துதந்தையர்கண்
மக்க,ணந்தவேகொன்றார்மற்றுநாமளித்தனவும்பெற்றா
ரிந்தநிம்மவ்வைபத்தி யினிமைகண்டாயோவென்னு.

நாமிவட்கினியதெல்லா நல்குதுமென்னிலொன்றுங்
காமியாள்சற்றுமன்பிற் கருத்திலுங்கருதாள்பாராய்
சேமமாமமலபத்தி செய்யுநிம்மவ்வைசெய்தி
யாமலாப்பதங்களெல்லாமிலயமென்றிதயத்தெண்ணுள்

வேறு.

குற்றமுற்றூர்தமைக்கோறல்குற்றமல்லக்கொடியர்த மை, மற்றுந்திரும்பவழையென்ன மாட்டேனென்றவா ய்மையுநன், றுற்றயானிற்கிதத்தவையே துணைப்பாய்த ருதுமெனவொல்லாள், பெற்றபத்தியரிதென்று பிரிய த்துவந்துகொண்டாடி. ௩௧

இப்படிநம்பாலன்பி னிருமையோரனந்தர்நீயே
யொப்பெனக்கில்லையென்னவுனேவியந்தனேயென்றேந்தி
யப்படியில்லாநேயத் தரியநிம்மவ்வைமைந்த
னெப்பொழுதெழும்பவத்த னங்கயிலாயஞ்சேர்ந்தான்.

ஆசிலாவிலிங்கபூசை யரியமாதவத்தர்பூசை
பேசினற்பதத்துமேலாம்பெரியதென்றெருமைநெஞ்சி
னேசியாவிருந்தான்மன்னி நிம்மவ்வைநித்தனன்பர்
மாசியலகர்ந்தைசேரின் வருங்குற்றம்வசவகேண்மோ.

நிம்மவை புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - அ௭0.

திருச்சிற்றம்பலம்.

நிம்மவை புராண

வசனம்.

நிம்மவையென்பவர் பெண்பாலாவாரி லொருவர், புதலே யென்னுந் தலத்தையுடையவர், வீரசைவ வாசார பத்திமார்க் கங்களிற் சிறந்தவர், சிவனடியாரிடங்கடோறும் நீர் கொண்டு கொடுக்குந் தொழிலுடையவர், இவரது புத்திரன் அச்சிவனடி யார்களுடைய பசுக்களை மேய்த்துவருவார், இருவருடைய தொ ழிலாலும் வரப்பட்ட ஆதாயங்கொண்டு சிவனடியார்க்கமுது படைப்பர், இவரிப்படி யிருக்குநாளில்.

ஸ்ரீமஹா கைலாஸத்திற் சிவானுக்ரஹத்தால் வீற்றிருந்த சிறுத்தொண்ட நாயனுர் சிவபெருமானைத் தெரிசித்து அங்கி ருந்த வடியார்களையுந் தம்மையும் பார்த்துத் தம்மைப்போல் வ லிய தொண்டுசெய்தவ ரொருவருமில்லையென்று எண்ணினுர். இதுநோக்கிச் சிவபெருமான் புன்முறுவல்கொண்டு உமாதேவி யார் முதலான சகலரையும் நிறுத்திச் சிறுத்தொண்டரை யழை த்துக்கொண்டு நிம்மவையாரது திருமனையி லடியார்போற் கோலங்கொண்டு சேர்ந்தார்.

நிம்மவையு மஷ்டாங்க க்ரமமாக வணங்கிப் பாதங்க ளை விளக்கி யாதனத் திருக்கச் செய்து ஸ்தோத்ரங்கள் பண் ணி பசித்துக் களைத்து வந்தனரென் றதிக விரைவோடு அ நேக சிற்றுண்டியுடன் அன்னங் கறி முதலியவை யமைத்து வைத்துப் பின்னும் நீர் கொண்டுசென்றனர். அடியார்போல்

வாரிருவரும் கண்வளர்வார்போலிருந்தனர். நிம்மவையாரது புத்திரன் வந்துபார்த்துக் கூப்பிட்டுந் தாயைக் காணுமையாலுங் கொடிய பசியினாலு மங்கமைத்திருந்த திருவமுதில் ஒரு அதிரசத்தையெடுத்துத் தின்றனர். அப்போது நிம்மவையாரும் தண்ணீரைக் கீழேவைத்து மகனது செய்கையைக்கண்டு பாவியென்னகாரியஞ் செய்தாய் என்றதிக கோபங்கொண்டு அங்கேயோருலக்கையை யெடுத்தெறிய அதுவந்து வீழ்ந்து மைந்தனிறந்தனன்.

நிம்மவை அப்போதே தமது புத்திரனை யிழுத்து] ஒருபுறத்திற்கிடத்தி மூடி அப்புத்திரன் றொட்ட அமுதெல்லாவற்றையும் பாண்டத்துடனே எடுத்தெறிந்து பின்னு மடமெல்லா மெழுகி நீராடி ஐயோ சிவனடியார் நெடுநாழிகை சென்று மமுதுண்ணத் தடையுண்டாயிற்றே இக்கொடிய பாவியென்னிடத்துப் பிள்ளையாகப் பிறக்கவேண்டுமோ என்று அப்புத்திரனிடத்துக் கோப மாறாமலே முன்போலப் பாகஞ்செய்தனர். அந்தச் சிவபத்தியினுறுதியைச் சிவபெருமான் சிறுத்தொண்ட நாயனார்க்கு விழியினாற் குறிப்பாகக்காட்ட அவருந் தமது செயலைக் கீழ்ப்படுத்தி யதிசயித்தார். நிம்மவையார் சமைத்தவுடனே நெடுந்தூரத்திருந்து வெய்யிலில் வந்திளைத்தபடியால் வெந்நீர்கொண்டு திருமஞ்சனஞ் செய்வித்துப் பூஜைக்குமிடஞ்செய்து உடனிருந் ததற்கேற்ற வேலைகளைச்செய்து உடனே விதிப்படி திருவமுது படைத்தலும் ஜங்கமர்போல் வந்த சிவபெருமான் நிம்மவையே தண்ணீர்க்குச்சென் றெத்தனை நாழிகையாயிற்று உன்மகன் இத்தனை நாழிகை பசியினால் வாடி யலறிச்சென்றானே பிள்ளைகளைப் பசியறிந் தூட்டாமற் போனால் அப்பிள்ளை யெப்படி பிழைக்கும், ஹரஹரா இதெ

ன்ன காரணம் பசியோ டழுதுபோன பிள்ளையை விட்டு நாங் கள் புசிப்போமோ, நாங்கள் பிள்ளைகளைப் பெற்றறியோ மோ. நமக்கு இவ்வமுது விருப்பமாமோ, புத்திரன் சென்றவி டங்கண் டழைத்துவந்தா லல்லது ஒன்றும் முடியாதென்ன, அப்போது நிம்மவையாரும் ஸ்வாமி யுமது மாயவார்த்தையை யார்க்கு சொல்கின்றீர் இவள் பெண்பாலாதலால் நம்மையறி யாளென்றே நீர் பிள்ளைக்கதையைப் பேசத்துவக்கினீர் நான் அந்தச் சிறுத்தொண்டர்பே லச் சபலித்த மனமுடையவளல்ல அடியேனது நியமவுறுதியை நீரறியீரோ நானருமையாகச் ச மைத்த வமுதை நீரருந்தாவிட்டால் அடியெடுத் தும்மைச்செ ல்லவொட்டேன் இவ்வளவு பிரயாசைப்பட்டு யாவர்க்கு நான் சமைத்தேன் இந்தவிஷயத்திற் கொடிதான குற்றத்தைச் செ ய்தமையால் அவனைக் கொன்றுவிட்டேன் திரும்ப வவனையழை யென்று ஆஞ்ஞாபித்தால் உம்மாற் றரப்பட்ட கைலாஸபதவி யையும் விரும்பேன், சிவத்ரோகஞ் செய்த பாவியை மீட்டும ழையே னென்றுசொல்ல, இதைக்கேட்டிருந்த சிறுத்தொண் டரும் நாணப்பட்டு நடுநடுங்கிப் பயந்திருந்தனர். நிம்மவையார து உறுதியைக்கண்ட சிவபெருமான் பழைய திருக்கோலமாய் விருஷபாரூடராக நின்றனர்.

நிம்மவையாரும் இந்தரூபமெடுப்ப துமக்குப் பெரியகாரியம ல்ல இந்தரூபத்தை யெடுத்ததனுல் முன்னமே நான்றியானித்த ரூப மென்சிந்தையைவிட்டு நீங்காது அடியார்வேடங் குறைவெ ன்று இவ்வாறு திருக்கோலங்கொண்டீரோ எமக்கந்தப்பேதமில் லை முன்னைய திருக்கோலமேவேண்டும், அன்றியும் திருநீலகண் டநாயனுர் முதலான வடியார்கட் கனுக்கிரகஞ்செய்யும்போது மானுடக்கோலமன்றி யிந்தத் திருக்கோலமுண்டோ உனக்கா

கப்படைத்த வன்னத்தை நீயே யுண்ணவேண்டும் என்று பிரா ர்த்தித்திருக்க, அப்போது அவர்படைத்த திருவமுதுமுற்றுஞ் சிவபெருமா னமுதுசெய்தருளி முன்னுள்ள தொண்டர்க ளெல்லாம் இவ்வாறு பத்திசெய்தாலும் நாமருளிச்செய்ததை மறுது பெற்றனர்: இந்நிம்மவையின் நிஷ்காமியபத்தியைக் கண்டீரோ வென்று சிறுத்தொண்டர்க்குத் தெரிவித்து இப்படி நம்மிடத் தன்புள்ள வடியார் அநேகருண்டு சிறுத்தொண்டரோ நீர் உம்மை வியந்திரோ யென்று சொல்லி அந்த புத்திரனை யெழுப்பி யிருவர்க்குங் கைலாச பதவியைச் சிவபெருமான் றந்தனர்.

நிம்மவை புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

அலாயுதர் புராணம்.

அங்கணனங்கணைகன் றுறுதொண்டரோ டன்பர்கள்வே
டமொடே,யங்கரசிங்கராகுமலாயுதரம்மனைசாருதலுந்
தங்கியமாதவர்தாள்கள்பணிந்துயர் தம்பிரியத்துடனே
யிங்கிதபாதம்விளக்கினராதன.மெய்தவிருத்தியபின். க

அத்தருணாத்தருள்வாரொமதிச்சைசயறிந்துளமாதவரோ,
டொத்துமகிதமாகியபத்தருழிக்குறுவோமவரு, நித்

நகரத்தலலிங்கமதென்னநினைத்தெமையேநினைவா, ரித்
திறமுற்றவர் தம்மையுநாமுமெழிற்பெறவேபுகழ்வோம்

உன்னியசேரனுடன்சுபசையனுறுங்கருவூரபயன், சென்
னியனன்புறுபொம்மையன்ஞானசிகாமணிசம்பந்த, னி
ன்னவரோமுத லாகியபத்தர்க ளெம்மையருச்சனைசெய்,
தன்னியமின்றியிருக்குமவர்க்கிதமாகுமருந்தவர்யாம்.ங

யாமறியாவுலகங்க ளருந்தவரின்புறுபத்,கருமிப், பூமிசை
யின்றிலவெம்மறியா துளபுண்ணியருமிலைகா, ணுமுறும்
வேலைதனாக்குளியங்குத ஞருமனேகமதாங், காமுறும
ன்பனாயொப்புதுமல்லர் கணங்களையோநினையேம். சு

இம்முறையேயுறுநாள்களகற்றுது மெம்மைவளர்ப்பவ
ரு, நம்மிடசித்தமறிந்துநமக்கித நல்லவைவயீபவருஞ்,செ
ம்மைநெறிச்சிவபத்தர்மயேசர் திருந்துதிருச்செங்காட்,
டம்மகிமைத்தலமுற்றருணுடு மாற்கதிகத்தொண்டன்.

ஈசனதன்பமொனிற்பதமீதி லிறைஞ்சியிதத்தமுத
நேசமுடன்றினநல்கு மவன்றிடநெஞ்சிலிகழ்ந்தலங்
தேசரறிந்திடநாதனருந் தவதேசிகனுகவணாங்
தாசைதரும்புதல்வர்க்கறியாகவமைத்திடுவாயெனலும்.

அவ்வுரைகொண்டருமைந்தனெனுமல ரிந்துயர்பத்தி
யினுற், றிவ்வியவின்சுவை சேர்கறிசெய்து தெளிந்துப

டைத்திடலுந், செவ்வியமைந்தனுமங்களுறும்படி செய்தனனன்பனுடன், வவ்வியசுற்றமுமங்கயிலேக்கண் மகிழ்ந்துறவைத்தனனால். எ

மண்ணிடையிப்படிபத்தி செய்பத்தர்மகத்துவநல்லதலா, னுண்ணியபத்திவிசேட மிருந்துநவன்றதிலென்னெனலுங், திண்ணியராகுமலாயுதரீதென செய்திசிவாயசிவா, வெண்ணியவித்தொழில் புண்ணியமோவிடவித்தையுரைக்குமதென். அ

வெங்குணராகியதுங்க வரக்கர்விரும்பியருந்தலலாற் சங்கரன்மானிடர்வெந்தசைதேடறகும்படியோகெடுவாயங்கணனன்பனிடத்துறுமைந்தனுமவ்வரனன்பனவன் பங்கமிலாகமரிந்திடுதாதை பரிந்துசெய்பத்தியதென். கூ

இந்தவிசேடமெனக்கயமாகியிருந்ததெனப்பெருமா,னந்தனைமீதுமடந்தையர்பத்தருரும்புதல்வோர்கடமைச், சிந்தவெறிந்தவொத்தனைபேருளர்திண்ணமலாயுதனே, சந்தமதன்றுசிவன்பெருநண்பர்தவஞ்சிறிதென்பதெலாம்

நல்லவையாளவைசங்கரனன்பர் நயந்துவிரும்பியுறி, னில்லையெனும லளிப்பதுபத்த ரியற்கையாற்குமிதஞ், சொல்லியமெய்ச்சிவபத்தியதச்சிறுதொண்டரிடத்திலவோ, வொல்லையுதித்ததுநம்பலேயாகி லொருத்தனைவிட்டறிவாய். ௰க

அவ்வுலகத்திலகந்தொறுமிக்கதை யன்பர்களாயின
பேர், செவ்விபெறத்தினமுந்துதிசெய்வர்க டிண்ணம
லாயுதகே, ளெவ்வுலகத்தினுமெய்த்தவர்சித்த மிதம்பெ
றவேபகர்வார், கொவ்வையெனும்மிதழ்மங்கையர்நெற்க
ள் குறும்பொழுதும்பகர்வார். ௯௨

சென்றவரோதுசெயற்கைவிடும்படி செப்பவுநல்வச
மோ, வென்றலுமங்கணெழுந்துறுகோபம தெய்தியலா
யுதரு, நன்றிதுசங்கரனுந்தசைகொண்டிட நச்சியிருந்த
னளே, கொன்றுமகன்றடிபொன்றவரிந்து கொடுத்தன
ளேமறையோன். ௯௩

பத்தசனத்தை வளர்ப்பவனத்த னெனும்பகர்பாவம
லோ, பத்தருயிர்க்குமிரண்டுநினைத்துறு பாதகமென்
சொலுவாய், பத்தனெனும்பெயர்சொன்னளவேயுயிர் ப
ற்றல்பரன்றொழிலோ, பத்தனுமெய்த்தறி வாளனவன்
பெறு பத்திபடைக்கரிதால். ௯௪

பெற்றிடுமன்னை யரக்கியெனிற்பெறு பிள்ளைபிழைக்
குமதென், சிற்றறிவற்றசிவன்வயதித்தனை சென்றுசிறு
பிள்ளையோ, நற்றியதேவர்முனங்கதிகேட்டுறு நன்மருளா
யினனே, முற்றுதலற்றவிளஞ்சிறுபிள்ளை முடிந்திட
வெண்ணுமதோ. ௯௫

வேறு.

கண்ணினாற்றசையைப்பார்க்கக் கையினாற்றீண்டவெ
ஞ்சி, னெண்ணினாற்பாவங்கெட்டே னித்தொழில்பத்த
ன்செய்தான், மண்ணிலார்மதிப்பாரத்தன் வந்துதன்ன
டியார்நெஞ்சிற், றிண்ணிமை யறிவானின்ன செய்யெ
னுஞ்செப்புநன்றே. ௰௬

மகன்கழுத்தந்தன்மேலெஃகம்வைத்தவவ்வளவேயொ
ப்பிப், புகழ்ந்துவேண் டினகொடுத்துப் போவதேநன்
மையூனை,யகந்தனில்விரும்பிக்கண்ட மறுக்கவும்பொறு
த்திருந்தான்,சகந்தனின்மக்கடம்மைத் தானும்பெற்றில
னேவந்தோ. ௰௭

பத்தனுத்தமனேயல்ல பாருயிர்செகுத்தற்கொன்றி
நித்தமத்திமபாவத்தை நினைத்திலனெஞ்சிற்சற்று
மெத்ததன்னுடலைப்போத விரும்பித்தீவினைக்கஞ்சாம
லத்தமெப்படியெழுந்த தாருயிர்கொல்லற்கந்தோ. ௰௮

அன்னியரில்லிற் யா லன்றித்தனகத்திலுள்ள
வன்னியாற்றுனும்வேமே மனையெனமறுத்திராதே
தன்னியன்மகனைக்கொன்றாற்றனக் குறும்பாவமின்றோ
வென்னிதுநல்லோர்கேட்கிலேலுமோவேலாதென்றும்.

இந்நாவிறைச்சியன்றி யிறைவனுக்கிறங்காதன்றோ
தன்னரும்பத்தியிந்தத் தாழ்வுசெய்தாலோதோன்று
மன்னமும்பாலுந்தேனு மரியநற்கறியுமின்றோ
பன்னகாபரணர்க்கிந்தப் பத்தியிற்பரிவாமாறென். உ௰

வே று.

மெத்தியகயிலை மேன்மிகுங்கணர்க்கெலா
மித்தனைப்பத்தர் மாயேசுரர்க்கெலாஞ்
சுத்தனும்புறம்பு தொண்டனும்புறம்பதென்
றத்தமதறைந்தறைந் தாரலாயுதர். உக

புறம்பெனுமுணாசெவிப் புலன்கட்சேர்தலு
மிறங்கியசித்தரா யிருவரும்பயந்
துறங்கியமனத்தரா யுன்னித்தத்தமி
னிறந்திரிமுகங்களை நின்றுநோக்கினர். உஉ

மண்டனிலடியவர் மகிமைகாட்டவோ
தொண்டுசெய்நெறிச் சிறுத்தொண்டர்காணவோ
வண்டநாயகன்றன தடியர்க்காப்பயங்
கொண்டுநின்றருடிருக் குறிப்பையார்வலார். உங

அலாயுதர்பகருவா ளையவையநீ
புலானுணுங்கதையினைப் புண்ணியங்கள்போற்
சொலாதொழியொழியெதிர் செல்வனென்னவே
நிலாநுதலுமையினை நித்தனுன்னினன். உச

மங்கைபார்ப்பதிமன மயங்கியங்கெழுந்
துங்கவெண்காட்டிடை னெண்டவத்தர்போற்
பொங்கியவடிவொடு போந்தலாயுதர்
தங்கியமணிமனை தருக்கிப்புக்கனள். உரு

புக்கலுமலாயுதர் போற்றியஞ்சலித்
தக்கணட்டாங்கமு மகலிடத்துறப்
பக்கமொன்றிதயராய்ப் பணிந்தெழுந்துபின்
மிக்கபாதங்களை விளக்கியாவலால். உசு

அருந்தவரமுதுசெய் மடத்துட்கொண்டுபோய்ப்
பொருந்தியவாதனம் புரிந்திருத்தியே
விரும்பிநற்றுதிபல விளம்பிநின்றன
ரருந்தவையலாயுதர்க் கருளிச்செய்குவாள். உஎ

பொருளுடலாவியாப் பொருந்துமூன்றையு
மிருந்தவர்க்களிக்கு நின்மகிமையெங்கணும்
பெருகவண்பெரியவர் பேசக்கேட்டியாந்
தெருளுனைப்பார்க்கவே சென்றமென்றனள். உஅ

யாமுனையொருபொரு ளெண்ணிக்கேட்குது
நீமனமகிழ்ந்துதா நித்தபுண்ணியா
சேமமார்சைவநூற் செய்திதப்பலாய்
தோமிலாச்சிவாதிகச் சுத்தநீங்கலாய். உகூ

பத்திமாணிக்கமே பத்தித்தீபமே
மெத்தியசுத்தமே விளையும்பூமியே
சத்தியநெறியனே தவத்தர்செல்வமே
யத்தியாபரணனே யலாயுதாவென. ௩௰

சங்கமாராதனைத் தாதனுமென்னை
யிங்குநீ துதிப்பதற் கெத்தனைக்குளே
னுங்குநின்னடியவ ருதவும்பாக்கியம்
பொங்கியவிதிதரும் பொருளைக்கேளென. ௩௧

இவள்சிறுத்தொண்டன் மேலினியதேவியான்
புவனநாயகன்சிவன் பொருந்துமம்பிகை
யவளைநீபுறம்பென வறைந்ததன்மையாற்
றவனுமுற்றனமறத் தளர்ந்தயர்ந்தனம். ௩௨

வே று.

பதியிலாமாதரும் பண்பிலான்செல்வமு
நிதியிலாளிளமையு நேரதாகித்தன்மே
லதிகமானேயமி லாளருமன்பெனும்
புதியமாமலரிலான் பூசையேபோலுமால். ௩௩

வே று.

எமக்கரும்புருட தானங்களீந்தவர்
தமக்குறுஞ்சுத்தவா சாரநல்குவாய்
கமைப்பெருங்காயனே கனத்தபத்தியாற்
சமத்தனேயலாயுதா தருமசீலனே. ௩௪

என்னமுன்னுமைபுகழ்ந் தினியசெப்பலு
மன்னவெண்காடுபோ யவ்வலாயுதர்
பன்னலவடியின்மேற் பணிந்துபோற்றவே
புன்னலமுறுவலாற் புறம்பிலென்றனர். ௩௫

அண்ணல்விண்மதியொடா றணிந்தவேணியும்
திண்ணாற்புயங்களுஞ் செய்யசெங்கையி
னண்ணுமான்மழுவு மென்னகையுநெற்றியங்
கண்ணுமாவிடையின்மேற் காணநின்றனன். ௩௬

அரியயன்புரந்தர னெண்டிசைப்பாலக
ருரியருத்திரர்பதி னொருவரொண்மதி
தெரிதருபன்னிரு செய்யசூரியர்
பரிவுறுவசுக்கண்முன் பரவிநின்றனர். ௩௭

தெருடருங்கின்னரர் சித்தர்வித்தியர்
பொருவருங்கருடர் கிம்புருடர்போற்றின
ரருடருமுனிவர்க ளாசியார்த்தனர்
மருவுகந்திருவர்தா மகிழ்ந்துபாடினர். ௩௮

தேவதூரியங்க ளெத்திசையுஞ்செம்மின
தாவலாலலாயு தரத்தன்பாதமேன்
மேவருமன்பினல் விரும்பிநோக்கியே
தூவலர்க்கரங்களாற் றொழுதுநின்றனர். ௩௯

தொழுதுநின்றவர்தமைத் தாயநண்பினாற்
றழுவியங்கணைத்துறத் தருக்கிவாழ்த்தியே
பழுதருநேயநம் பத்திமாசெலாங்
கழுவுவானேயெனக் களித்துச்சங்கரன். ௪0

ஆளுமானவபுர மவையுமத்தனர்
தாளூறுமன்பனுஞ் சயிலக்கன்னியு
நீளுமாயிரங்கதிர் நிகர்பொற்றேர்புகா
வாளுலாங்கயிலை மாமலையின்மன்னினர். ௬௧

அலாயுதர் புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௬௧.

உ

திருச்சிற்றம்பலம்.

அ லா யு த ர் பு ரா ண

வ ச ன ம்.

சிவபெருமான் நிம்மவையாரிடத்துப் பிக்ஷைகொள்ளவந்த திருவுருவத்தோடு சிறுத்தொண்டனாயு மழைத்துக்கொண்டு சிவலிங்கராகிய அலாயுதநாயனாரது திருமனையிற்சென்றனர். அலாயுதரு மிவர்களைக்கண்டவுடன் பணிந்து பாதப்ரக்ஷாளனம்பண்ணி ஆசனந்தந்து வீற்றிருக்கச்செய்தபின்.

சிவபெருமான் அலாயுதரே, நாம் இதமுள்ள பத்தரிடத்திற்செல்வதல்லது மற்றவரிடத்துச் செல்வதில்லை அவரும் எம்மையேநினைவார், நாமறியாத தேசங்களுமில்லை நம்மையறியாத வடியார்களுமில்லை இப்படியே காலக்ஷேபம் பண்ணுவோம், எம்மை யுரிமையாகவளர்ப்பவரும் நமதுகுறிப்பின்படி நடப்பவருமான சிவபத்தர்களுக் கிடமான திருச்செங்காட்டங்குடி

யிலிருப்பவர் சிறுத்தொண்டரென்பவர் அவர் சிவனடியார்களு க் கமுதுபடைக்கும் பெருமையை யுலகத்தாரறிவார் இவ்வாறி ருக்குநாளில் சிவபெருமா னொருகாலத்து ஒரு சைவதேசிகர் போலவந்து சிறுத்தொண்டரோ யுமதருமைத் திருமகனைக் க றியாக்கி யமுதுபடைப்பீரென்று கேட்க, அவ்வாறேதொண் டருங் கறியாக்கிப்படைக்கப் பின் அந்தப்புத்திரனுஞ் சிவானு க்கிரகத்தால் உயிர்பெற்றனன். இந்த அன்பரோடு அவர் சுற் றத்தாரையுஞ் சிவன் கைலையில் வசிக்கச்செய்தனர்.

இப்படிச்செய்வதல்லவோ பத்தி மற்றபத்திகளைச் சொல் லுதலாற் பயனென்னை யென்றுசொல்ல விதனைக்கேட்டிருந்த அலாயுதரும் மிகுந்தகோபத்துடனே சிவசிவ இதென்னசெய்தி சொல்லுகிறீர், கொலைத்தொழிலைப் புண்ணியமென்று போதி ப்பரோ நரமாம்ஸத்தை யரக்கர்தின்னுவரல்லது சங்கரனாகிய சிவபெருமான் றின்னுவதும் முறையோ, தகப்பன் பிள்ளையை க்கொன்று லதுவும்பத்தியாமோ இது எனக்குச் சந்தேகமாக த்தோற்றுகின்றது என்றுசொல்ல, அலாயுதரோ இப்படி பெ ண்பாற்பத்தரும் ஆண்பாற்பத்தரும் எத்தனையோபேர்கள் த மது பிள்ளைகளைக்கொன்று பத்திசெய்தவர்கள் இதுசத்தியம். சிவபத்தியைப்பழித்து மறப்பது அடியார்க்கழகன்று, அடியா ரொன்றைக்கேட்ட சமயத்தி லில்லையென்னாது கொடுப்பதே பத்தர்கட்குச் சுபாவம், பரமசிவத்துக்கு மிது பிரியமாகும், இ ந்தப்பத்தியென்ப தந்தச் சிறுத்தொண்டரிடத்தல்லவோ விள ங்கிற்று. உமக்குச் சந்தேகமானல் உமக்கானவனாக்கொண்டு விசாரித்துப்பாரும், அவரிருந்நாட்டில் வீடுகடோறு மிச்சரித் திரத்தைச் சொல்லுவார்கள், செல்லுகுற்றும்பெண்களு மிதை

ப்பாடுவோர்கள், அதைப்பழித்துரைக்க வுமதுவசமோ என்று சிவபெருமான்சொல்ல, அலாயுதர்க்கு முன்னிலு மதிகமான கோபமுண்டாய் சிவன் நரமாம்ஸபக்ஷணம் பண்ணுவதும், பிராமணன் பிள்ளையைக்கொன் றுண்பிப்பதும் வெகு நன்றாயிருக்கின்றது, எப்போது கத்தியைக் கழுத்தின்மேல்வைத்தாரோ அப்போதே யச்சிறுத்தொண்டர்க்கு விரும்பியபொருளைத்தருவதே நன்மை, அவ்வாறன்றி யூனையறுக்கப்பார்த்திருந்தால் நன்மையோ, இச்சிவன் பிள்ளைகளைப்பெற்றவரல்லவோ இந்தச் சிவபெருமானுக்குஞ் சிறுத்தொண்டனுக்கு மிவ்வாறான குணம் வந்தகாரணந் தெரியவில்லையாதலால் இந்தப் பூலோகத்திலுள்ள வடியார்களுக்கும் கைலையிலுள்ள சிவகணங்களுக்கும் இவ்விருவரும் புறம்பு என்று கையையறைந்து மிகுந்த வுக்கிரத்துடனே சொல்லினர். இந்தச்சொல்லைக் கேட்டவுடனே சிவனுந் தொண்டரும் நடுநடுங்கிப்பயந்து தலையிறங்கி முகத்தொளிகுன்றி ஒருவரையொருவர் பார்த்தனர்.

அப்போது அலாயுதரும் ஐயா இனி யிப்புலாலுண்ணுங்கதையைப் பேசவேண்டாம் இதற்குப் பதில் சொல்லவேண்டிவரும் என்றுசொல்ல, அப்போது சிவபெருமான் உமாதேவியாரை நினைக்க அவ்வுமாதேவியாருங் கைலையிலிருந்த சிறுத்தொண்டர் பத்தினியுடன் தவக்கோலங்கொண்டு அலாயுதரிடத்துச்செல்ல அவரும் உபசரிக்க உமாதேவியாரும் அலாயுதரே நீரடியாருட் சிறந்தவரொன்று கேள்விப்பட்டோம் நாமொருபொருளைக்கேட்கின்றோம் நீர் அவ்வாறு தரல்வேண்டுமென்ன அவரும் நீர் விதிதவறாது கேட்கி னவ்வாறே தருவோமென்ன என்னுடன்வந்த விவர் சிறுத்தொண்டரது பத்தினியார், யாமோ சி

வபத்தினி எமதாகணவரிருவனாயும் புறம்பென்று நீர் சொன்ன படியால் அதுபொருது துயருற்றுவந்தோம் ஆதலால் நாங்கள் தனித்திருப்பது முறையன்று எங்கட்குப்புருஷதானம் பண்ணி யவனைத் தாய்மையராக்கவேண்டுமென் றுரைக்கச் சிறுத்தொண்டர்மனைவியாரும் அலாயுதனைவணங்கித்துதித்தனர். அப்போது அலாயுதரும் அவ்விருவர்க்கு மினிப் புறம்பில்லையென்று அன்போடு இவ்விருவர்க்குஞ் சொல்லினர். அப்போது சிவபெருமானும் விருஷபாருடராக ப்ரத்தியக்ஷமா யலாயுதர்க்கருளிச் செய்து உமாதேவியாரோடும் அடியார்களோடும் புஷ்பவிமானத்தேறிக் கைலையிற்சென்றனர்.

அலாயுதர்புராண வசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரப்பெருமானயினர் புராணம்.

மற்றுநாவலூர்ச்சுந்தரன்மாதை மணஞ்செய்பந்தரின் வந்தானமக்கே, பற்றுமேவல்செய்தொண்டனென் றுண்டுபாடுநம்பதமென்னநற்பதிகஞ், சொற்றவன்செங்கல்பொன்னெனச்செய்தோன் றேரைகைபாகனைத்தூதென விடுத்தோன், குற்றவெங்கராவிழுங்கியமகவைக் கொணர்வித்தாற்றிட்டரிதிகடந்தெடுத்தோன். க

அணங்குபாகனைக்கோட்டினுண்மறித்தோ னத்தனு
ரூரினுலயத்தவனை, வணங்கிடாமலேயகந்தையாற்செல்
லு மறத்தையவ்விறன்மிண்டர்தாங்கண்டு, துணிந்துசெ
ல்பவனுனெனமித்தன்றேழனென்ன வித்தொண்டனுமி
வனைப், புணர்ந்தவத்தனும்புறம்பெனத்தவனைப் போற்
றுகென்றரன்புகன்றிடப்புகழ்வான். உ

நாசமில்லவனடம்பயில்பெருமானு மவர்க்குளேயொ
ருவராமென்னுந், தேசுபெற்றுயர்பெருமையார் தெரு
ள்சேர்தில்லைவாழு மூவாயிரர்க்கடியே, னீசனுணையெ
னுந்தையலாள்பாலின்பநீத்தறமூத்திறையருளாற், காசி
ல்காளையானவன்றிருநீல கண்டனுங்குயக்கருணையற்கடி
யேன். ௩

அன்பர்போலரனணைந்துநின்மாதை யளிநமக்கென
க்கொடுத்துளமகிழ்ந்த, வின்பன்காவிரிப்பூம்பட்டினத்
தி னினிதுவாழ்ந்தவியற்பகைக்கடியே, னென்பசிக்கமு
தளியெனுந்தவத்தர்க் கின்மையென்றிடா திருண்மூளை
வாரித், துன்பநீங்கமுதுதவியவிளைசைத் தூயமாறன்ற
னடியவர்க்கீடியேன். ச

பொய்த்தவத்தனோர்புத்தகமேந்திப் புகுந்துவந்துயிர்
போக்குமவ்வளவிற், றத்தன்வந்தவற கோறன்முன்றடு
த்த தன்மைக்கோவலூர் மெய்ப்பொருட்கடியே, னத்த

னெயனாவணங்கிடாதேகு மறிவிலேலேனையுமரனேயும்வெ
குண்டு, மெய்த்தயாவர்க்கும்புறம்பென்றதீரன் விளங்
குசெங்குன்றைவிறன்மிண்டர்க்கடியேன். ரு

கோவணத்தினேர்தவர்தருகென்னக்கோதில் செல்வ
த்தைக்கோதையைத்தன்னே, மேவியீந்தவனியற்பழை
யாறை விளங்கவந்தருளமர்நீதிக்கடியேன், பூவரற்கென்
ருேர்மாதவன்கொய்துபோதுங் காற்கரப்பொருப்பதை
ப்பறிக்க; வேவமென்றிபங்கொன்றவன்கருவூ ரொன்று
மாஙகரெறிபத்தர்க்கடியேன். சு

காதுமாற்றலனெற்றிவெண்ணீறு கண்டுகைப்படை
விட்டாற்கண்டோ, ளிதியிழுக்குலத்தோனெயினனூர்
நீடுமேனதிநாதனுக்கடியே, ஞதியார்திருக்காளத்தியார்
கண்ணடைந்தசோரிகண்டங்கையம்பாற்றன்,சோதியம்
பகமிடந்தணிந்துடிப்பூ- துலங்கவந்தருள்கண்ணப்பர்க்
கடியேன். எ

ச்ாய்ந்துறும்பனந் தாளரனேராந் தன்மையேநிறீஇ
மனேவியின்றுலி, வாய்ந்ததுபத்திற்கீந்தவன்கடவூர் வ
ள்ளறெள்ளிய கலேயனுக்கடியே, ஞய்ந்தநன்மணப் பந்
தரின்மகளா ரரியகூந்தலே யரிந்துமாதவருக், கீந்தவண்
புகழ்த் தஞ்சைநன்னகர்வா ழினியமானக்கஞ் சாறனுக்
கடியேன். அ

தமதாற்கென்று தண்டலைத்தருங்காற்சாய்ந்துமண்புகத் தங்களங்கொய்தங்; கழுதுசெய்வித்தவர்கணமங்கை யார்பெறும்பயன்றூயனர்க்கடியேன், கமலவேயினிலீசன ன்புகழேகசிந்து சொற்றுளங்கனைந்துநின்றூதிச், சம மிலார்க்கிதஞ்செய்தமங்கலம்வாழ்தாவிலாணயரடியவர் க்கடியேன். கூ

வே று.

ஆரமீசற்கமனரான்முட்டலு மங்கைசந்தனமாகவ ைத்தான், வாரமுற்றுலகாண்டவர்மதுரை வாழவந்த ருண்மூர்த்தியார்க்கடியே;நேரில்பஞ்சாக்கரந்திகழ்நாவா னிகரில் சம்பந்தன்றேழனம்மலர்த்தார், மூரியேற்றற்கு த்தொடுப்பவன்புகலூர் முந்தியெய்தவாழமுருகனுக்க டியேன். ய

புனலினல்லும் பகலும்பொருந்தியே போதருத்திர மோதும்புரிவின, னினைவுநைந்துதிருத்தலையூரிட னின்ற ருத்திரபசுபதிக்கடியேன், றுனியிலாத திருப்புறத்தொ ண்டனற் றூபவாதனூர்வாழ்வான்புலையொழிந், தினிய தீயிறசிதம்பானன்பின லெழுந்துநாளைப்போவான்றன க்கடியேன். யக

உமையிடத்தினன் கச்சியிலன்பர்று சொலித்துலத் தற்கொழியாமழையின; லமைவினெஞ்சாற் சிலையிற்ற லையறைந் தருள்கொளுங்குறிப்புத்தொண்டர்க்கடியே;

னைமையுடைப்பரனர்ச்சனைசெற்றனனென்றுதந்தையி ருதாடுணித்தா; னமதுசேடங்கொளென்னமுன்பெற்ற வ ஞடிஞ்சேய்ஞலூர்நற்றண்டிக்கடியேன். ௰௨

கன்மிதப்பக்கடுவெழுதாகவெங் கரிவணங்கமறைக்கா ட்டடைத்திடும்; வன்மைமிக்ககதவந்திறந்திட வன்னிநீ ற்றறைசூலதண்ணென்றற, வன்மிகுத்தபிறவியகலவே யதிகவீரட்டர்க் காளாகிப்பாடினே; னன்மைமிக்குயர் வாய்மூர்வருந்திரு நாவினிற்கரையன்றனக்கடியேன்.

அரியபாண்டியன்றன்னதிகாரியா யமணரோறற்கருங் கழுச்சேர்த்தவன், குருசிலாமணமேற்குடிக்காவலன்கு லச்சிறைக்கடியார்தமக்கடியேன், புரியுநற்சிவயோகமெ க்காலமும் போதநெஞ்சிற்புரிந்துணர்ந்தென்னையு, முரி மையாகநினைப்போன்மிழலையோ ருய்யவாழ்குறும்பன் றனக்கடியேன். ௰௪

மாவினன்கனிமாதவர்க்கிட்டிறை வாழும்வெற்பிற்ற லையாற்செலவர, ருவலாலெமதம்மையெனப்பெற்ற வ ன்னைகாரைக்காலம்மைக்குமடியேன், ருவினுவிற்கனா யன்றன்பேரினுற் றண்ணிலாவுநீர்ப்பந்தரோடேனையும், பாவினம்பி னமைத்தவன்றிங்களூர்ப் பனவர்வேந்தனு மப்பூதிக்கடியேன். ௰௫

சிலம்பிநம்முடற்சேரனின்பன்னிநான் சென்றுமிழ்ந்த தாற்றீர்ந்தது நோயெனச்,சொலுஞ்சொலத்தர்பாற்பெற் றவன்சாத்தைவாழ் தூயநீலநக்கன்றனக்கடியே; னிலங் குமேமப்பேறூரனூராரற் கேற்றுதீபநெய்க் கேதஞ்செ ய்வெஞ்சமண், கலங்கவென்றுநன்னீரால்விளக்கிடுங் க ரவிலாதநமிநந்திக்கடியேன். ௰௬

மண்டமைக்கச் சமணர்வலிகெட வந்துசெந்தமிழ்ப் பாடவுமைமுலைக், கண்டரும்பயமுண்டுபுகலிமுக் கண் ணனைத்துதித் தங்கம்பெண்ணாகவும், பண்டுநீங்கு கத வடைக்கவும் பாலைநெய்தலாய்ப் பாம்பதிறக்கவு; மீ ண்டுபுத்தர்கெடவிடிவீழவு மிக்கபாச்செய்தசம்பந்தர்க் கடியேன். ௰௭

எந்தைதன்றந்தை யேமுதலாயினோ மெல்லவர்க்குமி றைவன்வன்றொண்டனே, வந்தநோயையொழிப்பனெ னப்படைவாங்கிவாழ்ந்தகலிக்காமர்க்கடியே, னந்துசாத் தனூராயன்குரம்பையி னண்ணியத்தர்க்குநான்மறையி ன்படி, முந்துசெந்தமிழ்மூவாயிரஞ்செய்த முத்தனாகிய மூலனுக்கடியேன். ௰௮

விழிகளின்றிக்கயிறுகுறியதாய்வித்தகர்க்கந்தடஞ்செ ய்யவெஞ்சமண், பழியர்சிந்தித்துக்கண்ணறத்தாள்விழி படைத்தவாரூர்ப் பதிதண்டிக்கடியே; னழகுநீர்வயல்

வேற்காட்டீர்மன்னவனொடு குதிலணைந்தபொருள்வர, மூழூதுமன்பர்பெறநற்குடைக்கையின் மோகத்திற்றங்கமூர்க்கனுக்கடியேன். ௰௯

அஞ்செழுத்தோதலல்லான்மொழிக்கிலா வன்பரந்தணனாவோன்றன்வேள்விக்கு, நெஞ்சுவந்தரன்வந்திடப் பெற்றமாநேயன்சோமாசிமாறனுக்கடியேன்; வஞ்சிபாசனருட்கர்சிக்கம்பன்மேல் வந்துசெங்கற்றினமுமெறிந்தவன், தஞ்சமென்றனைடந்தோன்சங்கமங்கையிற் சாக்கியன்றனதடியவர்க்கடியேன். ௨௰

பூசிசாதன மேவும்புனிதராம் புண்ணியத்தனைப் பூசிக்கும்புத்தியன், வேதியக்குலனைக்கூரதிபனை மிக்கபத்தன் சிறப்புலிக்கடியே; னாதியத்தர்க்கமுதாய் மகன்றனைபாக்கிமற்றுமானைமழையென்னவே, தீதிலன்பினளைத்தநாள்பெற்றசெங் காட்டுமன்சிறுத் தொண்டனுக்கடியேன். ௨௧

எதிர்த்தவன்றனையுடலுவர்கீறவெதன் றிறைஞ்ச நானடிவன்றனென்றேத்தலு, மகிழ்ந்துநானடிச்சேரனென்றேத்திய வஞ்சிமன்னன்கழறிற்றறிபவன்; றுதித்தரன்றிருத்தாண்டவம்பூசனை தொலைவிளித்தலுங் தோன்றப் பெற்றெம்பிரான், விதித்தசென்முகம்பாணராற்பெற்றருண் மேவும்வேந்தனைஞ்சேரனுக்கடியேன். ௨௨

தீதிலன்பர்கள் செய்யுந்தொழிலெலாஞ் செப்பிச்செய்வித்தரன்கணநாயக,நீதிபெற்றவன்கொச்சைக்கதிபனன் னேயனுங்கணநாதனுக்கடியே, ஞதன்பாதமுடியாய்க்கவித்தரு ணற்கருத்திலமைத்ததுகொண்டுமண், போதவாண்டவருட்களப்பாளனும் பொய்யில்கூற்றுவனடியவர்க்கடியேன். உ௩

சங்கமேவித் தமிழார்மதுரையிற் சங்கரனியற்சொக்கர்மேற்றண்டமிழ், பொங்குமன்பின் வகுத்தவராகிய பொய்மையற்றபுலவர்கட்கடியேன், வெங்கபத்துடனென்னையுங்கொல்லென மிக்கவாளளித்தருஞ்சடைமுடிக்காய்ச், செங்கனற்புகுந்தருள்பெறுகருவூர்ச் செய்யசோழனடியவர்க்கடியேன். உ௪

அருட்டருந்தவர்க்கம்பொனேகொடுப்போ னன்னமன்னவர்க்கிடுங்குறிபுடலர்க், கிரட்டிபொன்றருநரசிங்கமுனைய னென்னுமன்பன்றனடியவர்க்கடியே, னிருட்கடற்குண்மீன்படுக்கின்முன்மீனே யெம்பிராற்கெனவிடுத்தின்மையாநாட், பொருட்செய்மீன்வரவிட்டரனருள்சேர் போதநாகைவாழதிபத்தர்க்கடியேன். உரு

தொண்டன்பொய்ச்சிவவேடமாய்வரத்தான் றுணைப்பதங்கள்விளக்கநீர்வார்க்கக், கண்டுநாணுமின்கரஞ்செற்றபெண்ணு கடத்தலக்கலிக்கம்பனுக்கடியே, னண்டர்

நாயகர்க்கணிவிளக்கேற்றற் கப்பொனின்றிச்செக் குழ
ந்துகந்தரங்கொய், தொண்டரும்விளக் கேற்றிநன்றருள்
சே ரொற்றியூர்வருங்கலியனுக்கடியேன். உசு

சங்கரன்றனக்கன்பனையிகழ்ச்சி தன்முனஞ்சொலிற்
முனவர்நாவை,யங்கரிந்திடுவோனியல்விரிஞ்சியணிகொ
ணன்னகர்ப்புகழ்ச்சத்திக்கடியேன்,மங்கைபாகத்தன்று
ணங்கடோறுமாகிலொவ்வொருவெண்பாவகுத்தவன்; க
ங்கைவேணியர்க்கன்பனையடிகள் காடவன்றிருவடியவர்
க்கடியேன். உஎ

இருக்குவேளூரொழுந்தலத்திருந்தே யின்மையெய்தி
ப்பொனம்பலத்தேகி,யருட்புலீச்சரத்தாற்குப்புற்சிகை
யா லணிவிளக்கிட்ட கணம்புல்லர்க்கடியேன், சுருக்க
மாயினசெய்துலகோரைத் துதித்தயாவையு நலமெனச்
செய்து; நிருத்தனற்கிரியடைந்தவன்கடவூர் நீடவந்தரு
ள்காரிக்குமடியேன். உஅ

கொச்சைவேந்தனை யெதிர்மலைந்திடைந்த குண்டர்த
ங்கலைக்கொடுங்கழுமிசையின், வைச்சபஞ்சவனெல்வே
லிவென்ற மாறனுகியவழுதிக்குமடியே; னிச்சயாலயம
னமெனவறிவே நின்விளக்கெனத் தனைமலரொன்ன, நச்
சுமன்பினுற் றெழுதவன்மயிலை நகர்விளங்கவாழ் வாயி
லார்க்கடியேன். உகூ

ஒன்னலார்களைமலைதலையறியா ருதவுகூவிகொண்டவர்களைவென்றப், பொன்னெலாஞ் சிவதவர்க்கருணீடேர் பொருந்துசீர்முனையடுவாருக்கடியே; னன்னைபாகத்தாரூரர்க்காய்ந்தவந்தப்பூவினைமோந்தவத்தேவித், தென்னர்மூக்கினைத்தவர்கொய்யக்காமுஞ் சென்றரிந்தவன்கழற்சிங்கற்கடியேன். ௬௰

நிலந்தியங்குவெங் கருப்பின்மெய்த்தவர்க்காய் நெற்கவர்ந்தவர் சொற்கரன்றமர்க்கெ, னிலங்குசெல்வங்களௌணப்பறையறைந்த விருக்குவேளூரிடங்கழிக்கடியே, னலங்கொண்மன்னவன்கழற்சிங்கன்றேவி நம்பன்பூவினை மோந்தனளென்னச், சலஞ்செறிந்தவண் மூக்கினையரிந்தோன் றஞ்சைமன்னவன்செருத்துணைக்கடியேன். ௬௧

தென்றரும்பொழிற்செருவிலிபுத்தூர்ச் செய்யவேதியன்சிறுவிலையாளுான், பொன்றிமஞ்சனங்கரம்பொருதுகப் பொன்புனிதனுற்பெற்றபுகழ்த்துணைக்கடியே, னன்றரற்கெனவாணைசெய்நெல்லை யயின்றசுற்றத்தைமகவினைவாளாற், கொன்றநாட்டியத்தான்குடிமன்னன் குலவுகோட்புலியடியவர்க்கடியேன். ௬௨

பரவியன்புசெய்பத்தர்கட்கடியேன் பரமன்றுளையே பாடுவோர்க்கடியே, னரனைநெஞ்சகத் தழுத்தினேர்க்கடியே னமலனூரிற்பிறந்தவர்க்கடியேன்; திருமெய்மு

ப்போதுந்தீண்டுவார்க்கடியேன் றிருந்துநீறணிதேகத்த ர்க்கடியேன், பொருவிலன்பாய்ச்சிவன்கழன்முன்னம் புகுந்தமெய்யடியார்கட் குமடியேன். ௩௩

கொண்டல்போன்மிடற்றெந்தையார்வைகக் கோயில ன்பிறற்கோலியேயிதயப், புண்டரீகத்திலமைத்தரற்சே ர்த்தோன்பொலன்கொணின்றவூர்ப்பூசலுக்கடியேன், ம ண்டருங்குழலுமைதிருமுலைப்பான் மகிழ்ந்துசம்பந்தர யின்றனதொன்னத், தண்டருந்தனஞ்சுராந்தவள்சமணைச் சாய்த்தமங்கையர்க் கரசிக்குமடியேன். ௩௪

ஈசனன்பர்க்குக் கீளுடையுடனே யேற்றகோவணநெ ய்தளித்தெம்மான், வாசநற்பதம்பெற்றகாம்பீலி மன்னு சாலியநேயனுக்கடியே, னேசநெஞ்சினலரனையேகருதி நின்சிலம்பியாய்ப் பந்தர்செய்தருளான், மாசிலாலயம் பலகண்டசோழன் மன்னுகோத்திருச் செங்கணற்கடி யேன். ௩௫

பொன்றலாப்புகழெருக்கத்தம்புலியூர்பொருந்திச்சம் பந்தன்றமிழிற்றன்னிசையை, யொன்றவேபுனைந்தரனி டத்தணைந்தன் றுயர்ந்தநீலகண்டப்பாணருக்கடியே,னெ ன்றுநாவலூர்ச் சடையன்முன்றவத்தா லினியதையலா மிசைஞானிநவத்தா, னன்றுறப்பெற்றசுந்தரன்றுதிக்க நற்றவத்தரும் புறம்பிலையென்றூர். ௩௬

வேறு.

மனத்திடையகந்தையிவ் வாறுமன்னியே
நினைத்துளோர்பத்தியை நின்றுநேசியான்
றனக்கெதிரில்லவன் சம்புநம்பர
னெனச்சொலநந்தியா ரினிதினேத்தினார். ௩௭

எத்தியநந்திக ளேனையோர்களைத்
தேத்துறுமாச்சையர் செலவிடுத்தபின்
மாத்தவராடைகள் மாசறுத்தர
தோத்திரநாவராய்த் துறையினின்றனர். ௩௮

சுந்தரப்பெருமாணாயனார் புராணம்
முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் - ௯௪௯.

உ
திருச்சிற்றம்பலம்.

சுந்தரப்பெருமாணாயனார் புராண
வசனம்.

திருநாவலூரிற் சடையநாயனார்க்கு மிசைஞானியார்க்கும் புத்திரரூபமாகத் திருவவதாரஞ் செய்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் நரசிங்கமுனையநாயனா ரபிமான புத்திரனாகவிருந்து திருமணம்புரியுமிடத்துச் சிவபெருமானே மானுடக்கோலங்காட்டித் தடுத்தாட்கொள்ளப்பெற்ற பெருஞ்செல்வமுள்ளவர்,

தம்பிரான்றோழனென்னுந் திருநாமமுள்ளவர். சிவபெருமானைப் பரவையாரிடத்துத் தூதனுப்பினவர். இவரொருகாலத்துத் திருவாரூரிலாலயத்தில் முதலிலுள்ள தேவாசிரிய மண்டபத்திருக்கு மடியார் திருக்கூட்டத்தை வணங்காமல் சன்னிதானத்திற்செல்ல.

அத்திருக்கூட்டத் தொருவராகிய விறன்மிண்டநாயனார் திருக்கூட்டத்தைவணங்காம லகந்தையோடுசெல்லு மிவனொன்ன, அங்கிருந்தவரிற் சிலர் தம்பிரான்றோழனென்று சொல்ல விறன்மிண்டர் மிக்ககோபமுடையவராய் இத்தொண்டரு மிவனையாட்கொண்ட கடவுளும் இருவரும் புறம்பென்றனர்.

இதைக்கண்ட சுந்தரமூர்த்திசுவாமிகளும் சிவபெருமானிடத்து விண்ணப்பஞ்செய்ய சிவபெருமானும் திருக்கூட்டத்தைவணங்கித் துதித்தாலல்லது முடியாதென்றருள.

அப்படியே தில்லைவாழந்தணர் திருநீலகண்டநாயனார் முதலியவடியார்களைத் திருத்தொண்டத்தொகைப் பாவாற்றுதித்து வணங்கினபின் அவ்வடியா ரிரக்கமுற்றுப் புறம்பில்லையென்றருளிச்செய்தனர். அதற்குப்பின் சுந்தரமூர்த்திசுவாமிகள் அடியரிலொருவராகவந்துகூடினர். ஆதலால் அடியராய்ப் பத்திசெய்து அகந்தைவிடாதிருந்தால் செய்தபத்தியெல்லாம் வியர்த்தமாகும் என்றிந்தச் சரித்திரங்களையெல்லாம் மடிவாலமாச்சையர் ஸ்ரீவசவதேவர்க்குச்சொல்லி மற்றையவடியார்களையும் வசவதேவரோடுசெல்ல வநுப்பித் தாமுஞ் சிவனடியாராடைகளை யழுக்கொழித்துச் சிவத்தியானத்துடன் அந்நீர்த்துறையிலிருந்தனர்.

சுந்தரப்பெருமாணாயனார் புராண வசனம்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

—*—

கின்னரப்பிரமையர் புராணம்.

செல்வநற்பத்தியாலே தெரிமணிவீரசைவர்
நல்லதோரமுதமன்னர் நற்கதிமகேசரென்று
புல்லுவார்பாவதூரர் பொருந்தியவித்தைமிக்கார், சொ
ல்லரும்பூதிமெய்யார்கருணையார்கொடையாற்றூயர். க

உன்னிலுமகந்தையில்லா ரொழிவிலாவிரதசீலர்
கின்னரப்பிரமரென்னும் பேரினர்கிளரும்வாத
ரென்னுமாகிரிகள்வீழ்க்கு மிடியனர்மடியொன்றில்லார்
மன்னருமுலகர்போற்றுஞ் சரணரின்வரிசைமிக்கார். உ

பொங்கியவிசையான்மிக்கபொருவில்பொண்டேரில்வைகி
துங்கநற்காரகத்தாந் தூயதம்பொருளையெல்லாஞ் [த்
சங்கமசங்கநண்ணிச் சங்கையிலன்பினாலே
யங்கவர்க்கவஞ்சகத்தா லனுதினமளித்தலாலே. ௩

உள்ளநற்பொருள்களெல்லா மொழிந்துநல்குரவராயும்
வள்ளன்மைகுன்றாரய மனத்தர்தங்கின்னரத்தைத்
தெள்ளிழைப்பாகர்முன்னந் திருந்தவாசிக்கநச்சிக்
கொள்ளுநீபொற்காசென்றுதினந்தரவாங்கிக்கொள்வார்

உலகாச்சரியமெய்த வுவந்துமாதவனைப்பூசித்
திலகுநாணைந்திகேச ரிருஞ்சிலபத்திகீர்த்தி
நலமுறக்கேட்டுநச்சி நற்கவிபாணநண்ணைச்
சலமிலாவசவதேவர் சங்கமேசுரான்போற்கண்டு. ரு

அதிகநேயத்தராகி யம்புவிபுறப்பணித்து
விதியுபசாரமெல்லாம் விரும்பியேசெய்துவாழ்த்திக்
கதியெனத்தொழுதுபாத கமலநீர்ச்சேடமார்ந்து
பதியராலுண்மையாய்ந்து நந்திகள்பண்பார்நாளின். ௬

ஒருதினங்கல்வியாணைத் தொண்டிரிபுராந்தகேசர்
மருவுமாலயத்துச்சென்று பிரமையர்வைகுங்காலே
விரவியோர்விடன்றனக்காம் வேசிக்குமேடங்கொண்டு
தெருவிடைவருங்காற்றப்பிச்சிவாலயம்புகுதக்கண்டு. எ

பின்றொடர்ந்தம்மேடத்தைப் பிடிபிடியெனவிடன்முன்
சென்றுறக்கின்னரையர் செய்யநற்கருணையாலே
நன்றுறநோக்கிமேட நம்பரன்கோயில்புக்க
நின்றநீகோறற்கஞ்சி யெம்பிநீதொடலேலென்று. அ

கொல்லுதல்வெய்யபாவங் கொண்டவவ்விலையிதென்று
சொல்லுநியதிகமான சொன்னநாந்தருதுமன்றி
யல்லணிகண்டனன்ப ரடைக்கலமானசீவன்
வெல்லவோத்தனிதி நினைக்கிதுமிகுத்தநன்மை. கூ

காரியங்தேவையின்றிக் காளையுங்தேவையின்று
ஞரியாம்பரத்தைக்கிந்து நன்றுரைத்தொப்பச்செய்வாய்
சீரியபொருளிரட்டித் தருகுதுஞ்செல்தியென்ன
நீரியும்பொருளுன்கொள்ளேன் மேடமேநேயமென்ன.

இவ்விலையன்றிமற்றென் றிரண்டுவேண்டினேயேலேனு
மவ்விலைதருவேன்கொள்ளென் றளித்தலுமாயிரம்பொ
செவ்வியவிலையென்மேட மென்றலுஞ்சிவனேயம் [ன்
வவ்வியகின்னராய ராயிரம்பொன்னும்வைத்தார். ௰க

வைத்தலுமவன்மகிழ்ந்துவாங்கிக்கொண்டேகயேட,
மித்தையாங்கொண்டோமத்தன் முத்திரையிடுவோங்க
ண்டா, யொத்தனேயாகிற்சொல்லென் றுரைத்தலுமொ
த்தேனென்று, சித்தர்தஞ்சன்னிதிக்க ணின்றுரைசெய்
துசென்றுன். ௰உ

மேடமுன்னும்பின்னுக மேவுதலின்றிச்செய்தா, லூடு
வள்பரத்தையென்ன வுன்னியோரதிகமையா; யாடகங்
கொடுத்துக்கொண்டங் கவண்மனேகொடுபோங்காலைத்,
தோடலர்குழலியிவ்வா றனைத்தையுந் துணிந்துகேளா.

வெம்பிநீயெனதுவீட்டின் மேவலென்வெள்காதென்று
கொம்பியிவ்வூர்விடர்க்குக்கூறுங்காற்சிரித்தெள்ளாரோ
வம்பவிங்கென்றன்முன்னம் வந்துநின்முகங்காட்டேலு
னம்பொனேவென்றன்வாழ்க்கைககானதாயுள்ளதென்னு

என்பெருஞ்செல்வம்பார்ப்பா யென்னினித்தெருக்க
ளெல்லா, நன்பொனேபரப்புவிக்கே ணட்டுளவிடர்களா
னோர், பின்புமுன் படப்பையிட்டுத் திரிந்தவர்க்கொவ்
வாய்பேயா, மின்பொருமிடையார்முன்னுன் வெள்கவெ
ன்செய்தாயென்ன. ௰௫

இக்குறிபுடனேபொன்ன யிரமுமிட்டனேகமேடம்
புக்குடன்றருவனேனன்பு போதநீசெய்வாய்காயேற்
றக்கபொன்வேண்டினின்னந் தருகுவனென்னச்சீறி
யக்குறிதந்தாயேனன்பின் றனுட்டிப்பனல்லாலாகா. ௰௬

என்னையத்தெய்வங்கொல்லுமென்னவேவெகுண்டா
ளந்த, மின்னையொப்பவள்சொற்கஞ்சி மிக்ககாமனுக்கு
க்கண்ணின், றுன்னிலென்றுணக்குஞ்சொல்லையுறுத்து
வான்போன்றுமூட, னிந்திதிகொள்விர்மேடம்விடுவிரொ
ன்றெதிரிசைத்தான். ௰௭

முந்தயாங்குறிக்குலிங்க முத்திரைதரித்தோநீயேன்
வந்தனைவிடுகிலென்போ வென்றலுமதியிலாதா
னந்தமேடத்தையோடி யடர்ந்தனன்கின்னரையர்
வெந்திறற்கோபமாகி வெகுண்டிதேனேடாவென்ன.

மறியைநீபிடித்தாயாகில் வசவராசையனாணை
சிறியனிபோபோவென்று செப்பவுந்தெளியானகிக்

குறியினைத்தொடரலிங்கக் குறியுள்ளவிதனைத்தீண்டிற்
றறியுமுன்றலையென்கையாற்சத்தியமஞ்சேன்கண்டாய்.

அச்சமிலீசனன்பர்க் கடைக்கலம்புகுந்தோர்தங்கள்
வச்சிரபஞ்சரங்கா ணின்றலைமனையினுளம்
பிச்சுடன்பிடுங்கும்வேழ மென்னவேபெரிதுபேசிக்
கைச்சவன்றலையையோடி வாளினாற்கண்டித்தார்த்தார்.

விசையினாற்சென்னியத்தன் விமலவாலயத்துவீழ
வுசிதமன்றென்னவோடி வீழ்வதுபோலவீழ்ந்த
தசைவிலாவீசன்கோயி லத்திரனுடறங்கொண்ணுத்
தசைகெடாதீர்ப்பமென்னமதிற்புறந்தந்திட்டாரால்.உக

இறந்தவனுற்றார்வந்தா ரவன்றனையெடுத்துச்சென்றார்
சிறந்தவிச்சலன்பாலிட்டார் தெருமந்தாரபயமென்று
ரறந்தகுவேந்தேதப்பின்றலயத்தாட்டின்பின்னர், பிறிந்
திடாதோடிச்சென்றான் பிரமையர்கொன்றானொன்றார்.

இனியநந்திகண்முகத்தை விச்சலனேறப்பார்த்து; நனி
தயாபரனுமீசனற்பத்தராகியுள்ளோர், மனிதரிற்பிழை
யிலாளா வதைப்பதோபெருமையிவ்வூர், தனிலிருநீரோ
யென்று தனாமன்னன்வெகுண்டுசொல்வான்.　　உரு

நம்மையார் தெண்டிப்பார்க ணமக்கெதிரில்லையென்
ன, வும்மைநீர் மதித்துச்செய்தீ ரல்லதங்குடையோன்

மேடஞ், செம்மையிற்கொடுபோகென்றுவிடாவகைசீறி க்கொன்ற, வெம்மையன்றவத்தனென்று விளம்புதன்மி கவுங்குற்றம். உச

வேறு.

கால்கொடத்தனேயுதைத்தலுமூனைக் கடிதருத்தலுந் தனயனேக்கொலலுஞ், சீலமின்றியே தந்தையைக்கொ லலுந் தெரிவைபைத்தவர்க் களித்தலுங்குலத்தான், மே லர்கீழினரகத்தினிலுணவு மிக்ககல்லிறை லீசன்மேவிட லு, மேலுநன்மையோ பாவகீர்நாவா வியம்பலேயுறங் கொடுமையேயியற்றல். உரு

அவனியெம்மைநீ ராளவேபொருந்தீ ரஞ்சினேமும தாண்மைக்குமிகயாம், புவனிமுற்றுநீர்கைக்கொளுமெ ன்றுபுரவலன்சொலநந்திகள்புகல்வார், தவசியாயராங்கி ன்னரப்பிரமர் தம்மைநீயறியாமலீதுணைத்தாய், பவசி யாயராமுலகரைப்போலப் பதறலாரவர் பராமரித்திசை ப்பாய். உசா

பன்னகப்பணியத்தனற்றருமப் பான்மைகுன்றலாப் பரமாற்பத்தர்,கின்னரப்பிரமையர்தம்பெருமைகிளத்தி லெண்படாப்பாலரோமிகைக்கண், டுன்னியல்லதுகோ றலரவணிற் குரியபேர்களையோடவிட்டறிந்தே, பின்ன ரொன்றினைச்செய்யெனவேந்தன் பிழையுடன்படுமெறிவி ளர்விடுத்தான். உஎ

விடுத்ததூகினர் கடுச்செறிகண்டன் மிக்ககோயிலின் விரைந்துசென்றணைந்தங், கடைக்கலத்துயிர்க் காம்பிர மையாரியதாண்மிசைப்பணிந்துநின்றையா, கிடைக்கரு ம்பெரியோய்சிறியோன்மேற் கிட்டியிப்பழி வந்ததேன ருளென், றெடுக்கமுற்றுநின்றறைந்தனரன்பருள்ளவா றிதுவிதுவெனவுரைத்தார். உஅ

•இதற்குநற்றிரிபுராந்தகன்முனே யினியசான்றிதையி சைவிப்பன்றெரிந்து, விதிக்கநும்மிறை வல்லனேற்செ ன்று விளம்புமென்றலுமவர்மிகவேரீஇப்போய்க், கொ தித்தகோபனும்விச்சலன்முன்னங் கூறமற்றவன்கொடு ஞ்சொலானகையா, மதத்தனிவ்வுரைகாண்டுநாமென்று வளங்கொடன்பரிசனத்தொடும்வந்தான். உகூ

வேறு.

வந்துநந்திகள்கின்னரப் பிரமையர்மலர்த்தாள்
பந்தநெஞ்சராய்ப்பரவினர் தொழுதுமுன்பணிந்தா
ரந்தநன்னகர்ப்பத்தர்க ளனைவருமணைந்து
புந்தியன்பொடுதொழுதுற விறைஞ்சிமுன்புகுந்தார்.

மங்கலங்களினிறைவு சிங்காரத்தின்வனப்புத்
துங்கநற்பத்தர்நற் றுணையரன்கரச்சுடர்வாள்
சங்கமர்களுக்காளனர் சான்றவர்க்கினியார்
பொங்குவீரமதங்களின் றிருச்சையப்பொருப்பு. ௩க

அரியபத்திமெய்யாயினார் சாணார்நெஞ்சாலை
பெரியரிச்சையார்சத்தி யத்தருப்பெருவயிர
மெரியனார்பாவாதர்புற் கிடியனார்கலர்கட்
குரியசாந்தியாலுயர்ந்துளார் துயரமொன்றுறாதார். ௩௨

என்றுதோத்திரமனைவருஞ் செய்தங்கங்கிறைஞ்சி
யொன்றுகாலையின்விச்சலன் கோயிலினுள்ளே
சென்றுசோதனைசெய்து நின்றோர்களைநீக்கி
வன்றிறற்கபாடங்களைத் தாழ்செறீஇவந்து. ௩௩

பகர்ந்திடச்சொலும்பரமனைக் கரியெனப்பணிக்க
முகங்குளிர்ந்தவன்கின்னரப் பிரமையர்முன்னி
யுகந்துசென்றருங் கதவினிற்புழையினூன்றி
மகிழ்ந்துநோக்கினார் திறந் தனகதவொலிமல்க ௩௪

கின்னரப்பிரமையர் தங்கிடைக்கருந்தவத்து
நன்னயப்பினைபுணாப்பதே னாடியவளவே
பன்னகக்கரனாலயப் பல்கணிக்கதவந்
தன்னிலேதிறந்தன வினிக்கரிபரன்சாற்றும். ௩௫

ஐயமில்லெனநின்றவர் துதித்தெழுமளவில்
பொய்யில்கின்னரப் பிரமையரத்தன்முன்புகல்வார்
செய்யதாசமையற் கெறும்புணாசெயச்செய்தா
யுய்யுமன்பர்பாலூர்ப்பொம்ம.ருணையெனவுரைத்தாய்.

இச்சகத்தர்முன்கரி யெனக்கப்படியிசையென்
றச்சமின்றியேகரத்து வாளசைத்துநின்றார்த்தார்
முச்சகங்களுஞ்செவிடுற வொலித்ததம்முழக்கங்
கச்சபத்தின்மேற்சேடனற் கணபணங்கலங்க. ௩௭

ஏழுநாழிகைப்படி முழங்கவேயெம்மான்
சூழுநேயரல்லாரொலா மூர்ச்சிதந்தொலையா
தாழுநெஞ்சராய் விச்சலனவசமுற்றதனல்
வாழுநந்திகள்பிரமையர் கழன்மிசைவணங்கி. ௩௮

பெருமையாக்கிதம்பிரியலா யல்லைப்பிணியாய்
மருவுபுண்ணியவாரியே யகந்தையைமதியாய்
சரணர்நீதியாதாரமே தருவனகரத்தாய்
துரியமாயையின்றூரனே தீரனேதூயாய். ௩௯

பத்திமாதணைதலைவனே பரசிவயோகர்
மெத்துசாதகமேவலாய் விமலதேசிகனே
சுத்தசித்தியாய்தவர்பத கமலத்தொண்சுரும்பா
சித்தகின்னரப்பிரமையா கருணையைநினைப்பாய். ௪0

என்னுநந்திகளானன மினிதுடனோக்கித்
தென்னுறுந்தவர்பிரமையர் திரிபுராந்தகனை
யுன்னுநண்பினுனோக்கியே யுளாயொழிகென்றுர்
மன்னுமவ்வொலியடங்கின மண்ணுளோர்தெளிந்தார்.

திருந்துவிச்சலபுரிபுளோர் நன்மையேசேர்ந்தார்
பெருந்திறத்துயிர்புண்ணியம் பெற்றனபோரா
திருந்திறற்செறிவிச்சல னவசமற்றெழுந்தா
னருந்தவத்தாம்பிரமையர்க் கிறைஞ்சினனன்பால்.சஉ

வேறு.

அதிகவற்புதபுகழுளாயபய மளவில்பத்தியினங்கமே யபய, மதியிலார்பிழைபொறுத்திநீயபயமன்னுகின்னர ப்பிரமையவபயங்,கதியின்மூடனாப்புல்லனாப்பொல்லா க் கவலைநெஞ்சனாக்காத்தருள்செய்வாய்; நதிமுடிச்சிவ னெமக்குநீயல்லா னுடையாமறியோமவனுருவம். சங

திரிபுராந்தகனின்னுணாகேளாச் செப்பெனக்கரிசெப் பினன்றேசம், பெரிதுமூர்ச்சிதமெய்தலிற்கருணை பெரு கிநீயலமென்றனுமொழிந்தா, னுரியநின்பெருங்கருணை யாலியாங்களுய்ந்தெழுந்தனமென்னவேதுதித்தான், பி ரமர்விச்சலன் முகத்தினைப்பார்த்து பினாகபாணியைப் பேணிவாழ்கென்றார். சச

தலையிழந்துயிரழிந்தவன்றன்னைத் தாமெழுப்பினர்த னைமன்னன்மகிழ்ந்தங்,கலையில்கின்னரப் பிரமையர்சிவ னென்றன்பினைத்தினரன்மனையனைந்தா; னிலைமைநீங் கலாத்தண்டாரயகரு கின்றபத்தருநேயத்தினிறைஞ்சி;

மலையெனுந்தமதகங்களினடைந்தார் மன்னுகின்னரப்பி ரமையருடனல். ௬௫

கின்னரப்பிரமையர் புராணம்

முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - ௬௬௪.

திருச்சிற்றம்பலம்.

கின்னரப்பிரமையர் புராண

வசனம்.

சிவனடியார்களிற் சிறந்தவராகிய கின்னரப்பிரமையரென்பவர் அளவற்ற செல்வமுடையவர், இவர் தமதுசெல்வமுழுதும் ஜங்கமாராதனைக்கே செலவுசெய்து அதனாற் பொருட்குறைவுநேரிட்டும் தமது உதாரகுணம் நீங்காதவர் தமது கின்னரவாத்தியத்தைச் சிவபெருமானுடைய சன்னிதியில்வைத்துச் சிவகீர்த்திகளைக் கானம்பண்ண, இதைக்கேட்ட சிவபெருமான் மனமகிழ்ந்து கின்னரப்பிரமையர்க்கு நித்தமொரு பொற்காசுபெறக் கட்டளையிட்டனர். அதைக்கொண்டு தமது ஜங்கமாராதனை நியமந்தவறாது காலங்கழித்துவந்தனர்.

இவர் கல்யாணபுரத்தில் வசவதேவர்செய்யும் ஜங்கமபத்தியை யடியார்மூலமாகவறிந்து அவ்விடத்திற்செல்ல, அவ்வசவேசுவரரும் தமதுகுருவாகிய ஜங்கமேசுவரரென்றே பாவனை பண்ணி யுபசரிக்க, அவ்விடத்திருக்குநாளில் ஒருநாள் அவ்வூரி

லிருக்குந் திரிபுராந்தகனென்னுஞ் சிவபெருமான தாலயத்திற் சென்று தெரிசித்து நிற்கும்போது ஒருதூர்த்தன் ஓராட்டுக்க டாவைத் தூக்கிக்கொண்டுவர அந்தவாடு சிவாலயத்துட்செ ல்ல அதுகண்ட கின்னரப்பிரமையர் அவனைத்தடுத்து அபய மென்றஞ்சிவந்தபடியால் அதன்விலைக்கிரட்டிப்பாகப் பொன் கொடுப்பேனென்ன, அந்தத் தாசிதூர்த்தன் அதன்விலையாயி ரம்பொன்னென்றுசொல்ல பிரமையரும் அவ்வாறே கொடுக்க அத்தூர்த்தனு மதுகொண்டு வேறுசில ஆடுகளைவாங்கித் தன் றாசிவீட்டிற்செல்ல இவையெல்லா மறிந்தவந்தத்தாசியும் அந் தவாடே என்குலதெய்வத்துக்கு ப்ரீதியாயுள்ளது அதுவேண் டுமென்ன பின்னுங் கின்னரையரிடத்துச்சென் றாட்டைப்பற் றப்போக அவர்தடுக்க இவன்வலிந்து சென்றுபிடிக்க அப்போ துகின்னரையர் மிகுந்தகோபத்துடனே அவன்றலையைவெட்டி க் கீழேவீழ்க்க அந்தத்தூர்த்தன் சுற்றத்தார் விச்சலராஜனி டத்துமுறையிட அவன் வசவதேவரிடத்துக்கோபித்து அவ ரோடு மநேகசிவபத்தரோடும் ஆலயத்திற்புகுந்து பார்க்குங்கா லத்துச் சிவபெருமான் இந்த அன்பரிடத்து யாதொருகுற்ற முமில்லையென்று சாக்ஷிசொல்ல இவர்மகத்துவத்தைக்கண்ட யாவரும் வணங்கினர். பிரமையா தருட்பார்வையால் இறந்த தூர்த்தனு முயிர்பெற்றெழுந்தனன். தேவர்களும் பூமாரிபொ ழிந்தனர். பிரமையர் வசவதேவர்விச்சலன் சிவனடியார்களெல் லாந் தம்மிடங்களிற் சேர்ந்தனர்.

கின்னரப்பிரமையர்புராண வசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

கலைக்கேத்தபிரமையர் புராணம்.

மற்றுமொருபேரன்பர் மதிமுடிப்பார்தமக்கினியார்
கற்றவரொண்ணிலைமையினார் கலைக்கேத்தபிரமையர்
நற்றவரோசிவமென்பார் நண்ணிலிங்கவபிமானர்
சொற்றசித்தப்பிரசாதர் சுகதுக்கந்துறந்துள்ளார். க

உலகியலையெண்ணாத வொருமையினாரேகாந்தர்
சிலைமணிபொன்னென்றாகத் தெரிசிக்குந்தீரத்த
ரலைவறுமாயாதீத ரங்கலிங்கநிட்டையினார்
தலைமையுள்ளசத்தியமே தருஞ்சீவன்முத்தனார். உ

முன்றலையிற்சிகைமுடிந்து மோகவெண்ணீறணிந்து தன்மேற், கன்றியவொண்டிலகமிட்டுக் காதுறச்செந்தளிர்சேர்த்தி,யன்றியுநற்கருந்துகிலையணிந்தொருதாளூபுரஞ்சேர்த், தொன்றிலிணைசதங்கைபுனைந் துடலைவளைத்துறநகையா. ௩

சிலம்புசதங்கைகளார்ப்பச்செய்யவயன்றலைக்கோடென்
றிலங்குகலைக்கோடதுவொன் றிடக்கரத்திலேந்தியே
வலங்கொள்கரத்தரிவெந்நிற் றண்டென்னமரத்தண்டு
கலங்கலின்றிப்பற்றிவெற்றிக் கலைக்கேத்தகோலராய். ச

அத்தனடியாரவையு ளாடவல்ல பிருங்கிவந்தா, னித்த
னாயென் னிலிங்காங்கர்க் கேற்றலங்க னிங்குவந்தான்,
மெய்த்தநெறிவெண்காடு வியந்துபெற்றபிள்ளைவந்தான்
முத்திவல்லதுக்களவ்வை மோகஙல்லமகன்வந்தான். ரு

அரனன்பாகந்தோறு மணைந்துமுகத்தவினயஞ்செய்
துரமொன்றுகரத்தண்டி னுயர்கலைக்கோடொத்தியே
பரனன்றுபரசமயர் படவெறிந்தவடல்பகரா
திரமொன்ருத்தக்கன்மகத் தேவர்பட்டபடிபாடி. சு

காமாதியாறென்னுங் கரியினங்களரிவந்தா
னுமாவாகனனன்பர்க் கானவடியான்வந்தான்
மாமாயையற்றபத்தர் மனக்களிப்பாமகன்வந்தான்
சாமாறுநீங்குதவர் தருஞ்சேடத்தாகிவந்தான். எ

அன்னையரோயெனமகிழ்ந்தங் கவர்களிடுமரிசிகறி, முன்
னையினுங்குறைந்தாலு மொழிவரிதாய்வளர்ந்தாலு, நன்
னயத்தாற் கோணர்ந்தன்பர் நயக்கஙித்தமமுதுபடைத்,
தென்னையவர்செய்தாலு மிறைஞ்சியுள்ளமினிதுறுநாள்

மிடியினுலொருபத்தன் மிகநொந்துகின்னாயை
ரடிகளணைந்துய்வமெனு மாவலாற்றேடிமிக
வடிவுதளர்ந்திவரிருக்கும் வழிவந்துவைகுதலு
முடையிளைத்துரியிவ்வா றுற்றதெனவுனாயென்ன. சு

கேட்டளவிலவன்மகிழ்ந்து கலைக்கேத்தபிரமையர்முன்
வாட்டமிகந்துணைசெய்வான் வன்றொண்டர்க்கரன்முன்
ன, மீட்டுநிதிகொடுப்பனெனன்பரிக்காலங்கின்னரைய, ரா
ட்டகைமைக்கத்தன்பொன்னனுதினமுமளிப்பனென்று

சொன்னார்களனைவருமச் சொற்கேட்டவவ்வளவே
யென்னுராமிடியவர்பா லெய்தியின்றுதீர்ப்பனென்று
முன்னுவலுடன்வந்தேன் மொழியுமவர்மடமேதங்
கன்னுரைக்காணிலென்ற னருமிலம்பாடாறுவேன். ௰க

எனமொழியுமவனைப்பார்த் தின்முறுவல்செய்தியம்பே
லனவரதமரன்கூலி யளிக்கக்கின்னரநவிற்றுந்
தனமயலன்றனக்கதிக சற்பத்திதானுமில்லன்
கனசுகங்ச்சிந்தனல்லன் காணவனைக்கணிப்பரோ. ௰உ

எம்பெருமான் மெய்யடியார்க் கிதுவுமொரு மேன்மை
யோ, நம்பன்மகிழ்ந்திடுங்கூலி நாடொறுமோர்பொற்கா
சாங், தம்பெருமையறக்கேட்குந் தவத்தோரைக் கெடுப்
போனை,யம்புவியின்மெய்யன்பரறியின்மிகநகைப்பரால்

கின்னரனையடிக்கடிநீ கிளரன்பாற்றுதிப்பதுவெ; னன்
னைபங்கனிடத்துமன மடங்கினோரரும்புகழை, முன்னி
நின்றுபாராட்டின் முத்தியுண்டதன்றியீ, தென்னநன்
மைபொன்னவனோ தந்துன்றனிடரொழிப்பான். ௰௩

அவ்வண்மடமோ வருந்தா மஞ்செனி வேண்டுநிதி
கவலையறக்கோடியென்று கரத்தண்டிற்கலைமருப்பைச்
சிவனினைவிற்றட்டுதலுஞ் செழுநிதியக்குவையாக
நவமுறமுன்சொரிதல்கண்டு நல்குரவோன்பணிந்தேத்தி

வேறு.

உடையினைவிரித்துவப்பா லொளிதருநிதியையெல்லாம்
படியினுமெடுத்தெடுத்துப் பரிவினாற்சேர்த்தங்கார்த்து
முடிமிசைதாங்கிச்சென்று முதுகனமாதலாலே
வடிவனொந்தெம்பிரானார்நந்திகள்கடைமுன்வைத்து ௫௬

அரண்மனையுட்புகுந்தா னருள்வசவேசர்முன்னம்
வரநிதிவந்ததுந்தான் வந்ததுங்கலைக்கோட்டைய
ருரைசெய்தவாறுஞ்செப்பி யோங்குமத்தனமெடுத்தற்
கரிதெனக்கோராள்விட்டீர்க் கனுப்புதியையவென்ன.

நந்திகளதிசயிக்கு நற்களிப்புடையராகிச்
சிந்தையின்மகிழ்ந்திவ்வாறு சிவனறிந்திடுவனென்று
சந்தநற்காமதேனு தன்னைவேண்டினர்க்கேநல்கு
மிந்தநம்பிரமையர்ப்போ லெவர்க்குநின்றருள்வாரில்லை.

கலைக்கோட்டுப்பிரமர்போலக் கனத்தகின்னரையர்சீரை
நிலைக்கேற்றதல்லவென்று நிந்திக்கவல்லர்யாவர்
சிலைக்காமநாசனென்னத் தெரிதராச்செயலார்தம்மை
யலைக்கேத்தவுலகராலே யறிவதற்கெளியதன்றால். ௫௯

எனப்போற்றிநின்றபத்த னிருந்தனமெடுத்தற்காள்விட்
டனைப்பாகர்க்கன்பரான வத்தவர்க்காண்பலென்னுங்
கனக்காதன்மனத்தாற்சென்று பிரமையர்கழலிறைஞ்சி
வனப்பாரக்கரங்குவித்து வாழ்த்துநந்திகளைநோக்கி.௨௰

சொலக்கேட்டிதண்டநாத தூயநற்பத்திமாதி
னிலக்கானதலைவனை நின்னிடைக்கின்னனையன்
மலக்காயமெண்ணனல்லோர் மதிக்கின்றவழியனன்றே
விலைத்தாவென்றானைகேட்கு நம்பிபோலிவனுமானன்.

படிக்காசையுற்றுக்கேட்டும் பரமனைப்பகர்வாயென்றும்
பிடித்தாடிப்பெறும்பேறீதேபெரிதுநம்பிரானைப்பேணி
ச்,சடக்காகப்பெற்றான்றேதனமதிப்படிவேண்டாவோ
படித்தாவதென்னிருந்தும் பரமனைவழிபடாமல். ௨௨

கிட்டுமோபலநாளாயாங் கெண்டையங்கண்ணிபாகர்க்
கிட்டமாயினசெய்யாவாறினிதெமக்கொன்றுமீயா
னட்டவர்செய்தபத்தி நன்மையைக்கண்டாநன்றாய், மு
ட்டயாமிடித்தோமத்தன் மோகத்தாற்பெற்றார்செல்வம்

காலையிலெழுந்துமாலை காணுமவ்வளவுந்தொண்டு
கோலமாயுழைத்துமஃகங்கொள்வதோர்படியொன்றில்
லேஞ்,சிலநின்பிரமையன்சீர்செப்பநம்மளவோவோர்கா
லேலவேயிராகம்பாடி யிருந்தனய்பெற்றசெல்வன். ௨௪

மண்ணுளோர்க் கண்ணல்சான்று மகிழ்ந்துனாதரச்
செய்தன்னே, யண்ணியேகாணவந்தோர்க்கனமிடத்தன
ம்வேண்டாவோ, கண்ணுதறனக்களிக்குங் காசுடன்கல
ந்துகொள்வா, னண்ணுநங் காரகத்தா னன்னிதியிவண்
டாபித்தேம். ௨௫

வண்டில்கள்பலகொண்டெம்பால் வரச்சொனீநண்பனு
கக்,கொண்டகின்னரனேயென்னக்கூறிநங்கலிக்கேத்தை
யர், மண்டனிலத்தம்வைக்கமட்டறுகனகமாகக், கண்டு
நந்தண்டநாதர் கசிந்துநின்றிறைஞ்சுங்காலே. ௨௬

அறிந்துடன்கின்னராய ரஞ்சியஞ்சலிக்கரத்தா
னிறைந்தபத்தியினல்வந்து நெடிதுறவிறைஞ்சிநின்றார்
மறங்கொளாக்கலிக்கேத்தையர்வரவணைத்தருகிருத்திப்
பிறந்திறப்பதற்குவேராம் பிராந்தறவுபதேசித்தார். ௨௭

கிளர்புகழ்நந்தியார்க்குங் கின்னரப்பிரமையர்க்கு
முளமகிழிலிங்கபூசை யுவந்துறச்செய்தமைத்தாங்
களவிலாவுபசாரஞ்செய் தவர்களையகலாநண்பான்
வளமுறுமினியபத்தி மனத்தராய்வைகுநாளின். ௨௮

கலிக்கேத்தபிரமையர் புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௬0௨௨.

திருச்சிற்றம்பலம்.

கலைக்கேத்தபிரமையர் புராண

வசனம்.

இன்னுமொரு சிவபத்தர் கலைக்கேத்தபிரமைய ரென்னுந் திருநாமமுள்ளவர், லிங்காபிமானியாவர், சீவன்முத்தர், இவர் முன்குடிமியைமுடிந்து சர்வாங்கமும் விபூதியைத்தரித்து நெற்றியிற்றிலதமிட்டு காதுகளின்மேற் றளிர்களைச்சாத்தி கரிய வாடையொன்று இடுப்பிற்றரித்து ஒருதாளில் சதங்கையுந்தரித்து உடலைக்கூனிநகைத்து இடக்கையில் மான்கொம்பொன்று தரித்து வலக்கையிற் றண்டமொன்றுபற்றிக் கலைக்கேத்தகோலங்கொண்டு அதற்கேற்ற பாடல்களைச் சொல்லிக்கொண்டு முகத்தாலபிநயஞ்செய்து சிவபத்தர்கள தில்லந்தோறுஞ்சென்று அவர்களிடு மரிசிகறிமுதலிய பிக்ஷைகளை எறினுங்குறையினும் மனமகிழ்வோடேற்று அவற்றைக்கொண்டு சிவனடியார்க்கமுதுபடைத்து அவ்வடியார் நன்மைசெய்தாலுங் கொடுமைசெய்தாலு மதற்குமகிழ்ந்து சீவிக்குநாள்களி லொருநாள்,

ஒரு சிவபத்தர் தரித்திரத்தால் மிகவுமிளைத்து இம்மிடி திரும்படிக் கின்னரையனை வணங்குவமென்று சென்று இந்தக் கலைக்கேத்தபிரமையர் திருமடத்துவழியாய் வரும்போது அவரைக்கண்டு நீரிவ்வா றுடலிளைத்து முகமழுங்கியிருக்குங் காரண மென்னென்றுகேழ்க்க, அவரும் இல்லாமை காரணமாக நொந்து யாசித்தற்பொருட்டுக் கின்னரப்பிரமையரிடத்துச்செ

ல்கின்றேனென்ன, அப்போது கலக்கேத்தபிரமையர் நீர்சொல்வது சரியன்று அக்கின்னரப்பிரமையர் வறுமையுற்றுச் சிவவிடத்துயாசித்து அவர் தினமொன்றுக் கொருபொற்காசுகொடுக்க அதனைக்கொண் டமுதளிக்கின்றார். நீ ரவ்விடத்துச்சென்று பெறுவதுயாது, அவரதுமடமும் நெடுந்தூரமிருக்கின்றது உயக்குவேண்டும் நிதிகளை யிவ்விடத்திற் பெறுவீரென்று கையிலிருந்த கலக்கொம்பைத் தண்டினுற்றட்டிச் சிவத்தியாணம்பண்ண அஃது அளவற்ற திரவியத்தைச்சொரிய, அதைக் கண்ட தரித்திரர் வணங்கித்துதித்து தமதாடையை விரித்து திரவியத்தை வாரிக்கட்டித் தலையிலெடுத்துச்சென்று சுமைதாங்கமாட்டாது வசவதேவர்மடத்துச் சென்றிறக்கி வசவதேவரைவணங்கி தமதுவர்த்தமானங்களைச்சொல்லி யொருசுமையாளித் திரவியஞ்சுமக்க வருள்வீரென்று கேட்க, அவர்க் கவ்வாறனுப்பி அப்போது வசவதேவரும் மனமகிழ்ந் ததிசயித்து இப்படிக்கொத்த தபோபலமுள்ளவரைக்கண்டு தெரிசிக்கவேண்டுமென்னுங் கருத்துடையவராய்க் கலக்கேத்தபிரமையரைச் சென்று வணங்கித் துதித்துநிற்க, அவரு முபசரித்திருக்கச்செய்து கேளும் வசவதேவரே கின்னரப்பிரமையர் நடைகளெல்லாம் உலகத்தைப்பிரமிக்கச்செய்யு நடையாகத் தோற்றுகின்றதல்லது முத்திசாதன மொன்றையுங்காணேம், சிவபெருமானருளிருந்தும் அவரிடத்துப் பொற்காசுபெறுதலும் சாக்ஷிசொல்லுவித்தலுமோ புத்தியாவது இந்தத்திரவிய மெவ்வளவு வேண்டுமானாலுந் தருவோம் வண்டிகளைக் கொண்டேற்றிக்கொண்டு போகச்சொல்லுமென்ன.

இதைக்கேட்ட கின்னரப்பிரமையரும் மனமகிழ்ந்துவந்து கண்டு வணங்கித்துதித்தனர். கலக்கேத்தபிரமையரு மனமகி

ழ்ந்துபசரித்துப் பூசைக்கிடம்பண்ணிப் பூசைமுடிந்துபின் திருவமுதுசெய்வித்துப் பின் கின்னரப்பிரமையர்க்கு லோகப்பிராந்தி நீங்கும்படி யுபதேசித்தார். இவர் மூவரு மொருவரையொருவர்விட்டு நீங்காதிருக்குநாளில்.

கலிக்கேத்தபிரமையர் புராண வசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

மோளிகைமாரையர் புராணம்.

நீளறிவார்சிவ லிங்கநிட்டனார்
மோளிகைமாரைய ரென்னுமுத்தனா
ராளதிகந்தரு மன்பின்வித்தனார்
மீளரும்பிறப்புறு வீரசைவனார். க

ஒருமைசேர்தருமர்நின் மலத்தருத்தமர்
சரணர்சங்கரன்புகழ்த் தாகநீங்கலார்
பெரிதரன்பூசையுட் புறம்பும்பெற்றுளார்
விரதம்மண்டுள்ளர்மெய் விகாரமற்றுளார். உ

அறுவகையுட்பகை யற்றகத்துளே
யுறுசுடர்நீங்கலா வுளத்தர் தீயரைச்

செறியலார்மயக்கிலார் திடமகத்தர்பாற்
பிறிவரும்பூசையுந் தொழும்பும்பேணுவார். ௩

பரசுகொண்டரும்பெரும் பரந்தகான்புகுந்
தரவியவிந்தன முறத்தடிந்துபின்
பெரிதெழிற்சுமையெனப் பிணித்துச்சென்னிகொண்
டெரியனல்விலைகடை யுற்றுமாறியே. ௪

அப்பொருளான்மகிழ்ந் தளவின்மாதவ
ரொப்பவின்னமுதளித் துவக்கநந்திகள்
செப்பருஞ்சுவையனந் தினமளிக்கவார்ந்
தெய்ப்பறுதிவரிடத் தினிதருந்தியே. ௫

சென்றுநந்திகண்முனஞ் சேர்ந்துசெஞ்சொலால்
வன்றிறன்மாறாயன் மகிமைபோலுளா
னின்றெனவிசைத்துநீ யிடுமிட்டானத்தி
னன்றிமாறாயனிற் புற்கைநன்றுகாண். ௬

இன்னநாளென்றிடா தென்றுமொப்பறத்
தன்னருந்தொழிலினாற் றருக்கித்தான்றரு
நன்னெறிப்பண்டமோ குருணிநற்றவ
ரென்னிலோவளவிலை யிருந்தருந்துவோர். ௭

எனப்பெரியோரெலா மேத்தக்கேட்டருண்
மனத்தராய்நந்திகண் மகிழ்ந்துமாறாயர்

கனத்தமாமடந்தனிற் கடிதுசென்றவ
ருனற்கருமனேவினை யுவந்துகும்பிடா. அ

வேறு.

மாதுநந்திகளேவணங்கி மஞ்சனந்தாட்கேந்திரிக்க
வாதரவாலங்கீனா யஞ்சிசின்றுவாங்கித்தம்
பாதமலர்களேத்தாந்தம் பாணியினுல்விளக்கிக்கொண்
டேடதமிலென்பரற்கன்ன மிடுகென்னேயெனவிருந்து. கூ

அகந்தையிலார்சிவார்ச்சனேப்போதாதரத்தீராயிரம்பொ
மகிழ்ந்துறு மஞ்சனச்சாலே வழிமறையவிருத்தியே [ன்
புகந்தரன்பூசனேபுரிந்தங் கொண்ணுதலாமமடவார்
த்குங்கழற்குச்சரணென்று தம்பிரான்சேடமுண்பார்.௰

மிடியனிதிகண்டாற்போன் மிகமகிழ்ந்தங்குடல்புளகித்,
தடியவனுக்கிதுவன்றே வரும்பிறவிமருந்தென்று,முடி
வில்பத்திவித்தென்றுமுத்தியென்றுஞ்சித்தியென்றுங்,
கடிதருந்தி யெழுந்துமுன்றிற் கண்சென்றுசெப்புவார்.

இம்மடத்தைப்பார்த்தோர்கட் கில்லேயேமுன்றீமை
யிம்மடத்திற்கருகாக வியங்கிஞேர்முத்தரன்றே
விம்மடத்தைச்சூழவந்தோர்க்கெண்சித்தியெளிதாகு
மிம்மடத்திலனுமீதி லேற்றிஞேர்பிறப்பிலரால். ௰௨

இம்மடத்திலன்னமின்றே யெளிதாகநீரோனுங்
கைம்மடுத்திங்கயின்ருலுங் கடும்பிணிகள்விடுமென்றே

தம்மிடத்துவசவேசர் சாரவுச்சிக்காலந்தே
யம்மனைமமாளாயரிந்தனச்சுவைகொண்டங்கணைந்தார்.

இந்தனர்தங்கடையிருந்தி யெழின்மடத்துட்புகுங்காலை
வந்தடிகண்மனைவியார் மகிழ்ந்துநின்றுவிளக்கியபின்
றந்தருமந்தவர்க்கமுதந் தருக்கியளித்தருச்சனையிற்
சிந்தைநயந்துறும்போதுசிவார்ச்சனைசெய்படியகத்துள்

வேளரியார்க்கினியவச வேசுரர்முன்வைக்கவுற்ற
சாளிகையைக்கண்டிதென்ன சார்ந்தவராரிவ்விடத்தி
லாருடையானர்ச்சனைசெ யகத்தென்னவம்மடவார்
நீளறிவாலவ்விடத்து நிகழ்ந்தசெய்திசெப்பினார். ௰௫

பாவனையான்மாளாயர் பார்த்துவசவேசனெனத்
தாவகலவறிந்துநந்தி சற்பத்தியுயிரன்றே
மேவுநமதிலம்பாட்டை விடுவிப்பார்வேறெவர்தாம்
பூவுலகிற்புண்ணியத்தோர் வறியர்துயர்போக்குவரால்.

திண்ணியநற்கருணைநிதித் திருநந்தியெம்மிடத்து, நண்
ணியதுதன்மக்க ளாமென்னுநண்பினா, லெண்ணியன்
றேவுய்ந்தனமியா மிதுபோதுமெம்பிரான், றண்ணளி
யாலளித்ததொழிற் றரும்பொருளேசாலுமென்னா. ௰௬

இன்மையென்பதியாமறியோ மெல்லாந்தான்வல்லனெ
ன்று, நன்மைநிதியினையிரண்டு நற்றவர்க்கீந்தவர்களரு,

மென்மலர்த்தாள்விளக்கியந்நீர் விறகுகட்டின்மேல்வீச
ப், பொன்மயமர மிந்தனத்தை மாறாயர்போற்றுராய்.

ஆயிரம்பொனிறையாக வரிந்தரிந்துசங்கமத்திற்
கோய்வதின்றிக்கொடுக்கவவரொண்கரத்திற்கொடுபோ
நேயவசவேசுரர்மு னிகழ்த்தவறிந்ததிசயித்துத் [ந்து
தூயபத்தித்திருவான மாறாயனைத்துதிசெய்யா. ௰௬

சடக்கெனவேபயந்துவந்து சரணராமோளிகைய, ரடிக்
கமலங்களிற்பணிந்துன் னடைக்கலங்காத்தருளென்று,
முடிக்கண்மலர்க்கரமிரண்டு முகுளிதராய்நின்றளவி,ல
டற்பெரியோர்மாறாயர் நந்திகண்முன்னருள்செய்வார்.

இப்படியேயுனக்குமதென் னேதுசொன்னேநின்னையா
மெய்ப்புடையமிடிப்பத்தர்க் கினியவுயிராகுமுன்னை
யொப்புடையாரிப்பாரி லுண்டோவெம்போலிகட்கு
வைப்பளித்துவாழ்விக்கும் வள்ளன்மைவசவேச. உ௧

கேட்டியின்றுயாமறிந்தேங் கிளர்கனகச்சாளிகைநம்
வீட்டில்வந்ததுன்பொருட்டால் விடிந்தனநாமிகநல்லை
யீட்டுசெல்வப்பிரியைநல்லை யிணையிலாக்கருணைநல்லை
நாட்டிலுயிர்க்கிதந்தருவாய் நல்லைநல்லையெனநவில்வார்.

தருக்கியெனக் களித்தனபோற் சற்பத்தர்க் களித்தனே
யோ, வரத்தின்மிகுமடிவாலமாச்சையன்மைந்தனெனே

யிரக்கமுடனவளர்த்திகண்டா யென்றினியமுறுவல்செ
ய்பக், கருத்திரங்கிவசவேசர் கலங்கியன்பாற்கழறுவார்.

பரிசமிரும்பினைக்குறையைப் பார்க்குமோபொன்மேரு
கரியகொடியினைக்குற்றங் காணுமோகடியேன்றன், பெரி
யகுற்றம்பெரியோய்நீ பிறித்தறியிற்பெரிதறியா; தரியந
ன்மைமோனிகைமானையவென்னையாண்டருள்வாய். ௨௪

இலவுதனிற்கனியுண்டோ வெரிகுளச்சீதமுண்டோ
சலமதனின்வெண்ணெயுண்டோதழற்குழியிற்சலமுண்
டோ, வலியகல்லினெகிழ்ச்சியுண்டோ மறையுண்டோ
புலையரிட, மலைமனத்தேனென்னிடநல் லறிவில்லையா
ண்டருள்வாய். ௨௫

என்றுவசவேசர்பணிந்தெதிராகவின்முறுவ, லொன்றி
யருண்மானையமொழிவிலன்பாலெடுத்தணைத்து; நன்று
ரைத்துவிடைகொடுப்பநந்திகடம்மடத்தணைந்தார்; மு
ன்றமதுமொழிற்கொண்டு மோனிகைமானையிருந்தார்.

மோனிகைமானையர் புராணம்

முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௦௪௮.

திருச்சிற்றம்பலம்.

மோளிகைமாறையர் புராண வசனம்.

மோளிகைமாறையர் சிவபத்தியினல் மிகச்சிறந்தவர், காமாதிகுற்றங்களைத்துறந்தவர், அடியார்க்கடியர் சிவகீர்த்தியைக் கேட்டலிற்றாசமுள்ளவர், உள்ளும் புறம்புமொத்தவர், பிரதிதினமும் காட்டகத்துச்சென்று விறகுகட்டிக்கொணர்ந்து விற்றதனுல் வரும்பொருளைக்கொண் டடியார்களுக் கமுதுபடைப்பவர்.

இவ ரிவ்வாறிருக்குங்காலத்தில் வசவதேவரது திருமடத்திற் றிருவமுதுசெய்தவடியார்கள் இவரது மடத்திற்புகுந் தமுதுசெய்து பின்பு வசவதேவரிடத்துச்சென்று சுவாமி வசவதேவரோ மோளிகைமாறையர் விறகுகட்டுகொண்டுமாறி தினந்குறுணி தானியங்கொணர்ந்து ஆயிரத்தின்மேற்பட்ட வடியார்களுக் கமுதளிக்கின்றார் தமது மடத்தி லுணவின் வகையவ்வளவு வளம்பற்றாது என்று அவரது தெய்வீகத்தைச்சொல்ல வசவதேவரு மதனைக்கேட்டு மகிழ்ந்து ஒருதினந் தனியே சென்று அவரது மனைவியாரிடத்துப் பரத்துக் கன்னம்வேண்டுமென்ன மனைவியாரும் உபசரித்து பூஜைக்கிடம்பண்ண வசவதேவரும் பூஜாக்ரகத்திற் பெட்டகத்துடன் றிரவியத்தை வைத்துவிட்டு அமுதுசெய்தருளித் தமதுமடத்துச்சென்றனர்.

விறகுகொண்டுவரப்போன மாறையரும்வந்து விறகுகட்டைச்சார்த்தி நடந்த வர்த்தமானங்களையெல்லா மறிந்து அடி

யார்களுக் கருச்சித்துத் தாள்களைவிளக்கி யந்தப் பாதோதகத்தை விறகுகட்டின்மே லிறைக்க அதுமுழுதும் மாற்றுயர்ந்த தங்கமாயிற்று. ஆயிரம்பொன்கொண்ட தொருவிறகை ஒருஅடியார்க்கென்று விதித்து விறகுகளையெல்லா மடியார்களுக்குத் தானம்பண்ணினர். அதைப்பெற்ற வடியார்கள்சொல்லக்கேட்ட வசவதேவர் மோளிகைமாறாயனையடைந்து உமது மகிமை தெரியாதென்று வணங்கித்துதித்தனர். அவருமெதிர்வணங்கி யுபசரித்து மடத்திற்செல்லவிடுத்துத் தாமுந் தொழிலி னியமத்திருந்தனர்.

மோளிகைமாறாயர்புராண வசனம்
முற்றிற்று.

௨

திருச்சிற்றம்பலம்.

கன்னப்பிரமையர்புராணம்.

தன்னிகரில்லாத தம்பிராற்கினியநண்ப
ருன்னருநற்சங்கமத்திற் குரியவன்னம்படைத்தற்கா
மென்னதொழில்செய்தாலுமினமில்லையெனுமெண்ணம்
பின்னமிலார்பேர்கன்னப் பிரமையனெனப்பெற்றார். ௧

பொருளாதமாவிதவர் பொருளென்னப்புரிந்திருப்பா
ரருளாளனடிப்பூசை யகம்புறம்பினகலாதார்
வெருளாதவீரசைவா சாரமேவிரும்பியுள்ளார்
தெருளாருமற்புதஞ்சேர் செய்கையார்சிவஞானர். ௨

முகமாயமிடுந்திகை முட்குல்லாக்கத்திரிகை
வெகுஞாளிவாய்க்கட்டு விழிக்கட்டுவீசுமண
லகமேயோர்நாக்கட்டங் கவர்கண்கட்டருஞ்சொக்குப்
புகவோட்டுநாராசம் போடுகல்லுப்பொறிவண்டு. ௩

கரியவுண்டைகரிக்கலசங் காராடைதுறட்டுக்கோ, லரிய
பொருடெரியவிழி யஞ்சனமேல்வழுக்கெண்ணெய், யுரு
வுபடையிவைமுதல்கொண் டோரடிவார்ச்செருப்பணிந்
து,மருவுகன்னக்கோல்கொண்டு வாய்த்தசகுனங்கண்டு,

அணியுமிகுசெல்வமுள்ளோ ரகமூலமறைவறிந்து
தணியிருள்போய்நிலக்கன்னஞ்சுவர்க்கன்னந்தாழுதறத்
துணியுமிவையாற்சென்றுட் சூலியன்பர்களைக்காணிற்
பணியுமுறையாற்பணிந்து பரவிமற்றுந்திரும்பியே. ௫

அல்லாதபவிகண்மனை யடைந்தவரிலடைந்தபொரு
ளெல்லாங்கைக்கொண்டேகியீசனன்பர்க்கினிதளித்தே
நல்லாவலாற்பணிந்து நயந்தேத்துநாளினலம்
வல்லாராந்தபோதனர்கள் போதவரவணங்கியே. ௬

இருட்கன்னமிடுவதென்ன விப்பகலேவிச்சலனிற்
பொருட்கன்னமிடுவமெனப்பொருந்தியநன்மனத்தராய்
வரத்தன்பர்பிரமையர் மறுகில்வரவசவேச
ரருட்கண்ணாற்கண்டுபணிந் தஞ்சலித்துநின்றளவில். ௭

நந்திகளையுறநோக்கி நகைத்தின்றுபகற்கன்னம்
பிந்தவின்றியிடவேண்மெம் பிடிகன்னக்கோலேநீ
வந்தரசன்பண்டார மனைக்காட்டுவசவவெனத்
தந்தருமஞ்சங்கமச்சொற் றவழுமையாதலால். அ

முறைமைவழுவிதுவென்று மொழியாமற்பிரமையனா
யிறைமனையிற்கொடுசென்றங் கிருநிதியபண்டார
நிறைமனையீதெனக்காட்டி நீடுகன்னக்கோலுமளித்
தறநெறியாம்வசவேச ரகன்றரசனருகணைந்தார். ௯

வெளிக்கன்னமிடிலென்ன வினையாமோவென்றுமை,
லளித்தெம்மையாண்டதவரரும்பசியாலிளைப்பொன்று,
வொளித்தங்கோர்புடையிருந் தொண்கோல்கொண்டே
க்கத்தாற்; றளிர்ச்செங்கைவருந்தவுற்றுத் தந்தொழிலைச்
சாதிப்பார். ௰

நிலக்கன்னமிடும்போதி னிதிக்குவையாய்நிறைந்திடவுங்
கலக்கங்களில்லாதார் கன்னத்தாலுட்புகுந்தே
யிலக்கஞ்செய்பொற்பெட்டி யெடுத்துக்கொண்டின்பந்
தா, னலத்தன்பர்பிரமைய ரவ்வாயினண்ணுங்கால். ௰௧

துய்யசெய்கைவசவேசர் சொற்சித்திதோற்றற்கோ
வையர்கன்னப்பிரமைய ரரும்பெருமைவிளங்கற்கோ
செய்யகன்னமண்டனமாய்ச் சிவனருளாற்றேவர்க்கு
மெய்யறியக்காண்பரியார் காவலர்முன்வெளிப்பட்டார்.

விச்சலன்முன்னறிவிக்க மிகவெகுண்டுவசவேச
னச்சுறவன்சிக்கினனோ நன்றெனமீசையைமுறுக்கித்
தைச்சுறவெவ்விதழ்கவ்வித் தக்கதிதுதன்னைநம்பி
வைச்சநமக்கிரண்டுன்னத் தண்டநாயகன்மதித்தான்.

சிறியனெனவன்றுதன்னைத் தேராமன்மன்னித்த, மு
றைமைநன்றி தனையாற்றின் முழுதுமின்று களைத்தன
னென், றறியவொன்றிப்பகற்கன்ன மாண்டியைக்கொ
ண்டிடுவித்தான், குறியவனுக்கிதுவென்ன காட்டினன
ங்குடிகேடன். ௰௪

தன்னகத்திற்கினியகள்வன் றனக்குத்தான் கொடுப்பத
லான், மன்னனகப்பொருள்கவர வழிகாட்டும்வகையெ
ன்ன, வென்னுயிர்க்குமினியேதமெண்ணுவனுமென்றி
கழ்ந்து, கன்னமிடுமவ்வாயிற் கடுகவந்துபார்க்குதலும்.

கன்னத்தால்வாங்கியமண் கற்கனகமணியாக
மின்னத்தான்விச்சலனும் வெகுளிவிட்டுவிரும்பியவண்
டன்னத்தவிரன்மூக்குத் தனின்வைத்தித்தனமேது, மு
ன்னுற்றகள்வனெவன்மொழியென்னமுறையென்றான்.

நிருபன்முனம்வசவேசர் நிகழ்த்துவார்பிரமையர்
பெருமையினையானறிந்து பேசினல்லானரர்க்கடங்கா
தருளுடையாரிவர்பதத்தி லமரர்தருபிறப்பதிவர்
திருவிழிகளிரண்டன்றோ சுரதேனுசெனிக்குமிடம். ௰௭

வே று.

இவரருட்சித்தத்தன்றே வெண்ணியதருங்கற்றேன்று
மிவர்கரப்பரிசத்தன்றே பரிசவேதிகள்வந்தெய்து
மிவர்பெருங்கருணையன்றே சித்திகளீயவல்ல [ம்.
திவர்கருத்துவப்பச்செய்தார்க் கெளிதுநன்முத்தியின்ப

இவர்நிலைகன்னமிட்ட பொருளலாதெவையுங்கொள்ளா
ர், சிவனருளன்பரோது செய்யினுஞ்சிவனுக்கின்ப; மவ
மிவர் செய்தியென்றிங் கறிவினிற்கொள்ளேல்வேந்தே,
தவறலநித்தனன்பர் செய்வதேதருமமாகும். ௰௯

பாண்டவர்சூதாற்பூமி பற்றற்றார்மூர்க்கர்முத்தி
பூண்டனர்வேட்டையாலேதசரதன்பொல்லாங்குற்றான்
வேண்டருங்கயிலைபெற்றார்கண்ணப்பர்வேந்தர்மின்னார்
நீண்டமாமயலாற்கெட்டார் சுந்தரர்சித்தர்க்கானார். ௨௰

கொன்றுமாண்டவத்தோனுற்றான்கொடுங்கழுத்தண்
டியார்தா, நன்றருட்பெற்றார்பொய்யா னரகத்தைத்தரு
மன்பார்த்தான், சென்றருட்கயிலைபெற்றார் சிறுத்தொ
ண்டர்செய்யவேந்த, ரொன்றினர்நரகமன்னருயர்ந்தனர்
சேரர்சோழர். ௨௧

வேகமாங்களவால்விந்தான் ருத்திரவீரனென்போ, னா
கலவத்தியத்த னச்சுநல்லாளதானா; னாகையாலிவர்செய்
மார்க்க மதுவுஞ்சன்மார்க்கமாகுந், தோகையோர்பாகர்
க்காச்செய் யதன்மமுந்தூய்தாந்தன்மம். ௨௨

எனச்சொலுஞ்சிவாகமங்க ளிவரரியயர்க்குமிக்கார்
நினைத்திவர்மடத்திற்செல்லுந்தவர்க்கிந்தநெறியாலன்ன
மனந்தவர்க்கிதத்தநல்கி மாறைகண்மாண்டகாலே
யனத்திடற்கன்பரல்லா ரகத்தினிவ்வாறுசெய்வார். ௨௩

அத்தவமுடையாரத்தர்க் கன்புறவீதுசெய்யுஞ்
சுத்தராமிவர்தாள்சேர்ந்த மண்ணெலாஞ்சொன்னமாய்
த்திவ், வுத்தமரிவ்விடத்துமுன்னேவாழ்விக்கவுற்று, ரித்
தகைமிவர்க்கெண்செல்வ மென்பவையெளிதாமென்ன.

இவர்கையிற்கன்னத்தாலே யெய்தியபொருளேநல்கித்
தவரிவர்பரிசத்தாலாந் தமனியமனைத்துங்கொள்ளென்
றுவமையில்வசவதேவ ருணாத்தவப்படிமன்னீந்தான்
சிவனருணந்தியார்பாற் பிரமையர்நண்பாற்சென்று.௨௫

சங்கமந்தமக்கிறைஞ்சித் தம்மனையாருந்தாமு
மங்கவர்க்கிதத்ததூய வறுசுவையமுதமைத்தே
பங்கமிலன்பினுலே படைத்தவர்பரிகலங்கள்
பொங்கியநேயத்தொன்றியருந்திமுன்போலிருந்தார்.௨௬

கன்னப்பிரமையர் புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧0௭௬.

உ

திருச்சிற்றம்பலம்.

கன்னப்பிரமையர்புராண

வசனம்.

கன்னப்பிரமையரென்பவர் வீரசைவசிகாமணியா யுள்ளவர், உடல்பொருளாவி மூன்று மடியார்களுக்கே தத்தம்பண்ணினவர், நெற்றியில் மாயப்பொட்டும் முட்குல்லா கர்த்தரிக்கோல் வேட்டைநாய்கள் வாய்க்கட்டு விழிக்கட்டு மருந்துகள் வீசியெறியும் மணல்கள் சொக்குப்பொடி மனிதனைக் கைகால்களைக்கட்டிப் பாய்ச்ச நாராசங்கள் எறிகற்கள் பொறிவண்டுகள் வில்லுண்டைகள் கரித்தோண்டிகள் கரியவஸ்திரம் துறட்டுக்கோல் பாதாளாஞ்சனம் சறுக்கெண்ணெய் உருவியகத்திகள் கன்னக்கோ லிவற்றைத்தரித்து காற்குக்கழலணிந்து சிவனடியாரல்லாதவர்வீட்டி லிருட்காலத்துச்சென்று கன்னமிட்டு அடியார்களுக் கமுதுபடைக்கும் நியமமுள்ளவர், இதனால் கன்னப்பிரமையரென்று சொல்லப்படுவர். இப்படியிருக்குநாளில் சிவனடியார் வரவர அதிகமாகவருதலைக்கண்டு இனி யிருட்கன்னஞ்செய்துவரும் பொருள்கள்போதாது பகற்கன்னமிட்டுப்பொருள் கொண்டுவரவேண்டுமென்று கருதி பகற்காலத்தில் விச்சளராஜன் அரண்மனையிற் கன்னமிடச்செல்ல, அப்போது அவ்வீதியில்நின்ற வசவதேவ ரிவரைக்கண்டு வணங்க, அவரிடத்துத் தமதுகருத்தைவெளியிட்டு கன்னக்கோலை வசவதேவர்கையிற்கொடுத்து அரசனது பொக்கிஷமிருக்கு மிடத்தைக் காட்டவாருமென்று கூப்பிட வசவேசரும் அடியார்மொழிகளை மறாதவராதலால் அப்படியே அரண்மனைப்பொக்கிஷஸ்தானத்தை

க்குறிப்பித்து விச்சலனிடத்துச் சென்றிருந்தனர். பிரமையரு
ம் பயமின்றி யடியர்பசித்திருப்பரோயென்னு மேக்கத்தோடு த
மது கன்னக்கோலத்தைக்கொண்டு நிலக்கன்னமிட்டு பொக்கி
ஷத்தில் நுழைந்து இலக்கம் பொன்னிறைந்த பெட்டியொன்
றையெடுத்துக்கொண்டு புறப்படுங்காலத்தி லங்கிருந்தகாவலா
ளர் தெய்வீகமாக விவரைக்கண்டு அரசனிடத் தறிவித்தனர்.
அந்த விச்சலராஜனும் கோபாக்கினிமிகுந்து பற்களைக்கடித்து
மீசையைமுறுக்கி இந்தத்திருடரெல்லாம் வசவேசர் கூட்டத்த
ராகவே யிருத்தல்வேண்டும் வசவனை நம்பிவைத்ததற்கு அவ
ரே நமக்குத் துரோகம்நினைத்தார் முதலிற்றானே யித்தன்மை
யொன்று தெரிந்துநடபபோமாயி னிக்கேடுசூழ்வதின்று, ஆத
லா லிவ்வாண்டியைக்கொண்டு பகற்காலத்திற் கன்னம்வைக்
கச்செய்தார் என்றுசொல்லி விரைந்துபுறப்பட்டு கன்னம்வை
த்த இடத்தைதவந்து பார்த்தபோது அக்கன்னத்தாலிடிந்த மண்
கல் முதலியன சுவர்னரத்தினங்களாகப் பிரகாசிக்க, அப்போ
து விச்சலராஜன் கோபந்தணிந்து மூக்கிற்கையைவைத்து இ
ந்ததனங்களேது இதற்குமுன் கள்ளன் எவனுவது வந்தனனே
என்றுகேழ்க்க, அப்போது வசவதேவர் சொல்லுவார் கேளும்
விச்சலராஜனே இவர் மகிமை யுமக்குத் தெரியவராதாதலால்
நாமேசொல்வோம் தேவர்நாட்டுக் கற்பகவிருக்ஷங்கள் இவர்பா
தங்களிற் பிறந்தன, காமதேனு இவர்கண்ணிற்பிறந்தது, சிந்
தாமணியும் இவர்நினைத்ததன்றி யொன்றுங்கொடாது, இவ்வா
று மிக்கசெல்வமிருந்தும் கன்னமிட் டடியார்கட்கு ஆராதனை
செய்வ திவர்நியமம் ஆதலா லிவ்வா றச்சமின்றிச் செய்தனர்.
அது நமக்கு லாபமாகவே யெண்ணவேண்டும், இவரொதுவரை
யிலுஞ் சென்றுவந்தனரோ அந்தப்பூமியெல்லாம் மாற்றுயர்ந்த

பொன்னும், ஆதலாற் கன்னத்தில்வந்த பொருள்களை யவரிடத்திற் கொடுத்துவிடுமென்றனாக்க, அவனு மவ்வாறுகொடுத்து அவர் பாதம்பட்டவளாயிலு முண்டான பொன்னையெல்லாம் லாபமாகக்கொண்டனன். கன்னப்பிரமையரும் முன்போல ஜங்கமபத்தியாற் குறைவின்றித் தமது மனைவியாருட னிருந்தனர்.

கன்னப்பிரமையர் புராணவசனம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

முசுண்டிச்சவுண்டையர் புராணம்.

குண்டவிநாயகர்பாதமலாது குறிக்கொள்ளா
ரெண்டருபெருமுசுண்டி சவுண்டையனொன்றுள்ளார்
பண்டிதர்நேயர்தவர்க்கினிதான பரிந்தீவார்
மிண்டியவாதர்களைக் கடிவாருடல்வீயாதார். க

நல்லவையான முகந்தெரிவித்திடுநல்லாடி
யெல்லவருந்துதிசெய்பவர்வெம்பவமில்லாதார்
புல்லலரிச்சைகணற்குண மின்செயல்போடாதார்
சொல்லருஞானசுகத்த ரிரண்டுனைசொல்லாதார். உ

மிக்குறுதிட்டமொடொன்றனுமான விதங்கண்டார்
தக்குயர்சாபவனுக்கிரகஞ்செய் சமத்துள்ளார்
பொக்கமின்மாதவர்வீர தவத்துறை பொன்றுதா
ரக்கரவாபரணர்க்கினியார்பழு தண்டாதார். ௩

ஏறுடுசெங்கமர்பத்தரிறக்கி லெழச்செய்வா
ராறுடனங்கிவழிக்கண்விலக்கி லடர்த்துள்ளா
ரீறுடலிற்குறினுஞ்சிவபத்தியை யெள்ளாதார்
மாறின்முசுண்டியெனும்பதியுற்றிவர் வாழ்நாளின். ௪

நந்திகள்செம்புகழென்றெழு சோதிநயந்தெங்குந்
தொந்தமதானதறிந்து சவுண்டையர் தூய்நண்பாற்
புந்திமகிழ்ந்தவரைத் தெரிசித்தல்புரிந்தோர்நா
ளந்தவர்தம்முடனே யுயர்கானகவாறுற்றார். ௫

அங்கணுயர்ந்தெழு மெட்டிநிறைந்தவலங்காரச்
செங்கனிகண்டதன்மேன் மனமுற்றதுதீர்வாக
நங்கரலிங்கநிவேதன மின்றினிநானல்கிச்
சங்கரசேடமருந்துது மென்றுதமிற்சொல்லா. ௬

ஐயர்முசுண்டிசவுண்டையர் நெஞ்சகமாலிப்பால்
வெய்யனவாகியவெட்டி மரத்தடிமேவுற்றே
கையகவேலைவிதிர்த்தொளி ரக்கனிகைக்கொள்ளாத்
துய்யசிவாயவுனக்கமு தாகவெனச்சொல்லி. ௭

அக்கினிபோதவருந்தவர்கையி னளித்தன்பான்
மிக்கனதம்பரமற்குநிவேத மிகச்செய்தார்
தொக்கமகத்தருடன்சிவசேட சுகத்தாராய்
மைக்கடறந்ததிருந்தமுதென்ன மகிழ்ந்துண்டார். அ

முன்னிமுசுண்டியருந்தமுசுண்டி சவுண்டைய
ரென்றுநன்றுமமுடன்கலியாண மெனும்பேரா
மர்நகர்வீதியணைந்தருணந்திக ளார்வாழும்
பொன்னணிமாளிகைவாயில்கடந்து புகுந்தாரால். ௯

நித்தர்சவுண்டையதேவர்மகத்துவ நேரொல்லாம்
பத்தர்சிகாமணிநந்திகள்கண்டு பயந்தன்பா
லொத்தநலத்தொடுகூடலசங்கம ருற்றுற்போன்
மெத்ததிகாதரவுற்றுயர்பத்தி விதத்தாலே. ௰

சடக்கெனவங்கணெழுந்துபணிந்து தருக்கன்பான்
மடத்திலெழுந்தருளப்பணியாதன மன்னப்பின்
விடற்கரிதாகியநல்லுபசார விதங்கொண்டு
நடத்தவிருந்தன்ர்பின்னோர்மடத்து நயந்துற்றூர். ௰௧

மெய்த்தவராசசவுண்டையர்வீர சிவாசார
மத்தலமொப்பநடந்துகிடந்திடு மந்நாளி
னித்தவர்முன்னமோர்பத்தன்விபூதி யிருத்தாவெ
னத்தவெனில்லினோர்நற்கலியாணமமைக்கின்றேன். ௰௨

அக்கடியாணநலம்பெறவென்பதி யன்பாலே
மிக்கருளுற்றிடவங்கணெழுந்தருள் வீரென்ன
நக்கனதன்பர்சவுண்டையரொப்பி நயந்தார்பின்
சிக்கனவானதிடங்கொண்மகத்தர் செறிந்தெங்கும். ௰௩

எண்ணில்சிறப்புடனெண்ணில்களிப்பொடெழுந்தார்ப்
ப,நண்ணிமுசுண்டிசவுண்டையர்செல்லுறுநன்மார்க்கத்
துண்ணிலவும்பயமெய்திடவுந்தி யொலித்தெங்குந்
தண்ணிலவோர்நதிவந்ததுகண்டு சவுண்டையர். ௰௪

ஆயநதிக்கரைநின்றொருருந்தவ னவ்வாரி
மேயவந்நீரையருந்தியொழித்தல் விளங்காயோ
தீயபவித்திரள்விட்டிடுமெப்புணை சேராதே
பாயுநதிப்புனலுறைசையர்செற்றது பாராயோ. ௰௫

வேறு.

மன்னுநற்கெசேசனொன்னும் வள்ளலைவசுந்தனைக்க
ணுன்னருமசனிதேவ னென்பவருளத்தாற்கொள்ளா
நன்னெறித்தியானராகி நயப்புடனிருக்குங்காலை [லோ
முன்னிநீ யவர்மேல்வந்து முடிந்தனை முன்னுய்கொல்

என்றுநின்மோகரிப்பை விடுவிடுவதியென்றெய்தித்
துன்றுதங்கரத்துவாளைவிதிர்த்துநீர் துண்டித்தார்த்தார்
சென்றிடுமாறிரண்டு செய்யமேகங்களென்ன
நின்றநீர்மலையதென்ன வழிவிடாநெடிதுதூரம். ௰௭

அந்தியாகாயத்தி லணைந்தமையரன்மெய்யன்ப,ருன்ன
ரும்பெருமைதன்னை யுயர்சுரநதிபாற்கேட்பே, மென்ன
மேலெழுந்துசென்று சவுண்டையர்க்கிறைஞ்சு மாபோ
த்,றன்னரும்பாதாளத்து விழமன்றவத்தோர்கண்டார்.

கண்டமாதவர்கணிளைக் கடிந்தடித்தாவிரண்டு
துண்டமதாமோவென்னுஞ்சொல்லினைத்தவிர்த்தாமொன்
வண்டவராசராச சவுண்டையர்மகிழ்ந்துசெல்ல [பார்
வண்டர்நாயகனைப்பாடி யாடுவார்களிப்பாரார்ப்பார்.௰௯

கரம்புயங்களிற்புடைப்பார்கரணங்கள்களித்துக்கொ
ள்வார், திரும்பியந்தியைநோக்கிச் சிரித்துமேலெழுந்
துபாய்வார், பரம்பிமாகரங்கள்கொட்டிச் சவுண்டையர்
ப்பாடாநிற்பா, ரிருஞ்சுடர்ப்பரசுசூல மெறிந்துநின்றெ
திரேயேற்பார். ௨௰

காளமார்கண்டாவென்பார் காலனைக்காய்ந்தாயென்பார்
வேளினையெரித்தாயென்பார்வெம்புரஞ்சுட்டாயென்பா
ர்,நாளளவில்லாயென்பார்நரவரிபிளந்தாயென்பார், நீள
ராப்பணியாயென்பார்நெடுந்தலைத்தொடையாயென்பார்

ஆகவெல்லோருங்கூடி யாகங்கள்புளகங்கொண்டங்,கே
நாயகனைநீங்காச்சவுண்டையர்தமையுமேத்த,மாகலோ
கத்தோர்போற்றமன்னவர்மகிழ்ந்துவாழ்த்த,மோகமா
ம் பகைகளையக்காய்ந்த சவுண்டையர் முனைந்துசென்று.

பெருங்கலியாணமெய்தும் பெரும்பதிதன்னுண்மேவி
யருந்தவரனேகர்சூழ வளவில்வாச்சியந்தழங்கப்
பொருந்தருஞ்சிறப்பினேடு புண்ணியவதுவைதன்னின்
விருந்துபசாரநல்க வருந்தினர்மீண்டுசெல்வார். ௨௩

அப்பெருவதியின்மற்று மளப்பருங்காட்சிமன்ன
செப்பருந்தவத்தர்நாவிற் சிவத்துதிமுழக்கமோங்க
வெய்ப்பருங்கல்லியாண புரத்தவரெதிர்கொண்டேத்த
வொப்பரும்விரதசிட்டசவுண்டையருவகைபொங்க.௨௪

வீதியுட்புகுந்துசெல்லும் வேலையின்வந்தோர்கன்னி
நீதியார்சவுண்டையர்க்கு நேயத்தாற்பணிந்துநிற்பத்
தீதிலாயுனக்குமின்னே தீர்க்காயுவெனப்புகன்று [ர்.
கோதிலாமகிழ்ச்சிபொங்கக் குலவித்தம்மடத்துட்புக்கா

புக்கபின்சிவார்ச்சனைக்குப் புகுந்துளநெகிழ்ந்துபோற்றி
மிக்கமெய்யன்பினெட்டு விதார்ச்சனைபதினறென்னுந்
தக்கநல்லுபசாரங்க டாழ்வறச்செய்துவந்து
செக்கரஞ்சடையார்க்கண்டுசிவானந்தத்திருக்குநாளின்.

சின்மயசவுண்டதேவர் திருமொழிதப்பாதென்னு [கோ
நன்மையை விண்ணோர்மண்ணோர் நலம்பெற நம்புதற்
மென்மொழித்தந்தைதாயர் வினைத்திறநீங்கியத்தன்
றன்மலரடிக்காளாகுந்தன்மையோசின்னாட்பின்னர்௨௭

அந்நல்வாழ்த்துப்பெற்ற வாயிழைமரிக்கவங்கண்,
டந்தைதாயழுதுவீழ்ந்த தனைமிசைப்புரண்டெழுந்து,
கொந்தலர்க்குழலேயேந்திக் கொண்டுவந் தையர்முன்னி
ட், டிந்தமி னுன்ருண்முன்ன மிறைஞ்சுமின் னென்று
சொல்வார். ௨அ

ஐயநின்வாழ்த்துப்பொய்யா தடியனேற்கருள்செயெ
ன்னத், துய்யதன் ருளில்வீழ்ந்து துயரிப்பார் தம்மை
நோக்கிப், பொய்யதொன் றில்லாமெய்ய ரொழுமினிலொ
ளப்புகன்று, செய்யதங் கருணைகூர்ந்து திருவுளமகிழ்ந்
தென்செய்வார். ௨௯

புண்ணியவயது நாறு புக்கிருமென்பதல்லா
லுண்ணிலவுயிர்ப்பிணைக்கு மொப்புவருளரோவென்று
நுண்ணியர்நின்றுசொல்லு நவவினைப்பரிகரிப்பார்
திண்ணியசவுண்டதேவர் தெரிவையைச்சிறிதுதட்டா.

காத்துவாள் விதிர்த்தெழுந்து கனவயி ராக்கியத்தா,
லுரத்துவாமின்னேயென்றுபெயரினையுனைத்தழைத்தா
ர், சிரத்தொளிகேளாமுன்னஞ் சவுண்டையர்திருநோ
க்கத்து, வரத்தினுற் றுயின்றெழுந்தோர் வண்மைபோ
ன்மதித்தெழுந்தாள். ௩௧

பார்த்துநற்சவுண்டதேவர் பதுமநற்பதம்பணிந்து
கூர்த்தமெய்யன்பினுலே குழம்பிடுங்கரத்தளாகி

நேர்த்துமுன்னிற்குமாதை நேயத்தாற்பிதாவுந்தாயு
மார்த்தெழுந்தணைத்துக்கொண்டா ரங்கங்கள்புளகரீட.

துதித்தனர் மண்ணோர்விண்ணோர் துந்துமியைந்து
மார்த்தார், மதித்தெழும்பிதாவுந்தாயுஞ் சவுண்டையர்ம
லர்த்தாள்போற்றி, விதித்தவட்டாங்கமெல்லா மேதினி
யுறப்பணிந்தார், நிதித்திரள்கண்டாற்போலநெஞ்சகமு
ருகிச்சொல்வார். ௩௩

தருந்தவராசராச சவுண்டையவெமக்குநீசெய்
பெரும்பிராணோபகாரப் பெருமைக்குநேரதாக [ம்
வருந்தியேயாங்கள்செய்யுங்கைம்மாறுமற்றொன்றில்லே
பொருந்திநின்னடிமையாகப் புகுவதேகருமமென்றார்.

மடிந்தெழுந்திருந்துநின்ற மாதிற்குந் தாதையார்க்கு
ம், வெடிந்தன னெனப்புகன்ற தாய்க்குநல் விருப்பினு
லே, படிந்தசீரிலிங்கநேசப் பார்வையாற் றரித்துப்பின்
னுங், கடிந்துதுற் சமயம்வெல்லுங் கருத்தினர் மடத்தி
ருந்தார். ௩௫

முசுண்டிச்சவுண்டையர் புராணம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௧0௬.

திருச்சிற்றம்பலம்.

முசுண்டிச்சவுண்டையர் புராண

வசனம்.

சிவபெருமானது பாதகமலங்களையல்லது மற்றொன்றையும் மனத்திற்குறியாதவராகிய முசுண்டிச்சவுண்டையரென்பவர் முசண்டியென்னும் நகரத்திலிருப்பவர், சிவனடியார்கட்கே யினிதான வெப்பொருளையும் பரிந்துகொடுப்பவர், துர்மதவாதிகளைக் கடியுஞ் சங்கற்பமுள்ளவர், இறவாத தேகமுள்ளவர், சத்தியந்தவறாதவர், சாபானுக்கிரஹ சாமர்த்தியமுள்ளவர், வீரசைவத் துறையில்நின்று தவஞ்செய்பவர், விருஷபங்களாவது சங்கமராவது இறந்துகிடப்பக்கண்டால் அந்தப்பிரேதங்களையெடுத்துச் சமாதியிலெழச்செய்யும் நியமமுள்ளவர், ஆற்றுவெள்ளமாவது அக்கினியாவது மார்க்கங்களில் தடைபண்ணுமானால் அவற்றை வலிந்து கடந்துசெல்பவர். இவரிவ்வாறிருந்து வாழுநாளில்,

ஸ்ரீவசவதேவரது பெரும்புகழைக் கேட்டு மனமகிழ்ந்து சென்று அவரைத் தெரிசிக்கவிரும்பி அநேக மடியார்களோடு தாமுமொரு காட்டுவழியிற் செல்லும்போது அவ்விடத்து ஒரு எட்டிமரமானது நிறையப்பழுத் தலங்காரமாகவிருப்பதுகண்டு இந்த அழகிய கனிகளைக்கொணர்ந்து எமது இஷ்டலிங்கரூபியான சிவபெருமானுக்கு நிவேதித்துப் பின்னர் அந்தப்பிரசாதத்தை யாமுமுண்பது நிச்சயமென்று தம்முள்ளேநினைத்து மிகவுங்கைப்பான அக்கனிகளை யநேகமாகக்கொய்து இது சிவப்பிரீதியென்று தம்முடன்வந்த வடியார்க்கெல்லாஞ் சிவநைவேத்தியத்துக்குக்கொடுத்துந் தாமு மிஷ்டலிங்க நைவேத்தியஞ்செய்து

அந்தச் சிவப்பிரசாதங்களையுந் தேவாமிர்தமுண்பதுபோல அடியார்களோடிருந்துண்டு மகிழ்ந்தனர், அந்த எட்டியாகிய முசண்டிக்கனியை யுண்டமையால் முசண்டிச்சவுண்டையரென்னுந் திருநாமத்தோடு கலியாணநகரத்திற்சென்று ஸ்ரீவசவதேவரெழுந்தருளியிருக்குந் திருமாளிகைவாயில்களைக்கடந்துட்புகுந்தனர். இச் சவுண்டநாயனாரது பெருமைமுழுதும் தமது ஞானநோக்காலறிந்த வசவேசரும் பார்த்தவுடன் மிகவும் பயந்தெழுந்து தமது குருமூர்த்தியாகிய கூடலசங்கமேசுவரரே யெழுந்தருளிவந்ததாகப் பாவித்து அதிகமான அன்புடனேவணங்கி யஞ்சலித்து ஆதனமிட்டு இருப்பச்செய்து, சகல வுபசாரங்களையுஞ்செய்ய வவற்றையெல்லாமேற்று வேறொரு தலத்துச்சென்று மவ்விடத்துள்ளாரு மநேக வுபசாரங்களைச்செய்யப் பெற்றிருக்குநாளில், வேறோர்நகரினின்றும் ஒரு சிவபத்தர் அடைக்காய்ந் திருநீறுகொணர்ந் தெதிரேவைத்து வணங்கி ஐயனே, எமதில்லின்கண் கலியாணமொன்றுசெய்ய நிச்சயித்தேன் அது இனிதாகமுடியும்படி எனதுகிரகத்தில்வந் தருள்செய்வீரென்று பிரார்த்திக்க, சவுண்டையரு மங்ஙனமாகுகவென்றருள்செய்து விடைதந்து பின்னர் அநேகஞ் சிவனடியார்கள் புடைசூழ்ந்துவர வக்கலியாணத்துக்குச் செல்லுமார்க்கத்தில் ஒருநதியானது பிரவாகத்தினா லிருகரையு மொன்றாகத் தோன்றக்கண்டு அடியார் எவரும் மனங்கலங்கிநிற்க, அவ்விடத்துச் சவுண்டையர் அந்நதிக்கரையில்நின்று சொல்லுவார்.

முற்காலத்தொருநாள் அகத்தியமுனிவர் பிரசித்தமான சமுத்திரநீர்முழுதும் ஆபோசனநீராக வுள்ளங்கையி லேற்றுண்டொழித்தசெய்தியையறியாயோ, ஒருகாலத்துத் தானசெயரென்பவர் பலிகளால்விடப்பட்ட தெப்பத்தி லேறலாகாதென்றுஞ்

சங்கற்பத்தால் ஆற்றுநீர்முழுதும் வற்றச்செய்த தறியாயோ, முற்காலத்து அசனிதேவனென்னுஞ் சிவயோகி தமது ஆத்மார்த்ததெய்வமாகிய வேசேசுவரனைத் தியானித்துக்கொண்டு உள் விடமாக நூலத்தருகே யெழுந்தருளியதருணத்து ப்ரவாஹரூபமாய் அவர்க் கிடையூறுசெய்ய அப்போது அவர்கோபாக்கினியால் சுவறினை, அஃதிப்போது மறந்தனையோ ?

என்று பெரியோர்தன்மையையெல்லா மெடுத்துக்கூறி அந்நதியின் கோபரிப்பொழியச்செய்து, பின்னர் தமது காத்துவாரை விரித்து வெள்ளத்தைத் துண்டித் தாரவாரஞ்செய்தனர். அப்போது வெள்ளமானது இரண்டுமலைகள்போலத் தாஞ்செல்லும்மார்க்கத் திருபுறத்தும்விலகி யுயர்ந்துநின்றதைத்தன்மைத்தெனின், சிவனடியார்களது அமிதமான மாஹாத்மியத்தைத் தேவரறியாகிய வெள்ளையிலிடத்திற்சேழ்ப்போமென்று மேலே முற்றுப்போலிருந்தது. பின்னும் யதாப்பிரகாரம் கிழிறங்கினதென்றன்மைத்தெனின், சவுண்டையரது பெருமைதெரிந்து அவரை வணங்கினதுபோலு மிருந்தது. இதுகண்ட வடியார்கள் உலகத்தில் தன்னிகரி லிருதுண்டமாம்படி. பேதித்தால் வேறுகுமோவென்றும் பழமொழியைத்தவிர்த்தன ரிச்சவுண்டையரென்பர், தவராஜராஜராகிய சவுண்டையர் மனமகிழ்ந்து முன்னேசெல்லப் பின்னே சிவனமகிழ்த்தனையோடு நடந்து ஆரவாரிப்பர், குனிந்தத்தால் தமது கரங்களைப் புஜங்களிற் றட்டுவர், சரணங்களிலே விழுவர், பின்னுமந்நதியைத் திரும்பிப்பார்த்துச் சிரித்தெழும்பிப்பாய்வர், பின்னுங் கும்பல்கும்பலாகக்கூடி தவராஜராகிய முகண்டிச்சவுண்டையரைப்புகழ்ந்து பாடாநிற்பர், மறுவாயுதல் குரவையுங்கினை யுயரவெதிர்த்து கையிற்குங்குவர், இவ்வாறு அகமகிழ்ச்சியோடு சிவபெருமானையும் அடியார்க்கெந்த

சவுண்டையரையும் பலதரந்துதிக்கவும், தேவரும் மற்றைய மனிதரும் பலவாறு துதிக்கவும் மங்களகரமான கலியாணஞ்செய்யும் வேறுநகரத்திற் சென்று அளவற்ற மணக்கோலங்களையுங் கண்டு பின்னுந் தம்மொடுசெல்லும் அடியர்நாவிற் சிவத்துதிமுழக்க மோங்க அந்தக் கலியாணபுரியிற் பெரியர்முதல் யாரு மெதிர்கொண் டேத்தும்படி. விருதங்கேஷ்டராகிய சவுண்டையர் மகிழ்ச்சிமீதூர வீதியிற்புகுந்து செல்லும்பொழுது, ஒரு கன்னிகையானவள் மிக்க நேயத்தோடு சவுண்டையரை வணங்கிநிற்க, அதுகண்ட சவுண்டையரும் பெண்ணேயுனக்குத் தீர்க்காயுவென்று ஆசிர்வதித்துத் தமது மடத்துட்சென்று மெய்யன்போடு சிவார்ச்சனையின் மனமுயன்று அஷ்டவித அருச்சனையுடன் ஷோடசோப சாரங்களையும் புரிந்து சிவபெருமானைத் தெரிசித்துத் தியானித்துக் கொண் டிருக்குங் காலத்தில், சிலநாட் சென்றபின் முன்னஞ் சவுண்டையரா லாசிர்வதிக்கப்பெற்ற கன்னிகையானவள் அகாலமரணத்தையடைய, அதுகண்ட தாய்தந்தையிருவருங் கீழேவிழுந்தழுது புழுதியிற்புரண்டு எழுந்து தவராஜராகிய சவுண்டையரது ஞாபகம்வந்து அந்தப்பிரேதத்தை யெடுத்துக்கொணர்ந்து அவரது திருமுன்னேபோட்டு சுவாமி சவுண்டதேவரே, இந்தக்கன்னிகை முன்னந் தேவரீரது பாதபத்மங்களில் நமஸ்கரித்தவளாகும், தமதுதிருவாக்கால் தீர்க்காயுவென்று வந்தவசனம் பொய்யாதேயென்று தேவரீரது சன்னிதியிற் சவத்தைக் கொண்டுவந்தனம், இந்த வாபத்தைப்போக்கி யெம்மைப் பாதுகாத்தருள்கவென்று தமதுபாதாரவிந்தங்களில்விழுந்து துக்கிக்குமவர்களைச் சவுண்டதேவர் திருநோக்கம்புரிந்து நீங்கள் துக்கிக்கவேண்டாம் எழுந்திருங்களென் றருள்புரிந்து, பின்னர் அந்தப்பிரேதரூப

மான கன்னிகையைத் தமது ஸ்ரீஹஸ்தத்தால் பிடித்துநட்டி தமதுகையில் வாளைவிதிர்த்து ஆரவாரஞ்செய்து ஓகன்னிகையே எழுந்துவரக்கடவாயென்று அப்பெண்ணின் பெயரைச்சொல்லியழைக்க, இவரது கண்டத்தொனி கேளாமுன்னமே அக்கன்னிகை அங்கிவர் எழுந்திருப்பதுபோல வெழுந்து சவுண்டையரது பாதங்களில் பூர்வத்திற் பணிவதுபோல பணிந்து தலையன்போடு அஞ்சலிஹஸ்தையாய் நிற்குமவளைக்கண்டு தாய்தந்தையிருவரும் ஆனந்தவெள்ளத்தில்மூழ்கி ஆரவாரித்து எடுத்து மார்பிலணைத்துக்கொண்டு புளகாங்கிதரானார்.

அப்போது பூவுலகத்தவர் யாருந்துதித்தனர், தேவலோகத்தார் துந்துமிமுழக்கினர், தாய்தந்தையிருவரும் சவுண்டையரை அஷ்டாங்கப்பிரமாணத்தண்டாகாரமாய்ப் பூமியில்விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று கைகூப்பி சுவாமி தேவரீர் திருவருள்புரிந்த இந்தப் பிராணோபகாரத்துக்கு அபாத்திரராகிய எளியேம் பிரதியுபகாரம் யாதுசெய்யவல்லோம் உமக்கு அடிமையாகப்புகுவதே காரியமென்றுநின்றனர். அப்போது தமதுதிருவருளாலெழுந்துநின்ற பெண்ணுக்கும் அவளது தாய்தந்தைகட்கும் சேத்திரதீக்ஷையோடு இலிங்கதாரணமுஞ் செய்வித்து அவர்களை பரமஸ்தானஞ் சேர்ப்பித்து, பின் துர்மதங்களைவென்று உயிர்களைச் சன்மதத்திற்புகுவித்துக் கதிபெறச்செய்விக்குங் கருத்தோடு தமதுதிருமடத்தில் வீற்றிருந்தனர்.

முசண்டிச்சவுண்டையர் புராணவசன

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சுரிகைச்சவுண்டையர்புராணம்.

மருவமலவொளிவீசும்வண்புகழாரொண்கருணைப்
புருடமணிகலியாணபுரத்துறையும்விரத்தனார்
பெருகுநெறிச்சுரிகைசவுண்டையனெனும்பேர்பெற்றார்
குருவருளாலவர்மனத்துக்கொண்டநிட்டைகூறுவாம். க

வேறு.

இட்டலிங்கத்தட்டவிதார்ச்சனையினிட்டையீரெட்டா
முபசாரத் தியல்பினிட்டை, மட்டறுநற்குருபத்தி மகி
மைநிட்டைவருஞ்சரலிங்கத்தினிட்டைமருவுசேடம்,வி
ட்டகலாநிட்டை.பர தத்துவங்கள் விளங்கவதிந்திடுநிட்
டைவிமலநிட்டை, துட்டமனைவாழ்க்கையிச்சைதுணி
க்குநிட்டைசுகானந்தபரவசத்தாற்றூங்குநிட்டை. உ.

பரவுசிவவீரவிரதத்தினிட்டை பகரிலிங்கவபிமானம்
பற்றுநிட்டை, விரவுகரணாதாரவிந்தியத்தின் விதியொ
முகாமிகுநிட்டைவிசீலநிட்டை, கரவுகனவிலுமில்லாக்
கருணைநிட்டை கருதுசகலாங்கலிங்கங்காணுநிட்டை,சி
ரமுதற்பஞ்சாங்கசுத்தி சேருநிட்டை தேகத்துமோகமி
லாத்திரநிட்டை. ௩

இந்தவெகுவிதநிட்டையனைத்தாலாசா னின்னருளா
ற்சங்கமத்தைதயினிதுபூசித், தந்தமுறவைந்துவலகையமு

தாந்துய்ய வறுசுவையும்படைத்ததிகபத்தியாலே, வந்த
னைசெய்தாகமத்திற்பத்தர்நாவின் மகிழ்ந்துண்பேமெனு
நின்றன்வாக்கினாலே, பந்தமிலன்பர்களுறவினமுதுசெய்
வாய் பரமவெனச்சவுண்டையர்பகர்ந்தங்கம்மா. ௪

அன்புடன்மாயேசுரொலாமமருங்காலை யத்தலிங்கமரு
ச்சிப்பானமர்ந்திருந்து, முன்புறுமஞ்சனமாட்டா முன்
னமெற்றின் முதுமகிழ்வாமஞ்சனத்தைமுழுதுமாட்டி,
நன்புனிதமலர்சாத்தாமுந்தவுள்ள நளினமலரினைச்சாத்
திரநுந்தாப, மின்புறால்காமுதலேயந்தரங்க விருங்கர
ணவாதனையமினிதாலிந்து. ௫

ஒளிதிகழ்திபார்த்திபணிமாறுமுன்ன முள்ளறிவர்ஞ்
சோதியினை யுவப்பாலேற்றித், தெளியுமறுசுவையமுத
ஞ்செலுத்தாமுந்தத் திகழ்தருமான்மாவைநிவே தித்து
ப்பின்னும், களிகொண்மனமுருகியுட்சேட்டையெல்
லாங் கழன்றுலிங்கச்சோதியினைக் கண்டுகொண்டு, நளி
னமுகமலரவரும்பரமானந்த நல்லமுதுண்டுண்டுசுவை
நயந்தானையா. ௬

வேறு.

நற்சகாரத்தின்விழ்ந்தாலம்பெறமூழ்கிமூழ்கித்
தற்சுவேந்தரங்கத்தன்மையாஞ்சோதிதன்னைச்
சிற்சுகப்பிராணலிங்கத்திர்ப்பரமொன்றச்சேர்ந்தத்
தற்பரனைபுரிந்துதுய்யவமுதுசெய்விப்பாராகி. ௭

தொடருநற்றுணிவினாலேசுரிகையையுறையின்வாங்கி
யடலுறவலப்பால்வைத்திவ்வமுதினையமுதுசெய்யா
விடிலுயிர்துறப்பேனென்னுமெய்விரதத்தராகித்
திடமுடனமுதுசெய்யுந்திறமுன்பின்றெரிந்திருந்து. ௮

கையினாலிதத்தநல்லகறியமுதமுதனைத்துஞ்
செய்யதமன்பினாலேதிரட்டிமுன்னொன்றொன்றாக
வையநீயமுதுசெய்யென்றடிக்கடிதரவேற்றேற்று
வெய்யவெஃபசியர்போலவிருப்பினாலமுதுசெய்து. ௯

மிக்கலிங்கத்திற்சேடமெய்த்தவர்சேடமெல்லாம்
பக்கமொன்றிடமுக்காலம்பரிவினாலருந்திவாழுந்
தக்கசீர்ச்சவுண்டதேவர்பெரும்புகழ்தரணியெங்கும்
புக்கபினவனாநல்லோர்புகழ்ந்தவாபுகலலுற்றேன். ௧௦

உறுநெறியபயன்முன்னாளுழைக்கரர்க்கமுதுசெய்ய
மறுவிலாவசனத்துக்கொண்வாலியவரிசிமுன்னாற்
றறுபதின்கலங்கறிக்காமிளகுமுக்கலமளந்து
நறுவியநெய்பால்சினிநறுங்கனிமிகவுநல்கி. ௧௧

அளப்பருஞ்சிறப்புநல்கியரியபொற்றளிகையெல்லாம்
வளப்பமெய்துறப்படைத்துமறையவர்மர்திரங்க
ளுளப்பரிவுடனங்கோதவுயர்திணாக்கப்பானிற்குந் [ம்.
துளக்கமிலன்பிற்சோழன்கண்களிற்றோன்றும்வண்ண

கையிறைப்படைத்திருந்தகறியமுதரும்பாறைதி
யையறைர்கடித்துமிஞ்சிக்குடித்தமுதன்றுசெய்யுந்
துய்யகல்லோசைசோழன் றுணைச்செவி மகிழ்ந்துகேட்
வையகர்சொலவழிந்தேமன்றிபுமற்றோரன்பர். [டல்

பரிவின்மாதிராசசென்னர்பசித்திருந்தருந்துங்கூழி
றுரிபவின்பாறபார்க்கென்றுணாத்திடவவொன்றுவே
யரியபொற்கலமாயுண்பதமுதமாயயின்றோமென்று [ம்.
சுரிகுழல்பாகர்வாக்குத்தொளித்ததென்றுரைப்பர்மற்று

வீரசோளவ்வையென்னுமென்கொடிதாக்காராமத்
தெரியறனையறிந்தன்றிதந்தரும்பிட்டிற்கேற்கச்
செருகற்றிரவியந்தான்சேர்த்திருந்தருந்துங்காலை
நேரிலாமதுராவிளிகழ்தலாளிமலர்க்கென்று. ௧௫

அஞ்சியப்பிட்டைகல்லவதிகவத்திரத்தான்மூடி
விஞ்சியவிஞ்சிக்கோயில்விமேசர்க்கமுதுசெய்ய
வஞ்சிநீசெலுத்திவாவென்றளித்திடவாங்கிச்சென்று
கஞ்சிவிதுண்டார்கோயினன்னிமுனையந்தின்று. ௧௬

என்னமைதேவரிர்க்கிப்பிட்டினையிவிதவிக்கச்
சொன்னதாற் கொணர்ந்தேனென்னச் சோமசேகரன்ற
கன்னயப்புடனேவாங்கிக்கண்பிறைவுதரமார [ன்கையால்
முன்னமு துண்டானென்றுமுதறிவுடையோர்சொல்வார்

வேறு.

இன்றுசுரிகைச் சவுண்டைய ரினியவமுதம்பிடிபிடி-
யா, யென்றுமன்பாற் றரத்தரமு ளுமையோர்பாகரேற்
றேற்றுத், துன்றுபசிகொண்டவர்போலச்சுவைத்தாரெ
ன்றுதவத்தோர்கள், நன்று துதிப்பக்கலியாணநகர்க்குளி
ருந்துநயந்திடுநாள். ௧௮

சுரிகைச்சவுண்டையர் புராணம்
முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௧௨௭.

௨

திருச்சிற்றம்பலம்.

சுரிகைச்சவுண்டையர் புராண
வசனம்.

உலகத்தில் நகரநாயகமாகவிளங்குகின்ற கலியாணநகரத்திலெழுந்தருளிய ஸ்ரீவசவதேவராதிதிருக்கூட்டத்தில் தலைமையாக விளங்குமவர், சுரிகைச்சவுண்டைய ரென்னும் அபிதானமுடையவர், இஷ்டலிங்கார்ச்சனைமுதலிய வெகுவிதநிஷ்டை கைவந்தவர், இந்நிஷ்டைகளாலும் தமது பரமாசாரியன தருளினுலும் ஜங்கமபூஜைசெய்து, ஐவகையமுதம் அறுசுவைப் பதார்த்தங்களும் படைத்து வணங்கி, தமது இஷ்டலிங்கபூஜையிலும் விரைந்து இலிங்கத்தைநோக்கி சுவாமி சிவபெருமானே, கேவலத்தில் நிர்க்கதியாக்கிடந்த உயிர்கள் கதியடையவேண்டி திருவாய்மலர்ந்தருளிய காமிகாதியாகமங்களில் பத்தர்களது நாவினிடமாகநின்று மகிழ்ந்து புசிப்போமென் றருளிய திருவாக்கால் இப்போது தாமும் பத்தர்களுண்பதுபோலவே புசிக்கவேண்டுமெ

ன்று பிரார்த்தித்து, அந்த வீரமாஹேசுவரர் திருக்கூட்டமத்தியில் இஷ்டலிங்கத்தைப் பூசிப்பான்றொடங்கி, பகிர்யாகமாகிய புறத்திற் பூஜையைத் திருமஞ்சனமுதலிய திரவியங்களாற்செய்யுமுன்பாகவே அந்தர்யாகமாகிய மானசிகபூஜையைச் செய்யான்றொடங்கி தமது மனமகிழ்ச்சியே திருமஞ்சனமாக வாட்டி, உண்மையே தாமரைமலராகச் சாத்தி, அந்தக்கரணங்களின் வாசனையே தூபமாகப் புகைத்து, உள்ளறிவே நீராஞ்சனமாக வேர்த்தி, ஆத்மாவே நைவேத்தியமாக நிவேதித்து, மனநெக்குருகி உடலமலைசவறவிருந்து சோதிமயமான லிங்கத்தை யகமுகத்திற் றரிசித்துக்கொண்டு முகமலர்ச்சியோடிருந்து பரமானந்தமாகிய வமுதத்தையுண்டு, அச்சுவையாப்புடன் சிற்சுகசமுத்திரத்திற்மூழ்கிப் பின்னர் அவ்வந்தரங்கச்சோதிலிங்கத்தைத் தமது கரஸ்தலத்தில் ஆவாகித் தெழுந்தருளப்பண்ணி பகிர்யாகமாகிய புறத்திற்பூஜையையும் ஸாங்கமாகப்பண்ணிப் பின் திவ்வியமான வறுசுவைக்கறியமுதோடுகூடிய திருவமுதுந் திருமுன்னர்ப்படைத்து, வைராக்கியங்காரணமாகத் தமது ஹஸ்தத்திலிருந்த வுடைவாளை யுறையினின்றுங்கழற்றித் தமக்கு வலப்புறத்தில் வைத்துக்கொண்டு சுவாமி எளியேன்படைத்த வித்திருப்பமுதைப் புசித்தருளாவிடின் இப்போதே இச்சரீரத்தையாலுயிர்துறப்பேனென்று உறுதிமொழிக் கிரங்கிசிற்க, அப்போது அடியர்துயர்பொறுக்கறியாத வெம்பெருமான் அருளுஞ்செவ்வியுஞ் சிறிதுணர்ந்து அப்போது சிறிதலருந் தாமரைப்புதுமலர்போல் சிறிது முகமலர்ச்சியுடனிருந்து மஹாநைவேத்தியத்தையுஞ்சாகபாகவகைகளையும் முறைதவறாது இனியசொற்களோடு ஒன்றொன்றாக வெடுத்தெடுத்து நிவேதிக்க, சிவலிங்கப்பெருமானும் தமது ஸ்ரீஹஸ்தங்களால் வாங்கிவாங்கி வெய்யபசியாளிகள்போ

ல விரைந்து விருப்பத்தோடுபுசித்தனர். அதுகண்ட சவுண்டையரும் நமது இஷ்ட மின்றைக்குச் சித்தித்ததென்று அளவற்ற வானந்தத்திலமூழ்கிப் பின்னர் இலிங்கசேஷம் பக்தசேஷமென்னு மிருவகை ப்ரசாதங்களையும்புசித்து வாழ்ந்தனர். இவரது புகழ் திரிலோகங்களிலும் பரவிற்று.

பின்னர் அங்கிருந்த பெரியோர்சொல்வர், முற்காலத்துச் சோழராஜன் ஒருநைமித்திக விசேஷதினத்தில் ப்ரபூரஹவிஸ் என்று திவ்வியசிவாகமங்களில் விசேஷித்துக்கூறுந் திருப்பாவாடைநைவேத்தியஞ் செய்வித்தற்பொருட்டு வெள்ளிய சம்பாவரிசி முந்நூற்றறுபதுகலமும், அதற்சொத்த கறிவகைகளும், அதற்குதவியாகும்படி மிளகுமுக்கலமும், திவ்வியவாசமுள்ள செய்பால் சருக்கரைகளும், பலரசவர்க்கங்களும், கனிவகைகளும், அடைக்காயமுதும் பூசிக்கின்ற மறையவரிடத்துக்கொடுக்க, அவரும்வாங்கி யவ்வாறே திருவமுது அமைத்து அத்தனிகையெல்லாம் சிவபெருமானது சன்னிதியிற்படைத்து வேதாகமமிசிர மந்திரங்களை பூஜகர் உள்ளப்பரிவுடனுச்சரிக்க,திரைக்குப்புறத்திருந்துருகுகின்ற சோழராஜனதுபேரன்பைக்கண்டு அவனதுகண்களிலுந்தோன்றும்படி படைத்திருந்த கறிகளுடன் அன்னபானநிகளையும் சிவபெருமான்புசித்தவோசையைக்காதினுற்கேட்டும் நேராகத்தரிசித்தும் மகிழ்ச்சியடைந்தனனென்று பெரியோர்சொல்லக்கேட்டோம், அன்றியும் மாதிராஜசென்னனென்னும் ஜங்கமமூர்த்திகளொருவர் பசியினல்வாடி அப்போதுகிடைத்த கூழமுதத்துண்டான ருசியினின்பத்தால் இது சிவப்பிரீதியென்று சொல்லவே அப்பொழுது அவரதுநாவே பொற்பாத்திரமாகவும் உண்ணுங்கூழே தேவாமிர்தமாகவும் புசித்தனமென்று சிவபெருமானது திருவாக்கு அசரீரியாய் யாவராலுங் கேழ்க்கப்பட்ட

தென்று பெரியோர்சொல்லக் கேட்டோம், அன்றியும் வீரசோளம்மையென்னும் ஒருசிவபக்தை பல வாசத்திரவியங்களும் ரசங்களுஞ்சேர்த்துப் பிட்டமுது அமைத்து தாமருந்துங்காலத்து அது எண்ணத்துக்குமேலான திவ்வியருசியைத்தர, இது சிவப்ரீதியென்று அப்பிட்டமுதை வஸ்திரத்தால்மூடி தன் பெண்ணின்கையிற்கொடுத்து இதை நமது கடவுளாகிய பீமேசுவரர்க்கு நிவேதித்துவாவென்று சொல்ல, அப்பெண்ணும் அப்படியேவாங்கிச்சென்று பீமேசுவரர் சன்னிதியிற் கொணர்ந்துவைத்து எனதுதாயார் இப்பிட்டமுதைத் தேவரீருக் கமுதுசெய்விக்கச் சொன்னதுகாரணமாகக் கொணர்ந்தேன் சுவாமியென்று விஞ்ஞாபிக்க, அப்போது சிவபெருமான் கையாரவெடுத்து நாவாரவுண்டாரென்று பெரியோர்சொல்லக் கேட்டோம், இப்போது இந்தச் சரிகைச்சவுண்டையர் திருவமுதைப் பிடிபிடியா யெடுத்துத்தர சிவபெருமான் வெய்யபசியர்போல அவற்றையெல்லாம் வாங்கிவாங்கியுண்டு சுவைத்தனரென்று புகழும்படி கலியாணாகரத்தில் எழுந்தருளியிருந்தனர்.

சரிகைச்சவுண்டையர் புராணவசன
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

தெலுங்கச்சோமையர் புராணம்.

திருமலன்பாதமல்லாலினையலார்மற்றோரன்பர்
பெருமலமுன்றுஞ்சேரார்சங்கமப்பிரியமுள்ளார்
தருமான்னையமிக்கார்தாழ்விலாச்சிவாசாரத்தார்
அரிதர்பாலுறுர்தெலுங்கச் சோமையரென்னும்பேரார்.

கலியுகமிலையொன்றில்லார்கருதுருத்திரரோவென்னு
மிலையுளார்பரமானந்தமித்திரைமீங்கலாதார்
நலகுணமணிபிறக்குமற்கடல்விடயநாடா
ரிலகுதிவ்வியசரீரமொன்றுலகேத்தப்பெற்றார். ௨

புவனபாவனராயத்தன்பூசனைதவத்தோர்பூசை
யவதரந்தன்னிற்றம்மையறியலாதவிழ்ந்தவிழ்ந்து
நவநிறைகல்லியாணநன்னகரிவர்வாணுளின்
சிவனுறைபருப்பதப்பாற்சிவானந்தரொன்றோரன்பர். ௩.

சாற்றருந்தவம்பொருந்திச்சமாதியோகத்தராகிக்
காற்றருமகங்கணீண்டுகாசினியுறப்பரந்து
மேற்றிகழ்கானங்கண்டுவெள்ளிவெண்கொடிகள்போன்
றேற்றுமெய்மறையரோமநிறையவேர்வீழ்ந்திருக்க. [ரு

இத்தவர்க்கினியசீடரிவரைவிட்டேகாராகிப்
பத்திமோகத்தான்மூலபலமதுண்டிருக்குநாளின்
மெத்துகாந்தருவர்தங்கண்மெல்லியலாருந்தாமு
மத்தருவனத்தில்வந்தங்கன்பினுலாடுவாராய். ௫

சத்தியமுனிவர்வாழுந்தபோவனஞ்சார்ந்தவர்க்கண்
டுத்தமவெள்ளிவல்லியொழுங்குகொள்புதலோகல்லோ
வத்திறக்கொடியல்கல்லன்றுந்தருப்பன்னங்காணே
மித்திரைகொள்ளும்பொல்லா நெடுமுதுகாடியென்றார்.

இப்படிகேசரத்தாரியம்பியசொல்லையைய
ரொப்பியசிடர்களாவவர்களையூன்றிப்பார்த்து
வெப்பமாங்கோபமெய்தினிணையீர்காணீர்கொல்லோ
செப்பருந்தவத்தோரெங்கள் சிவானந்தமுனிவர்தேகம்.

அருமையானந்தமேனியதனைநீரவமதித்துக்
கருமைசேர்கரடியென்றகடிபவிப்பாவத்தாலே
பொருவிலாக்கேசரம்போய்ப்பூதலம்புகுந்திப்பொல்லா
மிருகமாயுழலுமென்றுசபித்தபின்வினையோர்கள். அ

அஞ்சிவர்தடியில்வீழ்ந்தின்றடியரோமவகுணத்தால்
வெஞ்சநீர்கொண்டுசெய்தமிக்கசாபம்போமெங்னா
ளெஞ்சுவந்தருள்வீரென்னநீர்கலியாணஞ்சூழ்ந்த
மஞ்சணிவனத்திற்சென்றுவன்னியமாகிச்சின்னாள். ௯

சரித்தபினவ்வனத்தோர் தவத்தர்சோமையரென்பார்
தெரித்தலோகங்களுய்வான்செனித்தவர்கையினம்பான்
மரிக்கிலிச்சாபநீங்குமற்றுநன்முத்திசேர்வீர்
விரித்தவிம்மாற்றமெய்யென் றுரைாக்கவம்மிருகமானார்.

சென்றருங்கல்லியாணத்திருநகர்ச்சமீபக்காட்டிற்
றுன்றியங்கியங்கித்துய்யசோமையர்வரவுபார்த்து
நின்றிரங்கிடுநாளையர்நிமலர்சோமையர்பூசைக்
கின்றுமென்மலரொடுப்பமென்றந்தவனத்திற்சென்றார்.

செம்மலர்கொய்யும்போதத்திரண்மிருகங்கள்கண்டு
சொம்மையரிவராமென்றுசூழ்ந்துறநெருங்கிநின்றங்
கம்மறவிலங்கிலொன்றெம்மைபசின்கையினலே
யெம்முடலொழிந்தானிங்குமெங்கள்சாபந்தானென்று.

சாபமதணைந்தவாற்றைத்தங்கண்முன்சனனந்தன்னை
யேவமதறமுன்கூறியிரங்கியேயிறைஞ்சிநின்று
நீபலதினமாவேட்டைநினைந்தெமைக்கொல்வையாயின்
கோபமொன்றில்லாய்முத்திகூடுவங்கூடுங்காலை. ௧௩

நிதிமணிவிமானமேறிநீயுநீணிலமுங்காண
வதிகமாநதிகொள்வேணியத்தனங்கயிலைசேர்வே
மிதுவுமெங்களைச்சபித்தமுனிவரரிசைத்தவாய்மை [ன.
கதியெமக்கருள்வாய்விண்ணோர்வணங்குநற்கழலாயென்

ஐயர்சோமையரச்சொற் கையமுற்றறிவானேக்கிப்,
பொய்யலவெனத்தெளிந்தேயவைகண்முன்பொருந்தப்
பேசிச்,செய்யநஞ்சிவார்ச்சனைக்காஞ்செழுமலர்கொண்
டுசென்று, மெய்யர்தம்மடத்திருந்து மற்றைநாள்வேட்
டைசெல்வார். ௧௫

பச்சையொண்குப்பாயத்தைப் பசிதமெய்புறவேசாத்தி
யச்செழுந்தூசுசென்னியார்த்தங்கைச்சிலையம்பேந்தி
முச்சுமவ்வனத்தைநோக்கிமுனிவிலாமுனிவர்வேட்டை
நச்சுவாராகப்புக்கார்நல்விலங்கினமுஞ்சூழ்ந்த. ௧௬

வில்வினைபெற்றிபோசைமிகவெழநாணொறித்துத்
தொல்லுமாசரந்தெரிந்துகொண்டெழுவிலங்கினங்கள்
வல்லெனத்தம்மேற்செல்லவாளியொன்றொன்றிலொவ்
வல்லியமுதல்விலங்குசாய்ந்தவணிறந்தவாறே. [வோர்

வினையர்வடிவமெய்திமெய்யர்சோமையர்தாளில்
நீனிலமுறப்பணிந்துநிற்கமேதினிவிமானஞ்
சேணிடைத்தோன்றவேறித் திருக்கயிலாயஞ்சென்றார்
மாணயமுனிவர்பார்த்தார்வனசரர்மகிழ்ந்துகண்டார்.

கண்டவர்காட்டுநாயுங்கயிலையிற்சென்றதிந்த
வண்டவர்பெருமையென்றார்மற்றுளசாபமாக்கள்
மிண்டியவனத்துவேடர்விடுங்கணைக்ககப்படாதித்
திண்டவர்கரத்தினாலே தினஞ்செத்தப்படியேசெல்ல.

அப்பெருவனத்துவேடரதிசயித்தெங்கையம்பிற்
றப்பியித்தவத்தரம்புதனக்கெதிர்நிற்பதென்னோ
செப்பிவிவ்விலங்கினங்கள்சென்றவாறென்னோவாரு
மொப்பிலம்முனிவர்தாமேவல்லரொன்றுரைப்பராகி. ௨௦

பூவிருத்திராமித்தப்பொருவிலாமுனிவரம்பிற்
சாவதென்வினையோராய்த்தமனியவிமானத்தேறி
மேவருங்கயிலாயத்தின்மேவலெனிவ்வாறெல்லாங் [ர்.
காவலன்விசலன்பாற்கழறுதுமெனப்போய்ச்சொன்ன

விச்சலன்வசவதேவர்விச்சலபுரியோரெல்லா
மச்செயலறிபவர்தாரவர்முனமந்தவாறே
நிச்சயம்பெறமேற்செல்லுநிதியைநிருபன்கண்டு
நச்சினன்றொழுதுநின்றானந்திகணவிலாசிற்பார். ௨௨

குருபதசேவையென்னுங்கோலநற்சுரிகையாலே
மருவுமில்வாழ்க்கையிச்சைமனைவினைமாயச்செய்தும்
பரவுயிரிரக்கமென்னும்பாரவெங்குந்தத்தாலே
கருமமாஞ்சராசரங்கள்கலங்கியங்கிறக்கச்செய்தும். ௨௩

ஈசனல்லாணையாகுமெழிற்றருப்பரசினாலே
பாசவாதனைகளென்னும்பகர்புலிக்கணம்படுத்தும்
தேசுறுஞானமானசெய்யகட்கத்தினாலே
ஆசையஞ்ஞானவெய்யவடவிமேதியையடர்த்தும். ௨௪

துய்யநற்கிரியையென்னுஞ்சுடர்தருவாளினாலே
மையல்கொண்மாயாபேதவன்கலியினையறுத்து
முய்யநற்றியானவிட்டியொன்றினாலொழியாச்சன்மக்
கைபுடைக்கரியினங்கள்கட்டறக்காதிச்செற்றும். ௨௫

வீரமெய்ப்பத்தியென்னுமிக்ககட்டாரியாலே
யாரவெங்காமமாதியாயவெண்கினத்தைக்காய்ந்து
நேரில்சத்தியமதாகுநெடுங்கதைவிடாமனின்று
பாரிலேடணைகளாயபாம்பினம்படவடித்தும். ௨௬

நேயமின்சமயாசாரநெடியதோர்மரத்தாற்பாவத்
தியகோனுமைவிழ்த்துஞ் சிவனருட்சினேகமென்னுஞ்
சாயகஞ்சிலைகொண்டோடித் தாவுமிந்தியப்புள்ளெய்து
மேயநற்காட்சிவேலாற்றக்கசியங்கள்விழ்த்தும். ௨௭

இம்முறைமாயாரூபமெனைத்தையும்வென்றதிரச்
சோம்மையர்க்கிதுவோபார மென்னவேதுதித்திறைஞ்
தம்மிலேமகிழ்ந்திருந்தார்தண்டநாயகர்கல்யாணத் [சித்
தம்முறைசிங்காரகிச்சோம்மையாருளால்வாழ்ந்தார்.

தெலுங்கச்சோமையர் புராணம்
முற்றுப்பெற்றது.
ஆக திருவிருத்தம் - ௧௧௫.

உ
திருச்சிற்றம்பலம்.
தெலுங்கச்சோமையர் புராண
வசனம்.

தெலுங்கச்சோமையர் சித்தனாகிய சிவபெருமானே சர்வகர்த்தாவென்னும்பொருட் டெளிவுடையர், மலமுன்றுமொழிந்தவர், ஐங்கமமூர்த்திகளிடத் தன்புடையர், தருமநேயர், சிவாசாரமுடையர், துரிதாகிய பாபிகளிடத் தெக்காலத்து நெருங்காதவர், இவைபோல்வன வின்னு நற்குணநற்செய்கைக ளனந்தமுடையர், இவர் சிவபூசைஜங்கமபூசைகளைச் செய்யும்பொழுது அளவற்ற வானந்தத்தின்மூழ்கித் தம்மைமறந்து மகிழ்ச்சி மிகுதியோடு கலியாணநகரத்தில் வாழ்ந்திருக்குநாளில்.

சர்வகாரணராகிய சிவபெருமான்வீற்றிருக்குந் திருஸ்தலங்களிலொன்றாகிய பருப்பதமலையென்னும் ஸ்ரீசைலபர்வதச்சாரலில் சிவானந்தமுனிவர் தவத்திற்றொடங்கி சமாதியினின்று அவர்கைகால்களில் நகங்கள்வளர்ந்து அம்மலைச்சாரல் முற்றும் படர, மயிர்கள் மிகவளர்ந்து விபூதியைத் தூளனஞ்செய்திருக்கும் அவரது மெய்முற்றும்மறைக்க, இவர்சிஷராகிய அநேகமுனிவர் கந்தமூலங்களையும் கனிகளையும் புசித்துக்கொண்டு அருகிற் பத்தியோடு பணிவிடைநோக்கியிருக்க வாழுநாளில்;

ஆகாயமார்க்கத்தில் கந்திருவர்கள் தமது மகளிருடன்சென்று அம்மலைச்சாரலில் விளையாடக்கருதி அம்முனிவரதுதபோவனத்திலுற்று அவரைக்கண்டு இன்னவுருவமென் றறிதற்கரிதாய் இஃதியாது வெள்ளிக்கொடிகள் ஒழுங்குபெறப்படர்ந்தபுதரோ, அன்றிக் கற்பாறையோ, இவ்விரண்டுமெல்ல அன்றி மரமென்போமாயின் இலைகளையுங்காணோம், ஆதலால் கண்ணுறுதங்குமொரு பொல்லாத கரடியென்னுமிருகமே இதிலையமில்லையென்றார். இவ்வாறுகூறிய பலமொழிகளையுங் கேட்டிருந்த சிஷியர்களாகிய முனிவர்கள் அவரை யூன்றிப்பார்த்து மிகக்கோபித்து எம்மையர் சிவானந்தமுனிவரது திருமேனியைக்கண்டு அவமதிசெய்து கரடியென்றபாபத்தால் உமது கந்திருவமேனிகெட்டு நீர்கற்பித்துரைத்த கரடியுருவமேதாங்கிப் பூமியில் வனங்களில் உழலக்கடவீர் என்றுசபித்தனர். பின் அக்கந்திருவரும் நடுங்கியம்முனிவர் திருவடிகளில்வீழ்ந்து சுவாமி முனிவர்களே எமது தெரியாமையே காரணமாகத் தம்மிடத்து இச்சகித்தற்கரிய கொடியசாபத்தை யேற்றனம், இது விமோசனமாகுநாள் எந்நாள் ப்ரதிசாபமும் வகுத்துரைக்க வேண்டுமென்று பிரார்த்திக்க,

அருகண்டமுனிவர் இரக்கத்தால் கந்திருவர்களே, நீங்கள் கலியாணபுரியைச்சூழ்ந்த வாரணியத்தில் மிருகங்களாக சிலகாலஞ்சரித்தபின் அவ்வனத்தில் சோமையனென்னுமொருமுனிவர் உலகநன்மை காரணமாக ஜனித்தவர், அவர்கையினம்பால் மரிப்பிராயின் இந்தச்சாபம்நீங்கி மேல் முத்தியையுமடைவீர் என்றுசொல்ல, அவருமம்மிருகவடிவெடுத்துச்சென்று கலியாணநகரத்தைச்சூழ்ந்த வனத்திற்சஞ்சரித்துக்கொண்டு சோமையர் வரவுக்கெதிர்பார்த்திருக்கும்போது, சோமையர் ஆத்மார்த்தபூஜைக்கு மலர்கொய்தல்வேண்டிச்செல்ல, அப்போதிம்மிருகங்களவரைக்கண்டு இவரே சோமையரென்னும் பிரஞ்ஞையுடன்நெருங்கி அவற்றிலொரு மிருகமானது சோமையரைப் பார்த்துத் தமக்குற்ற சாபத்தின் காரணங்களைச்சொல்லி உமது ஸ்ரீ ஹஸ்தங்களால் எமதுதேகங்களொழியுமாயின் எங்கட்குச் சாபவிமோசனமுண்டாம், முத்தியையுமடைவேமென்றுசொல்லி இரங்கி வணங்கிநின்று எம்மைச்சபித்த முனிவருமிவ்வாறு ப்ரதிசாபம் வகுத்தனர். ஆதலால் எமக்கு நற்கதி யருள்வீரென்ன; சோமையரும் அச்சொற்கள் சத்தியமென்று தமது ஞானநோக்கத்தாற் கண்டுணர்ந்து அம்மிருகங்கட்கு அநுகூலமாக நயந்தெதிர்மொழிந்து பின் மலர்கொய்துசென்று அன்றுதினஞ் சிவாராதனையைமுடித்து மடத்திலிருந்து, மறுநாள் மிருகவேட்டைக்குச்செல்வாராய் தமதுதிருமேனிமுற்றும் விபூதியையுத்தூளித்து, பச்சைநிறச் சட்டையொன்று மேலேசாத்தி, அம்மாதிரியான மற்றொருவஸ்திரத்தால் தலைச்சாத்துமணிந்து, கைகளிலம்புவில்லுமேந்தி அவ்வனத்திற் சென்றனர். அம் மிருகங்களும் நெருங்கிச்சூழ்ந்தன. அப்போது முனிவர் வில்லைவளைத்து நாணையேற்றியெறிந்து குணத்தொனிகாட்டிக் கொல்லும் பகுதிய

வாய பாணங்களையேந்தி மிருகங்கள்மேற்செல்ல, மிருகங்களு மெதிர்த்து முனிவர்மேற்செல்ல, முனிவர் ஒவ்வொருபாணங்களிருல் ஒவ்வொரு மிருகங்களையுமெய்ய, அந்த பாணப்ரயோகங்களால் அம்மிருகங்களெல்லா மிறந்து உடனே முன்னைய சுந்தருவவடிவத்தை யடைந்து சோமையர் திருவடிகளிற் பணிந்துநின்று ஆகாயத்தில்வந்திருந்த தேவவிமானத்திலேறி ஸ்ரீமஹாகைலாசம்போய்ச் சேர்ந்தன. அவ்வனத்தி லிதுகண்ட முனிவர்களும் வேடர்களு மதிசயித்தனர். பின் வேடர் தங்களம்புக்ககப்படாத விம்மிருகங்கள் இம்முனிவர்கையம்பின்மாண்டவகை மிகவியப்பென்று சிந்தித்து இம்முனிவராரோ மிருகங்கள்வந்தகாரணம்யாதோ, இம்முனிவர் வில்வித்தையில் தொன்றுதொட்டு வேட்டம்புரியும் நம்மினுமாயிரமடங்கதிகர்; அன்றியுஞ் செத்த மிருகங்கள் கந்திருவவடிவமடைந்து தேவவிமானத்திலேறிச்சென்றன. இவ்வற்புதங்களையெல்லாம்நமதுராஜாதிராஜனுகிய விச்சலமகாராஜனுக்கு அறிவிப்போமென்றுசென்று தெரிவித்தனர்.

இவ்வற்புதத்தைக்கேட்ட விச்சலராஜனும் மந்திரியாராகிய ஸ்ரீவசவதேவரும் அந்நகரத்திலுள்ளாரும் அம்முனிவர தற்புதச்செய்கையைக் காணவந்தனர். அம்முனிவரும் வர்த்தமானத்தைச்சொல்ல அரசன்முதலியோ ரதிசயித்திருந்தனர்.

அப்போது ஸ்ரீவசவதேவர் ஞானமாகிய வாயுதத்தினுலே அஞ்ஞானமாகிய மிருகத்தைக்கொல்லவல்ல இந்தச்சோமையருக்கு இம்மிருகவேட்டமு மொருபாரமோவென்று துதித்துவணங்கி யுபசரித்தனர். சோமையரும் முன்னைய முறைமையாகவே கலியாணநகரத்தில்சிவகாருணியத்தோடேழுந்தருளியிருந்தார்.

தெலுங்கச்சோமையர் புராணவசன

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

ஏகாந்தராமையர் புராணம்.

போதவமலகுணம்பெற்றபெருந்தோற்றத்தா
ரோருந்திருநாமமேகாந்தராமைய
ராராதசிவநேயரப்பாலுமொறுந்தலத்திற்
சீராகவாழ்ந்திருப்பார்தேசர்தொழுந்திருத்தாளார். ௧

உலகவுருத்திரனொன்றுமுனையுடையாருக்கிரன்போல்
விலகரியவிரத்தார்விமலகுருவிருப்புள்ளார்
பலபரவாதரைத்துணிக்கும்பரசன்னார்பரஞானர்
நிலவியதஞ்சிவசமயநீதியேநிறுத்துவார். ௨

வாதமுறுஞ்சமண்சமயமாசறுக்குமனத்தினர்
பேதமுறும்பவிச்சனத்தைப்பேணாதபெருமையார்
நீதிதராமாயாங்கநெறிசெல்லாநெஞ்சினர்
நாதனெழுத்தஞ்சல்லாலவிலாதநாவினர். ௩

அத்தனருச்சனையந்தத்தமலமதிராமைய
ருத்தமாற்கயிலையில்வாழுருத்திரனேராலக்க
மத்தியினற்றெரிசித்தங்கமர்ந்தசிவகணத்தோரைப்
பத்தியினற்றொழுதவரைப்பரிவினற்பரவியரோ. ௪

சங்கரன்மேனேயத்தாற்றத்துவநற்சுகாறுபவத்
திங்கிதத்தாலேகாந்தத்தினிதிமிருந்தின்புற்றே
யங்கமெலாம்புளகமெய்தியங்கணனூர்கயிலையினும்
பொங்குநெறிப்புவியிடத்தும்பொருந்தியிவர்வாழ்நாளில்

வசவேசர்குருலிங்கமலர்ப்பதத்துவன்பத்தி
யிசைநீதியேகாந்தராமையர்கேட்டின்புரு
நசைமேவிநந்திகளைநாங்காண்பமெனக்கடகத்
தசையாதநண்பினலவர்க்கண்டங்கமர்ந்திருந்தார். சு

வாச்சையர். சிவநாகமையர்.

மற்றுமொருபேரன்பர்வாச்சையரொனும்பேரார்
நற்றவஞ்சேர்நல்லசிவநாகமையரொனுநாம
ருற்றநண்பானந்திகளையொன்றியுய்வாமெனவந்து
பற்றியமேனேயத்தாற்பரவிமகிழ்ந்துடனிருந்தார். எ

ஏகாந்தராமையர்புராணம்
முற்றுப்பெற்றது.
ஆக திருவிருத்தம் - ககசுஉ.

உ
திருச்சிற்றம்பலம்.

ஏ கா ந் த ரா மை ய ர் பு ரா ண
வ ச ன ம்.

உலகத்தில் நிருமலகுணநிகத்தினல் பெருந்தோற்றமுள்ளவர், சிவநேயர், அப்பாலூரொன்னும் தலத்தில் வாழ்பவர், பூ

லோகவுருத்திரனென்று யாவராலுந்துதிக்கப்பெற்ற புகழுடையவர்; வீரபத்திரர்க்குச் சமமான வீரமுள்ளவர், இதர மதவாதிகளாகிய யானைகளுக்கு அங்குசம்போன்றவர், சிவச்சின்னங்களைத்தரிக்கப்பெறாத பவிகளை விரும்பாதவர், சிவபெருமானது ஸ்ரீமஹாபஞ்சாக்ஷரமல்லது மற்றொன்றும் புகலவறியாத நாவினர் ஏகாந்தராமையரென்னும் பெயருள்ளவர்.

இவர் நித்தமுந் தாஞ்செய்யுஞ் சிவார்ச்சனைமுடிவில் ஸ்ரீமஹாகைலாசத்திலெழுந்தருளிய சிவபெருமானது திருவோலக்கந்தெரிசித்து, அவ்விடத்து அமர்ந்த சிவகணங்களைத் தொழுது துதித்து, மற்றைய வங்குள்ள பரிவாரங்களையுந்துதித்துப் பின் ஏகாந்தமான ஸ்தலத்திலிருந்து தியானித்து, சிவானுபவசுகமேலிட்டால் தமதுதிருமேனிமுற்றும் புளகாங்கிதராயிருந்து பின் ஸ்ரீகைலையினின்றும் பூவுலகிற்செல்வர். இவ்வாறேவாழுங்காலத்தில் ஸ்ரீவசவதேவர் குருலிங்கஜங்கமங்களிற்புரியும் பத்திமை மிகுதியைப் பெரியர்பலர்புகல நாடோறுங்கேட் டானந்தபரவசராய் ஸ்ரீவசவதேவரையுந் தெரிசித்துத் தளராநண்போடு அவ்விடத்தமர்ந்திருந்தனர்.

அன்றியும் வாச்சையரென்னுமொரு சிவபத்தரும், அன்றியும் சிவாகமையரென்னு மொரு சிவபத்தரும் ஸ்ரீவசவதேவரிடத் ததிகநட்புடையராய் அங்குச்சென்று உய்வோமென்று கருதிவந்து தரிசித்துத் துதித்துக் கலியாணபுரியில் மகிழ்ச்சியோடு உடனிருந்து வாழ்ந்தனர்.

ஏகாந்தராமையர் புராணவசன

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூட்டச்சருக்கம்.

சங்கமப்பிராணியான புராணம்.

நந்தியாரருணற்றவர்பூசை நன்ணிமுற்றியபின்புதாங் கசிந்து, புந்தியாவலாலிட்டலிங்கத்தைப்போ தவின்புறு பூசனைசெய்வா, ருந்திமேலிடும்பரவசமதனுலும்பர்கோ ன்றனையொழிவறநோக்கிச், சிந்தையாருநற்சிவானந்தவ முதஞ்சென்றுசென்றுறத்தெவிட்டிடாதருந்தி. க

பரிவினுலடிக் கடியுபசாரப் பரிசஞ்செய்தனற் படு மெழுகினராய்ப், புரியுநேயமேபொருந்தியுண்ணெக்குப் புளகமெய்யராயையர்தாம்புலம்பி,யரியமேனியின்குண ங்களொன்றின்றி யதிகவானந்தராகமேலரும்பி, யுரிய தோத்திரங்கண்கணீரொழுக வோதியோதியன்புததியு ளூறுங்கால். உ

என்றுமெய்திடாச்சங்கமர்புதியோ ரெய்திநந்திகளிரு ஞ்சிவார்ச்சனையி, ஞென்றுசெய்தியைத் துவாரபாலக ராலுணர்ந்துநீங்கவவ்வுத்தமருடனே, சென்றடைந்தது தண்டநாயகனுர் செய்யவாவியச்செய்தியாலுடல, நின் றகம்பம தென்னவேயோக நித்தரானந்த நிலையராயிருந் தார். ௩

புதியமெய்த்தவத்தம்பிரானிடத்தே புக்கவாருயிர்புறப்படாதாகி, யதிகசங்கமாராதனைப்பத்தி யமுதருந்துவாரத்தவரடிக்காம், விதியினென்றியங் கரங்களாற்செய்யுமேவுசெய்கையுமெல்லெனாழுவித், துதிபுநாவிடைமறந்திருகண்ணீர் தொலையவப்பெருஞ்சோதியுட்டங்கி. ௪

நான்றலூசலின்கயிறதற்றுற்போ லண்ணுமிந்தியங்கரணங்களடங்கிச், சான்றவன்விழிற் கதிர்களுமவன்பின் சாருந்தன்மைபோற் சங்கமரடிக்கீ, மூன்றுசிந்தையினுடனறிவனைத்து மொடுங்கியுட்புறம்பொன்றையுமறியா, தான்றவெட்டித ழிதயவம்புயமே யவர்பதாம்புயமாகவங்கமுந்தி. ௫

மன்டொறுதவற்புதவனுபவத்து மன்னிமேனிமிர்ந்திருந்துபேரின்பங், கொண்டருட்சிவயோகமுத்திரையுட்குலவுநந்திகள்குறிப்பினையறிவாற், கண்டுமெய்ச்சென்னவசவேசர்பணிந்துகழறுவார்சற்றுங்காண்பரிதாய்நீர், மொண்டமிழ்ந்தநற் கடமெனச்சோதி மூழ்கியேபுறமுன்னலாச்சகமோ. ௬

பாசகித்திராசிக்குபேரின்பப் பரமசித்திராநந்தியென்றுசான், விசமத்திராயற்றதோர்கடற்கால்விரவிடாதவிளக்கெனவசங்கா, தாசைமெத்துமிந்தியமெலாமகன்றேயடருமேகங்களற்றவின்போன்று, நேசநற்சிவானந்தமிக்கியத்துசிறைசகத்திலுற்றனைமறந்தனரே. ௭

தன்னலர்க்கரமத்தன்மேனியின்மேற் ருக்கிநொந்திடு மென்றுதன்னிதய, மன்னுமம்புயச் சுகாதனத்திருத்தி வாயுவெய்யில்சேர் மஞ்சனமாட்டி, னுன்னருந்திருமே னிகன்றிடுமென் றுண்மைநீரினைச்சொரிந்துமண்ணுதிக் கு, மின்னமாமலர்கடினமென்றண்டத் திலங்குபங்கயவி தழ்தரிப்பதுவோ. அ

காதுவன்னியிற்றூபதூமத்தாற், கறுக்குமெய்யெனக் கருதிமெய்ஞ்ஞானத், தீதிலங்கியிற்பொறையெனுந்தூ பஞ்சேர்த்தளித்திந்தத்திபங்களெல்லா, மாதிமெய்க்கன லென்றுதன்னறிவா மரியசோதியை யெடுத்திந்தவமுத ங், கோதெனக்கொடுசாரவொண்பத்திக் குணத்தைநல் லமுதாய்க்கொடுப்பதுவோ. கூ

திட்டிகொண்டுதான்விரும்பியேநோக்கின்செய்யமே னிக்குநன்மையன்றென்று, நட்டபாவனைகொண்டுபார் ப்பதுவோ நற்கைதீண்டுபசாரங்களதனுற், றட்டினலு றுத்திடுமெனநினைந்து சத்தெனுங்கையாற் றைவருந்தர மோ, விட்டமெய்புளகித்திடில்வேர்வாமென்றுளேபுள கித்திடுமியல்போ. ய

கிறியையாலுடலிந்தியமனந்தற் கிளர்வனைத்தையுங்கி ரமத்திலொழித்தே, குறுகியத்தனேடொன்றுமெய்ச் சமாதி கூடுநற்சிவ யோகமுத்தினாயோ, வறிவையாதி

யார்க்களித்தறிவிக்கு மறிவெனும்பிரசாதமார்கிலேயோ,
மருவிலாதவவ்வறிவிலுற்றுடல மனமுறுந்தொழின்மற
ந்திருப்பதுவோ. ൰க

என்றுதங்குருநந்திகடிருமுனிறைஞ்சியேசென்னவச
வேசரோத்தி, நின்றுநெஞ்சமுமுடலமுமுருகிநேயமெய்
யராயநீர்விழிததும்பித், துன்றுமேனியிலுரோமங்கள்
சிலிர்த்துத் தோன்றலாப்பெரும் புள்கமேற்றேன்றி,
யொன்றிடும்பரவசத்தராயைய முற்றசித்தராயுலாவுமக்
காலே. ൰உ

வேறு.

இந்தநெறிகலியாணத் திருக்கும்ப ... ரிருமைசெறித
வத்தோர்க ளெல்லாங்கேளா, வந்தபொாந்துவசவேசர்பூ
சைக்காலே வந்தசிவயோகநிலைமகிமைகண்டு, தந்தமில
ற்புதமெய்தி யிந்தத்தன்மை சார்ந்தகாரணமதனைத் தம்
முளாய்வார், முந்தியநட்பினாரறிஞர் துவாரபாலர் முத
லோரையழைக்கவவர் முடுகிவந்தார். ൰௩

வே று.

இங்குவசவேசர்சிவபூசனையிலின்பாற்
பொங்கமகிழ்போதெனபொருந்துசெயனும்பாற்
றங்கியவர்போனவர்சடக்கெனவறிந்தே
யெங்கண்முனமிங்ஙனமியம்பிடுமினென்ன. ൰ச

மற்றவர்கடம்மினுயர்வாயினுமுகொல்ல
ருற்றசெய்தியொன்றுளதுனாக்குதுமதென்ன
நற்றவரொருத்தரொமைநண்ணியெதிர்நின்ருர்
வெற்றிவசவேசருறுவேலையெனவென்ருர். ௰௫

நித்தசிவபூசனைசெய்நிட்டையிலடைந்தே
யொத்தசுகமேவியயர்வுற்றுளுறைகின்ருர்
மெய்த்தவவெனப்பெரியர்மீளவுநடந்தா
ரித்தகைகமையாமறிவதென்றெதிரிசைத்தார். ௰௬

துய்யவுணயங்கணவர்சொன்னளவினல்லோ
ணயவசவேசரவசத்தறைதிறந்தே
பையவவர்சொல்விரதபான்மையறிவோநாஞ்
செய்வதிதுவென்னவெதிர்சென்னவசவேசர். ௰௭

இந்தமுறைமெய்யடியனென்றறிவனென்ன
வந்தனைசெய்தவ்வுரைவகுத்துமொழிகின்ரு
ருந்தியவிலிங்கவுயிரோதுகுருலிங்கம்
பந்தமறுபத்தர்கள்பரிக்குமுயிர்பன்னின். ௰௮

வேறு.

பொங்கருநண்பாலென்னைப்போதிக்குநந்திக்கென்றுஞ்
சங்கமமுயிரிதற்குச்சங்கமேசுரனேசான்று
துங்கநும்பாததீர்த்தந்தூயசேடத்துநேயந்
தங்கியபெரியோர்நிட்டைத்தன்மைநீர்வல்லீரொன்ருர்.

அப்படிதப்பாதிந்தவரும்பிரமாதரிட்டை
யொப்பவும்வாக்கினுலேபுணாக்கவுமுணாத்தாற்போலத்
தப்புதலின்றிஎன்றுய்ச்சரிக்கவும்வல்லநந்திக்
கிப்பட்டிமிதிலொப்பாரில்லையென்றேத்தினுரால். ௨௰

நந்திகள்சிவபூசைக்கணையர்தருங்காலைவந்து
சந்தியாதேகுந்துப்பசங்கமர்தம்மைநேடிப் [த
புந்தியால்வணங்கிக்கொண்டு போதுமென்றுணாக்கத்தா
ரந்திவானனையமெய்பராலயமடங்களெங்கும். ௨௧

ஓடினர்தேடிக்கண்டகுவப்புடன்வணங்கிமன்று
ளாடியாரனையார்தம்மையழைத்துவந்தருந்தவத்தோர்
கூடியகுழுவிற்கொண்டுகுறுகலுமாவியின்றி
வாடியவசவதேவரொழுந்தனர்வணங்கிநின்றுர். ௨௨

மன்றுமாசபையிருந்தமாதவரனைத்துளோரு [முர்
மன்னவெம்பெரியோர் செய்யுமருந்தவமென்னேவென்
பின்னரொந்தண்டாதர்பெருமையேபிறங்கவேத்தி
மின்னணிமாடநீடுதம்மடமேவிச்சென்றுர். ௨௩

சங்கமப்பிராணியான புராணம்
முற்றுப்பெற்றது.

-ஆக திருவிருத்தம் - ௧௧௮௫.

திருச்சிற்றம்பலம்.

—*—

சங்கமப்பிராணியான புராண வசனம்.

ஸ்ரீவசவதேவர் ஒருநாள் ஜங்கமபூஜையை முதலிற்செய்து முடித்துக்கொண்டு, பின் இஷ்டலிங்கபூஜை செய்வான்றொடங்கிப் பூதசுத்தி யந்தர்யாகங்களைத்தொடங்கி முடித்துப் பின் பகிர்யாகமென்னும் புறத்திற் பூஜையையும்முடித்துப் பூஜாவஸானகாலத்தில் நிஷ்களசகளரூபங்களைத் தியானித்துத் துதித்து வணங்கி யானந்தபரவசரா யவ்வானந்தமே மேலரும்பிய தென்னத் திருமேனிபுளகித்து உள்ளநெக்குருகி ஆனந்தபாஷ்பமென்னுங் கண்ணீர் தாரைதாரையாக வெள்ளங்கொண்டோடப் பத்திக்கடலில்மூழ்கி யிருந்தனர்.

இவ்விதமான சிவபூஜைவேளையில், என்றைக்கு மங்குவரப் பெறாத புதியர் ஜங்கமமூர்த்திகளொருவர்வந்து ஸ்ரீவசவதேவர் சிவார்ச்சனைநிஷ்டையி லிருக்குஞ் செய்தியைத் துவாரபாலகரென்னும் வாயில்காப்போராலுணர்ந்து அவ்விடத்தினின்றுஞ் சென்றனர். சிவார்ச்சனைநிஷ்டையிலிருந்த ஸ்ரீவசவதேவரது பிராணவாயுவும் அவ்வுத்தமரான ஜங்கமமூர்த்திகளுடன் சென்றடைந்தது. அதனால் அவரது அருமைத்திருமேனியுந் தூணம் போலசைவற்றுநின்றது.

அந்தப் புதியராய ஜங்கமமூர்த்திகளிடத்துப் புக்க இவரது உயிரானது வெளிப்படாததினால், ஜங்கமாராதனையில் தமது திருக்கரங்களாற்செய்யும் நன்றுற்றலோடு இன்சொல் இன்முகமும், நாவினிடத்துத் துதியும், கண்களி லானந்தவெள்ளமும் ஒன்றுமின்றிக் கயிறற்றவூசல்போல இந்திரியங்கள் கரணங்க

ளெல்லாமடங்கிச் சான்றவனாகிய சூரியன்செல்லக் கிரணங்க ளுமவன்பின்செல்வதுபோல வப்புதியஜங்கமரது திருவடியி லூ ன்றியசிந்தையுடன் அறிவனைத்துமொடுங்கி உள்ளும்புறம்பும் ஒன்றுமறியாது அஷ்டதளபத்மமாகிய இருதயபத்மமேயவரது பாதபத்மங்களாகவமூர்த்தி, அளவற்ற அற்புதானுபவத்தில் நிலை பெற்று மேலோங்கியிருந்து பேரின்பத்தையடைந்து திருவரு ளால் வலிதினெய்திய சிவயோகமுத்திரையில் ஸ்ரீவசவதேவர் பொருந்துங்குறிப்பை,

ஸ்ரீசென்னவசவேசர் தமது பேரறிவா லுணர்ந்து பணி ந்து, எம்முடைய பரமாசாரியனாகிய ஸ்ரீவசவதேவர் அசை வற்று இவ்வாறு நெடும்பொழுது தியானித்திருக்குங் காரணம் யாதோ? ஜோதிர்மயமான சிவத்திற்கலந்து புறநோக்காத பேரி ன்பமோவென்று பலவாறாகத் துதித்து வணங்கி நெஞ்சோடு உ டலுமுருகிக் கண்களில் நீர்ததும்பி உரோமங்கள் சிலிர்க்கப்பெ ற்றுப் பரவசராய் ஐயமுற்றசிந்தையுட னிருக்குமிடத்து,

இந்தவதிசயத்தை அந்தக் கல்லியாணநகரத்தி லெழுந்தரு ளிய பத்தர் சரணர்முதல் யாரும் கேள்வியுற்று விரைந்துவந்து ஸ்ரீவசவதேவர் பூஜையில்நேரிட்ட சிவயோகமகிமைநிலைமையை க்கண்டு தந்தம்மில் அற்புதமடைந்து இதன்காரணமறியவேண் டினராய், அவரில் ஸ்ரீவசவதேவர்க்கு ப்ரதானாட்பினராய அறி ஞர் துவாரபாலராய வாயில்காப்பாளர் முதலியோரை யழைப்பி த்து இங்கு ஸ்ரீவசவதேவர் சிவபூஜைசிஷ்டையி லெழுந்தருளிய காலத்து நடந்தகருமங்கள் யாவை, இந்தஸ்தலத்தில் உம்மிடத் து யாரேனும்வந்து தங்கி வார்த்தையாடிச் சென்றவருண்டோ அதை விரைந் தெம்மிடத் தறிவிப்பீரென்று புகல, அவ்வாயில் காவலரிற் சிறந்தவரொருவர் அங்குக்குழுமிய பத்தர் சரணரை

நோக்கி, சுவாமி ஒருசெய்தியுண்டு என்னெனின், இவ்வுலகத்து என்றுங்கண்டறியாத வற்புதத் திருமேனியுடையராய சரமூர்த்திகளொருவர் எம்மிடத்துவந்துநின்று ஸ்ரீவசவதேவர் யாதுபுரிகின்றனரொன்றுவினவினர். அதற்கு அடியேங்கள் ஸ்ரீவசவதேவர் சிவபூஜைநிஷ்டையி லெழுந்தருளிப் பரவசத்தினராயிருக்கின்றனரொன் றுத்தரம்புகன்றேம்; அம்மூர்த்திகள் யாதும்புகலாதுசென்றனர். இது யாமறிந்ததென்றுபுகல, இதைக்கேட்டவர் யாரும் ஊகித்து இனிச் சிறிதுந்தாழாது அவர் நிஷ்டைபுரியும் பூஜாக்கிரகத்தைத்திறந்து அந்நிஷ்டையின்றன்மை யிற்றெனவறிவேம், இதுவேசெய்யத்தக்கது என்று ஆலோசித்து, எதிர்நிற்குஞ் சென்னவசவேசுவரரோ ஸ்ரீவசவதேவர்க்கு மெய்யடியர் அவரோ யறியவேண்டுமென்றுசொல்ல, இதுகேட்ட சென்னவசவேசுவரர் அடியர்குழுவைநோக்கி உலகத்தில் குருலிங்கஜங்கமங்கள் பத்தர்கட்குயிரோயாம்; எமதுகுருவாய ஸ்ரீவசவதேவர்க்கு ஜங்கமமேயுயிர், இதற்கு ஜங்கமேசுவரரோ சாக்ஷியாகும், பெரியோரதுதன்மையை நீவிர் இயற்கையானேயறிவீர். இப்பிரமாத நிஷ்டை அவ்வண்ணம் புகல்வதற்குங் கூடாது. ஆதலால் இங்குவந்து மீளச்சென்ற சரமூர்த்திகளைக்கண்டு அவரைப்பின்சென்று யாமுணர்வதே முறைமையென்றார். உடனே யறிஞர் பலருந் தூதரையேவிச் சரமூர்த்திகளைத் தேடச்சொல்ல, அத்தூதுவரும் தேவாலய மடாலயங்கள் எங்குமாராய்ந்துதேடி நடேசரோயென்றநுமானித்து அப்பெரியரைக்கண்டுபணிந்து நடந்தனவனைத்தும் விண்ணப்பம் புரிந்து மகிழச்செய் தழைத்துவந்து அடியர் திருக்கூட்டத்திற் சேர்ப்பித்தனர். சேர்ந்ததுவாயிலாகவே ஸ்ரீவசவதேவரும் உயிர்பெற் றெழுந்து வணங்கி நின்றார்.

அங்குச்சென்ற பெரியர்யாரும் இப்புதிய சாமுர்த்திகளது திவ்வியசத்திச் சதிசவியப்புற்று இப்பெரியாரதுதவம் எத்தன்மைத்தெனவியந்து ஸ்ரீவசவதேவரது பெருமையையுந்துதித்துப் பின்னர் தமதுதமது திருமடங்களிற்சேர்ந்து வாழ்ந்திருந்தனர்.

சங்கமப்பிராணியான புராணவசன
முற்றிற்று.

உ
திருச்சிற்றம்பலம்.

கின்னரையர்புராணம்.

இன்னநாளில்வசவதேவரிட்டமானநண்பராங்
கின்னரையருடலகன்றுகிரிமினத்தரடியுற
வன்னநண்பர்பெருமைநாடிவச்சவராசரன்பினுன்
முன்னருந்துயர்க்கடற்குண்மூழ்கிநைந்துமொழிகுவார்

என்னையாளெனக்குநல்லவின்பமேயெனுவியே
யென்னையாளுமெம்பிரானெனைத்தெருட்டுதேசிகா
வென்னையாவிசோரவிங்கிருத்தியெங்கணைந்தனை
யென்னையாளினிச்செய்கேனெனக்கிசைந்தசெல்வமே.

பரிசவேதியேதருப்பணைத்தெழுந்தசோலையே
யுரியகாமதேனுவேயுயர்ந்தசங்கநிதியமே
மருவினோர்நினைத்தநல்குமணியொடானவனசமே
பொருவின்மேருவேயருட்பிறந்தநல்லபூமியே. ௧

விரும்புநல்லசுற்றமேயென்மெய்க்குலத்தர்தெய்வமே
திருந்துபத்திமூவிதஞ்செறிந்தநன்னிதானமே
பெருந்தவத்தர்தீரனேபிணங்கியென்னைவிட்டுனைப்
பரிந்தழைக்கநீயகன்றபான்மையென்னபான்மையே. ௪

நம்பனன்பகின்னரப்பிரமையாநலங்கியா
னிம்பரொன்புணைந்திருக்கவென்னைவிட்டகன்றுநீ
யும்பர்கோனையுற்றதென்னவுத்தமாவெனக்குறுந்
தம்பமேயுனைப்பிரிந்ததமியனேனைநினைவையோ. ௫

பிரமஞானவமுதமேபலிப்பெனக்குநீயலோ
திரமதாகவென்மனந்திருந்துசோதிநீயலோ
வரமலோவெனக்கணீர்மருதுமாரிபோல்விழுந்
துரமிழந்துவசவதேவருடன்மறந்தவுணர்வராய். ௬

ஐயர்கின்னரப்பிரமரறிவையுமகந்தைதீர்
துயயசொல்லையுமனந்துலங்குதூய்மைதன்னையு [ய்ச்
மெய்யையும்விரும்பியங்கி மேவுவெண்ணெயென்னலா
செய்யமேனியுருகியேதியங்கியுண்மயங்கலும். ௭

வசவதேவர்துயரமெய்திமனநடுங்குமெல்லியி
னிசைநிறைந்தசங்கமேசரொங்கணுநிறைந்துளோ
ரசைவிலாதசிவமதமணைந்தருந்திறற்செயும்
விசையரானமாச்சிதேவர்விளாயவந்திலாரதேன். ௮

வேறு.

படியாரிப்பாச்சையனாப்பார்த்தழைத்துப்பரிவினுன்
மடிவாலமாச்சையனாவணங்கியிந்தவாறெல்லாங்
கடிதோடிபுரைத்தவனாக்கடிதுகொண்டுவருதியென்று
ரடிவேகத்தேகியவரடிக்கமலந்தாழ்ந்தரோ. ௬

இந்தவுரையியம்பவறிந்தெழிற்றவத்தர்மாச்சையர்
வந்தவரார்வ்விடத்தில்வசவேசர்செய்வதுவென்
சந்தமுறவுரைத்தியெனச்சகளேசமாதரசர்
முந்தையர்தாமகத்தர்பெருஞ்சமுகத்தினந்தியார். ௰

பிரமையர்தந்திருவுருவைப்பிரியாமலணைத்துக்கொண்
டிரமதொன்றுமின்றிபவிழ்ந் தருகுகின்றுறென்றலுமே
வரமிகுத்தமகத்தோர்முன்வாடியழும்வருத்தமெ
ளரதவத்தோர்தமக்காவியானதெல்லாமிவ்வளவோ.௰க

சங்கமர்தமுயிரொன்றுஞ்சாற்றெலாமிவ்வளவோ
சங்கமர்தங்கதியென்றுஞ்சற்குணமுமிவ்வளவோ
சங்கமர்நமதியென்றுந்தருக்கெல்லாமிவ்வளவோ
சங்கமர்தங்காத்திலிங்கந்தானென்றுஞ்சொலிவ்வளவோ.

பிடித்தகிட்டைமறந்துடலைப்பேணியின்றுபற்றினரோ
வடித்தபத்திமயராகி வளம்பெறுஞ்சொல்வகுத்திருந்து
படித்தவுரையறியாமற்பரிந்துயிரைப்பரிந்தனரோ
துடித்தபத்திதலையேறிச்சொல்லிமற்றுஞ்சோர்வரோ.

அதிகதவர்க்கதிகதவருணெறிசேர்பிரமையர்
மதிநலத்தாலானவனாவரவழைக்கவழக்கன்றே
நதிமுடியானிடத்தணைந்தநன்மையெனநயந்துகந்து
புதியபெருமகிழ்ச்சியுடன்புளகிக்கும்படியலால். ௱௪

அழுவதுவென்விழுவதுவெ னந்தோவென்றரற்றுவதெ
னொழுகுகண்ணீர்மாருமலூற்றுகச்சுரப்பதுவென்
பழுதிலத்தனன்பர்முனம்பத்தர்செயும்பான்மையோ
நழுவுநெறியுலகத்தோர்நண்ணுதொழினமக்கதென. ௱௫

ஆயிடைவந்தவர்துயர்மாற்றறியேமருங்கண்ணீர்
நேயமுடன்றுடைக்கறியேநெடிதுயிர்க்கும்படியறியேம்
வாயதனாற்பகர்ந்தநிட்டைமறந்தோனைப்பாரேநீ
போயவர்கள்செயுஞ்செயலைப்புகுந்தியற்றப்புகலென்று

பணித்தளவிற்படியாரிப் பாச்சையர்வினாந்துவந்தங், கணித்தொகையாமருந்தவத்தோர்க் கஞ்சலிசெய்தஞ்சியே, துணித்தவர்சொல்வைராகஞ் சொன்னளவிற்றமதுநிட்டை, கணித்துவசவேசருயிர்பிரமையர்பாற்கலந்ததால். ௱௭

கலந்தளவில்வசவேசர்காயத்தைக்கண்டுநல்லோர், புலந்தழுகராயிதென்ன புதுமையெனப்புலம்பியே, வலங்கொணிட்டைமடிவால மாச்சையர்சொற்செவியுறலும், விலங்கலின்றித்தமதுயிரை விட்டதனை வியந்தயர்வார்.

மாச்சைசயரோவன்மகிட்டைவகுத்துணைக்கவல்லரந்தப்
பேச்சரியசத்திகளிப்பெருமைமிவனேயறிவன்
வாய்ச்சொல்லேயன்றிமிக்கமாபத்திவல்லவரா [ர்.
ரேச்சுடலம்விரும்புமைக் கிதுவெளிதன்றெனவுரைத்தா

பார்ப்பதற்குமுரைப்பதற்கும்பாவிக்கும்படியதற்கு
மார்க்குமிதுசெயவரிதாலரகராவெனத்தொழுதார்
நேர்த்துநின்றபடியாரிப்பாச்சைசயனாகின்றநல்லோர்
சீர்த்திமடிவாலேயற்குச் செப்புகெனச்சென்றுரைத்தார்.

வேறு.

கேட்டபொழுதே மாச்சைசயர் கிளர்ந்தவின்பமனத்த
ராய்க், கோட்டமறுநற்சங்கமமே குலவுமுயிரொன்றுரை
த்தவுணா, நாட்டவல்லலதிராகமுவாவிரதநந்தியே, யா
ட்டமொழிந்தமணிவிளக்கே யரனூர்க்கினிதாமன்பனே.

என்றுபுகழ்ந்துமாச்சைசய ரெழுந்துவாதரொனுமரங்க
ள், பொன்றமுறிக்குங்கடகளிறே பொருந்தாரொன்னுங்
கரிகுழுவைச்,சென்றுமுறிக்குஞ்சிங்கமே:சிவத்துரோ
கச் சிலோச்சயங்கள், குன்றவடிக்கும் பெருங்காற்றே
கொடியவினையின்கூற்றமே. ௨௨

தக்கன்வேழ்விதகர்த்தவனே சமயபுதைக்குந்தாளி
னனே,பொக்கநெறியாம்பெருங்காட்டைப்பொடியாயெ
ரிக்கும்பொங்கழலே, நொக்கபுரத்தைபெரித்தபரமா ரு

லாயுதமோசுடர்மழுவோ, மிக்கவீரவிருதகலா விமலன் கணத்துளொருவனே. ௨௩

என்னநடந்துசிவகணத்தோ ரிருக்குமவையிலிறைஞ் சியெழுந், தன்னர்பாதம்பிடித்தவர்த மத்தம்பாலமணை த்ததற்பி, னுன்னுமவர்தாளுள்ளங்கொண் டுத்தரங்கொ ண்டுறுதிகொண்டு, கின்னரையருக்கிணைந்து மாச்சிதே வர்கிளத்துவார். ௨௪

பத்தருயிரோமெய்ப்பொருளே பத்திமணியாநந்தியெ னு, முத்தமனைரீயுடன்கொண்டங் கும்பர்கோனையுறலா மோ,வித்தனாயின்மேலரன்பெருமையெங்குநிறைத்துக் காட்டாதே,சித்தமிருவீர்களும்பொருந்திச்செல்லும்படி தான்செல்லுமோ. ௨௫

சிவமாகணத்தோரறியாமற்சிவனுந்தமைக்கொண்டே குமதெ, னவமாமூன்றுவிதபத்தி நயந்துவளர்க்குநந்திக ணைத், தவமாகேசரிடத்தகற்றித் தன்பாற்கொண்டுசார்த ளன்றே, புவிமேற்றனது பெருமையார் புதுக்கின்று பொலிவிப்பார். ௨௬

நந்தியகன்முன்மண்மீதி னம்பனன்பின்பேரகலு, மிந் தமுறையானும்மனத்தி னிச்சைப்படியே செலவொண் ணு, புந்திமகிழ்ந்துநந்திதனா பொருந்துங்காலமெல்லா

நீர், சிந்தைமகிழ்ந்தங்குடவிருப்பி மொழுவிமொன்னத்தெ ளிந்துரைத்தார். ௨௭

தனுமெல்லெனவேயசைந்தசைந்துதவக்கின்னரையர் சயனக்கண், கனவுதெளிந்தங்கெழுவார்போற்கடிதினெ ழுவக்கணத்திவிலே, மனமாதிடத்தர்மாச்சையர்மலர்த் தாள்மிதில்வசவேச, னகாவெனமுனெழுந்திறைஞ்சி யருகிற்றவத்தோரடிபணிந்தார். ௨௮

எழுந்தவிருவோர்களுமகத்தோர்க்கிறைஞ்சிநின்றுரி ருந்தவத்தோ, ரொழுங்குதீராமாச்சையனா யுவந்துபுவ வியுருத்திரா, வழுந்துவீரதவத்திரா வருளாகரனேயற முதல்வா, வெழுந்தகூரசிங்கார மெழிலாபரணமெனவு டையாய். ௨௯

உறுதியுணாக்கிற்கோபியா யுவந்தவிடத்தி லுயிரளிக் கு, மறுநிமானே யசஞ்சலனே யரியசீலமாதரிப்போய், பெறுதிசிவமே யெனத்தெளிந்திவ் வுலகந்திபேறுதா, யிறுதிவரினுஞ்செய்பாத தென்றுஞ்செய்யாவெண்ணத் தாய். ௩௦

மாறுலத்த வெலத்கரிய மடிவாலைய வெனப்பெரி யோர், கூறுநின்றாவர்தம்மைக்கும்பிட்டேத்திக்கொடி யேனைத், தேறுவென்னையொருபொருளாய்ச்செய்யும்ப

டியெனடியனே,னேருவிண்ணப்பந்தருவீரென்றுகின்ற
ங்கிறைஞசினர். ௩௧

இறைஞ்சியதற்பின்வசவேசமொழிலார்முகத்தையெதி
ர்னோக்கி, கிறைஞ்சதவத்தோர்புகல்கின்றுர்கிதியங்கொ
டுக்கலாமுடலஞ், செறிஞ்சுகொடுக்கமுடியாதுசெயலா
ற்கொடுக்கலாமனத்தைப்,பிறிஞ்சுகொடுக்கமுடியாதுபி
ரியமதனுற்பிடித்திடலாம். ௩௨

மருவுமுயினையளிக்கொணுவைராக்கியத்தாற்கொடுக்
கலா,மருமையுயிர்சங்கமத்துடனேயகன்றுலகறலணைவு
ற்றுல், வருதலிந்தரங்திகட்கே வருமென்றேத்த வசவே
சர், பருவினிறைஞ்சி யிம்மொழிக்குப் பற்றேனடியே
னென்றிருந்தார். ௩௩

இருந்தபெரியோரிருவரையுமேத்தித்தத்தமிடத்தணை
ந்தார், திருந்துதவத்தர்மாச்சையர்வசவேசுரரிற்செலவி
டுத்தே, பொருந்துபுகழ்த்தம்மடம்புகுந்தார் கின்னரை
யர்தம்புனிதவகம், பெருந்தன்மையராய் மகிழ்ந்துற்றுர்
மடிவாலையர்சீர்பேசியே. ௩௪

கின்னரையர் புராணம்

முற்றுப்பெற்றது.

ஆக திருவிருத்தம் - ௧௨௧௯.

உ

திருச்சிற்றம்பலம்.

—*—

கின்னையர் புராண

வசனம்.

இதற்குப்பின், ஸ்ரீவசவதேவர்க்கு உற்ற நண்பரான கின்னையனென்பவர் தேகவியோகமடைந்து சிவனது திருவடிகளை யடைந்தனர். இதுகண்ட ஸ்ரீவசவதேவர் அந்நண்பரது மிதமற்ற பெருமைகளை எண்ணியெண்ணித் துயரக்கடலினமிழ்ந்தி மனநெக்குருகி எம்மையனே, எம்மின்பவடிவமே, எமதாவியே, எம்மையாளும்பிரானே, எம்மைத்தெளிவித்த தேசிகனே, ஆவி சோர்ந்துருக விங்கெம்மையொழித் தெவ்விடத்துற்றாய், எமது செல்வமே யாமினியென்செய்வோம் என் றின்னும்பலமுறை பிரலாபித்து, இடையின்றிக் கண்ணீர்தாரைகொண்டுபெருக வலிமையாவுங்குன்றி யுடலையுமறந்து கின்னையரது அறிவினையும் பணிந்தசொற்களையுந் தூய்மையையுஞ் சத்தியத்தையும்விரும்பி அழலிற்பட்டவெண்ணெய்போலாய்த் திருமேனியுருகிவருந்தித் திருவுள்ளமருண்டவளவில், அவ்விடத்தெங்கணும்நிறைந்த ஜங்கமமூர்த்திக ளெல்லாருங்கூடி எவருமிரங்கத்தக்க இக்காலத்து எல்லோரும்வந்தனர். சைவமதஸ்தாபனத்தில் வெற்றியடைந்த மாச்சிதேவர்மாத்திரம் வாராதிருப்பது யாதுகாரணம், அவர் வந்தல்லது இதற்கொருமுடிவுந் தோன்றாதென்று நிச்சயித்துப் படியாரிப்பாச்சையனென்பவனை யழைப்பித்து நீர் மடிவாலமாச்சையர்க்கு வணக்கத்துடன் இங்குநடந்தனவெல்லாமுணர்த்தவரைக் கடிதில் வருவிக்கவேண்டுமென்றனர்.

இதுகேட்ட படியாரிப்பாச்சையரும் மிகவிரைந்துசென்று அவரது திருவடித்தாமரைகளில் வணங்கி நடந்தவண்ணமுரை

ப்ப, மாச்சைய ரவனைநோக்கி அவ்விடத்துவந்தவர்கள் யாவர், வசவதேவர் என்செய்தனர் தெளியச்சொல்வாயென்று வினவவே, சுவாமி மற்றையவெல்லாம் ஆதியந்தமாகவறியேன், சகளேசமாதிராஜர்முதலிய பெரியோரது திருக்கூட்டத்தில் ஸ்ரீவசவதேவர் கின்னரையரது திருவுருவத்தை யிறுகத்தழுவிக்கொண்டு வலியுஞ்செயலுமழிந் தறிவுகலங்கித் துக்கிக்கின்றார். இதுகண்ட ஜங்கமமூர்த்திகள்யாவரு மென்னைத் தேவரீர்க்குத்தெரிவிக்கக் கடிதிற் றூண்டினமையில் விரைந்திங்குவந்தேன் காரணமொன்றுமறியேனென் றுபுகல, அங்கு மாச்சையர் பாச்சையரைநோக்கி வசவதேவர் வருந்துங்காரணம் யாது, சிவயோகிகளுக்கு உயிரொன்றுசொல்லப்படுவ திவ்வளவிற்றே, ஜங்கமர் தாம்பிடித்தநிஷ்டையைக் கைநெகிழவிட்டு உடலத்தைவிரும்பி வருந்துவரோ, மிகு தவமுடையாரிற் சிறந்த கின்னரையர் சிவபெருமானது திருவடிநீழலை யடைந்ததுகொண்டு புதிதான பெருமகிழ்ச்சியோடு புளகிக்கவேண்டுவதையல்லது அவரைத் திருவடியைவிட்டு மீட்க விரும்புவாருண்டோ, இவ்வாறன்றி அழுவதும் மேல்விழுவதும் ஐயோவென்று ஓலமிடுவதும் முறையோ, இது சிவபத்தர்கட்கடுக்குஞ் செயலோ, இவையெல்லாம் பாசபந்தமுள்ளவர்க்கே யுரியதன்றி நம்மவர்க்கழகல்லவே, அவ்விடத்துற்று அவர்துயரத்தை யாற்றவுமறியேம் அவர் கண்ணீரைத் துடைக்கவுமறியேம், நிஷ்டையைமறந்து புலம்புகின்றாரைக் காதாற்கேட்டதே மிகை, இனிக் கண்களினாலும்பார்க்க வல்லோமல்லோம். ஆதலால் அவர் செய்யுஞ்செயலையே செய்யச்சொல்வீரென்றனர்.

இதைக்கேட்ட படியாரிப்பாச்சையரும் விரைந்தோடிவந்து திருக்கூட்டத்தில் ஜங்கமமூர்த்திகளை வணக்கத்துட னஞ்ச

வித்து மனத்தின்கண் மிகவச்சத்துடன் மாச்சையர் கண்டித்து ப்புகன்ற வைராக்கியமொழிகளை யெடுத்துக்கூறியவளவில், இதுகேட்ட ஸ்ரீவசவதேவரது பிராணவாயுவும் நிஷ்டைவழியாய்ச் சின்னணாயரிடத்துக் கலந்துநின்றது. இதுகண்ட வடியாரியாரும் ஸ்ரீவசவதேவரது திருமேனியைக்கண் டிரங்கியமனமும் புலந்த முகமுமுடையராய் இஃதென்ன புதுமையென்றுபுலம்பி,இச்செய்தி மடிவாலமாச்சையர் செவிகளிற்பொருந்தின்இந்தவுயிர்ச்சோடையை மிக நினைந்துவருந்துவர், இப்படிக்கொத்த நிஷ்டைகளின்பெருமையை மாச்சையரோ வகுத்துச்சொல்லுதற்கு வல்லவர், வசவதேவரது பெருமையைச் சிவனே யறிதல் வேண்டும். உலகத்திற் சகலபத்திமார்க்கங்களையும் வாக்கினாற்புகல்வதன்றி அனுபவத்தி லிவ்வல்லமை யெவர்க்குண்டாம். அநித்தியசரீரத்தைப் பொருளாகவிரும்பும் நம்மவர்க்கு இஃது சிறிதுமெளிதன்று. இதனைப் பார்த்தற்கும், உணப்பதற்கும், நினைப்பதற்கும் யார்க்குஞ் செயற்கரிது. ஹரஹரவென்று தொழுதுபின் எதிர்நிற்கும் படியாரிப்பாச்சையனைநோக்கி இதனை மடிவாலமாச்சையர்க்குச் சொல்லுமென்றுரைக்க, அவருமவ்வாறேயறிவிக்க, இதுகேட்டபொழுதே மாச்சையர் மிகவின்பநிறைந்த மனமுடையவராய் ஜங்கமமே யுயிரென்னுமுணாவை நிலைநாட்டவல்ல நிரரே, தாழாவிரதமுடைய நந்திதேவரே, அசைவில்லாத ரத்தினதீபமே, அரனுக்கினிதான வன்பனே என்று பலவாறுபுகழ்ந்து, அதிவேகத்துடன் சென்று சிவசரணரது திருக்கூட்டத்தையடைந்து அவர்களைவணங்கிக்கொண்டு, பின்பு சின்னணாயர்க்கருகேசென்று அவனைநோக்கி பத்தர்க்குயிர்போன்ற சின்னணாயரே, தேவரீர் சிவசாயுச்சியத்தையடைந்தாலும் ஸ்ரீவசவதேவராவது இப்பூமியின்கணிருந்தன்றோ சிவபெருமானது மகி

மை விளங்கவேண்டும். நீவிரிருவீருஞ் சித்தமொருமித் துடன் சென்றால் அஃதடுக்குமோ, நீவிரொத்துச்சென்றாலும் நம்மை அச்சிவபெருமானு மொத்துக்கொணர்ந்துசெல்வது நீதியன்று. நிலைபெறச் செய்யாதவிடத்து அவரது அபாரமகிமையை உலகத்தில் உத்தாரணஞ்செய்பவர் நந்திதேவர்க்கு வேறாரிருக்கின்றார். நந்திதேவ ரிவ்வுலகத்தைக் கடந்துசென்றால், சிவபத்தியென்னும் பேர்மாத்திரமு முலகத்தைக்கடந்துசெல்லும். இந்தமுறைமைபற்றி நீவிரிச்சைப்படி செல்வது நீதியன்று. நந்திதேவர் இவ்வுலகத்தில் எவ்வளவுகாலமிருந்தாலும் அதுகாறும் நீருமுடனிருத்தலே நன்று. ஆதலா லிருவீரு மெழுந்திருப்பீரொன்று சொல்லிச் சிவத்தியானம்புரிந்தனர்.

இதுநிகழ்ந்த வவ்வளவில், கின்னரையர் கைகால்முதலிய வவயவமெல்லா மெல்லமெல்லவசைந்து கனவுதெளிந் தெழுபவர்போலச் சயனத்தினின்று மெழுந்தனர். அக்கணத்திற்றானே ஸ்ரீவசவதேவருமெழுந்து மாச்சையரது திருவடிகளிற்பணிந்து அருகிலிருந்த திருக்கூட்டத்தாரையும் வணங்கினர். பின்னரிருவரும் மாச்சையரைப் பலவாறுதுதித்து வணங்கிப் புகழ்ந்து நின்றனர்.

பின்னர் அங்கிருந்தவடியார் ஸ்ரீவசவதேவர்முகத்தைப்பார்த்து இவ்விதமாக வுடலோடு உயிரையுமளிக்கத்தக்க பத்திமார்க்கம் தேவரீர்க்கே சிறந்ததன்றிச் சாமானியர்கட்கு இச்செயல் முடிவுபெறாது என்று துதித்தனர். ஸ்ரீவசவதேவரும் அவரை வணங்கி யெளியே னிம்மொழிக்குப் பாத்திரனல்லனென்று வணங்கிநின்றனர். அடியாரொவரு மிவ்விருவரையும் வணங்கித் துதித்துத் தமதுதமது வாசஸ்தலங்கட்குச் சென்றனர். மாச்சை

யரும் ஸ்ரீவசவதேவரா லனுப்பப்பெற்றுக்கொண்டு தமதும்டத்திற்சென்றனர். இன்னாயரும் மடிவாலமாச்சையர் பெருமையைத்தறிந்துத் தம்மிடஞ்சென்றனர்.

இன்னாயர் புராணவசன
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

மே தா கே தை ய ர் பு ரா ண ம்.

பெருமூவிதபத்தியெனுந்திருவைப் பேணுந்திருநந்திகள்பெருயிர்தான், கருணாகரசங்கமமென்பதைமுக் காலுமூலகத் தவர்காண்டகவே, வரமேதாகே தையராவிளையமாமதிவேளியர்வவ்வவகன்றிடலுங், தருமேவிழ்விச்சலான்னகர்வாழ் சற்பத்தருடன்வசவேசரும். ௧

உவமிக்கவொணுதுயர்சங்கமமு மோலக்கமிகுத்தொலியின்னியமோ, டவறுற்றபி னம்மடிவாலையர்வந் தாரில்லயழைத்திடு சென்றனவின், பவமற்றுளமாச்சையர் தம்மிடைபோய்ப் படியாரிகள்பாச்சர்பணிந்துகரங், குவிவுற்றையமேதாகேதையர்நங் கோமானடிகூடினரொன்றனவின். ௨

வே று.

அவ்வழியார்பெரியோர்கள் வந்தாரொன்ன வல்லையர்மதுனவயரல்லமையர், செவ்வியராஞ்சகதேவத்தண்ட

நாதர் சகளேசமாதரசர் தெசரிதேவ, ரெவ்வமிலா விப்
பையர்கின்னாய ரியற்றெலுங்கச்சோமையர்கேசிராச
ர், கைவருநற்பாச்சரசர்தாசிமையர் காசிநாதையருடன்
கல்லிதேவர். ௩

வரமுசுண்டிச்சவுண்டையர் சங்கரையர் மாயிதேவை
யர்கண தாசிமையர், சுரிகைசவுண்டையர்மொறட வே
மிதேவர் துய்யகன்னப்பிரமையர் கலேக்கேத்தையர், கா
வில்சிவநாகமைய ருடன்கொக்கையர் கருணையராங்கக்
கையரோகாந்தராமர், திராடப்பத்தண்ணரொடு செய்ய
ஞானத் திராளனையசென்னவசவேசர்முன்னும். ௪

பத்தர்சங்கமேசருடன் வசவதேவர் பரிந்துவந்து மே
தாகேதையர்முன்ன, மொத்தசமூகத்தரா யின்னியங்க
ளொழியாதுமுழங்கவிருக்கின்றாரொன்னச், சுத்தமடிவா
லேயர்நகைத்துநந்தி தொல்லேயுளதன்விரதந் துறந்துமற்
று, மித்தனாயிருப்பதெனவவரோடாவியேகாமனுண
ன்கொலென்னேயென்னே. ௫

அங்கனுறுந்தவத்தோரொன்சொல்வரிவ்வாறவன்றன
க்குச்சங்கமமே யாவியென்னுந், துங்கவுாயினேமறந்த
விரதகினன் றெல்லேயுடல்பார்க்கவொண்ணு தொடவு
மொண்ணுச், சங்கரன்மேதாகேதர்தமைபழைக்கத் தா
ன்சென்று லவருடனே தானுஞ்செல்லாப், பங்கனுறும

வையினையும் பார்க்கக்குற்றம் பாவியேனிம்மாற்றம்பகர் வதென்னே. ௬

அளவிறந்தபத்தரருந்தவத்தோரொல்லா மவணிருக்க யாம்வந்தங்காவதென்ன, கிளர்கருமநமக்குண்டு நீசெல் லென்னக் கிளத்தளவிற்படியாரிப் பாச்சர்கேளா, வுளந டுங்கியுடல்கம்பித் தோடிவந்தங் குற்றமகத்தோர்கடம் மையுறவணங்கி, வளர்பயத்தாவின்றளவிற் சங்கமேசர் மாச்சியரோன்வந்ததில்லை வரச்சொல்லென்ன. ௭

அஞ்சுவனளந்திகண்முன் னுரைக்கவொல்லே னப்ப டியேன்பயமின்றி யறைவாயென்ன, நெஞ்சமுகந் தவர் பகர்ந்த நேர்மையெல்லா நிகழ்த்தளவில்வசவேசர் நினை வுதோன்றிச், செஞ்சொன்மடிவாலையனைத் தோத்திரஞ் செய் திறத்தராய்ச்சிவன்கயிலை சேர்ந்தவாறே, துஞ்சி னர்நந்திகளென்றுதவத்தோர்பத்தர் தூயவந்தநகருளோ ர் துயரராகி. ௮

மேதாகேதையருடன்வசவதேவர் மிக்கவுயிரினைப்பர மன் விளித்துக்கொண்டான், பூதலத்திலினியென்னசிவ நற்பத்தி போய்த்தந்தோவரகரா வெனப்புலம்பி, மாதவ த்தோர்படியாரி தன்னைநோக்கி மாச்சையற்கிவ்வாறுரை த்து வருவாயென்ன, வாதரத்தாலோடியவர்க் கங்கைகூ ப்பி யையர்தண்டநாதர்செய்தி யறைந்தவாறே. ௯

கேட்டளவின்மடிவால மாச்சர்சித்தங் கிளர்மகிழ்ச்சி யுடனங்கம் புளகமெய்திக், தாட்டருதாமனாயென்னமு கமலர்ந்து சாற்றுவார்நன்னியமந் தவறுவண்ண, நாட்டி னனேபிறவிவேர் களைந்திட்டோனே நவின்றவுனாசிலா லிபியினலம்போலாய்த்தா,லோட்டமின்போற்புற்புதம் போலோடுங்கால்போ லொளிர்மதிபோன்மாறுமலொ ருதன்மைத்தாய். ௰

மறந்தவிட்டைவினைவித்த மாத்திரத்தான் மகிழ்ந்துயி ர்போய்மேதாகே தையர்பாலே, செறிந்தானைச் சேர்ந்த தனுற்செப்புமாறென் செயற்கரியசெய்வனந்திதேவனெ ன்று, நிறைந்ததுதிசெய் துமடநின்றுபோந்து நீண்மகத் தோர்திருமுன்பு நேயநீட, விறைஞ்சிநிற்ப மாச்சையரி ங்ஙன்வம்மி னிருந்தருள்வீரொனப்பெரியோரியம்புகாலே.

வேறு.

சங்கமர்பத்தர்நொந்து சாற்றுவார்தண்டநாதர்
சங்கமாதாரமான் தாருவேவசவதேவா
சங்கமாராதனைக்கார் தாபரஞ்சகத்திலையா
சங்கமர்க்குற்றநின்போற் றுழ்ந்துளந்தருக்குவாரார். ௰௨

பானுவில்பகலுந்துய்ப பனிமதியில்லிராவு
மானமில்லாதமாதும் வண்சுடரில்லாவில்லுந்
தானமில்லாதான்வாழ்வுஞ் சதுரங்கமில்லாவேந்து
மானதேவசவதேவ ரகன்றரன்பத்தியந்தோ. ௰௩

அன்னைவிடுப்பவந்த வருள்வசவேசர்தம்மை [டான்
யென்னையிவ்வகாலந்தன்னி லிப்படியழைத்துக்கொண்
மன்னிலுன்புன்னியந்தான் வளங்கெடும்வரவிடுப்பா
ய்,கன்றுதற்கடவுளானே யெனப்பத்தர்கழறுகின்றார்.

ஆரினியிலக்கத்தென்ப தாயிரந்தவர்க்கிதத்தோ
ராரினியெமக்குன்பத்தி யருமையையறிவிக்கும்பே
ராரினிச்சிவத்துரோக மகற்றுவாரஞ்செழுத்தை
யாரினிவளரச்செய்வா ரத்தவென்றரற்றுகின்றார் ௰௫

அலமருமவனைநோக்கி மாச்சையரறைவாரஞ்சல்
பலதுயர்மாற்றம்பேசிப் பரிதவித்திரங்கலெல்லா
நிலவுமாவீரசைவ நிட்டையர்க்கேலாநீங்க
ளுலைதலுங்கிலேசஞ்செய்யுமோவசையுமொழிமினென்று.

அமலசங்கமப்பிரானை யருள்வசவேசனென்னுங்
கமழுணர்விக்கவேண்டிக் கருணைமேதாகேதையர்
நிமலமாமுயிரையத்த னீக்கியேதன்பாற்சேர்த்தான்
விமலனுநர்தியாவி விடுத்துத்தன்விரதங்காத்தான். ௰௭

பத்திகாரணமதாகப் பாரிடையுற்பவிப்பா
யுத்தமசிவாசாரத்தை யுயர்விப்பாயெனவிடுத்தா
லத்திறம்வசவதேவ னுக்குமுன்னழைத்ததன்றி
மெய்த்தவர்க்கிதத்தபூசை விக்கினஞ்செய்தானத்தன்.

உருத்திரா ரறிக்கையின்றி யுயர்கணா ரறிக்கையின்றித்
தருக்குமை யறிக்கையின்றித் தபோதனா ரறிக்கையின்றி
யருட்டருபுராதனத்தா ரறிக்கையுமின்றியத்தன்
றெரித்திருவாயுங்கொண்டான் றிருவுளக்கருணைமாறி.

மேதாகேதையர்தம்மை விரைவுடன்வரவிடாம
லாதரவுடனேநந்தி யவருடனங்கணைந்தா
னீதியோதண்டநாத னித்தசங்கமப்பிராணி
யோதுமூவிதநற்பத்தி யுருவமாயுலகில்வந்தோன். ௨௰

சங்கமச்செல்வந்தக்கோர் தருக்கணசரீரன்றன்னை
யிங்குநீயிருத்தாதங்ங னிருக்கவேயிசைந்திருந்தாற்
றுங்கனேநீயிரண்டு சொல்லுடைக்கடவுளாகி
லங்கணுவென்றன்செய்தி யறிவையேயறவும்பொல்லே

என்றுமாச்சையருரைத்ததெம்பிரான்வெள்ளிவெற்பிற்
றன்றிருவுளத்திற்கண்டு சகலதன்கணத்தைநோக்கி
மென்றிருமுறுவல்கொண்டு விளம்புவான்விமலபத்தி
யொன்றினனம்மேலன்பா லுயர்மடிவாலமாச்சன். ௨௨

வேறு.

இந்தமேதாகேதையன்றன்னையாமழைக்க
வந்தனனிவன்றன்னொடுநந்தியும்வரலா
லந்தமாகிலத்தமலநம்பத்திபோய்த்தென்றே
யெந்தமேல்முனிநின்றனன்யாமெனசெய்தும். ௨௩

என்னவிரபத்திராதிபல்கணத்தருமிறைஞ்சிப்
பன்னகாபரணுமின்றன்பதத்திலிற்பற்றுந்
தன்னுபத்தியாற்சங்கமார்ச்சனைசெயுந்தொழும்பாற்
பின்னைநந்தியையொப்பவரெங்குளார்பேசின். உச

நின்பதத்திலுக்கியன்றன்மைந்தனைநின்போற்
றுன்பமில்லனைச்சுகானந்தனானர்தந்துணையை
மன்பெருந்தவர்வைப்பினைமாசைசையர்மகிழ்வ
ரன்பர்மன்னனிடைமல்குவானங்கணிவிடுப்பாய். உரு

என்றிறைஞ்சாம்பிரானிருவோரையுமழையா
சென்றுறுங்கடகத்தின்றுநிறொனச்செப்ப
நின்றிறைஞ்சியேசின்னிடைநீங்கலமென்று
ரன்றுசொல்லுநாதம்மிடையற்பமுமகலேம். உசா

நம்பெருந்தவர்பூசையேநமக்கிதபூசை
யம்புவிக்குணிர்செல்விரென்றனைத்துகந்தருளத்
தம்பிரான்கழலிருவருந்தாழ்ந்துறப்பணிந்தங்
கெம்பிரான்றிருக்கருணையால்விடைகொண்டங்கேத்தி.

இறைவர்தந்திருக்கூட்டராங்கணங்களையிறைஞ்சி
நிறையுமங்கவருள்கொடுநீங்கினர்கடக
முறையுமாதவர்முன்னுறுந்தமதுடனுற்றுர் [ர்.
தறையினின்றெழுந்தன்பர்மெய்ச்சமூகத்தைத்தாழ்ந்தா

பற்றுநேயராய்மாச்சையர்பதத்தினும்பணிந்தார்
மற்றுநன்மடிவாலேயர்தவத்தனைவணங்கி
யுற்றுநும்மடியார்கள்வந்தார்நுமக்குரிய
நற்றிறத்தொழும்பானவைகொளுமென்றுநவின்றார் ௨௬

திருந்துநந்திகள்சங்கமப்பிராணியாஞ்சீனா
யருந்திறற்றருமாச்சையர்புகழினையங்க
ணிருந்தமாதவரோத்தலுமிருவருமிறைஞ்சிப்
பொருந்துமன்பினும்மடஞ்செலுமின்னெனப்புகன்று.

வே று.

ஐயர்மாச்சையர்தாளிற்கஞ்சலிசெய்துபோற்றிச்
செய்யதம்மடத்திற்செல்லச்செப்பியேநந்திதேவ
ருய்யமேதாகேதையருடன்சென்றுதம்மடத்து
மெய்யராமடிவாலேயர்பெருமையைவியந்திருந்தார். ௩க

மேதாகேதையர் புராணம்
முற்றுப்பெற்றது.

திருக்கூட்டச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கஉ௫0.

திருச்சிற்றம்பலம்.

—*—

மேதாகேதையர்புராண வசனம்.

ஸ்ரீவசவதேவரது உயிரானது ஜங்கமருபமென்பதனை இவ்வுலகத்தவர் முக்காலுமறிதற்பொருட்டுச் சிவபெருமான் தவத்திற்சிறந்த மேதாகேதையருயிரைத் தம்பாற்சேர வருள்செய்தவளவில், விச்சலநகரவாசிகளாகிய பத்தஜனங்களோடு ஸ்ரீவசவதேவரும் இன்னும் மற்றைய ஜங்கமர்களும் ஓலக்கமாகி வாத்தியகோஷங்களோடு அங்குச்சென்று, மடிவாலமாச்சையர் அவ்விடத்துவரத் தாழ்த்ததனால் அவரையழைமின்களென்று ஆஞ்ஞாபித்தவளவின், இதுகேட் டருகினின்ற படியாரிப்பாச்சையர் மாச்சையரிடத்துச்சென்று வணங்கி யஞ்சலிஹஸ்தராய் நமது மேதாகேதையர் சிவபதமடைந்தனரென்று அறிவித்தவளவின், மாச்சையர் அவ்வுழிவந்திருக்கும் பெரியர் யாவரென்று வினவ, வல்லையர், மதுவையர், அல்லமையர், சகதேவத்தண்டநாதர் முதலிய பத்தர் ஜங்கமமூர்த்திகளுடன் ஸ்ரீவசவதேவரும் மேதாகேதையர்முன்னே சமுகமாய்க்கூடி வாத்தியங்களெல்லா முழங்க விருக்கின்றனரென்று விஞ்ஞாபிக்க,

இதுகேட்ட மடிவாலமாச்சையர் நகைத்து வசவதேவர் தாம்ஸங்கற்பித்த விரதத்தை நெகிழவிட்டு இத்தனையில் சிவிப்பது யாதுகாரணம், நாணமென்பது சிறிதுமிலராயினர், தமக்கு ஜங்கமமே யுயிரென்னும் கீர்த்திமொழியை மறந்துநின்ற விரதபங்கராய வவரதுதேகத்தைத் தரிசிக்கவும் பரிசிக்கவு மொண்ணுது மேதாகேதையர் சிவபதமடையவும் அவருடன்செல்லாததோர் பங்கமுடைய வவரது அவையைக்காணினுங்குற்றமேயா

ம். இம்மொழி யான்புகல்வதுந்தகாது. அவ்விடத்து அனந்தம் பெரியர்வந்து நிறைந்திருக்க யா னவ்விடத்துவந்தசனு லாவதெ ன்னபயன், எமக்கும் புரியுங்கடமைத்தாய கருமங்கள் அநேகமி ருக்கின்றமையால் இனிநீர்செல்லுமென்றுபுகல, இதுகேட்ட பா ச்சையர் உள்ளமுமுடலமு நடுநடுங்கி யோடிவந்து திருக்கூட் டத்தில் மகத்தோரைவணங்கி யச்சத்தால் பேசாமல் நின்றவளை வில், அங்கு ஜங்கமரெல்லாம் மாச்சையர் வாராதகாரணம் யா தென்றுவினவ, ஸ்ரீவசவதேவர்முன்பு புகலவஞ்சினனென்று நி ற்க, அதனைப் பயமின்றிப்புகலலாமென்று யாருஞ்சொல்ல, படி யாரிப்பாச்சையர் மாச்சையருரைத்ததெல்லாம் விளங்கவுரைக்க வே, ஸ்ரீவசவதேவர் தமது சங்கற்பஞானமுண்டாய் மடிவால மாச்சையரைத் துதிக்கு நிறத்துடன் ஸ்ரீபரமசிவனது மஹா கைலாசஞ்சென்றனர்.

இதுகண்ட தவத்தோர் பத்தர் மற்று மந்நகரவாசிகள் யா வரும் துக்கமுகராய், மேதாகேதையருடன் ஸ்ரீவசவதேவரையு ம் ஸ்ரீபரமேசுவரன் தம்பாற்செல்லத் திருவுளம்பற்றினர், இனி பூலோகத்தில் சிவபத்தியென்பதேது என்றிரங்கி, ஹரஹரவெ ன்று உச்சரித்துவருந்தி இவ்விதத்தை மடிவாலமாச்சையர்க்குத் தெரிவிக்கச்சொல்ல, பாச்சையர் விரைந்துசென்று நடந்தபடி யுரைக்க.

இதுகேட்ட மாச்சையர் மனமகிழ்ந்து புளகாங்கிதராய் மு கமலர்ச்சியோடு ஸ்ரீவசவதேவரைப் பலவாறுபுகழ்ந்து துதித்து தமதுமடத்தினின்றும் புறப்பட்டு மகத்தோரது திருக்கூட்டத் திற்சென்று வணங்கிநிற்ப, அவருமெதிர்ந்துவந் துபசரிக்கவிரு ந்து அங்குப் பலவாறு புலம்பிப்பரிதபிக்கும் அடியார்களைநோக் கிக்கையமர்த்தித் துயரத்துக்கேதுவாயபலமொழிகளைப்புகன்று

இவ்விதமாக விரங்குவதெல்லாம் வீரசைவநிஷ்டையில் நிற்கும் நம்மவர்க்கழகன்று அவையொழிந்து நிற்கக்கடவீர். ஸ்ரீபரமேசுவாரும் வசவதேவர் ஜங்கமப்பிராணியென்று தெரிவித்தற்கே மேதாகேதையருயினாக் கவர்ந்தனர். அதுகண்ட வசவதேவரும் அவருடன்சென்று தமதுசங்கற்பத்தைத் சாத்தனர். உலகத்தில் நமதுபத்திக்குக் காரணசொருபமாய் நீயுற்பவித்துச் சிவாசாரத்தை யுயர்த்துவாயென்று அன்று கைலையில் ஆஞ்ஞாபித்து அதுமுடியுமுன்னே நந்திதேவனைச் சிவபெருமான் கொண்டு செல்வது முறையோ? அன்றியும் மெய்யன்பினையுடைய ஜங்கமாராதனைக்கும் சிவனே விக்கினகர்த்தாவாக வெண்ணவேண்டும் என்று பலவாறுசிந்தித்து, சுவாமீ சிவபெருமானே ஜங்கமப்பிராணியாகவும் பத்திவடிவினராகவும் அவதரித்த ஸ்ரீவசவதேவரை இந்தவுலகத்தின்க ணிருப்பச்செய்யாது அங்குக்கைலையின்கண்ணே யிருத்தற்கே சம்மதிப்பீராயின் முன்னுக்குப்பின் விரோதமான கபடவார்த்தையைக்கொண்டு நடிக்குங்கடவுளென்று உமக்குமொரு பெயருண்டாமென்பதிற் சந்தேகமில்லை. அதுவும் வேண்டுவதுதானென்று சம்மதிப்பீராயின், சுவாமி அடியேன்செய்தியு முமக்கு நன்றாகத்தெரியுமன்றோ? நானோ அறவும்பொல்லாதவனே என்று மாச்சையர்புகன்ற கடுஞ்சொல்யாவும் ஸ்ரீமஹாகைலாசத்தில் உமாதேவியாரோடு வீற்றிருக்கும் பரமேசுவரன் தந்திருவுளத்திற்கண்டு தமதுகணங்களைநோக்கிப் புன்முறுவலோடு சொல்லுவார்.

பூலோகத்தில் நம்மிடத்து விமலமான மெய்யன்புள்ளவன் மடிவாலமாச்சையனென்னு மோரன்பன், இந்தமேதாகேதையனை யபிங்கழைத்தது காரணமாக நந்திபு மிவ்விடத்து வந்தனன், இருவரு மிவிடத்துவந்ததேகாரணமாக நமதுபத்திமார்க்கம்

பூலோகத்திற் போய்விடுமென்று எம்பால் கோபிக்கின்றனன் அதற்கு யாமென்னசெய்வோம் என்று திருவாய் மலர்ந்தருள; அங்கு வீரபத்திராதி பலகணநாதரும்வணங்கி, சுவாமீ தேவரீர து திருவடிகளிற் பத்தியினாலும் ஜங்கமாராதனைத் தொழும்பினாலும் ஸ்ரீநந்திதேவர்க்கு ஒப்புமொழிதற்குப் பூலோகத்தில்வேறு யாவரிருக்கின்றனர். ஆதலால் பூவுலகத்தில் அடியர்யாரும் மகிழ்ச்சிமிகும் வண்ணம் மாச்சையரது கோபமானது சமனமாம்பொருட்டும் இவர்களைப் பூலோகத்தில்விடுப்பதே நன்மையென்று விஞ்ஞாபிக்க, உடனே பரமேசுவரன் அவ்விருவரையுமழைப்பித்து நீங்களிருவீரும் பூலோகமேசென்று வசியுமென்று திருவுளம்பற்ற, அவ்விருவரும் சுவாமி தேவரீரது திவ்வியத்திருவடிநீழலை யடைந்து பின்னும் மீள்வது எவர்க்கு மெளிதாகுமோ யாம் நீங்கலமென்றார். பூலோகத்தில் நம்மன்பரைப் பூசிப்பதே நமக்குரிய பூஜையாகும் ஆதலால் அவ்விடமேசெல்லுமென்று ஆஞ்ஞாபிக்க, அவ்விருவரும் மறுத்தல்கூடாமையின் சிவனது திருவடிகளை வணங்கித்துதித்துச் சிவகணங்களையும் வணங்கித்துதித்து அவரதருளைப்பெற்று, அவ்விடம்விட்டு நீங்கிப் பூலோகத்தில் திருக்கூட்டமத்தியில் நிர்ஜீவியாய்க் கிடக்கின்ற தமதுதேகத்திற்சென்று பொருந்திப் பூமியினின்றுமெழுந்து அடியர்திருக்கூட்டத்தை வணங்கிக்கொண்டு மாச்சையரது திருவடிகளிலும் வணங்கினர். மடிவாலமாச்சையரும் திருக்கூட்டத்தைவணங்கி உம்பால்பற்றுள்ள அடியாரிருவரும்வந்தனர். இனியவர்புரியும் பத்திமையாவு மங்கீகரிப்பீரென்று புகன்றனர். அடியார்களும் ஸ்ரீவசவதேவர் ஜங்கமப்பிராணியான சீரினையும் மடிவாலமாச்சையதேவர் புகழினையும் துதித்தனர். மேதாகேதையர் ஸ்ரீவசவதேவரிருவருமவனைவணங்கித் தமதுதமதுமட

ங்களிற் செல்லவிடுத்துப் பின் மாச்சையாதரிதிருவடிகளிற்பணி ந்து அவரையு மடத்திற்செல்லவிடுத்துப் பின்பு தமது மடத்திற் சென்று மடிவாலமாச்சையர் பெருமையை நினைந்து வியந்து து தித்துக்கொண்டிருந்தனர்.

மெதாகேஷதயர் புராணவசன

மு ற் றி ற் று.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவாதுச் சருக்கம்.

சி வ நா க ஷ ம ய ர் வா து.

எதிகள்சதுரார்த்த வினியசரணார்த்தி
விதிதமதிகாத்த விரதசரணார்த்தி
யதிககதிபார்த்த வமலசரணார்த்தி
வதியதவிதாச்சொல் வசவசரணார்த்தி. க

வே று.

இப்படிதவத்தோர்பத்த ரிணையிலாமகத்தோரன்பா
லொப்பருந்தண்டநாத ருடன்றிருக்கூட்டராகிச்
செப்பருமஞ்செழுத்தாஞ் செழுஞ்சுடர்வாளால்வாத
வெப்பமதறத்துணித்த வாதினைவிளம்பலுற்றும். உ

சிவநாகமையனென்னுந் திருப்பெருங்குலத்தோரன்பர்
பவநாசருஷ்ஷைஞானப் பரிவினரரியநீரார்
தவநாயகத்தர்சுத்தர் தயாநிதிநயானுபூதர்
புவனதிபதியாந்தண்ட நாதர்பாற்பொருந்துநாளின். ௩

மறையவரிதனைக்கண்டு மனம்பொருராகித்தம்மு
ளுறைதருஞ்செவிச்சொற்பேசியுருத்தெழுங்கருத்தராகி
யிறைவனும்விச்சலேச னெதிர்நின்றுநந்திகேச
னிறைதருமந்தணாளர் நெடுங்குலநீங்கிற்றென்றார். ௬

திருக்குலா திருக்குலத்தோர் திருக்குலமொன்றவர்க்கே,
பெருக்கவேவணங்கிச்செய்யாப் பிரியங்களெல்லாஞ்செ
ய்வ, னுருத்திரனென்னக்காண்பனுண்டுமிக்கனவுமுண்
பன்,குருக்களுமவரேமேலாங்குலத்தருமவரேயென்பன்

மேதினிமன்னவெங்கள் வேழ்வியேமுதலாங்கன்ம
நீதிபோய்ச்சாதிதன்ம நிலைமைபோய்க்கல்லியாண
வீதியுள்யாங்கள்செல்ல வெருவினேமிலிங்கங்கண்டி
பூதியேசாதியாகப்புலையுனாபோய்த்தென்சொல்வாம்.௬

தனையினர்செய்யுங்குற்றந் தாரணிவேந்தர்க்காகும்
புரவலர்செய்யுநீதி புரோகிதர்க்காகும்யாங்க
ளுனைசெயினிந்தத்தீமை யுனக்கலாதெம்மைச்சூழா [ளு
திரமிவையுன்றன்சித்தந்தெரிந்துகொள்செங்கோன்மன்

உன்னைநீபேணிக்கொள்ளென் றுணர்த்தனர்வெகுண்
டுவேந்த, னிந்நெறித் தண்டநாதன் றனையழையென்ன
ச்செல்வார், சென்னெறி கோடாராய சிவநாகமையர்த
ம்மைக், கொன்னருஞ்சிவிகையேற்றிக் குலவிக்கைகொ
டுத்துச்செல்ல. அ

தூரத்திற்கண்டபார்ப்பார் சொல்லுவார்பாராய்வேந்தே
யாரித்தாழ்வியற்றுவாரிங் கரும்புலைகலக்கவேண்டிப்
பாரத்தண்டிகையிலேற்றிப் பார்த்திபன்முன்னஞ்சாமற்
சேரத்தன்கரங்கொடுத்துச்செல்கின்றான்சிறிதுநாணான்

கொற்றவன்றனையெணாதிக் கொடுமைசெய்நந்திகேசன்
மற்றவர்க்கஞ்சுமாறென் னென்றனர்வன்னிபோல
முற்றியசினத்தனாகி விச்சலன்முனிந்தெழுந்து
தெற்றெனப்புறவோலக்கஞ்சேர்ந்தங்கணிருக்கலுற்றான்

கடிதுபோய்வசவதேவர் காவலன்சபையுட்சென்று
படிமிசைதாமேற்சாத்தும் படாத்தையாதனமதாக்கித்
திடமுறுநாகமைய ரிருந்திடச்செய்தபின்னர்
முடிமனாவிவனையழைத்த முந்துகாரியஞ்சொலென்றார்.

